www.padippakam.com



இதழ் 75 ரூ. 15

# காலச்சுவடு

உலகத் தமிழ் இதழ் மார்ச் 2006 www.kalachuvadu.com



மரணம் விடு தூது





## கருத்துச் சுதந்திரமும் நீதிமன்ற அவமதிப்பும்

ந்ததி ராய் | கே.ஜி. கண்ணபிரான் | ஜி.ஆர். சுவாமிநாதன் | சு. சத்தியச் சந்திரன்

பிகள் நாயகம் கேலிச் சித்திரம்: சுதந்திரத்தின் எல்லை எது?

படிப்பகம்

www.padippakam.com




படிப்பகம்

www.padippakam.com



www.padippakam.com


# இந்தியாவின் இணையற்ற சீட்டு நிதிச் சிகரம் ஸ்ரீராம் சிட்ஸ்




3000 ஆண்டுகளுக்கு முன்னரே, இந்திய மக்களின் அனுபவ அறிவில் உதயமானது சீட்டு சேமிப்பு திட்டம். சமுதாய மக்கள் ஒருங்கிணைந்து, சிறுகச் சிறுகச் சேமிக்கவும், தேவைப் படும்போது அச்சேமிப்பில் இருந்தே கடன் பெறவும் உதவி செய்வதே சீட்டுச் சேமிப்பு திட்டத்தின் சிறப்பு அம்சம்.

### இருவழிப் பயன்:

குடும்ப வளமைக்காகத் தொடர்ந்து சேமிக்கவும், அவசரத் தேவைகளையும், திட்டமிட்ட செலவுகளையும் எதிர் கொள்ளவும் உதவும் இருவழிச் சாதனம் சீட்டு சேமிப்பு திட்டம்.

### வளரும் வளமை:

சீட்டு சேமிப்பு திட்டத்தில், சேமிக்கும் தொகை, சேமிக்கும் காலம், கடன் பெறும் தொகை, வட்டி விகிதம், யாவும் உறுப்பினர்களாலேயே தீர்மானிக்கப் படுகிறது. மேலும், மாதந்தோறும் வருவாய் உயரும் வாய்ப்பு, உறுப்பினர் அனைவரும் சமமாக லாபம் பெறும் வாய்ப்பு ஆகியவை இதன் தனிச்சிறப்பு அம்சங்கள்.

### உயரும் வருவாய்:

வங்கிச் சேமிப்பு, அஞ்சலகச் சேமிப்பு, சிறுசேமிப்பு, ஆகிய முதலீடுகள் மீதான வருவாய் சரிந்து விட்டது. ஆனால் சீட்டுத் திட்டங்களில் ஏல உச்ச வரம்பு 40% ஆக உயர்த்தப் பட்டுள்ளதால், உறுப்பினர்களின் கசறுத்தொகை (Dividend) கணிசமாக உயரும். ஏலத்தில் போட்டியின் கடுமை குறைந்து, உடனடியாக ஏலம் எடுக்கும் வாய்ப்பு உயர்ந்துள்ளது.

### நிகரற்ற ஸ்ரீராம் சிட்ஸ்

ஸ்ரீராம் சிட்ஸ் 29 ஆண்டுகளுக்கு மேலாக பல லட்சம் குடும்பங்களின் வளமைக்கு வழிகாட்டி வருகிறது. நேரடியாகவும், மறைமுகமாகவும் பலருக்கு வேலை வாய்ப்பு அளித்துள்ளது. சீட்டுத் தொகையாக ரூ.10,500 கோடிக்கு மேல் பட்டுவாடா செய்துள்ளது.

உங்கள் அருகிலுள்ள ஸ்ரீராம் சிட்ஸ் கிளைக்கு இன்றே வாருங்கள். நலமும் வளமும் வளரத் தேவையான திட்டங்களில் சேர்ந்து சீரும் சிறப்புமாய் வாழுங்கள்.



**ஸ்ரீராம் சிட்ஸ்**
தமிழ்நாடு (பி) லிமிடெட்

சுப்ரமணியன் பில்டிங், 1, கிளப் ஹவுஸ் ரோடு, சென்னை 600 002.
போன்: 52011833. www.shriramchits.com

WORDCRAFTS

ஸ்ரீகிருஷ்ணா ஸ்வீட்ஸ்

காலச்சுவடு
மாத இதழ்

இணைந்து நடத்தும்

அற்றைத் திங்கள்

கோவையில் ஒவ்வொரு மாதமும் மூன்றாம் ஞாயிறு மாலை அற்றைத் திங்கள் என்னும் தலைப்பில் நடைபெறும் கூட்டத் தொடரில் 2006 மார்ச் மாதம்

# சுந்தர ராமசாமி

## ஆவணச் சித்திரம்


ஆர்.வி. ரமணி உருவாக்கிவரும்
ஆவணப் படத்தின் வெள்ளோட்டம்


## சுந்தர ராமசாமி: எழுத்தும் ஆளுமையும்

ஆ.இரா. வேங்கடாசலபதி உரை

எழுத்தாளர்
ஆ.இரா. வேங்கடாசலபதி






ஆய்வாளரும் கட்டுரையாளருமான ஆ.இரா. வேங்கடாசலபதி சுந்தர ராமசாமியுடன் கொண்டிருந்த சுமார் 20 ஆண்டுக் கால நெருங்கிய நட்பின் நினைவுகளைப் பகிர்ந்துகொள்கிறார்.

ஆர்.வி. ரமணி, குறும்படங்கள், ஆவணப் படங்கள், திரைப்படங்கள் எனக் காட்சி ஊடகத்தின் அனைத்துத் துறைகளிலும் தீவிரமாக இயங்கிவருபவர். தோற்பாவைக் கலைஞர்களைப் பற்றிய ஆவணப் படம் உள்ளிட்ட பல அபூர்வமான பதிவுகளைக் கலைத்தன்மை மிகுந்த படைப்புகளாகத் தந்துள்ளார். இந்திய அளவிலும் சர்வதேச அளவிலும் பல திரைப்பட விழாக்களில் இவரது பல ஆக்கங்கள் திரையிடப்பட்டுள்ளன.

சுந்தர ராமசாமி பற்றி இவர் பல ஆண்டுகளாக எடுத்துவரும் ஆவணப் படத்தின் வெள்ளோட்டம் இந்நிகழ்வில் நடைபெறும்.

நாள் : 19.03.2006 ஞாயிறு
நேரம்: மாலை 6:30 மணி
இடம் : கோவை பாரதீய வித்யா பவன்
582, D.B. சாலை, ஆர்.எஸ். புரம்

**அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்**

# சுவடி
புத்தகப் பட்டறை

## INVITATIONS



## CALENDARS





## BROCHURES



**நூல் அச்சாக்கம், வடிவமைப்பு, மொழிபெயர்ப்பு, மெய்ப்பு நோக்கல், பிரதி செம்மையாக்கம்**

- Books
- Magazines
- Brochures
- Artworks
- Designing
- Translation
- Editing

**வடிவமைப்பு, அச்சாக்கம்:** நூல்கள், இதழ்கள், நிறுவனத்தைப் பற்றிய அறிமுக வெளியீடுகள் (brochures), லோகோ, வாழ்த்து அட்டைகள், புத்தக அட்டைகள்,

**மொழிபெயர்ப்பு** (தமிழ் - ஆங்கிலம்; ஆங்கிலம் - தமிழ்): புலப்பெயர்வு (immigration), மருத்துவம், சட்டம், வர்த்தகம், தொடர்பான ஆவணங்கள், தகவல் தொழில்நுட்பம், கலை, இலக்கியம் உள்ளிட்ட பல துறை நூல்கள்.

**செம்மையாக்கம், மெய்ப்பு நோக்குதல்:** எல்லா வகை நூல்களுக்கும்

- சிறந்த எடிட்டர்கள்
- மெய்ப்பு நோக்காளர்கள்
- மொழிபெயர்ப்பாளர்கள்
- ஓவியர்கள்

ஆகியோரின் உதவியுடன் நவீன அழகியல் உணர்வுடன் உங்கள் தேவைக்கும் ரசனைக்கும் ஏற்ப நூல்கள், இதழ்கள், கையேடுகளை உருவாக்கித் தருகிறோம்.

தயாரிப்பதற்கான அசல் கட்டணங்கள் உங்களுக்குத் தெரிவிக்கப்பட்டு, எங்கள் கட்டணமாக மொத்தச் செலவில் 15% தனியாகப் பெற்றுக்கொள்ளப்படும்.

அயல்வாழ் தமிழர்களுக்கும் இதே முறைமை பின்பற்றப்படும்.

மின்னஞ்சல் மூலம் துரிதமான தொடர்புகள் பேணப்படும்.

அயலில் இருப்பவர்களுக்குக் 'காலச்சுவடு எக்ஸிம்' ஏற்றுமதி நிறுவனத்தின் மூலம் குறைந்த செலவில் நூல்கள் அனுப்பிவைக்கப்படும்.

## அட்டை வடிவமைப்பு










பழைய எண் 216, திருவல்லிக்கேணி நெடுஞ்சாலை, சென்னை – 600 005
தொலைபேசி: 044 28481662, மின்னஞ்சல்: chuvadi@gmail.com

www.padippakam.com



நிறுவனர்:
சுந்தர ராமசாமி

காலச்சுவடு
மாத இதழ்

மார்ச் 2006 ● இதழ் 75


கட்டுரை : ஷேக்ஸ்பியர் வரலாறு எழுதினால்...
சு. கி. ஜெயகரன் 36

கவிதைகள் : தேன்மொழி தாஸ் 40

பத்தி : களந்தை பீர்முகம்மது 46

திரை : ரங் தே பசந்தி
நந்து சுந்தரம் 49

சிறுகதை : விளிம்பு
சல்மா 50

சு.ரா. : நினைவின் சலனங்கள்
பவுத்த அய்யனார் 62
மு. பொன்னம்பலம் 65

பிற

தலையங்கம்-4 கடிதங்கள்-6 எதிர்வினை-7
அஞ்சலி : கே. விஸ்வநாதன்-10
இயல் விருது-38 விவாதம்-67 பதிவுகள்-47, 71


## சிறப்புப் பகுதி: கருத்துச் சுதந்திரமும் நீதிமன்ற அவமதிப்பும்




12 நீதிமன்ற அவமதிப்பு: ஒரு விமர்சனக் குறிப்பு
ரவிக்குமார்

16 அவமதிப்பு அதிகாரமும் மனித உரிமைகளும்
கே. ஜி. கண்ணபிரான்

20 நீதிமன்றத்தின் கௌரவமும் குடிமக்களின் கௌரவமும்
அருந்ததி ராய்

27 நீதிமன்ற அவமதிப்பு: ஒரு வரலாற்றுப் பார்வை
சு. சத்தியச் சந்திரன்

33 சீர்திருத்தத்திற்கு முட்டுக்கட்டை
ஜி. ஆர். ஸ்வாமிநாதன்




படிப்பகம்

www.padippakam.com



# ராணுவத்தில் முஸ்லிம்கள்

'நாட்டின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல்' என்று முழங்கி வந்த அரசியல் கட்சிகள் இப்போது 'ராணுவத்தின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல்' என்று ஆர்ப்பாட்டத்தில் இறங்கியுள்ளன. தில்லி உயர் நீதிமன்ற ஓய்வுபெற்ற நீதிபதியும், மக்கள் சிவில் உரிமைக் கழகத்தின் (பி.யு.சி.எல்.) தலைவராயிருந்து மனித உரிமைகளுக்காக அரும்பணிகளைச் செய்துள்ளவருமான ரஜீந்தர் சச்சார் தலைமையில் மத்திய அரசு நியமித்துள்ள உயர்மட்டக் குழு அனுப்பிய சுற்றறிக்கை ஒன்றே இந்தக் கூக்குரலுக்குக் காரணம்.

முஸ்லிம்களின் சமூக, பொருளாதார, கல்வி நிலையினைக் கண்டறிவதே ஆறு பேர் கொண்ட சச்சார் கமிட்டியின் நோக்கமாகும். 2005ஆம் ஆண்டு மார்ச் மாதம் ஒன்பதாம் தேதி அமைக்கப்பட்ட அந்தக் கமிட்டி பதினைந்து மாதங்களுக்குள் தமது அறிக்கையைச் சமர்ப்பிக்க வேண்டும் எனப் பணிக்கப்பட்டுள்ளது. அது அமைக்கப்பட்டு ஏறத்தாழ ஓராண்டு முடியவிருக்கும் நிலையில் திடீரென இந்தச் சர்ச்சை எழுந்துள்ளது.

இந்த உயர்மட்டக் குழுவின் நோக்கமும்கூட முஸ்லிம்களின் பிரச்சினைகள் எல்லாவற்றையும் கண்டறிவதாக இல்லை. குறிப்பாக மதரீதியாக அவர்கள் எதிர்கொள்ளும் பாகுபாடு மற்றும் வன்முறை குறித்தோ அவற்றைக் களைவது குறித்தோ அக்குழு ஆராயவில்லை. பிற்படுத்தப்பட்ட சமூகத்தினரின் நிலையோடு முஸ்லிம்களை ஒப்பிட்டுப் பார்க்கக்கூடிய தகவல்களைச் சேகரிப்பது அக்குழுவின் பணிகளில் ஒன்று. ஆனால் உத்தரப் பிரதேசம், பிஹார் உள்ளிட்ட பல மாநிலங்களில் தலித் முஸ்லிம்களுக்கு இடஒதுக்கீடு வேண்டுமென எழுந்துள்ள கோரிக்கை பற்றி அக்குழு ஆய்வு செய்வதாக இல்லை. மேலும் பரிந்துரை எதையும் செய்கிற அதிகாரம் அந்தக் குழுவுக்கு இல்லை. அரசு மற்றும் தனியார் துறைகளில் பணிபுரியும் முஸ்லிம்களின் விவரங்களைக் கண்டறிவதன் ஒரு பகுதியாகவே ராணுவத்தில் உள்ள முஸ்லிம்களின் விவரங்களை அக்குழு கேட்டுள்ளது. அதற்குத்தான் இவ்வளவு கூச்சலும் கண்டனமும்.

இது பற்றிக் குடியரசுத் தலைவரிடம் பா.ஜ.க. கூட்டணிக் கட்சிகள் கொடுத்துள்ள மனுவில் "ராணுவத்துக்கு மதமில்லை" எனவும் அது "நாடு முழுமையையும் பிரதிநிதித்துவப்படுத்துகிறது" எனவும் கூறப்பட்டுள்ளது. ராணுவத்தில் உள்ள முஸ்லிம்கள் பற்றிய விவரம் கேட்பதை, "மத அடிப்படையில் ராணுவத்தில் இடஒதுக்கீடு செய்வதற்கான முன்னோட்டமா?" என்று கேள்வி எழுப்பியுள்ள அந்தக் கட்சிகள். அப்படி இடஒதுக்கீடு வழங்குவது "நோயைவிட மோசமான சிகிச்சையாக இருக்கும்" என்று வர்ணித்துள்ளன. நோய் இருப்பதை அவர்கள் மறைமுகமாக ஒப்புக்கொண்டுள்ளனர் என்பதே இதற்கு அர்த்தம். உலகில் இந்தோனேஷியாவுக்கு அடுத்ததாக இந்தியாவில் அதிகமான எண்ணிக்கையில் முஸ்லிம்கள் வசிக்கிறார்கள் (ஏறத்தாழ 14 கோடி). என்றாலும் சமூகம், பொருளாதாரம், கல்வி முதலான தளங்களில் தமது மக்கள்தொகைக்கேற்ற பங்கினை அவர்கள் பெறவில்லை என்பதே அந்த நோய். பிற துறைகளைக் காட்டிலும் போலீஸ், ராணுவம் முதலானவற்றில்

நிறுவனர்
சுந்தர ராமசாமி

ஆசிரியர் குழு
ஆதவன்
அரவிந்தன்
நஞ்சுண்டன்

உதவி ஆசிரியர்
திவாகர் ரங்கநாதன்

ஆலோசனைக் குழு
தமிழ்நாடு:
ஆ. இரா. வேங்கடாசலபதி
ப்ரஸன்னா ராமஸ்வாமி
களந்தை பீர்முகம்மது
இலங்கை: எம்.ஏ. நுஃமான்
இங்கிலாந்து: பத்மநாப அய்யர்
அமெரிக்கா: கோகுலக் கண்ணன்

சிங்கப்பூர்: கனகலதா, மு. ந. மூர்த்தி
மலேசியா: சை. பீர்முகமது

வடிவமைப்பு
கீழ்வேளூர் பா. ராமநாதன்
தி. முரளி

தயாரிப்பில் உதவி
இரா. சக்திவேல்

அட்டைப் புகைப்படம்
புதுவை இளவேனில்

பதிப்பாளர் – ஆசிரியர்
எஸ். ஆர். சுந்தரம்
(கண்ணன்)
kannan31@gmail.com

■ தலைமை அலுவலகம்: 669, கே.பி.சாலை, நாகர்கோவில் 629 001. தொலைபேசி: 91-4652-278525
தொலைநகல்: 91-4652-231160, மின்னஞ்சல்: kalachuvadu@sancharnet.in
■ சென்னை அலுவலகம்: பழைய எண் 216, திருவல்லிக்கேணி நெடுஞ்சாலை, சென்னை 600 005.
தொலைபேசி: 91-44-28481662, 91-44-42155972, மின்னஞ்சல்: kalachuvadu@gmail.com



படிப்பகம்

www.padippakam.com



முஸ்லிம்களின் பங்கு மிகமிகக் குறைவாக உள்ளது. நாட்டுப் பிரிவினைக்கு முன்பு உத்தரப் பிரதேசத்தின் மூத்த போலீஸ் அதிகாரிகளில் 40%ஆக இருந்த முஸ்லிம்களின் எண்ணிக்கை 1958இல் வெறும் 7%ஆகக் குறைந்துவிட்டது.

ராஜஸ்தான் மாநிலத்தின் மக்கள்தொகையில் ஒன்பது சதவீதம் பேர் முஸ்லிம்கள். அங்குள்ள உயர் போலீஸ் அதிகாரிகள் (ஐ.பி.எஸ்.) 112 பேரில் இருவர் மட்டுமே முஸ்லிம்கள் (1.26%). ராஜஸ்தான் பப்ளிக் சர்வீஸ் அதிகாரிகள் 489 பேரில் 17 பேர் மட்டுமே முஸ்லிம்கள் (2.88%). 778 போலீஸ் இன்ஸ்பெக்டர்களில் 40 பேர் மட்டுமே முஸ்லிம்கள் (4.42%). சப்-இன்ஸ்பெக்டர் பதவிகளில் 3.71%, கான்ஸ்டபிள்களில் 3.55% முஸ்லிம்கள் உள்ளனர். தமிழ்நாட்டில் சுமார் 35 லட்சம் முஸ்லிம்கள் உள்ளனர் என 2001 குடிக் கணக்கெடுப்பு கூறுகிறது. இது மக்கள்தொகையில் சுமார் ஐந்து சதவீதம். தமிழகக் காவல்துறையில் அவர்கள் எவ்வளவு சதவீதம் என்ற விவரம் இன்னும் திரட்டப்படவில்லை.

ராணுவத்தைப் பொறுத்தவரை அவர்களின் பங்கு மிகவும் குறைவு என்பதில் ஐயமில்லை. நேரு அமைச்சரவையில் பாதுகாப்பு இணை அமைச்சராயிருந்த மகாவீர் தியாகி, "நாட்டுப் பிரிவினையின்போது ராணுவத்தில் 32 விழுக்காடாயிருந்த முஸ்லிம்களின் எண்ணிக்கை 1953இல் இரண்டு விழுக்காடாகக் குறைந்துவிட்டது" என்று கூறியுள்ளார். இதனை ஆமோதிப்பதாகவே நேருவின் கருத்தும் இருந்துள்ளது. "நமது பாதுகாப்புப் படைகளில் முஸ்லிம்களே இல்லை. டெல்லி தலைமைச் செயலகத்தில் ஒரு சில முஸ்லிம்களே உள்ளனர்" என்று குறிப்பிட்ட நேரு, "இந்த மோசமான நிலையை மேம்படுத்த ஒரு முயற்சியும் செய்யப்படவில்லை என்பதுதான் மிகவும் கவலையளிக்கிறது" என்று எழுதியுள்ளார். அப்போது தான் நிலைமை மோசமாக இருந்தது என்பதில்லை. 2001 ஏப்ரலில் ஜம்முவில் வெளியிடப்பட்ட ராணுவத்தின் அறிக்கையொன்றில் "ராணுவத்தில் முஸ்லிம்களுக்கு இடமில்லை" எனக் குறிப்பிடப்பட்டிருந்தது. காஷ்மீர் சட்டசபையில் கண்டனம் தெரிவித்த பின்பும்கூட ராணுவம் அதைத் திரும்பப் பெறவில்லை.

ராணுவத்தின் மதச்சார்பற்ற தன்மை குறித்து முழங்குபவர்கள் 1984இல் பொற்கோயில்மீது தாக்குதல் தொடுத்து சீக்கியர்களைக் கொல்வதற்குத் தயங்காத ராணுவம், காஷ்மீரில் உள்ள சரார்–இ–ஷரீஃப் மசூதி மீது 1995இல் தாக்குதல் தொடுக்கத் தயங்காத ராணுவம், 1992இல் அயோத்தியில் பாபர் மசூதி இடிக்கப்பட்டபோது அங்கு என்ன நடவடிக்கை எடுத்தது என்பதைக் கூறுவதில்லை.

பல்வேறு மாநிலங்களிலும் மதக் கலவரங்களின் போது காவல்துறை பக்கச் சார்போடு நடந்துகொண்டதாக அறிக்கைகள் பலவும் சுட்டிக்காட்டியுள்ளன. துணை ராணுவப் படையினர் (PAC) மதவெறியோடு நடந்து கொண்டதாக பிவந்தி, மீரட் முதலான இடங்களில் நடந்த மதக் கலவரங்கள் தொடர்பான ஆய்வுகள் குறிப்பிட்டுள்ளன. இந்நிலையில் காவல்துறை, ராணுவம் முதலானவை இந்தியாவின் பன்முகத்தன்மையைப் பிரதிபலிப்பதாக இருக்க வேண்டியது இன்றியமையாததாகும்.

ராணுவத்துக்கு மதமில்லை என்பவர்கள் பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில் உருவாக்கப்பட்டு இப்போதும் ராணுவத்தில் தொடர்ந்துகொண்டிருக்கிற 'கூர்க்கா ரெஜிமெண்ட்', 'சீக்கியர் ரெஜிமெண்ட்' முதலியவற்றைக் கலைக்க வேண்டுமென இதுவரை கேட்டதே இல்லை என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். மத, இன அடிப்படையிலான படைப் பிரிவுகளைக் கொண்ட ராணுவத்தை 'மதமற்றது' எனச் சொல்வது கேலிக்கூத்து அல்லவா?

இன்று மத அடிப்படையில் தகவல் திரட்டுபவர்கள் நாளை சாதி அடிப்படையிலும் தகவல் திரட்டலாம் எனச் சிலர் கவலை தெரிவித்துள்ளனர். அப்படியான தகவல்களும் திரட்டப்பட வேண்டும். ஏனெனில் 1905இல் உருவாக்கப்பட்ட 'மெட்ராஸ் போலீஸ் சர்வீ'ஸில் 1910ஆம் ஆண்டிலேயே முஸ்லிம்களும் (10%) கிறிஸ்தவர்களும் (7%) இடம்பெற்றுவிட்டனர். ஆனால் தலித்துகள் 1943இல்தான் அதில் முதன் முதலாக இடம்பெற முடிந்தது (4%).

1890இல் பிரிட்டிஷ் ஆட்சியாளர்கள் உருவாக்கிய ராணுவ சாதிகள் (martial race) என்ற பொய்யான கருத்தாக்கம் இன்றும் நீடிப்பது மட்டுமின்றி, அது அரசியல் தளத்திலும் செல்வாக்குச் செலுத்துவதைப் பார்க்கிறோம். சமூகத்தில் நிலவும் ஏற்றத்தாழ்வுகள் களையப்பட வேண்டுமெனில் சமூகத்தின் மெய்யான நிலை மக்களுக்கு வெளிப்படையாகத் தெரிவிக்கப்பட வேண்டும். அதற்காகத்தான் தகவல் அறியும் உரிமைக்கான சட்டம் கொண்டுவரப்பட்டது.

பா.ஜ.க. குற்றம்சாட்டுவதுபோல காங்கிரஸ் தலைமையிலான மத்திய அரசு 'வாக்கு வங்கி அரசிய'லை நோக்கமாகக் கொண்டிருக்கவில்லை என்பது உண்மையானால் முஸ்லிம்களுக்கு மட்டுமல்லாது அனைத்துச் சிறுபான்மை மதத்தினருக்கும் ஒடுக்கப்பட்ட மக்களுக்கும் உரிய பிரதிநிதித் துவத்தை உறுதிப்படுத்த அது முன்வர வேண்டும். துரதிர்ஷ்டவசமாக மத்திய அரசின் பொருளாதாரக் கொள்கையோ இந்த நம்பிக்கைக்கு நேர் எதிராகவே இருக்கிறது.

●



படிப்பகம்

www.padippakam.com



தனியார் கேபிள் நிறுவனங்களை அரசே ஏற்று நடத்த வந்திருப்பதைப் பாராட்டி வரவேற்று, அதை ஆளுங்கட்சியினர் ஆக்கிரமிக்கக் கூடாது எனச் சுட்டிக் காட்டியிருப்பது அரசின் கவனத்திற்குரியது. ஆட்சி முடியும் நேரத்தில் முதல்வர் நல்லதைச் செய்யத் தொடங்கியிருப்பதே விவாதத்தை உண்டாக்குகிறது. நுழைவுத் தேர்வு விஷயத்திலும் கவனத்துடன் செயல்பட்டிருக்கலாம்.

பொன். குமார்
சேலம் 636 006

கேபிள் சேவை வழங்கும் தனியார் நிறுவனங்களை அரசே ஏற்று நடத்தும் மசோதா பற்றித் தலையங்கம் மூலம் பாராட்டியுள்ளீர்கள். எஸ்.சி.வி., சன் டி.வி. நிறுவனங்களைப் பழிவாங்குவதற்காகப் போட்ட சட்டம் இது. நாட்டை ஆள்பவர்களிடம் அதிரடி நடவடிக்கை கூடாது. ஆலோசித்து மக்கள் நன்மைக்காக ஒரு சட்டம் என்றால் வரவேற்கலாம். சன் டி.வி. போல் நிகழ்ச்சிகளைத் தர முடியுமா? சன் டி.வி. இல்லையென்றால் டி.வி.யே யாரும் பார்க்க மாட்டார்கள். அரசுப் போக்குவரத்தைத் தனியாருக்கு மாற்ற முயற்சித்த அரசு, கேபிள் டி.வி.யை ஏற்று நடத்துவது பழிவாங்கும் செயல் என்பது கண்கூடாகத் தெரிந்தும் அதை ஆதரிக்கும் காலச்சுவடு நடுநிலை தவறிச் செயல்படுவதாகக் கருதுகிறேன். தரமான இலக்கிய இதழான காலச்சுவடுக்கு அரசியல் தேவையா?

ஈ. சிதம்பரம்
ஸ்ரீவில்லிபுத்தூர் 626 125

காலச்சுவடு பிப்ரவரி 2006 இதழில் வெளியான விவாதம் பகுதிக்கான 'புகழ்ச்சியின் மறுபக்கம்' என்னும் தலைப்பில் கே. ரவிச்சந்திரன் எழுதியுள்ள விமர்சனம் குறித்து: தமிழ் சினிமாவை ஆரோக்கியமாக்கவும் அதற்கே உரிய தான செக்குமாட்டுத் தனத்திலிருந்து விடுவிக்கவும் ஒரு மாற்று சினிமாவிற்கான முயற்சியை முன்னுதாரணமாகக் கொண்டு படைக்கப்பட்ட சேரனின் 'தவமாய் தவமிருந்து' ஏற்படுத்திய தாக்கமும் பதிவும் முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாகும். ரவிச்சந்திரன் தெரிவித்துள்ள 'அளவுக்கதிகமான புகழ்ச்சி நல்ல கலைகளை வளர விடாது' என்கிற கருத்து உடன்பாடானதல்ல. காரணம், 'தவமாய் தவமிருந்து' விமர்சன ரீதியாகக் குறையுடைய படைப்பாக விளங்கியபோதிலும் மக்களின் ஏகோபித்த ஆதரவாலும் அங்கீகாரத்தாலும் காலத்தை வென்ற ஒரு முன்மாதிரியான படைப்பு என்பதாலும்




தமிழ் மொழிக்கான அடையாளத்தோடு கலாபூர்வமான சுவாசத்தால் ஒட்டுமொத்தத் தமிழர்களின் நெஞ்சையும் கொள்ளை கொண்டதே இதன் சிறப்பம்சமாகும். சேரனின் கலை தாகத்துக்குக் கிடைத்துள்ள மக்கள் அங்கீகாரமானது அவரது கலைப் பயணத்தைத் தொடர ஊக்குவிக்குமே தவிர, ரவிச்சந்திரன் கூறியுள்ளதைப் போல் ஆகாது. தற்போதைய தமிழ் சினிமா உலகில் வணிக மோகமானது மன வக்கிரிப்புகளின் உற்பத்திக் கிடங்குகளை மட்டுமே பெருக்கிவரும் சூழலில் திரைப்படத்தினுள் கலாபூர்வ அம்சங்களையும் அதற்கான சித்தரிப்புகளையும் காண இயலாத நிலையை உணர்ந்து, அதைத் தனது படைப்பின் மூலம் வழங்க முன்வந்துள்ள சேரனை விமர்சனம் என்கிற பேரால் சந்தேகிப்பதோ கொச்சைப்படுத்துவதோ தர்மமாகாது.

பா. செல்வவிநாயகம்
பெரம்பூர் 600 011

சு.ரா. அஞ்சலிக் கவிதையில் என்னுடைய பெயர் 'ந. ஜெயபாஸ்கரன்' என்று பிரசுரமாகியுள்ளது. என்னுடைய பெயரை நான் எழுதும் விதம் 'ந. ஜயபாஸ்கரன்' என்பதாகும். ஜெயபாஸ்கரன் என்ற பெயரில் நிறைய எழுதும் இன்னொருவரும் இருப்பதால் இந்த அற்ப விஷயத்தைக் குறிப்பிட வேண்டியதாகிவிட்டது.

ந. ஜயபாஸ்கரன்

சென்னைப் புத்தகக் கண்காட்சியில் 'காலச்சுவடு' பதிப்பகம் தினம் ஒரு புத்தகத்தை வெளியிட்டிருப்பது புத்தகக் கணகாட்சிக்குப் பெருமை சேர்க்கும் செயலாகும். கணகாட்சியில் ஆறு கோடி ரூபாய்க்குப் புத்தகங்கள் விற்பனை ஆகியிருப்பது எழுத்தாளர்களுக்கும் பதிப்பகத்தாருக்கும் நம்பிக்கையூட்டும் மகிழ்ச்சிக்குரிய விஷயமாகும். புத்தகக் கணகாட்சியில் காலச்சுவடின் அணுகுமுறையை அறிந்ததும் 450 கிலோமீட்டர் பயணம் செய்து அடுத்த வருடம் நடைபெறும் சென்னைப் புத்தகக் கண்காட்சியில் பங்குபெற வேண்டும் எனக் குக்கிராம வாசகனான நான் உறுதி எடுத்துக்கொண்டேன்.

ப. ராமகிருஷ்ணன்
காயக்காடு

'நுழைவுத் தேர்வு ரத்து – கிராமப்புற மாணவர்களுக்கு நன்மையா?' என்ற ரவிக்குமாரின் கட்டுரையை பிப்ரவரி இதழில் படித்தேன். நுழைவுத் தேர்வு என்ற ஒற்றை நோக்கோடு பார்க்காமல் ஒட்டுமொத்தக் கல்விச் செயல்பாட்டுடன் பார்த்தால் இதன் பரிமாணம் இன்னும் விரிவாகத் தெரியும். தமிழ்நாடு முழுவதும் தனியார் பள்ளிகளே இன்று கோலோச்சுகின்றன. பலரும் தங்கள் பிள்ளைகளை அதில் சேர்க்கவே விரும்புகின்றனர். அரசுப் பள்ளிகளில் ஏழைக் குழந்தைகளே படிக்கின்றனர். அவர்களுக்குத் தேவையான எந்த அடிப்படை வசதியும் கல்வி மேம்பாட்டுக்கான கருவிகளும் அங்கு கிடைப்பது இல்லை. காரணம், ஆசிரியர் பற்றாக்குறை, பெற்றோர்களின் கவனமின்மை, பிள்ளைகளின் குடும்பச் சூழல் ஆகியவை. இத்தகைய சூழலை மீறி ஒரு கிராமப்புற மாணவன் நுழைவுத் தேர்வை நினைத்தே பார்க்க முடியாது. இந்த நிலையில் நுழைவுத் தேர்வு என்பதை ஒதுக்கித் தள்ளிவிட்டுக் கல்வி மாற்றத்தில் நாம் கவனம் செலுத்த வேண்டும். படித்து ஒப்புவித்து, படித்ததை அப்படியே தேர்வில் கக்கும் நிலைமை, கல்வி என்ற செயல்பாடு அறவே மாற வேண்டும். மாணவர்களின் படைப்பாற்றல்; சிந்திக்கும் செயல்பாடு இவற்றிக்கெல்லாம் முன்னுரிமை கொடுக்கக் கூடிய ஒரு கல்வி முறையைப் பற்றி நம் கல்வியாளர்கள் சிந்திக்கும் நேரம் வந்து விட்டது. அந்த நிலையில் நுழைவுத் தேர்வு கண்டு கிராமப்புற மாணவன் பயங்கொள்ள மாட்டான்.

ஞானஒளி
ஆரப்பள்ளம்

## கடிதம், விவாதம், படைப்பு . . .

- வாசகர் கடிதம் அனுப்புபவர்கள் ஒவ்வொரு மாதமும் 15ஆம் தேதிக்குள் கடிதம் எங்களுக்குக் கிடைக்குமாறு அனுப்புக. மின்னஞ்சலில் கடிதம் அனுப்புவோர் (kalachuvadu@sancharnet.in) TAM, TAB, TSCII, Bamini ஆகிய குறியீடுகள் கொண்ட எழுத்துருக்களைப் பயன்படுத்துக.
- விவாதம் பகுதிக்கு எழுதுவோர் தங்கள் கருத்துகளை 500 சொற்களுக்கு மிகைப்படாமல் எழுதுக.
- படைப்புகள் அனுப்புவோர் பிரதி எடுத்துவைத்துக்கொண்டு அனுப்புக. மொழிபெயர்ப்புகளை அனுப்புவோர் மூலத்தின் ஒளிநகலையும் இணைக்க வேண்டும்.
- படைப்புகளைத் திருப்பி அனுப்ப இயலாது. எனவே தபால் தலைகளை இணைக்க வேண்டாம். பிரசுர விவரம் மூன்று மாதங்களுக்குள் தெரிவிக்கப்படும்.
- பிரதியின் பின்புறம் முழு முகவரியையும் காசோலை அனுப்புவதற்கான பெயரையும் மறக்காமல் குறிப்பிடுக.
- அஞ்சலட்டையில் எழுதி அனுப்பப்படும் கவிதைகள் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படமாட்டா.

www.padippakam.com



# 'தமிழுக்குப் புத்துயிர் தந்த பதிப்புகள்'

'காலச்சுவடு' ஜனவரி 2006 இதழில் இடம்பெற்றுள்ள 'தமிழுக்குப் புத்துயிர் தந்த பதிப்புகள்' என்ற சிறப்புப் பகுதி தமிழியல் ஆய்வாளர்களுக்குக் கிடைத்த நல்விருந்தாகும்.

கம்பராமாயணத்துக்கான 'செம் பதிப்பு' இன்றுவரை 'கைகூடாத கன' வாகவே உள்ள சோக வரலாற்றைச் சிந்தையைத் தொடும் வகையில் சொல்கிறது சு. வேங்கடராமன் அவர்களுடைய கட்டுரை. ஈழத்தின் பதிப்பு முயற்சிகள் பற்றிப் பேசவந்த பொ. வேல்சாமி அவர்களது கட்டுரை (நன்கறியப்பட்டவர்களான ஆறுமுக நாவலர் மற்றும் சி.வை. தாமோதரம் பிள்ளை ஆகியோர் தவிர்த்த) ஈழத்துப் பதிப்பாசிரியர்களுள் பலரைப் பற்றிய சுருக்க அறிமுகமாக அமைந்துள்ளது. இவர்களுள் வித்துவான் ந. சுப்பைய பிள்ளையின் *தஞ்சைவாணன் கோவைப்* பதிப்பின் சிறப்பைத் தமிழகத்தின் அந்நூற்பதிப்பு முயற்சிகளுடன் ஒப்புநோக்கிப் பொ. வேல்சாமி தந்துள்ள பாராட்டு ஈழத்தவர்களுக்கு மன நிறைவைத் தரக்கூடியது.

நாட்டார் வழக்காற்றியல் சார் பதிப்பு முயற்சிகள் 'மாற்றாந்தாய் மனப்பான்மை'யுடன் அணுகப்பட்டுவந்த வரலாற்றை நோக்கி நமது கவனத்தை ஈர்க்கிறார் அ.கா. பெருமாள். தமிழ்ச் செம்பதிப்பு முன்னோடிகளுள் ஒருவராக ஆ. பாலகிருஷ்ணப்பிள்ளை என்பாரை இனங்காட்டுகிறார் ராஜ கௌதமன். இலக்கியப் பதிப்பு முயற்சிகளில் சமயக் கண்ணோட்டம் விளைவித்த தாக்கத்தைப் பெருமாள்முருகன் அவர்களின் கட்டுரை தெளிவாகவே எடுத்துரைக்கிறது. இவ்வாறே, விவிலியப் பதிப்பு முயற்சிகள் தொடர்பாக ஆ. சிவசுப்பிரமணியனும் பாரதியாரின் உரைநடை நூல்களின் பதிப்பு முயற்சிகள் பற்றிப் பழ. அதியமானும் 'பாரதம் தந்த பகீரதன்' ம.வீ. இராமானுஜாசாரியார் பற்றி ஆ. இரா. வேங்கடாசலபதி அவர்களும் இசை நூல் பதிப்புகள் பற்றி நா. மம்மது அவர்களும் எழுதியுள்ளவை ஆழமும் நுட்பமும் சுவையும் பொருந்தியவையாக விளங்குகின்றன. தஞ்சை டி.என். இராமசந்திரன் அவர்களின் திருவாசகப் பதிப்புகள் தொடர்பான கட்டுரையின் குறிப்புகள் மிகுந்த பயனுடையன. முழுமையான கட்டுரையாகவே பதிவுசெய்திருந்தால் பயன் மிகுந்திருக்கும்.

'தமிழுக்குப் புத்துயிர் தந்த பதிப்புகள்' என்ற தலைப்புசார் பொருள்பரப்பு மேற்படி சில கட்டுரைகளோடு மட்டும் நிறைவுபெறாது. 'சிலப்பதிகாரப் பதிப்புகள்' மற்றும் 'சித்தாந்த நூற்பதிப்புகள்', புராண நூற்பதிப்புகள்' 'தொல்காப்பியம் பதிப்புகள்' முதலியனவாக இப்பொருள் பரப்பு விரிவு பெறக்கூடியது என்பதையும் இங்குச் சுட்டுவது எனது கடமையாகிறது.

மேலும் ஒரு முக்கியக் குறிப்பு: சு. வேங்கடராமன் அவர்கள் தமது கட்டுரையில், 'அண்ணாமலைப் பல்கலைக்கழகம் தனது கம்பராமாயணப் பதிப்பு முயற்சியில் அத்துறைப் புலமை மிக்க பேராசிரியர் எஸ். வையாபுரிப் பிள்ளையவர்களைப் பயன்படுத்திக் கொள்ளத் தவறியமை'க்கான கவலையைப் பதிவுசெய்திருந்தார். 'அதற்குப் பின்னால் இருந்திருக்கக்கூடிய அரசியல் எது?' என்ற வினாவும் அக்கட்டுரையில் எழுப்பப்பட்டிருந்தது. இந்த 'அரசியல்' பற்றிய ஒரு முக்கியத் தகவல் பேராசிரியர் வி.ஐ. சுப்பிரமணியம் (தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர்) அவர்களால் *கணையாழி* மார்ச் 2000 இதழில் (ப. 44) தரப்பட்டுள்ளது.

'எஸ். வையாபுரிப்பிள்ளை நினைவுகள்' என்ற தலைப்பில் அவர் எழுதிய *கணையாழி* கட்டுரையில இடம்பெற்றுள்ள தகவலின் சாரம்சம் வருமாறு :

"1950களில் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் துணைவேந்தராக அமர்ந்திருந்த சர் ஆர்.கே. சண்முகம் செட்டியார் அவர்கள் அப்பல்கலைக் கழகம் மேற்கொண்ட கம்பராமாயணப் பதிப்பு முயற்சியில் பங்களிப்புச் செய்வதற்குப் பேராசிரியர் எஸ். வையாபுரிப்பிள்ளையவர்களை அழைத்திருந்தார். ஆனால் வையாபுரிப்பிள்ளையவர்களின் கால ஆய்வுகளில் அந்த அழைப்பார்வம் தொடர்ந்து செயல்பட முடியாதவாறு தடுத்துவிட்டனர். இவ்வாறு வையாபுரிப்பிள்ளையவர்களுக்கான அழைப்பைத் தடுக்க முயன்றவர்கள் தங்களுடன் பேராசிரியர் தெ. பொ. மீனாட்சி சுந்தரத்தையும் இணைத்துக் கொள்ள முயன்றுள்ளனர். அதற்குத் தெ.பொ.மீ. மறுத்துவிட்டார்."

வையாபுரிப்பிள்ளை அவர்கள் தொடர்பான இந்த நினைவிலே பேராசிரியர் தெ. பொ.மீ. அவர்களும் தொடர்புபடுகிறார். அவரது உயர் பண்பும் பதிவுபெறுகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

கலாநிதி நா. சுப்பிரமணியன்
கனடா

மருதா வெளியீடு

**நகர்க் குருவி**
(கவிதைகள்)
இரத்தின. புகழேந்தி
பக்: 112, விலை: ரூ. 60





**நவீன தமிழ்க் கவிதையின் போக்குகள்**
கரிகாலன்
பக்: 128, விலை: ரூ. 60



**தன்னிடத்தை நிரப்பியுள்ளது நாற்காலி**
(கவிதைகள்)
பொன். குமார்
பக்: 80
விலை: ரூ.40




**கொலை மற்றும் தற்கொலை பற்றி**
ரமேஷ்–பிரேம்
(கவிதைகள்)
பக்: 64, விலை: ரூ. 40

விளம்பரம்

மருதா
226 (188), பாரதி சாலை,
ராயப்பேட்டை, சென்னை–14.
போன்: 09382116466

## சந்தா செலுத்தவும் நூல்களை பெறவும் சில எளிய வழிமுறைகள்

*காலச்சுவடுக்கு சந்தா செலுத்த விரும்புவோர் மற்றும் காலச்சுவடு வெளியீடுகளை நேரடியாகப் பெறப் பணம் செலுத்த விரும்புவோருக்கான சில எளிய வழிமுறைகள்*

காலச்சுவடு ICICI வங்கிக் கணக்கு எண் 609505010967

ICICIஇன் எந்தக் கிளையிலிருந்தும் காலச்சுவடு கணக்கு எண்ணுக்குச் சந்தா அல்லது புத்தக விலையைப் பணமாக டெப்பாசிட் செய்யலாம். வங்கிக் கமிஷன் இல்லை.

பிற வங்கியில் கணக்கு வைத்திருப்பவர்கள் Kalachuvadu Pathippagam பெயருக்குக் காசோலை எழுதி, காலச்சுவடு கணக்கு எண் குறிப்பிட்டு உள்ளூர் ICICI வங்கியில் டெப்பாசிட் செய்யலாம். கமிஷன் இல்லை.

ICICI வங்கியில் கணக்கு வைத்திருப்பவர்கள் Kalachuvadu Pathippagam பெயருக்குச் செக் எழுதி, காலச்சுவடு கணக்கு எண் குறிப்பிட்டுப் பணம் transfer செய்துவிடலாம். கமிஷன் இல்லை.

Internet வழிக் காலச்சுவடு கணக்குக்குப் பணம் செலுத்தலாம். தனிக் கமிஷன் உண்டு.

சில குறிப்பிட்ட பெரிய நகரங்களில் தொலைபேசி வழி (Phone Banking) பணம் செலுத்தும் வசதி உண்டு. ICICI வங்கியில் கணக்கு வைத்திருப்பவர்கள் Phone Banking வழி பணம் செலுத்தலாம். இதற்கும் கமிஷன் உண்டு.

ICICI வங்கியில் கணக்கு வைத்திருப்பவர்கள் வரைவோலை (Draft) எடுப்பதற்குப் பதில் ICICI வங்கியின் Payable at par at all branches of ICICI Bank in India cheque எழுதிக் காலச்சுவடு முகவரிக்கு அனுப்பி வைக்கலாம்.

மேற்படி வழிமுறைகளில் பணம் அனுப்புபவர்கள் செலுத்தப்பட்ட தொகை, தேதி, இடம், நாள் மற்றும் தேவைகளைக் குறிப்பிட்டுக் காலச்சுவடு தலைமை அலுவலக முகவரிக்குக் கடிதம் எழுதவேண்டுகிறோம். அல்லது மின்னஞ்சல் முகவரியில் தொடர்புகொள்ளலாம்.

## அயலில் இருந்து பணம் அனுப்ப விரும்புவோருக்குத் தேவையான தகவல்கள்

## Wire Transfer Correspondent Bank Details

| Currency | Name of Correspondent Bank | Account No. | "SWIFT Address / FED ABA (USD) or Sort Code (GBP) or BSB No. (AUD) or IBAN No. (EUR)" |
|---|---|---|---|
| USD | JP MORGAN CHASE, NEW YORK | 001-1-427374 USD | "CHASUS333XXX / FED ABA 021000021" |
| GBP | HSBC BANK PLC (MIDLAND) | 37063729 LONDON | "MIDL GB22XXX / Sort Code 40-05-15" |
| EUR | JP MORGAN CHASE, FRANKFURT | 6231400646 | "CHASDEFXXXX / IBAN No. DE965011 08006231400646 |
| CAD | ROYAL BANK OF CANADA, TORONTO | 095912303071 | ROYCCAT2XXX |
| AED | EMIRATES BANK INTERNATIONAL PJSC | 0004809148784 | EBILAEADXXX |
| AUD | JP MORGAN CHASE, SYDNEY | 01-0032831 | "CHASAU2XXXX / BSB NO 212200" |
| CHF | UBS AG, ZURICH | 02300000094 | UBSWCHZH80A 152050000L |
| DKK | DEN DANSKE BANK, COPENHAGEN | 3996056694 | DABADKKKXXX |
| HKD | HSBC, HONG KONG | 511639197001 | HSBCHKHHHKH |
| JPY | SUMITOMO BANK | 3313 | SMBCJPJT |
| NOK | DEN NORSKE BANK, OSLO NO. | 7002.02.04271 | DNBANOKKXXX |
| SEK | NORDEA BANK SWEDEN AB, STOCKHOLM SE | 39527910226SEK | NDEASESSXXX |
| SGD | JP MORGAN CHASE, SINGAPORE | 0111872787 | CHASSGSGXXX |

## காலச்சுவடு சிறப்புத் திட்டங்கள்

- காலச்சுவடு தனி இதழ் ரூ.15. ஆண்டுச் சந்தா ரூ.140. இரண்டாண்டுச் சந்தா ரூ.240. ஐந்தாண்டுச் சந்தா ரூ.600. மாணவர் ஆண்டுச் சந்தா ரூ. 75 (அடையாள அட்டையின் ஒளிநகலை அனுப்புக.)
- வெளிநாட்டவர்களுக்கு ஆண்டுச் சந்தா ரூ. 600. இரண்டாண்டுச் சந்தா ரூ.1000. ஐந்தாண்டுச் சந்தா $75. காலச்சுவடு ICICI வங்கி எண்ணுக்கு Wire Transfer வழி சந்தாவை அனுப்பிவைக்கலாம். அவசியமான தகவல்கள் மேலே கொடுக்கப்பட்டுள்ளன.
- காலச்சுவடு ஆயுள் சந்தா ரூ.2500. அயலில் வாழ்பவர்களுக்கு ஆயுள் சந்தா US$ 250. ஆயுள் சந்தாதாரர்கள் ரூ.500க்கான காலச்சுவடு பதிப்பக நூல்களை இலவசமாகப் பெற்றுக்கொள்ளலாம்.
- மூன்று வாசகர்களைச் சந்தாதாரர்களாகச் சேர்ப்பவர்களுக்கு ஒரு சந்தா அன்பளிப்பாக வழங்கப்படும். இந்தத் திட்டப்படி ஆண்டுச் சந்தா, இரண்டாண்டுச் சந்தா, ஐந்தாண்டுச் சந்தா, மாணவர் சந்தா, ஆயுள் சந்தா ஆகியவற்றைச் சேர்த்துக் கொடுப்பவர்களுக்கும் அதற்கு இணையான ஒரு சந்தா அன்பளிப்பாக வழங்கப்படும்.
- ரூ.500க்குக் காலச்சுவடு பதிப்பக நூல்களை எங்களிடமிருந்து நேரடியாகப் பெற்றுக்கொள்பவர்களுக்குக் காலச்சுவடு ஓராண்டுச் சந்தா அன்பளிப்பாக வழங்கப்படும்.
- காலச்சுவடு இரண்டாண்டுச் சந்தாதாரராகச் சேர்பவர்களுக்கு 6 (பழைய) இருமாத இதழ்கள் அன்பளிப்பாக வழங்கப்படும். இதை இந்தியாவில் இருக்கும் உங்கள் நண்பர்களுக்கும் காலச்சுவடு மூலமாக அனுப்பலாம். பழைய இதழ்கள் கையிருப்பை அனுசரித்து வழங்கப்படும்.

சந்தாத் தொகையை Kalachuvadu என்னும் பெயரில் பணவிடையாகவோ வரைவோலையாகவோ நாகர்கோவில் / சென்னை வங்கிக் காசோலையாகவோ அனுப்புக. இதரக் காசோலைக்கு ரூ. 40 சேர்த்து அனுப்புக.

**தலைமை அலுவலகம்**

669, கே.பி. சாலை, நாகர்கோவில் 629 001
தொலைபேசி: 91-4652-278525
தொலைநகல்: 91-4652-231160
மின்னஞ்சல்: kalachuvadu@sancharnet.in

**சென்னை அலுவலகம்**

216, திருவல்லிக்கேணி நெடுஞ்சாலை
திருவல்லிக்கேணி, சென்னை 600 005
தொலைபேசி: 91-44-28481662, 91-44-42155972
மின்னஞ்சல்: kalachuvadu@gmail.com

www.padippakam.com



# NEW FROM YODA PRESS

New Perspectives on Indian Pasts


*General Editor: Saurabh Dube*

Professor, Centre for Asian Studies, El Colegio de Mexico, Mexico City

## In Those Days There Was No Coffee Writings in Cultural History

*A.R. Venkatachalapathy*

**228pp. / Demy Octavo / Hardback / Rs 495**
**isbn: 81-902272-7-0**




'Few are the scholars who now travel between these very separate [bilingual] worlds [of English and the mother tongue]. One of these exceptions is the brilliant social historian A.R. Venkatachalapathy, who writes fluently in English and more fluently in Tamil...'
—Ramachandra Guha

'A.R. Venkatachalapathy deftly combines social and cultural history, and draws on a spectrum of literary sources... [His essay on coffee] could also form part of an as yet unwritten history of consumption in colonial India.' — Sanjay Subrahmanyam

'A historian without linguistic skill and literary abilities and sensibilities would be no historian at all,' writes A.R.Venkatachalapathy in the Introduction to *In Those Days There Was No Coffee*. Indeed, this delightful new volume represents that rare thing in Indian history-writing — a thoroughly engaging read. Venkatachalapathy's writings on the cultural history of colonial Tamilnadu would be enjoyed equally by both the scholar looking for a nuanced and lucid narrative based on thorough research, as well as the lay informed reader in search of a classic good read.

The essays fall into two distinct sections. The essays in the first section contribute to an as yet unwritten history of consumption in colonial India. Taking up both material (coffee, tea and tobacco) and cultural (the cartoon, the city and modern literature) artefacts, the first five chapters explore how these were consumed in colonial Tamil society. The chapters in the second part, broadly concerned with the politics of language, literature and identity in colonial Tamilnadu, make an important contribution to the cultural history of the Dravidian movement. The author draws from sources as varied as poetry, fiction, essays, reviews, comment, advertisement, and notices to bring to life a rich and vibrant cultural history. As authoritative as they are captivating, the nine essays in the volume represent another valuable addition to the small corpus of history titles which also qualify as accomplished writing.

**YODA PRESS**
**G 93 Connaught Circus**
**New Delhi 110 001**
**www.yodapress.com**

**distributed by**

FOUNDATION BOOKS

**21/1 (New No. 49), 1st Floor,**
**Model School Road, Thousand Lights, Chennai 600 006**
**e-mail: cupchen@cupind.com**
**www.foundationbooksindia.com**

### Other Titles in the Series

*Aryans in British India* (paperback edition)
Thomas R. Trautmann, Professor of History & Anthropology, University of Michigan
(294pp.; Royal; Rs 225; pb; isbn: 81-902272-1-1)

*Who Invented Hinduism?: Essays on Religion in History*
David N. Lorenzen, Professor, Centre for Asian Studies, El Colegio de Mexico, Mexico City
(308pp.; Demy Octavo; Rs 595; hb; isbn: 81-902272-6-2)

**Our books are available at: The New Booklands, Landmark, Odyssey, Higginbothams, Connexions, Tamil Nadu Book House, TBH Pvt. Ltd.**



படிப்பகம்

www.padippakam.com



அஞ்சலி: கே. விஸ்வநாதன்

# மரணம் விடு தூது

**கண்ணன்**

பழக்கப்படுத்திக்கொள்ளும்
பொருட்களைத்தான்
தெரிந்துகொள்ள முடியும்.

– 'குட்டி இளவரசன்' (1946)

**மீண்டும் மீண்டும் பட்டுக்கொண்டே**யிருக்கிறது. மரணம் பற்றிய செய்திகள் இப்போதெல்லாம் சகஜமாக வெளிப்படுவதுபோலத் தோன்றுகிறது. மரணம் நெருங்கி, உரையாடித் தன்னைப் பழக்கப்படுத்திக்கொள்ள முயல்வது போலவும் தோன்றுகிறது.

கலைச்செல்வனின் மரணம், சுனாமியில் சேதுராமன் குடும்பம் சின்னாபின்னப்பட்டது, அப்பாவின் மரணம், இப்போது 'ஆரெம்கேவி' விஸ்வநாதன். இவற்றோடு நண்பர்கள் தம் நண்பர்களை, பெற்றோரை, உற்றோரை, தம் மக்களை இழந்த செய்திகள். மரணம், மரணங்களால் சூழ்ந்து வருவது போன்ற உணர்வு.

●

விஸ்வநாதனை சந்திப்பதற்கு முன்னரே அவரைப் பற்றி வியாபாரத் தொடர்புகள் மூலமாகவும் நண்பர்கள் வழியாகவும் சில ஆண்டுகளாகச் செய்திகள் வந்துகொண்டிருந்தன. எல்லோருடைய தொனியிலும் அவரைப் பற்றிய ஒரு நட்சத்திர மதிப்பு வெளிப்பட்டுக்கொண்டிருந்தது. நெல்லையின் பழமையில் புதிய காற்றுபோல அமைந்த அவரது வருகையும் இருப்பும் சந்திக்கும் ஆர்வத்தை ஏற்படுத்தியிருந்தன.

1997இல் நாகர்கோவிலில் ஒரு கூட்டத்தில் முதலில் சந்தித்தேன் என்று ஞாபகம். பின்னர் நண்பர் சலபதியுடன் நெல்லையில் ஆரெம்கேவியில் சந்தித்து நீண்ட நேரம் பேசிக் கொண்டிருந்தோம். அப்போது 'அன்னை இட்ட தீ' தொகுப்புப் பணி நடந்துகொண்டிருந்தது. அதைப் பற்றிப் பேசிய போது, அப்பணியின் முக்கியத்துவத்தை உணர்ந்து, சில உதவிகள் செய்ய ஆர்வத்துடன் முன்வந்தார். அதன் பின்னர் 'தமிழ் இனி 2000', புதுமைப் பித்தன் நூல் வெளியீடு எனச் சில பொருத்தமான சந்தர்ப்பங்களில் அவரைச் சந்தித்து உதவி கேட்டிருக்கிறேன். கேட்ட எந்த உதவியையும் அவர் அநேகமாக மறுத்ததில்லை.



**கே. விஸ்வநாதன்**
**(19.09.1957 – 27.01.2006)**

அவரைச் சந்திக்கச் செல்லும் போது பேசவந்த விஷயம் 10 நிமிடத்தில் முடிந்துவிடும். எனினும் எந்தச் சந்திப்பும் ஒரு மணி நேரத்திற்குக் குறைவாக முடிந்ததில்லை. வெளியே காத்திருப்பவர்களின் எண்ணம் எனக்குக் கூச்சத்தை ஏற்படுத்தி நெளியவைத்ததுண்டு. ஆனால் 'பெரிய' மனிதர்களின் அபத்தமான உளறல்களை மௌனமாகக் கேட்டுக்கொண்டிருக்கும் துரதிர்ஷ்டத்தால் நெளிய வேண்டிய சந்தர்ப்பம் அவர்முன் எப்போதும் ஏற்பட்டதில்லை. வயதில் சற்று மூத்த ஒரு நண்பருடன் பல விஷயங்களைத் தீவிரமாக விவாதிக்கும் தன்மையுடனேயே அச்சந்திப்புகள் அமைந்திருக்கின்றன. வேறொரு தளத்திலிருந்து நடப்புகளை நுட்பமாக அவதானிக்கும் ஒருவரின் பார்வையில் வெளிப்படும் புதிய கருத்துகளை அசைபோடும் சுகத்துடனேயே அந்தச் சந்திப்புகளிலிருந்து வெளியே வந்திருக்கிறேன்.

> நம் சமூகத்தில் நுண் உணர்வு கொண்டவர்களாகத் தம்மைக் கருதிக்கொள்பவர்கள் அநேகம். தம்மைப் பிறரும் சமூகமும் நடத்தும் விதம் பற்றிய நுண் உணர்வு கொண்டவர்கள். பிறரையும் சமூகத்தையும் தாம் கையாளும் விதத்தில் தடித்தனம் மிக்கவர்களாக இருப்பதே வழக்கம். இரு திசைகளிலும் நுண் உணர்வு கொண்டவர்கள் அரிதிலும் அரிது. அவர்களில் விஸ்வநாதனும் ஒருவர்.

●

உதவி கேட்பது சங்கடம் தரும் விஷயம். அதுவும் நண்பர்களிடம் உதவி கேட்டு நிற்பது மன நெருக்கடியை ஏற்படுத்தும் விஷயம். ஏனெனில் மறுப்பதற்கான வெளி அங்கு மிகவும் குறுகிவிடுகிறது. இதே காரணங்களுக்காக உதவி கேட்டு வருபவர்களை எதிர்கொள்வதும் மிகச் சங்கடமானதுதான். பணமும் அதிகாரமும் படைத்தவர்களுக்கு இந்த நெருக்கடி அன்றாடம் ஏற்படும். அன்றாடம் ஏற்படுவதாலேயே அவற்றை நுண் உணர்வுடன் எதிர்கொள்ளும் பண்பு அவர்களிடம் சிதைந்துவிடும் சாத்தியம் அதிகம். அந்தச் சாத்தியத்தை மீறி ஒவ்வொரு மனிதரையும் நுண் உணர்வுடனும் முழுமனதோடும் எதிர்கொள்ள முயன்றவர் விஸ்வநாதன். இச்சிறிய வயதில் மிகப் பெரிய வட்டத்தை அவரால் அரவணைக்க முடிந்ததற்கு இதுவே முக்கியக் காரணம்.

உதவி செய்யும்போது அதைத் தன்னுடைய பெருந்தன்மையாக அல்லாமல் தன்னுடைய கடமை



படிப்பகம்

யாக, தனக்குக் கிடைத்த வாய்ப்பாக முன்வைப்பார். அவை சம்பிரதாயமான வார்த்தைகளாக அல்லாமல் ஆத்மார்த்தமாகத் தொனிக்கும். மறுக்கும்போது தனது இயலாமையால் இந்த அரிய யோசனையை ஏற்க முடியவில்லையே என்ற துக்கத்தை வெளிப்படுத்துவார். மறுக்கும் சங்கடத்தை அவருக்குத் தராத சிக்கனத்துடனேயே அவரை அணுக வேண்டும் என்று தோன்றும். மீண்டும் மீண்டும் கேட்க வைத்து நுட்பமாக அவமதிப்பது, பதில் தராமல் உருட்டுவது, தவிர்ப்பது எல்லாம் அவர் இயல்பிலேயே இல்லாத விஷயங்கள். பிறருக்கு உதவும் கலை கைவரப்பெற்றவர் விஸ்வநாதன்.

•

சமீப காலமாக மாதமொரு முறையேனும் சந்தித்து வந்தோம். 'தோழி.காம்' என்ற இணைய தளத்தை ஆரெம்கேவியுடன் இணைந்து நடத்திவரும் வாய்ப்பு அவருடன் அணுகி உரையாடும் பல சந்தர்ப்பங்களை ஏற்படுத்தியிருந்தது. கடைசியாக ஜனவரி முதல் வாரம் 'தோழி.காம்' குழுவுடன் அவரைச் சந்தித்தேன். பல்வேறு விஷயங்களை, திட்டங்களைப் பகிர்ந்துகொண்டோம். "பெண் உடலை விளையாட்டுச் செய்திப் பகுதியில் 'கண்ணியமான' இதழ்கள் சுரண்டுவதை விவாதத்திற்கு உட்படுத்த வேண்டும்" என்றார் விஸ்வநாதன். 'விளையாட்டுச் செய்தி' எனும் புனிதத்தில் மயங்கி இத்தனை நாட்களும் இதை அவதானிக்காமல் விட்டோமே என்று நினைத்துக்கொண்டேன்.

நம் சமூகத்தில் நுண் உணர்வு கொண்டவர்களாகத் தம்மைக் கருதிக்கொள்பவர்கள் அநேகம். நுண் உணர்வு கொண்டவராகப் பிறரால் கருதப்படுபவர்களையும் பார்த்திருக்கிறேன். தம்மைப் பிறரும் சமூகமும் நடத்தும் விதம் பற்றிய நுண் உணர்வு கொண்டவர்கள், பிறரையும் சமூகத்தையும் தாம் கையாளும் விதத்தில் தடித்தனம் மிக்கவர்களாக இருப்பதே வழக்கம். இரு திசைகளிலும் நுண் உணர்வு கொண்டவர்கள் அரிதிலும் அரிது. அவர்களில் விஸ்வநாதனும் ஒருவர்.

மிகவும் மரபான ஒரு குடும்பத்திலிருந்து வந்து மிகவும் மரபான தொழிலில் ஈடுபட்டவர் அவர். ஆனால் அத்தொழிலில் நவீனத்தையும் புதுமையையும் புகுத்தியவர். சமூக மரபுகளோடு ஒட்டி ஒழுக வேண்டிய சூழலில் இயங்கியவர். ஆனால் எல்லாவற்றையும் பற்றிய ஒரு பார்வை, ஒரு விலகல், ஒரு மெல்லிய எள்ளல் அவரிடமிருந்தது. மிக நுட்பமான நகைச்சுவை உணர்வு. நாற்காலியில் சட்டெனச் சாய்ந்து, உடல் தளர, தலையை அண்ணாந்து தூக்கி, வாய்விட்டும் மனம்விட்டும் அவர் சிரிக்கும் காட்சி அடிக்கடி மனதில் ஓடிக்கொண்டிருக்கிறது.

'இலக்கியத் தன்மை' மிளிரும் ஒரு நண்பரை, 'வியாபாரியை' இழந்திருப்பது, பிண வியாபாரிகள் இலக்கியவாதிகளாகப் பவனிவரும் இன்றைய சூழலில் பேரிழப்பாக வருத்துகிறது.

மரணம் விடு தூதுதான் என்ன?

•

வடிவமைப்பாளர்
ப்ரிண்டர்
பதிப்பாளர்



Raagaas

தமிழிலும் ஆங்கிலத்திலும் புத்தகப் பணி செய்து தரப்படும்.

பல்கலைக்கழக ஆய்வுக் கட்டுரைகள் மற்றும்
ப்ராஜெக்ட் ஒர்க் சிறந்த முறையில் செய்து தரப்படும்.

ராகாஸ்
அஹமது வணிக வளாகம், தரைத் தளம்
12/293, இராயப்பேட்டை நெடுஞ்சாலை
இராயப்பேட்டை, சென்னை – 600 014
தொலைபேசி: 28350437
செல்பேசி: 9444050437

விளம்பரம்

www.padippakam.com



சிறப்புப் பகுதி

தொகுப்பும் ஒருங்கிணைப்பும்:
ரவிக்குமார்



# கருத்துச் சுதந்திரமும் நீதிமன்ற அவமதிப்பும்

ரவிக்குமார்
கே.ஜி. கண்ணபிரான்
அருந்ததி ராய்
சு. சத்தியச் சந்திரன்
ஜி.ஆர். சுவாமிநாதன்

## நீதிமன்ற அவமதிப்பு: ஒரு விமர்சனக் குறிப்பு

ரவிக்குமார்

"சுதந்திரமான பேச்சின் மூலமாக மாற்றத்தைக் கொண்டுவருதல் என்பது ஜனநாயகத்தின் அடிப்படை, நீதியமைப்பும் இதில் விதிவிலக்கல்ல" என்று முன்னாள் நீதிபதி வி.ஆர். கிருஷ்ணய்யர் குறிப்பிட்டார். ஆனால் இன்றைய நமது நீதியமைப்போ தன்னைப் பேச்சு சுதந்திரத்துக்கு எதிர் நிலையில் நிறுத்திக்கொண்டு விட்டதுபோல் தெரிகிறது.

முன்னாள் முதல்வரான கருணாநிதி இந்து என்பதற்குப் பெரியார் கொடுத்த விளக்கத்தை எடுத்துக் கூறியதற்காக வழக்கொன்றைச் சந்தித்துவருகிறார்; சில முன்னாள்(?) திரைப்பட நடிகைகள் தெரிவித்த கருத்துக்களுக்காக அவர்கள்மீது பல நீதிமன்றங்களில் வழக்குகள் பதிவுசெய்யப்பட்டுள்ளன, "விசாரணை என்பதே தண்டனையின் ஒரு பகுதியாக" மாறிவிட்டிருக்கும் நமது நாட்டில் மேற்சொன்ன நடவடிக்கைகள் எந்த அளவுக்குப் பேச்சு சுதந்திரத்துக்கு எதிரானவை என்பதை நாம் புரிந்துகொள்ள முடியும். இவையெல்லாம் கீழ் கோர்ட்டுகளில் நடக்கின்றன. உயர் நீதிமன்றங்களும் உச்ச நீதிமன்றமும் அப்படி இல்லை என யாரேனும் கூறலாம். ஆனால் அது உண்மையல்ல. சமீபகாலமாக உயர் நீதிமன்றங்களும் உச்ச நீதிமன்றமும் வழங்கிவருகிற பல தீர்ப்புகள் நமது கவலையை அதிகரிக்கின்றன. 'முட்டையை வெளிப்படையாக வைத்து விற்பனை செய்வது, சைவ உணவுப் பழக்கம் உள்ளவர்களின் உணர்வுகளைப் புண்படுத்துவதாக" ஒரு உயர் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது. பொது வேலை நிறுத்தம் (பந்த்), ஊர்வலம் நடத்துதல், பொதுக் கூட்டங்கள் நடத்துதல் முதலானவற்றுக்கு எதிராகத் தொடர்ந்து தீர்ப்புகள் வழங்கப்பட்டுவருகின்றன. எல்லாவற்றுக்கும் உச்சமாக வேலைநிறுத்தம் (Strike)



படிப்பகம்

www.padippakam.com



செய்யும் உரிமையும் மறுக்கப்பட்டுக் கடுமையான தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

ஒரே நாளில் ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட அரசு ஊழியர்களைப் பணிநீக்கம் செய்து சாதனை படைத்த ஜெயலலிதா, தனது சாதனையைத் திரும்பப் பெற்று அடுத்து ஒரு சாதனையைச் செய்துவிட்டார். தேர்தல் அதற்கான நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளது. ஆனால் அந்த உத்தரவை 'உயர்த்திப் பிடித்த' நீதிமன்றத் தீர்ப்பு இன்னும் கழுவப்படாத கறையாகவே எஞ்சியுள்ளது.

இப்போது ஒரு இந்திய பிரஜைக்குத் தனது சுதந்திரத் தைக் காத்துக்கொள்வதற்கான கடைசிப் புகலிடமாக நீதிமன்றமே உள்ளது. ஆனால் அந்த நம்பிக்கையும் பறிபோய்விடுமோ என்ற அச்சம் இப்போது அதிகரித்து வருகிறது. இதற்கான சமீபத்திய உதாரணம் 'க்ளெமான்சோ' விவகாரத்தில் உச்ச நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவாகும்.

ரசாயனக் கழிவுகளை ஏற்றிக்கொண்டு இந்தியா வந்த ஃப்ரான்ஸ் நாட்டுக் கப்பலான 'க்ளெமான்சோ'வை இந்தியாவுக்குள் அனுமதிப்பது தொடர்பாகத் தொடரப் பட்ட பொதுநல வழக்கில் உச்ச நீதிமன்ற பெஞ்ச் பிறப்பித்துள்ள உத்தரவு நமது ஜனநாயக அமைப்பு குறித்தே சந்தேகத்தை எழுப்பியுள்ளது. 'இந்த வழக்கு குறித்து ஆர்ப்பாட்டங்கள் செய்வதும் இந்தப் பிரச்சினைக்கு ஆதரவாகவோ எதிராகவோ நடுநிலை யாகவோ கருத்துத் தெரிவித்துக் கட்டுரை எழுதுவதும் நீதிமன்ற அவமதிப்புக் குற்றமாகக் கருதப்படும்' என அந்த உத்தரவு குறிப்பிட்டுள்ளது. ஆனால் அந்தக் கப்பலை இந்தியாவுக்கு அனுப்பியதைத் தடைசெய்து ஃப்ரான்ஸ் நாட்டு உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டதைத் தொடர்ந்து அது ஃப்ரான்சுக்கே திரும்ப அழைக்கப் பட்டுள்ளது. இந்தியாவுக்கும் ஃப்ரான்சுக்கும் இடையி லுள்ள தொலைவைவிடவும் அவற்றின் நீதிகளுக்கு இடையிலான தொலைவு அதிகம் என்பதையே இது எடுத்துக் காட்டுகிறது.

இங்கிலாந்தைப் பின்பற்றி நீதிமன்ற அவமதிப்புச் சட்டத்தை இயற்றிய அமெரிக்காவில் சில சமயம் தொழிலாளர்களின் உரிமைகளுக்கு ஆதரவாக அந்த அதிகாரத்தை நீதிமன்றம் பயன்படுத்தியுள்ளது. 'யுனைட்டெட் ஸ்டேட்ஸ் எதிர் யுனைட்டெட் மைன் ஒர்க்கர்ஸ்' வழக்கில் (1947) நீதிமன்ற ஆணையை நிறைவேற்றாத நிர்வாகத்தின் செயல் கிரிமினல் குற்றம் எனக்கூறி தண்டனை வழங்கப்பட்டது. ஆனால் இந்தியாவிலோ இதற்கு நேரெதிராக நீதிமன்றம் நடந்து கொண்டதை சங்கர் குஹா நியோகி கொலை வழக்கில் நாம் பார்த்தோம்.

மத்தியப் பிரதேச மாநிலத்தில் பிரபலமான தொழிற்சங்கத் தலைவராக விளங்கியவர் சங்கர் குஹா நியோகி. அவர் 1991இல் கொலை செய்யப்பட்டார். அந்த வழக்கைப் புலனாய்வு செய்த சிபிஐ. சிம்ப்ளெக்ஸ் குரூப்ஸ் நிறுவனங்களைச் சேர்ந்த மூன்று தொழிலதிபர்கள்மீது குற்றப் பத்திரிகை தாக்கல் செய்தது. பல்தான் முல்லா என்ற கொலையாளிக்கு மரண தண்டனையும் இரண்டு தொழிலதிபர்கள் உள்ளிட்ட மேலும் ஐந்து பேருக்கு ஆயுள் தண்டனை


# தொடுவானம் தொடர்கிறது

(காலாண்டிதழ்)

**இளம்படைப்பாளிகளே!**
**உங்களது படைப்புக்களை விரும்பி வரவேற்கிறது**

## "தொடுவானம்"

**சிறுகதை, கட்டுரை, கவிதைகளை எழுதியனுப்புங்கள். வெளியிடுகிறோம்.**

**தொடுவானம் தொடர்கிறது**
**1/43, அம்பாசமுத்திரம்**
**கண்டமநாயக்கனூர் [வழி]**
**தேனி மாவட்டம் 625 517**

விளம்பரம்


யும் விதித்து விசாரணை நீதிமன்றம் தீர்ப்பளித்தது. மத்தியப் பிரதேச உயர் நீதிமன்றமோ குற்றவாளிகள் அனைவரையும் 1998 ஜூன் மாதத்தில் விடுதலை செய்தது. அதனை விமர்சித்து மத்தியப் பிரதேச மக்கள் சிவில் உரிமைக் கழகத்தைச் சேர்ந்த (பியுசிஎல்) ராஜேந்திர செய்ல் கருத்துத் தெரிவித்தார். அவரது கருத்து நாளேடுகளில் வெளியானது. உடனே அவர் மீதும் அவரது கருத்தை வெளியிட்ட நான்கு பத்திரிகை யாளர்கள்மீதும் நீதிமன்ற அவமதிப்பு வழக்கினைப் பதிவுசெய்த மத்தியப் பிரதேச உயர் நீதிமன்றம், அவர்களுக்குத் தண்டனையும் அளித்தது. ராஜேந்திர செய்லுக்கு அதிகபட்சமாக ஆறு மாத சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது (19/3/2001). உச்ச நீதிமன்றத்தில் அப்பீல் செய்து அந்தத் தீர்ப்புக்கு அவர் தடை பெற வேண்டி யிருந்தது.

'வா இண்டியா' (Wah India) என்ற ஆங்கிலப் பத்திரிகை வெளியிட்ட கட்டுரையொன்றில் தில்லி உயர் நீதிமன்ற நீதிபதிகளை வரிசைப்படுத்தி மதிப்பெண் போடப்பட்டிருந்தது. உடனே நீதிமன்றம் அந்தப் பத்திகையின் உரிமையாளர், ஆசிரியர், கட்டுரையாளர் அனைவர்மீதும் வழக்குப் பதிவு செய்தது. அவர்கள் நிபந்தனையற்ற மன்னிப்புக் கேட்டுத் தப்பித்தார்கள்.


நந்துலால் பல்வானி என்ற வழக்கறிஞர் நீதி மன்றத்தை நோக்கிச் செருப்பை வீசினார் என்பதற்காகத் தண்டிக்கப்பட்டார் (1999). காலையில் நடந்ததாகச்



படிப்பகம்

www.padippakam.com





**அமைதியை ஏற்படுத்தும் பொருட்டு அவர்களது மேசையில் வைக்கப்பட்டுள்ள சுத்தியல் உண்மையின் கதவுக்கு ஆணி அறைவதற்காக பயன்படுத்தப்படுமெனில் நமது நாட்டின் எதிர்காலம் என்னவாகுமென்றே தெரியாது.**

சொல்லப்பட்ட அந்தச் சம்பவத்துக்கு அன்று மாலையே தண்டனை வழங்கப்பட்டதுதான் வினோதம்.

நீதியின் ஊற்றுக்கண்ணாகக் கருதப்படும் அரசன் அந்த அதிகாரத்தை நீதிபதிகளுக்கு வழங்குவதாகக் கருதப்பட்ட மத்திய கால இங்கிலாந்தின் முடியாட்சிக்கும் குடியரசாகத் தன்னை அறிவித்துக்கொண்டுள்ள இந்தியாவின் குடியாட்சிக்கும் இடையே மிகப்பெரும் இடைவெளி இருக்க வேண்டியதே நியாயம். ஆனால் இந்தச் சட்டத்தின் விஷயத்தில் நாம் அந்த இடைவெளியை இல்லாமல் செய்துவிட்டோம். "உண்மையின் கதவை ஆணி அறைந்து மூடிவிடுவது கொடுங்கோன்மையாகும்" என நீதிபதி வி.ஆர். கிருஷ்ணய்யர் குறிப்பிட்டதை அவரது சகோதர நீதிபதிகள் கவனித்தாகத் தெரியவில்லை. அமைதியை ஏற்படுத்தும் பொருட்டு அவர்களது மேசையில் வைக்கப்பட்டுள்ள சுத்தியல் உண்மையின் கதவுக்கு ஆணி அறைவதற்காக உபயோகப்படுத்தப்படுமெனில் நமது நாட்டின் எதிர்காலம் என்னவாகுமென்றே தெரியாது. 'நீதிமன்ற அவமதிப்பு அதிகாரம்' நமது சட்ட அமைப்பில் தொடரத்தான் வேண்டுமா என்ற கேள்வியை இந்தப் பின்னணியிலேயே நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

நீதிபதிகள் எல்லாம் அறிந்தவர்களாக இருக்க முடியாது. அவர்கள் முன்னால் பலதரப்பட்ட பிரச்சினைகள் கொண்டு செல்லப்படுகின்றன. அந்த விஷயங்கள் குறித்து ஏற்கனவே அந்தந்தத் துறையில் உள்ள நிபுணர்கள் கூறிய கருத்துக்களையும் அவை பற்றி வந்துள்ள பொது மக்கள் அபிப்ராயங்களையும் விரிவாக அறிந்து கொள்வதன் வாயிலாகவே ஒரு நீதிபதி தம் முன் வருகின்ற வழக்கில் சரியான தீர்ப்பினைக் கூற முடியும். அறிவியல், தொழில்நுட்பத் துறைகளில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் தொடர்பான பிரச்சினைகள் முதலானவை மட்டுமின்றி தொழிலாளர் நலன் குறித்தும் விரிவடைந்து வரும் ஜனநாயகம் பற்றிய வரையறைகள் குறித்தும் தொடர்ந்து அவர் கற்றுக்கொண்டாக வேண்டும்.

ஆனால் நமது உயர் நீதிமன்றங்களில் வழங்கப்படும் பல தீர்ப்புகளைப் பார்க்கும்போது அவற்றை வழங்கிய நீதிபதிகள் அந்தப் பிரச்சினை குறித்துப் போதுமான அளவுக்கு விவரங்களைத் தெரிந்துகொள்ளவில்லையோ என்ற ஐயம் எழுகிறது. நர்மதை அணை தொடர்பான தீர்ப்பு அதற்கொரு உதாரணம் (அதுபற்றிக் கட்டுரை எழுதிய அருந்ததி ராயின் 'அறிவியல் மேதைமை குறித்து' கேள்வி எழுப்பி அவரை மட்டம் தட்டிய 'அறிஞர்கள்' எவரும் அதுதொடர்பான நீதிமன்றத் தீர்ப்புக் குறித்துக் கருத்துச் சொல்ல முன்வரவில்லை). க்ளெமான்சோ கப்பல் விவகாரத்திலும் அதே விதமான அணுகுமுறையே வெளிப்படுகிறது. சூழலியல் பிரச்சினைகள் தொடர்பாக அவ்வளவாக விழிப்புணர்வு ஏற்படாத நமது நாட்டை ரசாயனக் கழிவுகளின் குப்பைத் தொட்டியாக மாற்றிவிட மேற்கத்திய நாடுகள் செய்யும் முயற்சிகள் தடுத்து நிறுத்தப்பட வேண்டும் என்கிற கடப்பாடு நமது நீதி அமைப்புக்கு வேண்டும். தில்லிப் பேருந்துகள் சூழலியல் கேட்டை உண்டுபண்ணுவதால் அவற்றை உடனடியாக மாற்ற வேண்டும் என்று சி.என்.ஜி, (CNG) வழக்கில் உத்தரவிட்டபோது நமது நீதி அமைப்பிடம் தென்பட்ட நுண்ணுணர்வும் செயல் வேகமும் கிளெமான்சோ கப்பல் விவகாரத்தில் இல்லாமல் போனது ஏன்? இதனை நாம் உலகமயமாதல் பிரச்சினையோடு தொடர்புபடுத்திப் பார்க்க வேண்டும்

உலகமயமாதல் போக்கின் அங்கமாக இந்தியாவில் 'கடைவிரிக்கும்' பன்னாட்டு நிறுவனங்கள் தமது சுதந்திர வர்த்தகத்துக்கு (சுதந்திரக் கொள்ளையென்று அர்த்தப் படுத்திக்கொள்க) ஏற்ற விதத்தில் இந்தியச் சட்டங்களையும் நீதியமைப்பையும் மாற்றியமைக்க முற்படுகின்றன. உலக வர்த்தக ஒப்பந்தத்தின் ஷரத்துகளில் ஒன்றாக அந்த ஒப்பந்த விதிகளுக்கு ஏற்ட உள்நாட்டு தொழிலாளர் நலச் சட்டங்களை மாற்ற வேண்டும் என உள்ளதும் மனங்கொள்ளத் தக்கதாகும் இந்திய ஜனநாயகத்தின் அங்கமாகக் கருதப்படும் வேலைநிறுத்த உரிமையை இங்கு கடை விரிக்கும் பன்னாட்டு நிறுவனங்கள் (சுதேசி முதலாளிகளும் இதில் விதிவிலக்கல்ல) விரும்பவில்லை. கடந்த ஆண்டு ஹரியானாவில் ஹோண்டா தொழிலாளர்கள்மீது ஏவப்பட்ட போலீஸ் வன்முறைக் காட்சிகளை நாம் மறந்திருக்க மாட்டோம். பன்னாட்டு நிறுவனங்களின் விருப்பத்துக்கேற்ப நமது அரசுகள் மாறிவருவதன் அடையாளமே அது.

அரசு ஊழியர்களுக்கு எதிராக ஜெயலலிதா எடுத்த நடவடிக்கைகளும் அத்தகையதே. அன்னிய முதலீடுகளைக் கவரும் விதத்தில் மாநிலத்தை மாற்றுவதென்பது அடிப்படைக் கட்டமைப்புகளைச் சீர்செய்வதென்பது பொருளல்ல; மாறாக, அரசாங்கத்தின் அடக்குமுறை எந்திரத்தை வலுப்படுத்துவதென்பதே அர்த்தம். அதைத்தான் தமிழக அரசும் ஹரியானா அரசும் எடுத்துக்காட்டியுள்ளன. இந்தப் பின்னணியில் வைத்து நமது நீதிமன்றங்கள் வழங்கிவரும் தீர்ப்புகளை ஆராய்ந்தால் அவற்றின் தீவிரம் நமக்குப் புரியவரும்.

நீதிஅமைப்புக்கு நம்பகத்தன்மையை ஏற்படுத்திய வி.ஆர். கிருஷ்ணய்யர் போன்றவர்களைப் பின்பற்றுபவர்கள் இன்று அருகிவிட்டனர். நமது நாட்டின் சமூக



படிப்பகம்

www.padippakam.com



கலாச்சாரப் பன்முகத் தன்மை நீதி அமைப்பில் பிரதி பலிக்கவில்லை. நாடு சுதந்திரமடைந்து 'மணிவிழா' கொண்டாடவிருக்கும் நிலையிலும் நாட்டின் சரிபாதியினராய் இருக்கும் பெண்களின் பிரதிநிதித்து வம் நமது நீதி அமைப்பில் கவலைக்குறியதாகவே உள்ளது. அதுபோலவே சமூகத்தின் ஒடுக்கப்பட்ட பிரிவினரின் பிரதிநிதித்துவமும் இல்லையென்று சொல்லுமளவுக்குக் குறைவாக உள்ளது. தற்போது உச்ச நீதிமன்றத்தில் ஒரேயொரு பெண் நீதிபதியும் ஒரே ஒரு தலித் நீதிபதியும்தான் உள்ளனர் என்பது எவ்வகையிலும் நம் பெருமைக்கு உரியதல்ல. முன்னாள் குடியரசுத் தலைவர் கே.ஆர். நாராயணன் உச்ச நீதிமன்றப் பொன்விழாவின்போது தெரிவித்த கருத்து களை நமது நீதி அமைப்பு காதில் போட்டுக்கொள்ள வில்லை என்பதையே அதன் நடவடிக்கைகள் காட்டுகின்றன.

கல்வி, இடஒக்கீடு, பெண்களின் உரிமைகள் முதலானவை குறித்த நமது நீதிமன்றங்களின் தீர்ப்புகளில் சாதி, மத, பாலின (Gender) பிரதிநிதித் துவத்திற்கும் நேரடித் தொடர்பிருப்பதாகவே தோன்று கிறது. நீதி அமைப்பை ஜனநாயகமும் பன்முகத் தன்மையும் கொண்டதாக மாற்றி அமைக்காமல் அதிலிருந்து வரும் தீர்ப்புகளில் மட்டும் அவற்றை எதிர்பார்ப்பது சரியானதல்ல. எனவேதான் நாம் முன்பு எப்போதையும் விட நீதிமன்ற நடவடிக்கைகள் பற்றி இப்போது அதிகம் கவலைப்படுவதும் விவாதிப்பதும் அவசியமாகியுள்ளது. இத்தகைய விவாதங்கள் நீதியமைப்பை மேலும் வலுப்படுத்தவே உதவும். இவற்றை அனுமதிப்பதும் ஊக்குவிப்பதும் நீதிமன்றங்களின் முன்னுரிமைகளாக இருக்க வேண்டும். ஆனால் நடைமுறை யதார்த்தமோ அதற்கு நேர்மாறாக உள்ளது.

சில ஆண்டுகளுக்கு முன்பு 'நீதித்துறை முனைப்பு வாதம்' (Judicial Activism) குறித்த உற்சாகம் நமது சமூகத்தில் நிறைந்திருந்தது. அரசியல்வாதிகளையும் / மக்கள் விரோத அரசாங்கங்களையும் நீதித்துறை புரட்டி எடுத்தபோது மக்களிடமிருந்து ஆரவாரம் எழுந்தது. ஆனால் அந்த ஆரவாரம் இன்று வடிந்து விட்டது மட்டுமின்றி பயம் கலந்த அமைதியும் நிலவுகிறது. 'நீதிமன்ற அவமதிப்பு அதிகாரம்' என்பது இயற்கை நீதிக்கு முரணாக – வாதியே நீதிபதியாக இருக்கும் ஒரு விசித்திர நிலையை உருவாக்குகிறது. ஒரு தீர்ப்பு அமல்படுத்தப்படாமல் போகும்போதும் நீதிமன்றத்தின் மீது ஒருவர் உள்நோக்கோடு அவதூறு செய்யும்போதும் அதைத் தடுக்க இந்த அதிகாரம் பயன்படும் என்று வாதிடுவோர் உண்டு. ஆனால் அப்படியான தருணங்களில் நீதிமன்றங்கள் பெரிதாகச் செயல்பட்டதில்லையென்பதே உண்மை. அருந்ததிராய் மீதான நீதிமன்ற அவமதிப்பு வழக்கின்போது முதலில் புகார் அளித்த வழக்கறிஞர் விர்மானி நீதிமன்றத்துக் குள்ளேயே நீதிபதிகளைக் கேவலமாகப் பேசியும் கூச்சலிட்டும் நீதிமன்ற நடவடிக்கைகளைத் தடுக்கும் விதமாகவும் நடந்துகொண்டும்கூட அவர்மீது எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படாததை இதற்கு உதாரண மாகக் கூறலாம். பெரும்பாலும் இந்த அதிகாரம், தம் மீதான விமசர்னங்களைத் தடுக்கும் நோக்கோடு பெரும்பாலான நீதிபதிகளால் கையாளப்பட்டுள்ள நிலையில் இந்த அதிகாரத்தை முற்றாகச் சட்டத்தி லிருந்து நீக்க முடியாத பட்சத்தில் பல நாடுகளில் இருப்பதுபோல இதனைச் செயல்படுத்தாமல் முடக்கி வைப்பதையாவது உடனடியாகச் செய்ய நமது நீதி அமைப்பு முன்வர வேண்டும்.

"அநீதி Vs நீதி" என்ற சமன்பாடு "சமூகநீதி Vs நீதி" என்பதாக மாறிவிடக் கூடாது என்பதே நமது கவலை. இந்தக் கவலையைப் போக்குவது நீதியில் அக்கறை கொண்டுள்ளோரின் கடமை.

(சட்டவியல் பட்டதாரியான கட்டுரையாளர் மக்கள் சிவில் உரிமைக் கழகம் (பி.யு.சி.எல்) தமிழ்நாடு – புதுவை பிரிவின் முன்னாள் தலைவர்).

## வரப்பெற்றோம்

**சிறுகதைகள் பாதையும் பயணமும்** (கட்டுரைகள்) ❖ தேனி சீருடையான் ❖ ரூ. 35 ❖ அகரம், பிளாட்எண் 1, நிர்மலா நகர், தஞ்சாவூர் 613 007.

**மனிதநேயம்** (சிறுகதைகள்) ❖ விசித்திரன் ❖ ரூ.60 ❖ பூங்கொடி பதிப்பகம், 14, சித்திரைக்குளம் மேற்கு வீதி, மயிலாப்பூர், சென்னை 600 004.

**இருப்பின் வலி** (பதிவுகள்) ❖ தொ. அதங்கோடு அனிஷ்குமார் ❖ ரூ.25 ❖ புதுக்கவிதை பூங்கா இதழ், 3/177, காமராஜ் நகர், மின் நகர், மாக்கினாம்பட்டி, பொள்ளாச்சி 642 003

**இஸ்லாமிய எழுச்சியும் மேற்குலகும்** (கட்டுரைகள்) ❖ றவூப் ஸெய்ன் ❖ ரூ. 22 ❖ மெல்லினம், 9, மாதாக்கோவில் 2 வது தெரு, கே. புதூர், மதுரை 625007,

**அ–நிக்ரிகம்** (சிறுகதைகள்) ❖ மதிகண்ணன் ❖ ரூ.25 ❖ மஜெம பதிப்பகம், அருப்புக்கோட்டை 626 101

**மாற்றுப்பாதையில் செல்லவும்** (கவிதைகள்) ❖ சகாரா ❖ ரூ. 25 ❖ மஜெம பதிப்பகம், 2, சிவகாமி தெரு, அருப்புக்கோட்டை 626 101

**நெஞ்சோடு** (கட்டுரைகள்) ❖ சிராஜீல் ஹஸன் ❖ ரூ. 25 ❖ இஸ்லாமிய நிறுவனம் ட்ரஸ்ட், 138, பெரம்பூர் நெடுஞ் சாலை, சென்னை 600 012

**வாழ்க்கை மகிழ்வதற்கே** (கட்டுரைகள்) ❖ எஸ். இராமானுஜம் ❖ ரூ.30 ❖ மகரிஷி தியானப்பயிற்சி மையம், மகரிஷித் தோட்டம், 28, டாக்டர் குருசாமி சாலை, சேத்துப்பட்டு, சென்னை 600 031

**சோழக்காற்று** (கவிதைகள்) ❖ ஆ. தாமஸ் ❖ ரூ. 50 ❖ நெய்தல், புத்தன்துறை, ஈத்தாமொழி, குமரி மாவட்டம் 629 501

**ஒரு பனஞ்சோலைக் கிராமத்தின் எழுச்சி** (நாவல்) ❖ என்.கே. ரகுநாதன் ❖ ரூ.75 ❖ குமரன் பப்ளிஷர்ஸ், 3, மெய்கை விநாயகர் தெரு, குமரன் காலனி 7 வது தெரு, வடபழனி, சென்னை 600 026

**உறவுகள்** (சிறுகதைகள்) ❖ செவ்வேள் ❖ ரூ. 55 ❖ செவ்வேள் பதிப்பகம், 89, பாரதிதாசன் வீதி, முத்தியால் பேட்டை, புதுச்சேரி 605 003

**கவியகஃ** (கவிதைகள்) ❖ வெள்ளியங்காட்டான் ❖ ரூ.50 ❖ யதி வெளியீடு, அரசமர வீதி, ஆவராம்பாளையம், கோவை 6.



படிப்பகம்

www.padippakam.com






# அவமதிப்பு அதிகாரமும் மனித உரிமைகளும்

கே.ஜி. கண்ணபிரான்



1960ஆம் ஆண்டு வாக்கில் சென்னை ராஜதானியில் அமைச்சராக இருந்த சி. சுப்பிரமணியம், அழகிரிசாமி என்னும் நீதிபதிக்குப் பதவி உயர்வு பெற்றுத்தரும் முயற்சிகளை மேற்கொண்டபோது சென்னை வழக்கறிஞர்கள் சங்கம் அதை எதிர்த்தது. சென்னை சிவில் நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியாக இருந்த அழகிரிசாமி முதலில் அப்பதவியை ராஜினாமா செய்யும்படி கேட்டுக்கொள்ளப்பட்டார். ராஜினாமா செய்த உடன் அவர் அரசு வழக்கறிஞராக (ப்ளீடர்) நியமிக்கப்பட்டார். இது சென்னை உயர் நீதிமன்ற நீதிபதியாக அவரை நியமிப்பதற்கான முதல் படி. சுப்பிரமணியத்தின் இம்முயற்சியைத் தீவிரமாக எதிர்த்துச் சென்னை உயர் நீதிமன்றத்தில் ரிட் மனு ஒன்று தாக்கல் செய்யப் பட்டது. இந்த மனு தள்ளுபடி செய்யப்பட்டது. ஆனால் அரசும் அமைச்சரும் தங்களுக்கு வேண்டிய வரை உயர் பதவியில் நியமிப்பதற்காக எடுத்த முயற்சி களை நீதிமன்றம் கடுமையாக விமர்சித்திருந்தது.

1960இல் எஸ். ராமச்சந்திர அய்யர் தலைமை நீதிபதி யாக நியமிக்கப்பட்டபோது அவரது உண்மையான வயது பற்றிய கேள்வி பெரும் பிரச்சினையாக எழுந்தது. அவர் உச்ச நீதிமன்றத்தின் நீதிபதியாக நியமிக்கப்படு வதற்கான வாய்ப்புகள் பிரகாசமாக இருந்தன. அவரது மணி விழாவிற்கான (அறுபது வயது நிறைவு) அழைப் பிதழை அவரது தம்பி, நண்பர்களுக்கு அனுப்பியபோது ராமச்சந்திர அய்யர் தனது உறுதிப் பிரமாணத்தில் தெரிவித்திருந்த வயது சரியானதல்ல என்பது தெரிந்தது. அவர் தகுதி வாய்ந்த நீதிபதி என அறியப்பட்டவர். ஆனால் தகுதி, திறமை ஆகியவை ஒழுக்கம் அல்லது அறம் சார்ந்த நடத்தைக்கு இணையாகிவிடாது. ஒருவர் அற வழியில் தனது கடமைகளைஆற்றுவார் என்பதை அவரது தகுதியும் திறமையும் உறுதி செய்துவிடாது.

அமைப்புக்குப் பெரிய சேதம் ஏதும் நேராமல் அய்யரை அவரது பணியிலிருந்து விடுவிக்கும் சங்கட மான பொறுப்பை அப்போது இந்தியத் தலைமை நீதிபதியாக இருந்த கஜேந்திர கட்கர் செயல்படுத்தி னார். உண்மையில் நீதிபதியின் செயல்பாடுகளுக்கும் அவரது வயதுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை. நீதியைச் செயல்படுத்துவதற்கும் அது குறுக்கே நிற்ப தில்லை. ஆனால் பதவி ஏற்கவும் விலகவும் வயது வரம்புகள் நிர்ணயிக்கப்பட்ட பிறகு வயதை மாற்றிச் சொல்வது அற வழியின்பாற்பட்டதல்ல. இதன் அடிப் படையில் பதவியில் நீடிப்பது நீதியைச் செயல்படுத்தும் பணியைப் பாதிக்கவே செய்யும். இந்தப் பாதிப்பு ஒருவர் வயது கடந்த பின் பதவியில் நீடிப்பதால் நிகழ்வதில்லை. தவறான தகவலை அளித்த தன் மூலம் தனது பதவிக் காலத்தை அவர் நீட்டித்துக் கொள்வதால் நிகழ்கிறது.

சென்னை உயர் நீதிமன்றத்தில் இதேபோல இன்னொரு சம்பவமும் நடைபெற்றது. பதவியில் இருக்கும்போது செய்த அத்துமீறல்களை அடுத்து நீதிபதி வி. ராமசாமி பதவிநீக்கம் செய்யப்பட்டார்.

இவற்றையெல்லாம் பார்க்கும்போது, எல்லா அமைப்புகளுமே சீரழிந்து இறுகிப்போன நிலையில் தான் உள்ளன என்பதை நாம் புரிந்துகொள்கிறோம். அவ்வப்போது நடக்கும் தேர்தல்கள் அதிகாரப் பீடங் களில் மோசடியாளர்களையும் குற்றவாளிகளையும் மாறுபட்ட சமன்பாடுகளில் மாற்றி மாற்றி நியமிக்கும் நடைமுறையாகவே ஆகிவிட்டிருக்கலாம். ஆனால் அமைப்புகளை அவ்வப்போது இவை மாற்றியமைக்கின் றன. இது போன்ற 'தொல்லைகள்' எதுவும் நீதித் துறைக்கு இல்லை. நீதிபதி பதவிநீக்க நடைமுறைகளின்



படிப்பகம்

www.padippakam.com



போது நடைந்த விவாதங்களில் நீதிபதிகளின் நேர்மை கேள்விக்குள்ளாக்கப்பட்டதையடுத்து நீதித் துறையை மாற்றியமைத்து சீர்திருத்துவதற்கான வாய்ப்பு மேலும் பின்தங்கிப்போனது.

இந்த அமைப்புகள் பதவி, அதிகாரம் ஆகியவற்றுக் கான அமைப்புகளாகக் கருதப்படுவதால் இவற்றின் வரலாறு சீரழிவின் வரலாறாகவே இருந்துவருகிறது. இந்தப் பதவிகளால் கிடைக்கும் சலுகைகளும் ஏராள மான வசதிகளும் மிகவும் சொகுசான வாழ்க்கைக்கு உத்தரவாதமளிக்கின்றன. ரோம சாம்ராஜ்யம் அழிந்த போது இருந்த நிலையோடுதான் இதை ஒப்பிட முடியும். சாமானிய மனிதர்களை மலைக்கவைக்கும் பகட்டு, விமர்சனங்களை நசுக்குவதற்கான அதிகாரம் ஆகியவை இந்த அமைப்புகளை நடத்துவதற்குத் தேவைப்படுகின்றன. பகட்டு, விமர்சனத்திற்கெதிரான பாதுகாப்பு, கடவுளுக்கு ஒப்பான அந்தஸ்து, ஆகியவற்றைக் கொண்டு வடிவமைக்கப்பட்டுள்ள நீதிமன்றங்கள் தம்மை நிர்வகிக்கும் விஷயங்களில் வேறு யாரும் தலையிட முடியாத அதிகாரத்தைப் பெற்றுள்ளன.

இந்த அமைப்பை எப்படிக் கட்டுப்படுத்துவது, நீதிபதிகளின் முறைகேடான நடத்தையை எப்படித் திருத்துவது என்ற பிரச்சினை, பலரையும் கவலைக்குள் ளாக்கிவந்தது. சென்னையைச் சேர்ந்த சுந்தரம் என்னும் வழக்கறிஞர் இதற்காகக் குரல் எழுப்பினார். நீதிமன்றங்களின் இயல்பான அதிகாரம் என்னும் கருத்தாக்கம் நீதியைச் செயல் படுத்தும்போது மக்கள் நலனைப் பலியிட அனுமதிக்க முடியாது. இயல்பான அதி காரம் என்னும் மாயையை முடிவுக்குக் கொண்டுவராவிட்டால் தவறான நடத் தையைத் தட்டிக் கேட்க முடியாமல் போய்விடும்.

நீதிமன்ற அவமதிப்பு வழக்கு நடை முறைகளில் குற்றம்சாட்டப்பட்டவருக்கு மன்னிப்புக் கேட்க மட்டுமே வாய்ப்பளிக்கப்படுகிறது. தான் குற்றமற்றவர் என நிரூபிப்பதற்கு அல்ல. தனது வயது பற்றிய தவறான தகவல்களைத் தரும் நீதிபதிகள் இருக்கிறார்கள். பெஞ்ச்சில் இடம்பெறுவதற்காக "அழைக்கப்படலாம்" என்பதை எதிர்பார்த்துத் தங்கள் வயதை மாற்றும் நீதிபதிகளும் இருக்கிறார்கள் (ஒரு சிவில் வழக்கைத் தாக்கல் செய்வதன் மூலம் இதைச் செய்துவிடுகிறார்கள்). வில்லங்கம் இல்லாத இத்தகைய அத்துமீறல் களைப் பல சமயம் யாரும் கவனிப்பதே இல்லை. வக்கீல்களும் இதைப் பெரிதுபடுத்துவதில்லை. எந்த ஒரு வக்கீலும் நீதிபதியுடன் நட்புறவு பேணவே விரும்புவார்.

பொதுநல வழக்குகள் அதிகரித்து, நீதிமன்றத்தின் 'செயல் வேகம்' கூடிய பிறகு நீதிபதிகள் மிகுந்த தார்மீக நிலைப்பாடுகளை எடுக்க ஆரம்பித்துவிட்டார் கள். இதன் விளைவாக, அரசு, அரசு அதிகாரிகள், வழக்கறிஞர்கள் ஆகியோர் அளவுக்கதிகமான கண்ட னங்களை வாங்கிக்கட்டிக்கொள்கிறார்கள். ஊழல் எங்கு பார்த்தாலும் பரவியிருக்கும் சூழலில் நீதி மன்ற செயல் வேகம், நீதிமன்றம் அப்பழுக்கற்ற தார்மவான்களால் நடத்தப்படுகிறது என்ற தோற்றத்தை ஏற்படுத்தியது. மிக உயர்ந்த தார்மீக நடத்தைக் கொண்ட நீதிபதியால்தான் தார்மீக நெறிமுறைகளைச் செயல்படுத்த முடியும். அப்படிப்பட்ட மகத்தான நீதிபதிகள் இருந்திருக்கிறார்கள். ஆனால் அதெல்லாம் பழங்கதை. அத்தகைய நீதிபதிகளுக்குப் பாதுகாப்போ அவமதிப்பைத் தண்டிக்கும் அதிகாரமோ தேவையில்லை. வாழ்க்கை முறையிலும் தனது பதவிக்கான கடமைகளை ஆற்றுவதிலும் அப்பழுக்கற்ற முறையில் நடந்துகொள்வது என்பது ஒரு கட்டாயத் தேவை. இதில் தவறும் பட்சத்தில் அதற்கான எந்த விளக்கமும் ஏற்றுக்கொள்ளத் தக்கதல்ல.

சுந்தரம் எடுத்த முயற்சிகளில் வேறு சில பாடங் களும் இருக்கின்றன. தீர்ப்பில் குறிப்பிடப்பட்டிருந்த இரண்டு பழைய வழக்குகள் நீதிபதிகள் மீது குற்றம் சுமத்தியவர்களுக்கு எதிரானவை. இவை 1996இல் போடப்பட்டவை. நீதிமன்றங்களின் செயல்பாடு, நீதிபதியின் வாழ்க்கை முறை, நீதிபதி என்ற முறையில் அவரது பணிகள் ஆகியவற்றை நேர்மையான முறையில் மறுபரிசீலனை செய்ய வேண்டியது அவசியம் என்பதை இது சுட்டிக்காட்டவில்லையா? வயதைத் தவறாகச் சொல்வது குறித்த குற்றச்சாட்டு பெரிய பிரச்சினையல்ல. சுந்தரம் சில கேள்விகளை எழுப்புகிறார். அதில் ஒன்று சட்டப் பிரிவு 14இன் பொருத்தத்தைப் பற்றியது.

நீதிமன்றங்களின் இயல்பான அதிகாரம் என்னும் கருத்தாக்கம் நீதியைச் செயல்படுத்தும்போது மக்கள் நலனைப் பலியிட அனுமதிக்க முடியாது. இயல்பான அதிகாரம் என்னும் மாயையை முடிவுக்குக் கொண்டுவராவிட்டால் தவறான நடத் தையைத் தட்டிக் கேட்க முடியாமல் போய்விடும்.



'Big Ego Small Men' என்னும் தனது நூலில் ராம் ஜேத்மலானி தரும் தகவல் வயது குறித்த பிரமாணத்தைச் சர்ச்சைக்குள்ளாக்குவதாக உள்ளது என்று சுந்தரம் தனது மனுவில் குறிப்பிடுகிறார். அப்படியானால் நீதிமன்றம் ஜேத்மலானி மீது அவமதிப்பு வழக்குத் தொடுக்க வேண்டாமா? பத்திரிகையாளர் சந்திப்பில் தனது நூலை வெளியிட்ட ஜேத்மலானி, வயது குறித்த குற்றச்சாட்டை மீண்டும் வலியுறுத்தினார். தானாகவே நடவடிக்கை எடுக்கும் அதிகாரம் பெற்ற நீதிமன்றம் இப்படிப் பாரபட்சமாக நடந்துகொள்ளலாமா? அதிகாரத்தை இப்படிப் பயன்படுத்துவது பிரிவு 14ஐ மீறுவது அல்லவா? அடிப்படை உரிமைகள் பற்றிய அரசியல் சாசனத்தின் அத்தியாயத்தை நீதிமன்றத்துக்கு எதிராகப் பயன்படுத்துவதிலிருந்து தங்களுக்கு முழுப் பாதுகாப்பை நீதிமன்றங்கள் கோர முடியுமா? 3.11.2000 தேதியிட்ட ஹிந்து நாளிதழில் வந்த செய்தியை நீதிமன்றம் குறிப்பிடத்தான் செய்தது. ஆனால் ஜேத்மலானி மீது அவமதிப்பு வழக்குத் தொடுக்கவில்லை. இதற்கு என்ன அர்த்தம் என்பதை விவரமறிந்தவர்களால் புரிந்துகொள்ள முடியும். அவமதிப்பு விஷயத்தில் நீதிமன்றங்களுக்குள்ள அதிகாரத்தை மறுவரையறை செய்ய வேண்டும் என்ற பிரச்சினையை எழுப்பும்



படிப்பகம்

சுந்தரம் அவமதிப்பு வழக்கின் பின்னணியில் மனித உரிமைகள் குறித்த பிரச்சினையையும் எழுப்புகிறார்.

அவமதிப்பு வழக்கில் நீதி வழங்குவதில் சமூக நலன் குறித்த இரு வாதங்கள் முன்வைக்கப்படுகின்றன. சுந்தரம் போன்றவர்கள் நீதி வழங்குவது குறித்த பிரச்சினையை எழுப்பும்போது அவர்கள் நீதிமன்ற அவமதிப்புக் குற்றச்சாட்டிற்கு ஆளாகிறார்கள். குறிப்பிட்ட ஒரு நீதிபதியின் செயல்பாடு அல்லது வழக்கு நடைபெற்ற விதம் குறித்துக் கேள்வி எழுப்பும்போது இக்குற்றச்சாட்டு அவர்கள்மீது சுமத்தப்படலாம். நீதி வழங்குதலின் நன்மையை முன்னிட்டே அவமதிப்பு வழக்கு என்னும் அதிகாரத்தைப் பயன்படுத்துவதாக நீதிமன்றம் கூறிக்கொள்கிறது. ஆனால் நடைமுறையில் இந்த அதிகாரம் தன்னைக் காப்பாற்றிக் கொள்வதற்காகவே நீதிமன்றத்தால் பயன்படுத்தப்படுகிறது. குடிமக்களுக்கும் நீதிமன்றங்களுக்கும் இடையிலான இந்த முரண்பாட்டில் இழப்பு எப்போதும் குடிமக்களுக்குத்தான். வழக்கின்போது பிரயோகிக்கப்படும் கடுமையான சொல்லாடல்கள் நீதிமன்றம் அதிகார மரபில் ஊறியிருப்பதைக் காட்டுகின்றன. அது மட்டுமல்ல. அரசியல் சாசனத்தில் இடம் பெற்றுள்ள, மனித உரிமைகளை ஒட்டி வகுக்கப்பட்டுள்ள, அடிப்படை உரிமைகளோடு முரண்படாத விதத்தில் அவமதிப்புக்கு எதிரான அதிகாரத்தைப் பயன்படுத்த அது விரும்பாததையும் காட்டுகின்றன.


புதிய வெளியீடு

**புதுமைப்பித்தனின்**

**சம்சாரப் பந்தம்**

கமலா புதுமைப்பித்தன்

ரூ. 30, பக். 64



"...ஆகவேதான் பலரும் அவரது குடும்ப வாழ்க்கையை நான் அறிவிக்க வேண்டுமென எதிர் பார்க்கின்றார்கள். அன்று 1932 ஜூலை பதினாலாம் தேதி அவர் கைத்தலம் பற்றியதிலிருந்து 1948 ஜூன் முப்பதாம் தேதி இரவு அவர் கடைசி மூச்சு அடங்கும் வரை, அவரைப் பற்றி – அவர் குடும்ப வாழ்க்கையைப் பற்றி – எத்தனையோ நிகழ்ச்சிகள்..."

கமலா புதுமைப்பித்தன்

**பரிசல்**

1. இந்தியன் வங்கி காலனி,
வள்ளலார் தெரு, பத்மநாபா நகர்,
சூளைமேடு, சென்னை - 94
கை பேசி **9382853646**

விளம்பரம்


அவமதிப்பு வழக்கில் நீதிமன்றத்திற்குள்ள தன்னிச்சையான அதிகாரம் பிரிட்டிஷ் அரசையும் கவலைக்குள்ளாக்கிவருகிறது. நீதிமன்ற அவமதிப்பு என்பதன் வரையறை மிக விரிவானதாக இருப்பதால் நிச்சயமற்ற தாகவும் இருக்கிறது என்று கருதப்பட்டது. சட்ட நடைமுறைகளின்படியே வழக்கு நடந்தாலும் இந்த நிச்சயமற்ற தன்மையை மனித உரிமைகள் குறித்த ஐரோப்பிய ஒப்பந்தத்தின் அடிப்படையில் நியாயப்படுத்த முடியுமா? அவமதிப்புச் சட்டம் அது நிறைவேற்றக் கூடிய சட்டபூர்வமான எந்த நோக்கத்தை வைத்துப் பார்த்தாலும் அதிகப்படியானது என்று கனடா நாட்டின் நீதிமன்றம் கருத்துத் தெரிவித்தது. ஃபில்லிமோர் கமிட்டி, நீதிமன்ற அவமதிப்பு குறித்த தனது அறிக்கையில் இந்தச் சட்டத்தையே நீக்கிவிட வேண்டும் என்ற யோசனையைப் பரிசீலித்தது. கடைசியில் அவமதிப்பு என்றால் என்ன என்பதைக் கறாராக வரையறுப்பதுடன் நிறுத்திக் கொண்டது.

நீதிபதிகளை விமர்சிப்பது, கண்டன அறிக்கைகள் வெளியிடுவது ஆகியவை வழக்கின் குறிப்பான சில நடைமுறைகளில் தீவிரமான சார்புகளை உருவாக்கக் கூடும் என்ற நிலை இருந்தால் மட்டுமே அவமதிப்புச் சட்டத்தைப் பிரயோகிக்க வேண்டும் என்று கமிட்டி கருத்துத் தெரிவித்தது. நீதிபதிகள் மீது ஊழல் அல்லது முறையற்ற நடத்தை சார்ந்த குற்றச்சாட்டுக்களைக் கூறும் வாசகங்களைப் பிரசுரிக்கும் குற்றம் தொடர்பாகப் புதிய சட்டத்தை உருவாக்க வேண்டும் என்றும் அக்கமிட்டி பரிந்துரைத்தது.

குற்றச்சாட்டு உண்மையாகவும் பொதுநலனைத் தன் நோக்கமாகக் கொண்டதாகவும் இருக்கும் பட்சத்






தில் தன் தரப்பு வாதத்தை எடுத்துச் சொல்லி வழக்காடும் வாய்ப்பு குற்றம்சாட்டப்பட்டவருக்கு வழங்கப்பட வேண்டும் என்பது கமிட்டின் மற்றொரு பரிந்துரை. இந்தப் பின்னணியில்தான் நீதிமன்றங்களைக் குற்றம்சாட்டுவதைக் குற்றமாகக் கருதும் ஷரத்து ஒழிக்கப்பட வேண்டும்; அல்லது அதன் தன்னிச்சையான போக்கை நீக்கி வழக்கு நடைமுறைகளை நியாயமானதாக ஆக்கும் விதத்தில் அது மாற்றியமைக்கப்பட வேண்டும் என்னும் யோசனை முன்வைக்கப்படுகிறது.

நீதி வழங்குதல் என்பது மக்கள் நலன் தொடர்பானது என்றால், நீதிமன்றங்கள் மக்களுக்கான அமைப்பு என்றால் அது விமர்சனக் குரலை ஒடுக்க முயலக் கூடாது. ஆனால் இப்போதுள்ள நிலையில் இதெல்லாம் பகல் கனவாகவே தெரிகிறது.


கே. ஜி. கண்ணபிரான் மக்கள் சிவில் உரிமைக் கழகத்தின் (பி.யு.சி.எல்.) தேசியத் தலைவர்)


தமிழில்: **அரவிந்தன்**

www.padippakam.com






நின்னை.காம்

Ninnay.com

37/5, ஆரியகௌவுடர் சாலை,மேற்கு மாம்பலம்,சென்னை 33.

Editor@ninnay.com cell:9841426808




படிப்பகம்

www.padippakam.com





# நீதிமன்றத்தின் கௌரவமும் குடிமக்களின் கௌரவமும்

அருந்ததி ராய்

இந்திய உச்ச நீதிமன்றத்தில் அதிகார வரம்பு
அவமதிப்பு மனு (சிஆர்) எண்: 2/2001

பின்வரும் விஷயத்தில்:
ஜே.ஆர். பராசர் மற்றும் பிறர்
எதிர்
ப்ரஷாந்த் பூஷண் மற்றும் பிறர்

பதிலாளர் எண்: 3
தாக்கல் செய்த பிரமாணப் பத்திரம்

மேரி ராயின் மகளான, 2ஏ கௌடில்யா மார்க், புது தில்லி 110021 என்ற முகவரியில் வசிக்கும் அருந்ததி ராய் என்னும் நான் உண்மையுடன் கீழ்க்கண்டவாறு வாக்குமூலம் அளித்து உறுதிப்படுத்துகிறேன். உச்ச நீதிமன்றம் விளக்கம் கேட்டு அனுப்பிய நோட்டீஸ் எனக்குக் கிடைத்தது. இந்த நோட்டீஸ் தரப்பட்டிருக்கும் அவமதிப்பு மனுவின் உள்ளடக்கத்தை நான் படித்துப் புரிந்துகொண்டேன்.

*எனது பதில் கீழ்க்கண்டவாறு:*

எனக்கு எதிரான மனுவில் கண்டிருக்கும் குற்றச்சாட்டுகளின் முக்கியப் பகுதி, மனுதாரர்கள் அவர்கள் 2000 டிசம்பர் 14ஆம் தேதி தாக்கல் செய்ததாகச் சொல்லும் முதல் தகவல் அறிக்கையில் உள்ளது. முதல் தகவல் அறிக்கை பிரதான மனுவுடன் இணைக்கப்பட்டுள்ளது. அது உள்ளவாறு கீழே தரப்படுகிறது.

## அதிகாரத்தின் முன் உண்மையைப் பேசுதல்

நர்மதை நதியின் குறுக்கே அணை கட்டும் திட்டத்தைத் தொடரலாம் என 18.10.2000இல் உச்ச நீதிமன்றம் தனது இறுதித் தீர்ப்பை வழங்கியது. அந்தத் தீர்ப்பை அருந்ததி ராய், மேதா பட்கர் ஆகியோரும் விமர்சித்துக் கருத்துக் கூறியிருந்தனர். அந்தத் தீர்ப்பைக் கண்டித்து நர்மதைப் பள்ளத்தாக்கைச் சேர்ந்த மக்கள் உச்ச நீதிமன்றத்தின் முன்னால் 'தர்ணா' போராட்டத்தில் ஈடுபட்டனர். அன்று (13.12.2000) மாலை அவர்கள் கைது செய்யப்பட்டு அகற்றப்பட்டனர். அதற்கு அடுத்த நாள் தில்லி, திலக் மார்க் காவல் நிலையத்தில் அருந்ததி ராய், மேதா பட்கர், வழக்கறிஞர் பரஷாந்த் பூஷண் ஆகியோர்மீது ஒரு புகார் தெரிவிக்கப்பட்டது. உச்ச நீதிமன்றத்தில் வழக்காடும் ஜகதீஷ் பராசர், ஆர்.கே. விர்மானி உள்ளிட்ட ஐந்து வழக்கறிஞர்களால் தெரிவிக்கப்பட்ட அந்தப் புகாரில் அடிப்படை எதுவுமில்லை எனக் கூறி வழக்கைப் பதிவு செய்யக் காவல் நிலையம் மறுத்துவிட்டது. அதே வழக்கறிஞர்கள் உச்ச நீதிமன்றத்தில் 2001 ஜனவரியில் அதே புகாரைக் கூறி நீதிமன்ற அவமதிப்பு வழக்கு பதிவு செய்யக் கோரினர். அதை அனுமதித்த நீதிமன்றம் அருந்ததி ராய் உள்ளிட்ட மூவருக்கும் நோட்டீஸ் அனுப்பியது. மூவரும் நீதிமன்றத்தில் பிரமாணப் பத்திரங்களை (affidavit) தாக்கல் செய்தனர்.

அந்த வழக்கில் 28.8.2001இல் உச்ச நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது. நீதிபதி ஜி.பி. பட்டநாய்க்கும் உச்ச நீதிமன்றத்தில் உள்ள ஒரே பெண் நீதிபதியான ரூமா பாலும் அந்தத் தீர்ப்பை வழங்கினர். அந்த வழக்கு விசாரணைக்கே ஏற்றதல்ல என அதனைத் தள்ளுபடி செய்த நீதிபதிகள் அத்துடன் நில்லாமல், நீதிமன்றத்தின் முன் அருந்ததி ராய் தாக்கல் செய்த பிரமாணப் பத்திரத்தின் மூன்று பத்திகள் நீதிமன்ற அவமதிப்பாகக் கருதத்தக்க விதத்தில் உள்ளன என்று குறிப்பிட்டனர். அதன் அடிப்படையில் 2001 செப்டம்பர் ஐந்தாம் தேதி அருந்ததி ராய்மீது புதிதாக நீதிமன்ற அவமதிப்பு வழக்கொன்று (CRL NO 10 of 2001) தொடரப்பட்டு நோட்டீஸ் அனுப்பப்பட்டது. அதற்குப் பதிலளித்த அருந்ததி ராய், நீதிமன்றத்தை அவமதிப்பது தனது நோக்கமல்ல, ஒரு பிரஜை என்ற விதத்தில் தனக்குச் சரியெனப்பட்ட கருத்தையே தான் கூறியதாகக் குறிப்பிட்டார். முன்னாள் சட்ட அமைச்சர் சிவசங்கர், "வசதி படைத்தவர்களுக்கு ஆதரவாகவே நீதிபதிகள் உள்ளனர். சமூக விரோதிகளும் பெண்களை எரித்தவர்களும் அன்னியச் செலாவணி மோசடிப் பேர்வழிகளும் உச்ச நீதிமன்றத்தைத் தங்களுக்கு வசதியான இடமாக்கிக்கொண்டுவிட்டனர்" என்று ஒரு பொதுக் கூட்டத்தில் பேசியதைத் தொடர்ந்து அவர்மீது தொடரப்பட்ட நீதிமன்ற அவமதிப்பு வழக்கில், "இந்தக் கருத்துகள் துரதிர்ஷ்டமானவை என்றபோதிலும் அவை அவரது கருத்துகள்; அவற்றைக் கூறுவதற்கு அவருக்கு உரிமை உண்டு" என நீதிமன்றம் தீர்ப்பளித்ததை அருந்ததி ராய் தனது பதில் மனுவில் குறிப்பிட்டிருந்தார்.

இந்த இரண்டாவது வழக்கு 2002 ஜனவரி 15இல் இறுதி விசாரணைக்கு வந்தது. நீதிபதி பட்டநாய்க்கும் நீதிபதி சேத்தியும் அடங்கிய பெஞ்ச் அதை விசாரித்தது. அருந்ததி ராய் தரப்பில்



படிப்பகம்

www.padippakam.com



## 14.12.2000 தேதியிட்ட முதல் தகவல் அறிக்கை

"ஜகதீஷ் பராசர் என்னும் நான், என் சக ஊழியர்கள் திரு. உமேத் சிங், ராஜேந்தர் ஆகியோருடன் மாலை 7.00 மணிக்கு உச்ச நீதிமன்றத்திலிருந்து வெளியே சென்றுகொண்டிருந்தேன். கேட் எண் சி மூடப்பட்டிருந்தது.

நாங்கள் இன்னொரு பாதை வழியாக உச்ச நீதிமன்றத்திலிருந்து வெளியே வந்து, ஏன் கேட் மூடப்பட்டிருக்கிறது என்று விசாரித்தோம். எங்களை பிரஷாந்த் பூஷண், மேதா படேகர்* அருந்தந்தி* ராய் ஆகியோரும் அவர்களுக்குத் துணையாக இருந்தவரும் சூழ்ந்துகொண்டார்கள். உச்ச நீதிமன்றம் உன் அப்பாவின் சொத்து என்றார்கள். இதைக் கேட்டு, கேட்டை மூடிவிட்டு மறியல் செய்ய முடியாது, மறியலுக்குரிய சரியான இடம் நாடாளுமன்றம்தான் என்று நாங்கள் சொன்னோம். இதற்கிடையில் பிரஷாந்த் பூஷண், "ஜகதீஷ் பராசர், நீ நீதியமைப்பின் அடியாள்" என்றார். மீண்டும் மேதா, "சாலே கோ ஜான் சே மார் தோ (அவனைக் கொல்)" என்றார். அருந்தந்தி* ராய்தான் கூட்டத்திற்குத் தலைவியாக இருந்தார். உச்ச நீதிமன்றம்தான் திருடன், இவர்கள் எல்லோரும் அதன் அடியாட்கள் என்றார். இவர்களைக் கொல்லுங்கள், பிரசாந்த் பூஷண் என் தலைமுடியைப் பிடித்து இழுத்து, "இன்னொரு முறை உன்னை உச்ச நீதிமன்றத்தில் பார்த்தால் கொன்றுவிடுவேன்" என்றார். ஆனால் அவர்கள் S.H.O மற்றும் திலக் மார்கின் ACP பாஸ்கர் அங்கே இருந்ததையும் மீறிக் கத்திக் கொண்டிருந்தார்கள். நாங்கள் கடுமையாக முயற்சி செய்து தப்பியோடினோம். இல்லையென்றால் அவர்களது குண்டர்கள் குடிபோதையில் இருந்ததால் ஏதேனும் தீங்கு செய்திருப்பார்கள். ஆகவே, உயிர்களையும் சொத்துகளையும் காப்பாற்ற எங்கள் புகாரைப் பதிவு செய்துகொண்ட பின் தகுந்த நடவடிக்கையை மேற்கொள்ளலாம் என்று கேட்டுக் கொள்ளப்படுகிறது. புகார் செய்பவர்களான நாங்கள் மிகவும் கடன்பட்டிருப்போம்.

புகார் செய்பவர்களின் கையொப்பம்

*முக்கிய மனு, முதல் தகவல் அறிக்கையைப் போலவே அலங்கோலமாக வரையப்பட்டிருக்கிறது. அந்தக் குற்றச்சாட்டுகளின் பொய்மைகள், ஒழுங்கின்மை, பைத்தியக்காரத்தனம் ஆகியவை பிரஷாந்த் பூஷண், மேதா பட்கர், நான் ஆகியோர் செய்ததாகச் சொல்லப்படும் எந்தக் குற்றத்தையும் விட உச்ச நீதிமன்றத்தின் மீது அதிக வெறுப்பைக் காட்டுகின்றன. அதன் உள்ளடக்கம் முற்றிலும் பொய்யானது, கெட்ட நோக்கம் கொண்டது. முதல் தகவல் அறிக்கை தாக்கல் செய்யப்பட்ட இடமான திலக் மார்க் காவல் நிலையம் வழக்கு எதையும் பதிவு செய்யவில்லை. எந்த போலீஸ்காரரும் என்னைத் தொடர்புகொள்ளவில்லை, எந்தக் காவல் துறைப் புலனாய்வும் நடக்கவில்லை, குற்றச்சாட்டுகளை உறுதிப்படுத்திக்கொள்ள, மனுவில் சொல்லப்பட்டிருக்கும் நபர்கள் மறியலில் இருந்தார்களா என்றும் முதல் தகவல் அறிக்கையில் விவரிக்கப்பட்டி*

---

ஆஜரான வழக்கறிஞர் சாந்தி பூஷண் கருத்துச் சுதந்திரத்துக்கு நமது அரசியலமைப்புச் சட்டத்தில் அளிக்கப்பட்டுள்ள முக்கியத்துவத்தை எடுத்துக் கூறியதோடு, நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட பிரமாணப் பத்திரத்தில் கூறப்பட்ட கருத்துகள் நீதிமன்ற அவமதிப்பு என்ற வரையறைக்குள் வராது எனவும் வாதிட்டார். ஆனால் அந்த வாதங்களை நிராகரித்த நீதிமன்றம் 2002 மார்ச் ஆறாம் தேதி தீர்ப்பு வழங்கியது. "பிரதிவாதியானவர் தனது செயலுக்காக எந்த வித வருத்தமும் தெரிவிக்கவில்லை" என்பதைச் சுட்டிக் காட்டிய நீதிபதிகள், "பிரதிவாதியானவர் ஒரு பெண் என்பதைக் கருத்தில் கொண்டு" ஒரு நாள் அடையாள சிறைத் தண்டனையும் இரண்டாயிரம் ரூபாய் அபராதமும் விதித்துத் தீர்ப்பளித்தனர். தொகையைக் கட்டத் தவறினால் மூன்று மாதம் சிறையில் இருக்க வேண்டும் எனவும் நீதிபதிகள் தீர்ப்பில் கூறியிருந்தனர்.

தனக்கு விதிக்கப்பட்ட தண்டனை குறித்து அருந்ததி ராய் விடுத்த அறிக்கையில் (7.3.2002), "நான் எனது பிரமாணப் பத்திரத்தில் சொன்னவற்றை இப்போதும் உறுதி செய்கிறேன். ஒரு நாள் சிறைவாசமும் இரண்டாயிரம் ரூபாயும்தான் எனக்களிக்கப்பட்ட தண்டனை என யாரும் எண்ணினால் அது தவறு. எனது தண்டனை ஓராண்டுக்கு முன்பே தொடங்கிவிட்டது . . . இந்தியாவில் வழக்கு விசாரணையே தண்டனையின் பகுதிதான் என்பது எல்லோருக்கும் தெரியும்" எனக் குறிப்பிட்டிருந்த அருந்ததி ராய், பெண் என்பதைக் கருத்தில் கொண்டு பெருந்தன்மையோடு தண்டனை வழங்குவதாக நீதிபதிகள் குறிப்பிட்டிருந்ததைச் சுட்டிக்காட்டி "இத்தகைய எதிர் பாகுபாட்டின் (inverse discrimination) உதவி இல்லாமலே நிச்சயமாகப் பெண்களால் சாதிக்க முடியும்" என்றும் கூறியிருந்தார்.

இந்தியாவில் நீதிமன்ற அவமதிப்பு அதிகாரத்தின் ஆபத்து என்ன என்பதை மட்டுமல்லாது, இந்தியாவின் மிக உயர்ந்த நீதி அமைப்பு ஒரு பிரஜையை, அவர் பிரதிநிதித்துவப்படுத்தும் பிரச்சினையை எப்படியெல்லாம் திரித்துத் திசைதிருப்ப முடியும் என்பதற்கும் அடையாளமாக இந்த வழக்கு திகழ்கிறது.

அருந்ததி ராய்க்குத் தண்டனை விதிக்கப்பட்டபோது மிகவும் சொற்ப அளவில்தான் அதற்கான எதிர்ப்பு எழுந்தது. அது இந்தியாவில் மனித உரிமை இயக்கத்தின், பெண்ணுரிமை இயக்கத்தின் பலவீனங்களை மட்டுமல்லாது இடதுசாரிகளின் ஒருதலைப் பட்சமான பார்வையையும் எடுத்துக் காட்டுவதாக இருக்கிறது.

பிரமாணப் பத்திரமாக மட்டுமல்லாது, 'அதிகாரத்தின் முன்னால் உண்மையைப் பேசுகிற' ஒரு படைப்பாளியின் பிரகடனமாகவும் திகழ்கிற இந்த ஆவணத்தை உங்கள் முன் வைக்கிறோம். வேறெந்த மொழியிலும் அவ்வளவாக விவாதிக்கப்படாத 'நீதிமன்ற அவமதிப்பு அதிகாரம்' குறித்த விவாதத்தை இங்கே எழுப்ப வேண்டும் என முடிவு செய்ததும் அருந்ததி ராயை அணுகி அவரை ஒரு கட்டுரை எழுதும்படி கேட்டோம். மிகக் குறைந்த அவகாசமே தரப்பட்ட நிலையில் புதிதாக ஒரு கட்டுரையை எழுத முடியாத தனது இயலாமையைச் சுட்டிக்காட்டி இந்தப் பிரமாணப் பத்திரத்தைப் பயன்படுத்திக்கொள்ளும்படி அருந்ததி ராய் அனுப்பித் தந்தார். அவருக்கு நன்றி.

– ரவிக்குமார்



படிப்பகம்

www.padippakam.com





அருந்ததி ராய்

ருக்கும் சம்பவம் நிஜமாகவே நடந்ததா என்றும் (அவமதிப்பு மனுவே இந்த முதல் தகவல் அறிக்கையின் அடிப்படையில்தான் அமைந்திருக்கிறது) கண்டுபிடிக்க எந்த முயற்சியும் நடக்கவில்லை.

இந்தச் சூழலில் இந்த மனுவை மதித்து, என்னையும் பிற பதிலாளர்களையும் 2001 ஏப்ரல் 23ஆம் தேதி நீதிமன்றத்தில் ஆஜர் ஆகும்படியும் "இனி உங்கள்மீதான குற்றச்சாட்டுகள் குறித்த இறுதி ஆணைகள் பிறப்பிக்கப் படும்வரை உங்களுக்கு எதிரான இந்த வழக்கு நடை பெறும் எல்லா நாள்களிலும் தொடர்ந்து நீதிமன்றத் திற்கு வர வேண்டும். வரத் தவறக் கூடாது" என்றும் உத்தரவிட்டு நோட்டீஸ் அனுப்புவது சரி என உச்ச நீதிமன்றம் கருதுவது வேதனையளிக்கிறது.

பணிபுரியும் ஒரு சாதாரணப் பிரஜையைப் பொறுத்த வரை இப்படி வலுக்கட்டாயமாக நீதிமன்றத்தில் ஆஜராவது, செய்யாத குற்றத்திற்கான தண்டனை இப்போதே தொடங்கிவிட்டது என்பதையே குறிக்கிறது.

மனு தொடர்பான உண்மைகள் பின்வருமாறு:

இந்த மனு சொல்வது, பூடகமாகச் சுட்டிக்காட்டுவது, குறிப்பது போலில்லாமல் நான் நர்மதா பச்சாவோ ஆந்தோலனின் தலைவர்களில் ஒருத்தி அல்ல. நான் ஒரு எழுத்தாளர், ஆந்தோலனின் லட்சியத்தை ஆதரித்து மதிக்கும் சுதந்திரக் கருத்துகளைக் கொண்ட ஒரு சுதந்திரப் பிரஜை. சர்தார் சரோவர் திட்ட வழக்கில் பொது நல வழக்கு மனுவில் நான் மனு செய்யவில்லை. நான் 'interested party' அல்ல. ப்ரஷாந்த் பூஷண் என் வக்கீல் அல்ல; அவர் ஒருபோதும் என் சட்டப் பிரதிநிதியாக இருந்ததில்லை.

மனுதாரர்கள் யார் என்று எனக்குத் தெரியாது என்பதையும் மிகவும் தாழ்மையோடு தெரிவித்துக் கொள்கிறேன். பட்டப்பகலில், தில்லி காவல் துறை பார்த்துக்கொண்டிருக்கையில் உச்ச நீதிமன்ற வாசலில் நான் யாரையும் கொல்ல முயற்சி செய்யவில்லை அல்லது யாரையும் கொல்வதற்கு யாரையும் தூண்ட வில்லை. நான் நீதிமன்றத்திற்கு எதிராக கோஷமிட வில்லை. நான் பார்த்து ப்ரஷாந்த் பூஷண் யாருடைய தலைமுடியையும் பிடித்து இழுத்து, மீண்டும் உச்ச நீதிமன்றத்தில் தென்பட்டால் கொன்றுவிடுவேன் என்று சொல்லவில்லை. இந்தியாவின் மிகப் பிரதானமான அகிம்சைப் போராட்ட அமைப்பின் தலைவரான மேதா பட்கர் தரங்கெட்ட ஒரு திரைப்பட நடிகராக உருமாறி "சாலே கோ ஜான் சே மார் தோ" (தேவடியாப் பயலைக் கொல்) என்று சொல்லி நான் பார்க்கவில்லை. "குடி போதையில்" எந்த "குண்டர்க"ளும் அங்கு இருந்ததை நான் பார்க்கவில்லை. கடைசியாக, என் பெயர் தவறாக எழுதப்பட்டிருக்கிறது என்பதையும் மிகவும் தாழ்மையோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

2000 டிசம்பர் 13ஆம் தேதி காலையில் நர்மதா பள்ளத்தாக்கைச் சேர்ந்த மக்கள் உச்ச நீதிமன்ற வாயிலுக்கு வெளியே திரண்டிருந்ததாக எனக்குத் தெரியவந்தது. நான் சுமார் 11.30 மணிக்கு உச்ச நீதிமன்றத்தை அடைந்தபோது கேட் எண் சி முன்பே மூடப்பட்டிருந்தது. நானூறு முதல் ஐநூறு பேர் வெளியே நின்றிருந்தார்கள். இவர்களில் பெரும்பாலானோர் ஆதிவாசிகள். சர்தார் சரோவர் அணையைத் தொடர்ந்து கட்டுவதற்கு சமீபத்திய உச்ச நீதிமன்றத் தீர்ப்பு அனுமதித்ததன் விளைவாக, வரும் பருவமழைக் காலத்தின்போது நீர்த்தேக்கத்தில் நீர்மட்டம் உயர்கை யில் இவர்கள் தங்களது நிலங்களையும் வீடுகளையும் இழந்துவிடுவார்கள். இவர்களுக்கு வசிக்க வேறு இடம் தரப்படவில்லை. இன்னும் சில மாதங்களில் இவர்கள் பரம ஏழைகளாகி, போவதற்கு வேறு இடம் இல்லாத நிலைக்கு ஆளாவார்கள். இவர்கள் தங்கள் வேதனையை யும் துயரத்தையும் நீதிமன்றத்திற்குத் தாங்களே தெரிவிக்க நர்மதா பள்ளத்தாக்கிலிருந்து வெகு தூரம் பயணித்து வந்திருந்தார்கள். நீதிமன்றத்தின் ஆணையை மீறும் விதமாக, அவர்கள் வசிக்க வேறு நிலம் எதுவும் தரப்படவில்லை என்றும் உச்ச நீதிமன்றத் தீர்ப்பில் சித்தரிக்கப்பட்டதிலிருந்து முற்றிலும் மாறுபட்ட ஒரு யதார்த்த நிலையே நர்மதா பள்ளத்தாக்கில் இருந்தது என்றும் நீதிமன்றத்திடம் சொல்வதற்காக அவர்கள் வந்திருந்தார்கள். அவர்கள் தலைமை நீதிபதியை சந்திக்க வேண்டும் என்று நீதிமன்றத்தின் பதிவாளரிடம் கேட்டார்கள்.

தில்லியில் இருக்கும் மக்கள் அமைப்புகளின் பிரதிநிதிகள் பலரும் என்னைப் போன்ற பிற ஆந்தோலன் ஆதரவாளர்களும் கூடத் தங்கள் முழு ஆதரவையும் வெளிப்படுத்த அங்கே வந்திருந்தார்கள். மனுவின் பிரதான குற்றம்சாட்டப்பட்டவரான ப்ரஷாந்த் பூஷணை நான் மறியலில் பார்க்கவில்லை என்பதைக் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.



படிப்பகம்

www.padippakam.com



அங்கிருந்த மேதா பட்கர், மக்களிடம் ஐந்து நிமிடங்களுக்குப் பேசும்படி என்னைக் கேட்டுக் கொண்டார்.

நான் பயன்படுத்திய சொற்கள்: "முஜே பான்ச் மினிட் பி நஹி சாஹியே ஆப்கே சாம்னே அப்னி பாத் ரக்னே கே லியே. மேன் ஆப்கே சாத் ஹூன்." (நான் எதற்காக இங்கே வந்திருக்கிறேன் என்பதை உங்களுக்குச் சொல்ல எனக்கு ஐந்து நிமிடங்கள் கூடத் தேவையில்லை. நான் உங்களை ஆதரிப்பதால் தான் இங்கே வந்திருக்கிறேன்.) இதைச் சரிபார்ப்பது சுலபம். ஏனென்றால் பல திரைப்பட மற்றும் தொலைக் காட்சிப் படப்பிடிப்புக் குழுக்கள் அந்த நிகழ்வைப் படம்பிடித்துக்கொண்டிருந்தன. அந்தக் கிராமத்தினர் "90 மீட்டர்களில் திட்டத்திற்கு பாதிப்பு" (அணையின் தற்போதைய உயரம்) என்று எழுதப்பட்ட துணியா லான பேனர்களைக் கழுத்தில் அணிந்திருந்தார்கள்.

நேரம் போகப் போக, தலைமை நீதிபதியைச் சந்திக்க அனுமதி வழங்கப்படாது என்று தெளிவாக, மக்கள் உற்சாகத்தை இழந்தார்கள். பலர் (அவர்கள் யாரையும் எனக்குத் தெரியாது அல்லது அடையாளம் தெரியாது) நீதிமன்றத்தைக் கடுமையாக விமர்சித்து உரை நிகழ்த்தினார்கள்; நீதிமன்றம் சாமானியர்களுக்கு எட்டாத நிலையில் இருந்தது பற்றியும் அதன் செயல்முறையைப் பற்றியும் பேசினார்கள். வேறு சிலர் நீதியமைப்பில் ஊழலைப் பற்றியும் நீதிபதிகளைப் பற்றியும் அவர்கள் யதார்த்த நிலையிலிருந்து எந்த அளவிற்கு விலகியிருக்கிறார்கள் என்பது குறித்தும் பேசினார்கள். நான் அதில் குறுக்கிடுவதற்கு எந்த முயற்சியையும் மேற் கொள்ளவில்லை என்பதை ஒப்புக்கொள் கிறேன். நான் போலீஸ்காரரோ அரசு அதிகாரியோ அல்ல. நாட்டின் மிக முக்கியமான நிறுவனங்களில் ஒன்றின் செயல்பாட்டைப் பற்றி மக்களின் பார்வை என்ன என்று அறிந்துகொள்வதில் எழுத்தாளர் என்ற முறையில் எனக்குத் தீவிர ஆர்வம் உண்டு.

ஆனால் நீதிபதிகளின் குணத்தை அல்லது நேர்மையைப் பற்றி என் எழுத்திலோ வேறு எந்தப் பொது மேடையிலோ நான் ஒருபோதும் இழிவாகப் பேசியதில்லை என்பதைத் தெளிவுபடுத்த விரும்பு கிறேன். சக்தி வாய்ந்தவர்களைப் பாதுகாக்க சக்தி வாய்ந்தவர்கள் செய்யும் இயற்கையான, தானாக எழும் உள்ளுணர்வே சர்தார் சரோவர் திட்ட வழக்கில் வழங்கப்பட்டிருக்கும் அநீதியான தீர்ப்பிற்குப் போது மான விளக்கம் என்று நான் நம்புகிறேன். நான் நீதி மன்றத்திற்கு எதிராக கோஷமிடவில்லை. அந்த மனு சொல்வது போல "சுப்ரீம் கோர்ட் பிகா ஹுவா ஹை" (உச்ச நீதிமன்றம் விலைபோய்விட்டது) என்று சொல்லவில்லை. "command the crow that Supreme Court of India is the thief and all these are this touts" என்பதும் உண்மையில்லை. (மனுதாரர்கள் 'crowd' என்று சொல்ல நினைத்திருப்பார்களோ?)

சர்தார் சரோவர் திட்டம் தொடர்பான உச்ச நீதிமன்றத்தின் பெரும்பான்மை – ஆகவே செயல் படுத்தத் தக்க – தீர்ப்பு எனக்கு ஆழ்ந்த வேதனையையும் கோபத்தையும் அளித்ததால் நான் அந்த மறியலுக்குச் சென்றேன். நர்மதா நீர் சர்ச்சைக்கான நடுவர் மன்றத் தின் விதிகள் பதிமூன்று ஆண்டுகளாகத் தொடர்ந்து மீறப்பட்டுவந்திருப்பதை, ஒரு கிராமத்திற்குக்கூட நடுவர் மன்ற உத்தரவின்படி வேறு வசிப்பிடம் தரப்படவில்லை என்பதை, வேறு வசிப்பிடம் வழங்கத் தன்னிடம் நிலம் இல்லை என்று மத்தியப் பிரதேச அரசு (80% பேர் வெளியேற்றப்பட்டதற்கு இந்த அரசே காரணம்) நீதிமன்றத்தில் எழுத்துமூலமாக ஒரு பிரமாணப் பத்திரம் தந்ததை நீதிமன்றம் நன்கு அறிந்திருந்தாலும் அந்தத் தீர்ப்பு, திட்டத்தைத் தொடர்ந்து செயல்படுத்த அனுமதித்தது. சுருக்கமாகச் சொன்னால், பெரும்பாலும் தலித்துகளையும் ஆதிவாசிகளையும் கொண்ட ஆயிரக்கணக்கான இந்தியப் பிரஜைகளின் வாழ்க்கை மற்றும் பிழைப்பு சார்ந்த அடிப்படை உரிமைகளை மீறுவதற்கு உச்ச நீதிமன்றம் ஆணையிட்டது.

உச்ச நீதிமன்றத் தீர்ப்பின் விளைவாக, அனுதாபத் திற்குரிய இந்தப் பிரஜைகள்தான் தங்கள் வீடுகளை, தங்கள் பிழைப்பை, தங்கள் தெய்வங்களை, தங்கள் வரலாறுகளை இழக்கிறார்கள். 2000 டிசம்பர் 13ஆம் தேதி காலை இவர்கள் தங்கள் கௌரவத்தை மீட்டுத் தரும்படி கேட்டுக்கொள்ளவே உச்ச நீதிமன்றத்தை நாடி வந்தார்கள். நீதிமன்றத்தின் கௌரவத்தைக் குறைப்பதாக அவர்களைக் குற்றம்சாட்டினால், நீதிமன்றத்தின் கௌரவமும் இந்தியப் பிரஜைகளின் கௌரவமும் ஒன்றுக்கொன்று பொருந்தாத, எதிரெதி ரான, பகைமை பாராட்டுகிற விஷயங்கள் என்பது போலவும் ஒன்றின் கௌரவத்தை இல்லாமல் ஆக்கித் தான் இன்னொன்றின் கௌரவம் இருக்க முடியும் என்பதாகவும் பொருள்படுகிறது. இது உண்மை என்றால் இது ஒரு சோகமான, அவமானகரமான சமன்பாடு. குடியரசுத் தலைவர் கே.ஆர். நாராயணன் தனது குடியரசு தின உரையில் இந்த பலவீனமான சமூகங்களை விசேஷ அக்கறை செலுத்திப் பேண வேண்டும் என்று நாட்டுக்கு, குறிப்பாக நீதியமைப்பிற்கு, அறைகூவல் விடுத்தார். "நாம் தேர்வு செய்திருக்கும் வளர்ச்சிப் பாதை ஒதுக்கப்பட்டவர்களுக்கு, ஷெட்யூல்டு ஜாதியினருக்கு, ஷெட்யூல்டு பழங்குடி களுக்குத் தீங்கு செய்கிறது; அவர்களுடைய இருப்பையே இல்லாமல் ஆக்கும் அபாயத்தில் தள்ளியிருக்கிறது" என்றார் அவர்.

> இந்தக் கோமாளித்தனமான குற்றச்சாட்டிலிருந்து என்னைப் பாதுகாத்துக்கொள்ள வேண்டும். எழுத்தாளர் என்ற முறையில் இந்தப் போக்கு அபாயகரமானது என்பதைக் கூடுமானவரை அழுத்தம் திருத்தமாகத் தெரிவிக்க விரும்புகிறேன்.

தாங்கள் அநீதியானது என்றும் நியாயமற்றது என்றும் கருதும் தீர்ப்பை எதிர்த்து அமைதியாகப் போராட நர்மதா பள்ளத்தாக்கைச் சேர்ந்த மக்களுக்கு



படிப்பகம்

www.padippakam.com





மேதா பட்கர்

அரசியல் சாசன உரிமை இருப்பதாக நான் நம்புகிறேன். என்னைப் பற்றிச் சொல்லப்போனால், நான் விரும்பும் எந்த அமைதியான எதிர்ப்புக் கூட்டத்திலும் கலந்து கொள்ள எனக்கு எல்லா உரிமைகளும் உண்டு. உச்ச நீதிமன்ற வாயிலில் நடக்கும் கூட்டமாக இருந்தாலும் தான். நான் ஏன் சர்தார் சரோவர் வழக்கைக் குறை பாடுள்ளதாக, அநீதியானதாக, இந்தியப் பிரஜைகளின் மனித உரிமைகளை மீறுவதாகக் கருதுகிறேன் என்ப தைச் சொல்ல என் கருத்துகள், தர்க்கங்கள், வாதங்கள் ஆகியவற்றை முன்வைக்க எழுத்தாளர் என்ற முறையில் எனக்கு முழு உரிமை உண்டு. மக்களை என் பார்வையை ஏற்கச் செய்ய என் முழுத் திறமைகளையும் திறன்களை யும் எனக்குக் கிடைக்கும் தகவல்கள் மற்றும் புள்ளி விவரங்கள் அனைத்தையும் பயன்படுத்த எனக்கு உரிமை உண்டு.

இந்த மனு, நர்மதா பள்ளத்தாக்கின் எதிர்ப்பு இயக்கத்தின் முக்கியத் தூண்கள் என்று மனுதாரர்கள் கருதும் மூன்று பேரைக் குறிவைப்பதற்கான பரிதாபமான முயற்சி. இந்த மூவர் நர்மதா பச்சாவோ ஆந்தோலனின் தலைவரும் நர்மதா பள்ளத்தாக்கு மக்களின் பிரதிநிதியுமான போராளி மேதா பட்கர்; நர்மதா பச்சாவோ ஆந்தோலனின் சட்ட ஆலோசக ரான வழக்கறிஞர் ப்ரஷாந்த் பூஷண்; ஆந்தோலனின் குரலை வெளியுலகிற்கு எடுத்துச் செல்பவர்களில் ஒருவர் என்று கருதப்படும் எழுத்தாளர் (நான்). எழுத் தாளர் என்ற முறையில் என் எழுத்து தொடர்பான சட்டரீதியான துன்புறுத்தலை நான் எதிர்கொள்ள வேண்டியிருப்பது இது மூன்றாவது முறை என்பது குறிப்பிடத்தக்கது.

1999 ஜூலையில் சர்தார் சரோவர் திட்டம் குறித்த பொதுநல மனுவை விசாரணை செய்த மூன்று நீதிபதிகள் அடங்கிய பெஞ்ச் *அவுட்லுக், ஃப்ரன்ட் லைன்* ஆகிய பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்ட *The Greater Common Good*** என்ற எனது கட்டுரையைப் படித்துக் கோபமடைந்தது. நர்மதையில் நீர்மட்டம் உயர்ந்துவர, கிராமத்தினர் நீதிமன்றத்தின் இடைக்கால உத்தரவை எதிர்த்துத் தங்கள் இல்லங்களில் மார்பளவு நீரில் நாள்கணக்கில் நின்றுகொண்டிருக்க, உச்ச நீதி மன்றம் என் கட்டுரையால் நீதிமன்றத்தின் கௌரவம் மீறப்பட்டதா இல்லையா என்ற முக்கியத் தலைப்பை விவாதித்து மூன்று அமர்வுகளை நடத்தியது. 1999 அக்டோபர் 15ஆம் தேதி என் தரப்பு வாதத்தைக் கேட்காமலே நீதிமன்றம் அவமானப்படுத்தும் விதத்தில் ஒரு ஆணையைப் பிறப்பித்தது. அதிலிருந்து ஒரு பகுதி:

> ... நீதி வழங்குதல், நீதித் துறை அமைப்பு ஆகியவற்றை இவர் செய்ததுபோல இழிவுபடுத் தவோ கீழ்ப்படியாமல் மீறலுக்குள்ளாக்கவோ அனுமதிக்க முடியாது . . . தீய நோக்கத்துடன் அதை மட்டம்தட்டியும் வக்கிரமான முறையில் கேவலப்படுத்தியும் நீதியின் பாதையைக் களங்கப் படுத்துவதை அனுமதிக்க முடியாது ... நீதிமன்றத் தின் கௌரவத்தைக் குறைக்கும் வண்ணம் நர்மதா பச்சாவோ ஆந்தோலன் இயக்கத் தலைவர்களும் செல்வி அருந்ததி ராயும் நடந்துகொண்ட விதம் எங்களை வருத்தமடையச் செய்கிறது. அவர்கள் இவ்வளவு மோசமாக நடந்துகொள்வார்கள் என்று நாங்கள் எதிர்பார்க்கவில்லை . . .

நான் தொடர்ந்து "ஆட்சேபத்திற்குரிய முறையில் எழுத"க் கூடாது என்று அந்த உத்தரவில் எனக்கு ஒரு மறைமுக எச்சரிக்கையும் விடுக்கப்பட்டிருந்தது. 1997இல், *The God of Small Things* என்ற எனது புத்தகத் திற்காகக் கேரளாவில் ஒரு மாவட்ட மாஜிஸ்திரேட் நீதிமன்றம் ஒன்றில் என்மீது பொது நன்னெறியை அசுத்தப்படுத்தலுக்காக ஒரு குற்றவியல் வழக்கு பதிவு செய்யப்பட்டது. இது கடந்த நான்கு வருடங்களாக நிலுவையில் இருக்கிறது. நான் குற்றவியல் வழக்கறிஞர் களை அமர்த்திக்கொண்டு, பிரமாணப் பத்திரங்களை வரைந்து, கேரளாவிலிருந்து வெகு தூரம் பயணித்து நீதிமன்றத்திற்குச் செல்ல வேண்டியிருந்தது.

இப்போது நான் இந்த மூன்றாவது, கோமாளித்தன மான குற்றச்சாட்டிலிருந்து என்னைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டும். எழுத்தாளர் என்ற முறையில் இந்தப் போக்கு அபாயகரமானது என்பதைக் கூடுமான வரை அழுத்தம் திருத்தமாகத் தெரிவிக்க விரும்பு கிறேன். நீதிமன்ற அவமதிப்புச் சட்டத்தைப் பயன் படுத்திப் பிரஜைகள் அதன் செயல்முறையை துஷ் பிரயோகம் செய்து எழுத்தாளர்களை அச்சுறுத்தவும் துன்புறுத்தவும் நீதிமன்றம் அனுமதித்தால் அதற்கு ஒரு எழுத்தாளரின் கற்பனையையும் படைப்புச் செயலிலும் குறுக்கிடுவது என்ற குரூரமான பாதிப்பை ஏற்படுத்தும். துன்புறுத்தலைப் பற்றிய பயத்தால் ஒரு எழுத்தாளர் பேனாவை பேப்பரில் வைத்து எழுதத் தொடங்குவதற்கு முன்பே அவர் தன் படைப்பைப் பற்றி நீதிமன்றம் என்ன நினைக்கக்கூடும் என்று யோசிக்க வேண்டியிருக்கும். இது ஒரு வித கட்டாய மான, பயங்கரமான சுய தணிக்கையைத் தூண்டும். இது சட்டத்திற்குத் தீங்கு விளைவிக்கும், இலக்கியத் திற்குப் பேரிடியாக இருக்கும், கலை மற்றும் அழகியல் உலகிற்குத் துயரமாக இருக்கும்.

நர்மதைப் பிரச்சினை குறித்தும் உச்ச நீதிமன்றத் தீர்ப்பு பற்றியும் நான் பல கட்டுரைகளை எழுதிப்



படிப்பகம்

www.padippakam.com



பிரசுரித்திருக்கிறேன். அவற்றில் எதுவுமே நீதிமன்றத்தை அவமதிக்கும் நோக்கத்துடன் எழுதப்படவில்லை. இருந்தாலும் இந்த விஷயத்தில் நீதிமன்றத்தின் கருத்துகளை மறுத்து எழுதவும் எனது மறுப்பை நான் விரும்பும் எந்தப் பிரசுரத்திலும் அல்லது மேடையிலும் வெளிப்படுத்தவும் எனக்கு முழு உரிமை உண்டு. சர்தார் சரோவர் குறித்த, செயலில் உள்ள உச்ச நீதிமன்றத் தீர்ப்பு சொல்லும் கருத்துகள் என்னவாக இருந்தாலும் நான் பெரிய அணைக்கட்டுகளை இப்போதும் எதிர்க்கிறேன். அவை பொருளாதார ரீதியாக நடைமுறைக்குச் சாத்தியமற்றவை, சுற்றுச்சூழலுக்கு சேதம் விளைவிப்பவை, ஜனநாயகத்திற்கு விரோதமானவை என்று நான் இப்போதும் நம்புகிறேன். நீதிமன்றத்திற்கு முன்பு வைக்கப்பட்ட சாட்சியத்தைத் தீர்ப்பு அலட்சியப்படுத்தியது என்று நான் இப்போதும் நம்புகிறேன். நான் எதை நம்புகிறேனோ அதைப் பற்றியே நான் இப்போதும் எழுதுகிறேன். அவ்வாறு *செய்யாமல்* இருந்தால் அது எழுத்தாளர்களின் கௌரவத்தையும் அவர்களது கலையையும் மட்டுமின்றி அவர்களது குறிக்கோளையும் பலவீனப்படுத்திவிடும். என் கருத்துக்கு எதிரான கருத்தைக் கொண்டவர்களுக்கு, என் கருத்துகளை மறுத்துப் பேச, விமர்சிக்க அல்லது சாட விரும்புபவர்களுக்கு எனக்குள்ளதைப் போல் கருத்துச் சுதந்திர உரிமை உண்டு என நான் நம்புகிறேன் என்பதைச் சொல்லவே தேவையில்லை.

நான் மாலை சுமார் 6 மணியளவிற்கு மறியலை விட்டுக் கிளம்பினேன். அந்த நேரம்வரை, மனுதாரர்களின் முதல் தகவல் அறிக்கையில் விவரிக்கப்பட்டதற்கு நேர் மாறாக, ரத்தம் சிந்தப்படவில்லை, யாருடைய தலைமுடியும் பிடித்து இழுக்கப்படவில்லை, எந்தக் கொலை முயற்சியும் நடக்கவில்லை என்று நான் அதிகாரபூர்வமாக உறுதியளிக்க முடியும். சிறிது கிச்சடி சமைத்துச் சாப்பிட்டார்கள். குப்பை போடவில்லை. அங்கே நூற்றுக்கு மேற்பட்ட போலீஸ் கான்ஸ்டபிள்களும் சில முதுநிலைக் காவல் அதிகாரிகளும் இருந்தார்கள். மனுதாரர்களை நான் கண்ணால் பார்த்ததே இல்லை என்று சொல்வதே என் ஆசை என்றாலும் மனசாட்சி உறுத்தாமல் என்னால் அதைச் சொல்ல முடியாது; ஏனென்றால் அவர்கள் யார் என்றோ பார்க்க எப்படி இருப்பார்கள் என்றோ எனக்குத் தெரியாது. அவர்கள் அன்று அலைமோதிக்கொண்டிருந்த நூற்றுக்கணக்கான மக்களில் யாராகவும் இருந்திருக்கக் கூடும்.

ஆனால் மனுதாரர்கள் யாராக இருந்தாலும், அவர்கள் உள்நோக்கம் என்னவாக இருந்தாலும், அவர்கள் விமர்சனத்தை அடக்கவும் எதிர்க் கருத்தை ஒழிக்கவும் நீதிமன்ற அவமதிப்புச் சட்டத்தையும் உச்ச நீதிமன்றத்துடனான நல்லுறவையும் துஷ்பிரயோகம் செய்ய முயல்வது ஜனநாயகத்தைப் பற்றிய புரிதலின் வேர்களையே தாக்குகிறது.

சமீபத்திய சில மாதங்களில் இந்த நீதிமன்றம் பல முக்கியப் பொதுப் பிரச்சினைகள் தொடர்பான தீர்ப்புகளை வழங்கியிருக்கிறது. உதாரணமாக, தில்லியில் மாசுபடுத்தும் ஆலைகளை மூட உத்தரவிட்டது, பொதுப் போக்குவரத்திற்கான பேருந்துகளை டீசலிலிருந்து இறுக்கப்பட்ட இயற்கை வாயுவிற்கு மாற்ற உத்தரவிட்டது, சர்தார் சரோவர் அணையைத் தொடர்ந்து கட்டுவதற்கு அனுமதி வழங்கித் தீர்ப்பளித்தது ஆகியவை. இவை அனைத்திற்கும் ஆழமான, பெரும்பாலும் எதிர்பார்த்திராத தாக்கங்கள் ஏற்பட்டிருக்கின்றன. அவை நல்ல விதமாகவோ மோசமாகவோ லட்சக்கணக்கான இந்தியப் பிரஜைகளின் வாழ்க்கையையும் பிழைப்பையும் கணிசமாக பாதித்திருக்கின்றன. இந்தத் தீர்ப்புகள் நீதி வழங்கினாலும் அநீதி வழங்கினாலும், அவற்றில் என்னென்ன சட்ட நுட்பங்கள் இருந்தாலும், நீதிமன்றம் விமர்சனங்களையோ எதிர்க் கருத்துகளையோ சகிக்க இயலாததாக மாறினால் அது ஜனநாயகத்தின் முடிவின் தொடக்கத்தைக் குறிக்கும்.

ஊழலில் ஊறிய, செயலூக்கமற்ற அதிகாரவர்க்கத்தைச் சரிசெய்வதற்காகப் பொது விஷயங்களில் குறுக்கிடும் 'செயல் வேகம்' கொண்ட ஒரு நீதியமைப்பிற்கு பதில் சொல்லும் பொறுப்பு *அதிகமாக* இருக்க வேண்டும், குறைவாக அல்ல. அரசியல் வெற்றிடம், பொருளாதார நெருக்கடி, மத மற்றும் கலாச்சார

சமூகத்துடனான இணைப்புகளை நீதித் துறை துண்டித்துக்கொண்டால், இந்திய ஜனநாயகத்தின் இன்னொரு தூண் சரிவதாகிவிடும். நீதியமைப்பின் சர்வாதிகாரம் ராணுவ சர்வாதிகாரத்தைப் போலவே, அல்லது வேறு எந்த வடிவத்திலான சர்வாதிகார ஆட்சியையும் போலவே பீதியைத் தருவது.



சகிப்பின்மை ஆகியவற்றால் ஏற்கனவே துவண்டு போயிருக்கும் ஒரு சமூகத்திடம் நீதியமைப்பு எந்த வடிவத்திலான சகிப்பின்மையைக் காட்டினாலும் அது மரண அடியாக இருக்கும். நீதியமைப்பு தன்னைப் பொது மக்களின் பார்வையிலிருந்தும் பதில் சொல்லும் பொறுப்பிலிருந்தும் விலக்கிக்கொண்டால், தான் எந்த சமூகத்திற்குச் சேவை செய்வதற்காக உருவாக்கப்பட்டதோ அந்தச் சமூகத்துடனான இணைப்புகளைத் துண்டித்துக்கொண்டால், இந்திய ஜனநாயகத்தின் இன்னொரு தூண் சரிவதாகிவிடும். நீதியமைப்பின் சர்வாதிகாரம் ராணுவ சர்வாதிகாரத்தைப் போலவே, அல்லது வேறு எந்த வடிவத்திலான சர்வாதிகார ஆட்சியையும் போலவே பீதியைத் தருவது.

சமீபத்தில் ஒரு தேசிய தொலைக்காட்சி வலைப்பின்னலில் ஒளிபரப்பப்பட்ட டெஹல்கா டேப்கள் பாரதீய ஜனதா கட்சி மற்றும் சமதா கட்சி (இரண்டும் ஆளும் கூட்டணியில் அங்கம் வகிப்பவை) தலைவர்கள் போலி ஆயுத விற்பனையாளர்களிடம் லஞ்சம் பெற்றுக் கொள்ளும் அருவருப்பான காட்சியைக் காட்டின. இது ஊழலுக்கான அடிப்படை ஆதாரமாகக் கருதப்பட்டிருக்க வேண்டும் என்றாலும்கூட தில்லி உயர் நீதிமன்றம் டேப்களில் குறிப்பிடப்படும் ஆயுத பேரங்களை விசாரணை செய்யக் கோரித் தாக்கல் செய்யப்



படிப்பகம்

www.padippakam.com



பட்ட மனுவை ஏற்க மறுத்தது. மனுதாரர் வலுவான சாட்சிய மின்றி நீதிமன்றத்தை அணுகியதற்கு பெஞ்ச் கடுமையான ஆட்சேபம் தெரிவித்தது; மனுதாரர் தனது குற்றச்சாட்டுகளுக்கு வலுவான சாட்சியங்களை நிறுவவில்லை என்றால் நீதிமன்றம் மனுதாரரைச் சட்ட செலவுகளை ஏற்கவைக்கும் என்று மனுதாரரின் வழக்கறிஞரை எச்சரிக்கக்கூட செய்தது.

தேசியப் பாதுகாப்பு, மிக உயர்ந்த இடங்களில் ஊழல் ஆகியவை தொடர்பானதாக இருந்தாலும், உச்ச நீதிமன்ற நீதிபதிகள் தங்கள் அலுவல்களில் மும்முரமாக இருக்கிறார்கள் என்ற காரணத்தைச் சொல்லி இந்தியத் தலைமை நீதிபதி டெஹல்கா விவகாரத்தைக் குறித்த நீதிமன்ற விசாரணையை நடத்த பதவியிலுள்ள நீதிபதி ஒருவரை அனுமதிக்க மறுத்தார்.

இருந்தாலும் அபத்தமான, வெறுக்கத்தக்க, முற்றிலும் ஆதார மற்ற ஒரு மனு விஷயத்தில் நீதிமன்றம் விருப்பத்துடன் நோட்டீஸ் அனுப்பியிருப்பது கவலையளிக்கிறது. இந்த மனுவில் மூன்று பதிலாளர்களுமே அரசின் கொள்கைகளை எதிர்த்துப் பகிரங்கமாக – ஆனால் முற்றிலும் வெவ்வேறு வழிகளில் – கேள்விகள் எழுப்பியுள்ள, சமீபத்திய உச்ச நீதிமன்றத் தீர்ப்பைக் கடுமையாக விமர்சித்துள்ளவர்களாக இருக்கிறார்கள்.

நீதிமன்றம் விமர்சனத்தை அடக்கி எதிர்க் கருத்தை ஒடுக்க, தன் கருத்தை ஏற்காதவர்களைத் துன்புறுத்த, அச்சுறுத்த நீதிமன்றம் தயாராக இருப்பதையும் அது காட்டுகிறது. ஓர் உள்ளூர் காவல் நிலையம்கூட நடவடிக்கை எடுக்கத் தகுதியுள்ளதாகக் கருதாத ஒரு முதல் தகவல் அறிக்கையை அடிப்படையாகக் கொண்ட ஒரு மனுவை ஏற்றுக்கொள்வதன் மூலம் உச்ச நீதிமன்றம் தன் மதிப்பிற்கும் நம்பகத் தன்மைக்கும் தானே தீங்கு விளைவித்துக்கொள்கிறது.

இறுதியாக, எழுத்தாளர் என்ற முறையில் எனது கருத்துகளையும் நம்பிக்கைகளையும் தெரிவிக்க எனக்கு உரிமை உண்டு என்பதை மீண்டும் உறுதிப்படுத்த விரும்புகிறேன். சுதந்திர இந்தியப் பிரஜை என்ற முறையில் எனக்கு எந்த அமைதியான மறியலிலும் எதிர்ப்பு நிகழ்ச்சியிலும் எதிர்ப்பு ஊர்வலத்திலும் கலந்துகொள்ள உரிமை உண்டு. நான் அநீதியென நம்பும் எந்த நீதிமன்றத்தின் எந்தத் தீர்ப்பையும் விமர்சிக்க எனக்கு உரிமை உண்டு. ஒத்த கருத்துள்ளவர்களுடன் இணைந்து ஒரு பொதுநலக் குறிக் கோளுக்காகப் போராட எனக்கு உரிமை உண்டு. நான் இந்த உரிமைகளைப் பயன்படுத்திக் கொள்ளும்போதெல்லாம் பொய்க் குற்றச்சாட்டுகளுக்காக நீதிமன்றத்திற்கு இழுக்கப்பட்டு என் செயல்களுக்காக விளக்கம் தரும்படி கட்டாயப்படுத்தப்பட மாட்டேன் என்று நம்புகிறேன்.

மனுதாரர்கள் சிவில் மற்றும் குற்றவியல் மான நஷ்டக் குற்றங்களைச் செய்திருக்கிறார்கள். அவர்கள் புலனாய்வு செய்யப்பட்டு, சத்தியப் பிரமாணம் செய்த பின் பொய் சொன்னதற்காக அவர்கள் மீது வழக்குத் தொடுக்கப்பட வேண்டும். பொய்க் குற்றச்சாட்டுகளைப் பதிவு செய்து உச்ச நீதிமன்றத்தின் நேரத்தை வீணாக்கியதற்கான சேதத் தொகையை அவர்களைச் செலுத்தவைக்க வேண்டும். எல்லாவற்றுக்கும் மேலாக, இவற்றைவிட முக்கியமான விஷயங்களில் உச்ச நீதிமன்றத்தின் கவனம் திரும்புவதற்காகப் பொறுமையாகக் காத்திருக்கும் எல்லா பிரஜைகளிடமும் அவர்களை மன்னிப்புக் கேட்கச் செய்ய வேண்டும்.

**வாக்குமூலமளிப்பவர்**

*சரிபார்க்க:*

மேலே குறிப்பிடப்பட்டிருக்கும் வாக்குமூலமளிப்பவராகிய நான், மேற்கண்ட பிரமாணப் பத்திரத்தில் இருப்பவை நான் அறிந்தவரை உண்மை எனவும் முக்கியமான எதுவும் மறைக்கப்படவில்லை எனவும் உறுதிப்படுத்துகிறேன். 2001 ஏப்ரல் 16ஆம் தேதி புது தில்லியில் இது சரிபார்க்கப்பட்டது.

**வாக்குமூலமளிப்பவர்**

* மூலத்திலுள்ள பிழை

** இந்தக் கட்டுரையைப் படிக்க: http://www.narmada.org/gcg/gcg.html

தமிழில்: திவாகர் ரங்கநாதன்


புதிய வெளியீடு

**குற்றவாளிக்கூண்டில் வட அமெரிக்கா**

தமிழாக்கம்: அமரந்தா

ரூ. 35, பக். 72



நிலவிற்கு மேற்கொண்ட பயணங்களையும் மீறி பலப் பலரைப் பூமியில் கொன்று தீர்த்தவன் அவன் என்பதால் எழும்பிப் பறக்கிறது; தாள், எழுதுகோல் உறையிலிருந்து எடுக்கப்படுகிறது வெளியே

வெள்ளைமாளிகையிலிருந்து இன அழிவைச் செய்து வரும் இந்த நாசக்காரனை எதிர்த்துத் திடீர்த் தாக்குதல் மேற்கொள்ள...

– பாப்லோ நெருதா

**பரிசல்**

1. இந்தியன் வங்கி காலனி,
வள்ளலார் தெரு, பத்மநாபா நகர்,
சூளைமேடு, சென்னை - 94
கை பேசி 9382853646

விளம்பரம்



**தென்னிந்திய இன ஒப்புமையியல்**



ஆசிரியர்:
**முனைவர் அரு. பரமசிவம்**

பக்கம் 171 ❖ விலை ரூ. 85

வெளியீடு:

**காவ்யா**

16, இரண்டாம் குறுக்குத்தெரு
டிரஸ்ட்புரம், கோடம்பாக்கம்
சென்னை 600 005

விளம்பரம்




படிப்பகம்

www.padippakam.com






# நீதிமன்ற* அவமதிப்பு: ஒரு வரலாற்றுப் பார்வை


சு. சத்தியச் சந்திரன்

**நீதி பரிபாலனம் என்பது முடியாட்சிக் காலத்** திலிருந்தே நடைபெற்றுவரும் ஓர் அம்சம். இந்திய அரசியல் நூல்களில் குறிப்பிடத்தக்கதான கௌடில்யரின் அர்த்த சாஸ்திரத்திலேயே நீதி பரிபாலன அமைப்பின் உத்தரவுகளை மீறுவதோ அவ்வமைப்பை அவமதிப்பதோ இழிவுபடுத்து வதோ குற்றமாகக் கருதப்பட்டுள்ளது. இந்த மீறல்களுக்குத் தண்டனை உண்டு. இந்த விதிக்கு அவ்வமைப்பின் உறுப்பினர்களும் (நீதிபதிகள்) விதிவிலக்கல்லர்.

நவீன காலகட்டத்தில் நீதிமன்ற அமைப்பு இந்தியாவில் ஏற்படுத்தப்பட்டபோதும் நீதிமன்ற அவமதிப்புக் குறித்த சட்டங்கள் இயற்றப்பட்டன. முதலில் 1926இல் ஏற்படுத்தப்பட்ட நீதிமன்றங்கள் அவமதிப்புச் சட்டம் இங்கிலாந்து நாடாளு மன்றத்தால் இயற்றப்பட்டது.

1950இல் இந்திய அரசியலமைப்புச் சட்டம் ஏற்றுக்கொள்ளப்பட்டபோது பிரிவு 129 (Article 129) மற்றும் பிரிவு 215 (Article 215) முறையே இந்திய உச்ச நீதிமன்றம் மற்றும் உயர் நீதிமன்றங் களை மதிப்புறு நீதிமன்றங்கள் என்றும் தங்கள் மீதான அவமதிப்புக்குத் தண்டனை அளிப்பது உட்பட அனைத்து அதிகாரங்களும் கொண்டவை என்றும் அறிவித்தன.

இந்தியா குடியரசான பின் அச்சட்டம் 1952 இல் இயற்றப்பட்ட நீதிமன்றங்கள் அவமதிப்புச் சட்டத்தால் மாற்றீடு செய்யப்பட்டது. 1952இல் நீதிமன்றங்கள் அவமதிப்புச் சட்டத்திலிருந்து குறைபாடுகளைக் களைய அமைக்கப்பட்ட எச்.என். சன்யால் (இந்தியத் தலைமை அரசு வழக்குரைஞர் - Addl. Solicitor General of India) தலைமையிலான குழு 28.02.1963 தேதியிட்ட தனது அறிக்கையில் குறிப்பிட்டிருந்த பெரும் பாலான முக்கிய அம்சங்களைக் கவனத்தில் கொண்டு புதிதாக இயற்றப்பட்டதே தற்போது அமலில் உள்ள 1971ஆம் ஆண்டு நீதிமன்றங்கள் அவமதிப்புச் சட்டம்.


உச்ச நீதிமன்றம்

"எவனொருவன் மன்னரை அவமதிக்கிறானோ மன்னரவையைப் பழிக்கிறானோ/காட்டிக்கொடுக்கிறானோ, மன்னருக்கு எதிராகத் தீவினைகளுக்கு முயல்கிறானோ அவனுடைய நாக்கு துண்டாக்கப்படக் கடவது"

**- கௌடில்யரின் அர்த்த சாஸ்திரம்**

* இப்போது செயல்பட்டுவரும் நீதிமன்றங்கள் சட்டத்தின் அடிப்படையில் நீதி (Justice according to law) வழங்குவதற்காக ஏற்படுத்தப்பட்டவைதான். எனவே, அவற்றை 'வழக்கு மன்றங்கள்' (Courts of law) என்றழைப்பதே சரி என்றபோதிலும் 'நீதிமன்றம்' என்ற சொல்லே பரவலாக வழக்கில் இருப்பதால் இக்கட்டுரையில் அவ்வாறே பயன்படுத்தப்பட்டுள்ளது.



படிப்பகம்

www.padippakam.com



## அதிகாரத்தின் அவசியமும் தேவையும்

'சட்டம் என்பது நீதிபதி இன்னதென்று சொல்வதே' என்ற நிலையே பெரும்பான்மையான நாடுகளில் நடைமுறையில் உள்ளது. இச்சூழலில்தான், தனது தீர்ப்புகளை அமல்படுத்துவதற்கான அதிகாரமும் தனது முதன்மைப் பணியான சட்டப் பொருளுரைத் தலை (interpretation of law) பாதுகாப்பதற்கான சுதந்திரமும் நீதிமன்றத்திற்கு இருக்க வேண்டியது அவசியமாகிறது. எனவே, நீதிமன்ற அதிகாரத்தில் தலையீடு, குறுக்கீடு போன்றவற்றிலிருந்து பாதுகாத்துக் கொள்ள ஒரு கவசமாக 'நீதிமன்ற அவமதிப்பு அதிகாரம்' அவசியமானதென இதுவரையிலான ஆதரவு விளக்கங்கள் அமைந்துள்ளன.

நீதிமன்ற அவமதிப்புச் சட்டத்தின் முகவுரையில் (preamble) 'நீதிமன்ற அவமதிப்புக்குத் தண்டனை வழங்கும் சில நீதிமன்றங்களின் அதிகாரங்களை வரையறை செய்யவும் கட்டுப்படுத்தவும் அவை தொடர்பான நடைமுறைகளை ஒழுங்குபடுத்தவும்' இச்சட்டம் இயற்றப்பட்டுள்ளதாகக் கூறப்பட்டுள்ளது. இந்த அடிப்படையில்தான் இச்சட்டத்தின் பல்வேறு பிரிவுகள் நீதிமன்றங்களின் அவமதிப்பு அதிகாரத்தின் மீது விதித்துள்ள கட்டுப்பாடுகளைப் புரிந்துகொள்ள முடியும்.

> 'குற்றவியல் அவமதிப்பு' என்பது நடைமுறையில் நீதிமன்றங்களுக்கு எதிரான கருத்துகளை அடக்கும் வழிமுறையாகவே உள்ளது. இந்த அதிகாரம் பல்வேறு சூழ்நிலைகளில் கருத்துரிமையைப் பறிக்கும் விதத்திலேயே அதிக அளவில் பயன்படுத்தப்படுகிறது.

ஒரு பொருள் குறித்து உரிமையியல் (civil) அல்லது குற்றவியல் (criminal) வழக்கு நிலுவையில் உள்ளதென அறியாமல் அது தொடர்பாகக் கருத்துகளை வெளியிடுவது – அது நீதிமன்ற நடவடிக்கைகளில் தலையிடுவதாகவோ தலையிடுமளவு உள்ளதாகவோ, நீதியின் பாதையில் இடையூறு செய்வதாகவோ இடையூறு செய்யுமளவு உள்ளதாகவோ இருந்தபோதிலும் – நீதிமன்ற அவமதிப்பாகக் கருத முடியாது [பிரிவு 3(1)]. அதேபோல், நிலுவையில் இல்லாத வழக்குக் குறித்த கருத்துகளை வெளியிடுவதும் நீதிமன்ற அவமதிப்பாகக் கருதப்பட முடியாது [பிரிவு 3(2)]. மேலும், வெளியிடப்படும் கருத்தின் உள்ளடக்கம் நீதிமன்ற அவமதிப்பு ஆகாது என்ற நன்னம்பிக்கையின் அடிப்படையில் வெளியிடுவதும் நீதிமன்ற அவதிப்பாகக் கருதப்பட முடியாது [பிரிவு 3(3)]. இந்த விதிகள் பத்திரிகைகள் மற்றும் புத்தகங்கள் பதிவுச் சட்டப்படி வெளியிடப்படும் பிரசுரங்களுக்குப் பொருந்தாது (பிரிவு 4). பிரிவு 7இன்படி பிரசுரம் செய்யச் சட்டமோ நீதிமன்றமோ தடை விதிக்கும் செய்திகள் தவிர மற்ற விஷயங்களுக்கும் பொருந்தாது. ஒரு வழக்கு விசாரிக்கப்பட்டு இறுதித் தீர்ப்பு வழங்கப்பட்டபின் அந்த வழக்கின் தகுதி (Merits) குறித்த எந்தக் கருத்தும் நீதிமன்ற அவமதிப்பு ஆகாது (பிரிவு 5). கீழ் நீதிமன்ற நீதிபதியைப் பற்றி மற்றொரு கீழ் நீதிமன்றத்திலோ அல்லது உயர் நீதிமன்றத்திலோ நன்னம்பிக்கையின் அடிப்படையில் வெளியிடப்படும் எந்த ஒரு செய்தியையும் நீதிமன்ற அவமதிப்பாகக் கருதக் கூடாது (பிரிவு 6).

மேலே காணப்படும் கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டே நீதிமன்ற அவமதிப்பு அதிகாரம் பயன்படுத்தப்பட வேண்டுமென்று இச்சட்டம் விதிக்கிறது. மிகவும் குறிப்பாகச் சொல்ல வேண்டுமெனில், இச்சட்டத்தில் நீதிமன்ற அவமதிப்பு என்று வரையறுக்கப்பட்டுள்ளவை தவிர மற்ற எந்தச் செயலையும் (ஆணையை மீறுதல், கருத்து வெளியீடு அல்லது அவை போன்றவை) நீதிமன்ற அவமதிப்பாகக் கருதக் கூடாது என்று பிரிவு 9, அதிகாரத்தின் நீட்சியை வெளிப்படையாகத் தடைசெய்துள்ளது. இப்படி நீதிமன்ற அவமதிப்பு அதிகாரத்தின் மீது சட்டத்தில் இத்தனை கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டிருந்தாலும் இந்த எல்லைகள்/ கட்டுப்பாடுகள் பொருந்தாது என்ற இந்தியத் தலைமை நீதிமன்றம் ஒரு வழக்கில் கூறியுள்ளது. ஏற்கனவே உள்ள நீதிமன்ற அவமதிப்பு அதிகாரம் தொடர்பான மற்ற சட்டங்களுக்குக் கூடுதலாக இச்சட்டம் இயற்றப்பட்டுள்ளதாகப் பிரிவு 22 கூறுவது இதற்கு ஆதாரமாகச் சுட்டப்பட்டுள்ளது.

## நீதிமன்ற அவமதிப்பின் வகைகள்

நீதிமன்ற அவமதிப்பு என்பது 'உரிமையியல் அவமதிப்பு' (Civil Contempt), 'குற்றவியல் அவமதிப்பு' (Criminal Contempt) என இரு வகையானவை. 'உரிமை யியல் அவமதிப்பு' என்பது ஒரு நீதிமன்றத்தின் தீர்ப்பு, தீர்ப்புரை, உத்தரவு, ஆணை, எழுத்துபூர்வமான கட்டளை அல்லது நீதிமன்றத்திற்குத் தரப்படும் உறுதிமொழி ஆகியவற்றை மனமறிந்தே மீறுவதாகும்.

'குற்றவியல் அவமதிப்பு' என்பது —

- பேசப்பட்ட அல்லது எழுதப்பட்ட சொற்கள், குறியீடுகள், பார்த்துணரும் செயல்கள் (அல்லது அவை போன்ற பொருள்கள் அல்லது செயல்கள்) நீதிமன்றத்தை அவதூறு (scandalise) செய்வதாக அல்லது அவதூறு செய்யும் அளவுக்கு உள்ளவை;
- நீதிமன்றத்தின் அதிகாரத்தைக் குறைப்பதாகவோ அல்லது குறைக்குமளவுக்கு உள்ளதாகவோ இருக்கும் செயல்கள்;
- நீதிமன்ற நடவடிக்கைகளைப் பற்றிய தவறான எண்ணம் உண்டாகும் (prejudice) விதமாகவோ அல்லது தலையிடுவதாகவோ அல்லது தலையிடுமளவிற்கு உள்ளதாகவோ இருப்பவை;
- நீதி பரிபாலனத்தில் தலையிடுவதாகவோ அல்லது தலையிடுமளவு உள்ளதாகவோ அல்லது இடையூறாகவோ அல்லது இடையூறு ஏற்படுத்துமளவு உள்ளதாகவோ உள்ள செயல்கள்.

இவை அனைத்தும் குற்றவியல் அவமதிப்பு எனக் கருதப்படும்.



படிப்பகம்

www.padippakam.com



'உரிமையியல் அவமதிப்பு' அதிகாரம் நீதிமன்றத்தில் வழங்கப்பட்ட தீர்ப்பு, தீர்ப்புரை, உத்தரவு, ஆணை மற்றும் எழுத்துபூர்வமான கட்டளை அல்லது நீதிமன்றத் திற்குத் தரப்படும் உறுதிமொழியைச் செயல்படுத்தும் அளவுக்குப் பயன்படும். இது பெரும்பாலும் நிறைவேற் றுகை நடவடிக்கையை (execution proceedings) ஒத்ததாகும்.

'குற்றவியல் அவமதிப்பு' நீதிமன்றம் சுதந்திரமாகவும் சச்சரவுகளுக்கு அப்பாற்பட்டும் நீதி வழங்க வழிவகுக் கும் பாதுகாப்பு அதிகாரமாகும்.

இவற்றில் முன்னது வழக்குத் தரப்பினர் (litigants) கையில் தாம் பெற்ற தீர்ப்பை, உத்தரவை அமல்படுத்த வும் நிறைவேற்றுகை செய்யவும், அது இயலாத பட்சத்தில் தீர்ப்பை, உத்தரவை மீறுபவர்களைத் தண்டிக்க நட வடிக்கை எடுக்கவுமான ஆயுதமாக உள்ளது. இருப்பினும், நீதிமன்ற அவமதிப்பின் அதிகார வரம்பு (Contempt Jurisdiction) ஒரு தீர்வு (remedy) நடைமுறையல்ல. இந்த நடவடிக்கையைக் கொணரும் நபர் ஒரு தகவலாளி (informant) மட்டுமே. அதன் பிறகு குறிப்பிட்ட மீறல் நீதிமன்றத்திற்கும் மீறியதாகக் குற்றம்சாட்டப்படுப வருக்கும் இடையிலான பிரச்சினை என்றும் அதில் நீதிமன்றத்தின் உளத் தேர்வே (discretion) இறுதியானது என்றும் சட்டம் கூறுகிறது. நீதிமன்ற அவமதிப்பு நடவடிக்கையில் தண்டனை விதிக்கப்படு பவருக்கு மேல்முறையீடு செய்யச் சட்டத் தில் இடம் உண்டு. ஆனால் நடவடிக்கை முடித்துக் கொள்ளப்பட்டாலோ கைவிடப் பட்டாலோ நடவடிக்கையைத் தொடர்ந்த நபர் மேல்முறையீடு செய்ய இயலாது.

'குற்றவியல் அவமதிப்பு' என்பது நடைமுறையில் நீதிமன்றங்களுக்கு எதிரான கருத்துகளை அடக்கும் வழிமுறையாகவே உள்ளது; இந்த அதிகாரம் பல்வேறு சூழ் நிலைகளில் கருத்துரிமையைப் பறிக்கும் விதத்திலேயே அதிக அளவில் பயன்படுத்தப்படுகிறது எனக் குற்றம் சாட்டப்படுவதுண்டு.

கீழ் நீதிமன்றங்கள் தொடர்பான நீதிமன்ற அவமதிப்பு நடவடிக்கை எடுக்க உயர் நீதிமன்றத்திற்கு அதிகாரம் உண்டு (பிரிவு 10). இருந்தபோதிலும், சென்னை உயர் நீதிமன்றத்தைப் பொறுத்தவரை கீழ் நீதிமன்றங்களின் இடைக்கால உத்தரவு, ஆணை ஆகியவற்றை மீறுதல் தொடர்பாக நீதிமன்றங்கள் அவமதிப்புச் சட்டத்தின்படி உயர் நீதிமன்றத்தை அணுகி நடவடிக்கை கோர முடியாது என்ற சுற்றறிக்கை கடந்த பத்தாண்டுகளாக அமலில் உள்ளது. அதற்குப் பதிலாக, பாதிக்கப்பட்ட நபர் வழக்கு நிலுவையில் உள்ள நீதிமன்றத்திலேயே உரிமையியல் நடைமுறைச் சட்டப்படி (Code of Civil Procedure) நடவடிக்கை எடுத்துக்கொள்ளலாம் என்று கூறப்பட்டுள்ளது.

ஆனால் குற்றவியல் அவமதிப்புகளைப் பொறுத்த வரை கீழ் நீதிமன்றம் பரிந்துரைத்தாலோ அல்லது அரசுத் தலைமை வழக்குரைஞரின் (Advocate General) மனுவின் பேரிலோதான் உயர் நீதிமன்றம் நடவடிக்கை எடுக்க முடியும் (பிரிவு 15).

## அவமதிப்பு வழக்குகளும் தீர்வுகளும்

உரிமையியல் அவமதிப்பு வழக்குகளே பெரும் பாலும் உயர் நீதிமன்றத்தில் பதிவு செய்யப்படுகின்றன. அவை ஆண்டுதோறும் ஆயிரத்திற்கும் அதிமான எண்ணிக்கையில் நடக்கின்றன. நீதிமன்ற அவமதிப்பு வழக்கு என்பது நீதிமன்ற உத்தரவை நடைமுறைப் படுத்தும் வழிமுறை என்ற அளவில்தான் பரவலாகக் கருதப்படுகிறதே ஒழிய, நீதிமன்ற அவமதிப்புக் குற்ற மிழைத்ததாகக் குற்றம்சாட்டப்பட்ட நபரேகூடப் பல சமயம் கருதிக்கொள்வதில்லை என்ற அளவில்தான் இவ்வதிகாரம் பயன்பாட்டிலுள்ளது.

சில ஆண்டுகளுக்கு முன் சென்னை உயர் நீதிமன்றத் தில் அப்படி ஒரு அவமதிப்பு வழக்கு விசாரணைக்கு வந்தபோது நீதிமன்ற அவமதிப்பு வழக்கு மனு (Contempt Petition) நிறைவேற்றுகை மனு (Execution Petition) என்ற அளவுக்கு உத்தரவு மீறல்களால் சிறுமைப்படுத்தப்பட்டி ருப்பதாக நீதிபதி கே. கோவிந்தராஜன் வேதனையுடன் குறிப்பிட்டார். இவ்வகை மனுக்கள் பெரும்பாலும் தீவிர விசாரணை ஏதுமின்றி வெற்று மன்னிப்புக் கோருதலை ஏற்றுக் கொண்டு சடங்காக முடிக்கப் படுகின்றன என்பது சம்பந்தப்பட்ட வழக்கில் பாதிக்கப் பட்ட தரப்பினரின் உண்மையான வேதனை. பல்லாயிரம்

> இங்கிலாந்தின் புகழ்பெற்ற நீதிபதியான லார்டு டென்னிங் ஒரு வழக்கில் குறிப்பிட்டதுபோல், நீதிமன்றத்திற்கான மதிப்பு நீதிமன்ற அவமதிப்பு அதிகாரத்திலிருந்து வருவதோ பெறப்பட்டதோ அல்ல. அதை அடைவதற்காக இந்த அதிகாரம் ஒருபோதும் பயன்படுத்தப்படக் கூடாது.

மனுக்களில் ஒன்றிரண்டில் மட்டுமே உத்தரவை மீறுபவர்களுக்குக் கண்டனம் தெரிவிப்பதோ மிகச் சிறிய அளவு அபராதம் விதிப்பதோ நடைபெறு கிறது. இச்சட்டத்தி லுள்ள ஒரே தண்டனைப் பிரிவு 12, நீதிமன்ற அவ மதிப்புக்கு அதிகபட்சம் 6 மாதச் சிறையோ அல்லது ரூ. 2000 வரையிலான அபராதமோ அல்லது இரண்டுமோ விதிக்கலாம் என்று கூறுகிறது. அவையும் மேல்முறையீட்டில் சரிசெய்யப்பட்டு விடுகின்றன.

நீதிமன்ற அவமதிப்பு வழக்கு என்பதைப் பெரிதாக எடுத்துக்கொள்ளாத இந்திய அரசதிகாரிகளுக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியது வாசுதேவன் வழக்கு (1995). இவ்வழக்கில் உச்ச நீதிமன்றம் வழங்கிய உத்தரவை அமல்படுத்தாமல் அவமதிப்புச் செய்ததற் காக கர்நாடக அரசின் முதன்மைச் செயலர் வாசுதேவன் உச்ச நீதிமன்றத்தில் ஒரு மாத காலச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டார். இந்த அவமதிப்பு வழக்கை விசாரித்த நீதிபதிகள் கே. ராமசாமி மற்றும் பி.எல். ஹன்சாரியா, தண்டனையை மறுபரிசீலனை செய்யுமாறு அந்த அதிகாரி தாக்கல் செய்த மறுபரிசீலனை மனுவையும் தள்ளுபடி செய்தனர். மறுபரிசீலனை மனு நிலுவையில் இருந்தபோதே வழக்கை விசாரிக்கும் நீதிபதிகளில்



படிப்பகம்

www.padippakam.com



## சட்டத்தின் துஷ்பிரயோகம்: ஓர் உதாரணம்



வி. ஆர். கிருஷ்ணய்யர்

அவமதிப்பு வழக்கு என்னும் அதிகாரம் தனிநபர் கருத்துச் சுதந்திரத்தை முடக்குகிறது. அதோடு, பதவியில் இருக்கும் நபர்களின் தனிப்பட்ட விருப்பம், பாரபட்சம் ஆகியவற்றைச் சார்ந்தும் அது சில சமயம் செயல்படுகிறது. 1990இல் நடந்த ஒரு சம்பவம் இதற்கு நல்ல உதாரணம். கேரள பிராமணர் சங்கம் என்ற அமைப்பு ஒரு விழாவை ஏற்பாடு செய்திருந்தது. அதில் கலந்துகொள்ள வி. ஆர். கிருஷ்ணய்யரை அழைத்திருந்தது. பிராமணர்கள் சங்கம் என்று ஒரு அமைப்பை ஏற்படுத்துவதையே தான் எதிர்ப்பதாகக் கிருஷ்ணய்யர் கூறினார். தங்களுடைய சங்கத்தின் முக்கிய நோக்கம் ஒடுக்கப்பட்ட மக்களை மேம்படுத்துவதே என்று கூறிய அந்த அமைப்பினர், சாதி அடக்கு முறைக்கு எதிராகப் போராடியவரும் தலித்துகளை மதுரை மீனாட்சியம்மன் கோவில் நுழைவுப் போராட்டத்தில் வழி நடத்தியவருமான மதுரை வைத்தியநாத ஐயரின் நூற்றாண்டு விழாவைத் தாங்கள் நடத்துவதாகவும் கூறினர். தலித்துகளின் விடுதலை மற்றும் தீண்டாமையின் கொடூரம் ஆகியவற்றைப் பற்றி விரிவாகப் பேசும்படி அவர்கள் வேண்டிக்கொண்டதால் விழாவில் கலந்துகொள்ள கிருஷ்ணய்யர் ஒப்புக்கொண்டார்.

அம்பேத்கரின் கருத்துகளையும் கவிஞர் குமரன் ஆசானின் கருத்துகளையும் விரிவாக மேற்கோள் காட்டிப் பேசிய கிருஷ்ணய்யர், கேரளாவில் மிகவும் ஒடுக்கப்பட்டவர்களாகவும் கீழானவர்களுக்கும் கீழானவர்களாகவும் நடத்தப்படுபவர்களான 'நாயடா' பழங்குடியினரை உயர் நீதிமன்ற நீதிபதிகளாக நியமிக்க வேண்டும் என்று குறிப்பிட்டார். அவ்வாறு நியமிக்கப்படும் பட்சத்தில் அந்த நீதிபதி, "திறமையிலும் இயல்பான திறனிலும் வேறு உயர் நீதிமன்ற நீதிபதி எவருக்கும் சளைத்தவராக இருக்க மாட்டார்" என்றும் குறிப்பிட்டார்.

அவரது உரையின் விவரம் *எக்ஸ்பிரஸ்* மலையாள நாளிதழில் வெளியாயிற்று. இதையடுத்து, கிருஷ்ணய்யர் உயர் நீதிமன்றத்தை இழிவான முறையில் விமர்சித்ததாகக் கூறிக் கேரள உயர் நீதிமன்ற வழக்குரைஞர் மன்றத்தைச் சேர்ந்த 20 பேர் எம்.என். நாராயண பிள்ளை என்பவர் தலைமையில் வழக்குரைஞர் மன்றத்தில் புகார் அளித்தார்கள். சில நாட்களுக்குப் பின், ராஜு கே. மேத்யூ என்ற உயர் நீதிமன்ற வழக்குரைஞர் அரசுத் தலைமை வழக்குரைஞரிடம், கிருஷ்ணய்யரின் மீதும் *எக்ஸ்பிரஸ்* நாளிதழின் ஆசிரியரும் வெளியீட்டாளருமான பாலகிருஷ்ணன் மீதும் நீதிமன்ற அவமதிப்பு நடவடிக்கை எடுக்க வேண்டி அனுமதி கோரி மனுச் செய்தார்.

அதன்பேரில் அனுப்பப்பட்ட விசாரணைக் கடிதத்திற்கு கிருஷ்ணய்யர் ஒரு கடிதம் மூலம் விளக்கமளித்தார். நீதிமன்றத்தை அவமதிக்கும் எண்ணம் தனக்கு இல்லையென்றும் நீதிபதிகளுக்கும் நீதி வேண்டும் என்று தாம் கருதுவதாகவும் அவர் குறிப்பிட்டார். 'நாயடா' சமூகத்தில் பிறந்த காரணத்தினாலேயே ஒருவர் உயர் நீதிமன்ற நீதிபதியாகும் தகுதியை இழந்துவிட மாட்டார் என்பதுதான் தனது கருத்து என்றும் குறிப்பிட்டிருந்தார். இந்திய அரசியலமைப்புச் சட்டக் கொள்கையின்படி எந்த ஒரு நபரும் நீதிபதியாகவோ அமைச்சராகவோ அல்லது குடியரசுத் தலைவராகவோ தகுதிபடைத்தவர்தான் என்றும் அவர் அந்த விளக்கக் கடிதத்தில் கூறியிருந்தார்.

கேரள உயர் நீதிமன்ற வழக்குரைஞர் மன்றத்திற்கு அவர் அளித்த பதில் இன்னும் விரிவானது. அதில், "நாயடாக்கள் போன்றவர்கள் நீதிபதிகளாகும்போது அது அந்த அமைப்புக்குச் சமூக வெளிச்சத்தைத் தருமே தவிர களங்கமாக அமையாது" என்றும் "இந்துக்களுக்கு வேதம் தேவைப்பட்டது, அவர்கள் சாதி இந்துவல்லாத வேதவியாசரை அழைத்தனர். இந்துக்களுக்குக் காவியம் தேவைப்பட்டபோது அவர்கள் தீண்டத் தகாதவரான வால்மீகியை அழைத்தனர். இந்துக்களுக்கு அரசியலமைப்புச் சட்டம் தேவைப்பட்டபோது அவர்கள் என்னை அழைத்தனர்" என்ற அம்பேத்கரின் கருத்தினையும் நினைவுகூர்ந்தார். அரசுத் தலைமை வழக்குரைஞர் கே. சுதாகரன், தன் அனுமதி மறுப்பு உத்தரவில் கிருஷ்ணய்யரின் எண்ணம் நீதிமன்றத்தை அவமதிப்பது அல்லவென்றும் உயர் சாதியினர் வழியில் வரும்போது 74 அடி தூரத்திற்கு விலகி நிற்க வேண்டும் என்று விதிக்கப்பட்ட நாயடாக்களுக்கும் வாய்ப்புக் கிடைத்தால் நீதிபதி போன்ற உயர் பதவிகளில் சிறந்து விளங்குவார்கள் என்றும் கிருஷ்ணய்யர் தெரிவித்த கருத்து நீதிமன்ற அவமதிப்பு ஆகாது என்றும் குறிப்பிட்டார்.

ஒருவரைத் தனிப்பட்ட முறையில் சந்தித்து வழக்கைப் பற்றிப் பேசியதற்காகவும் அந்த அதிகாரிக்குத் தீர்ப்பில் கடும் கண்டனம் தெரிவிக்கப்பட்டு மறுபரிசீலனை மனு தள்ளுபடி செய்யப்பட்டது. இது தவிர கடந்த பத்தாண்டுகளில் குறிப்பிடும்படியான தீர்ப்பு எதுவுமில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

### நீதிபதிகளுக்கும் பொருந்தும்

"நியாயாதிகாரி, நீதி கேட்டு வழக்கு கொணர்ந்தவனை விரல்காட்டிப் பயமுறுத்தினாலும், பேச்சால் பயமுறுத்தினாலும், வெளியே பிடித்துத் தள்ளினாலும் பேச விடாமல் செய்தாலும் அபராதம் விதிக்க வேண்டும். திட்டியதற்கு இருமடங்கு அபராதம்.

"நியாயாதிகாரி கேள்வி கேட்க வேண்டியவனைக் கேளாமல் போனாலோ, வேண்டாதவனைக் கேள்வி கேட்டாலோ, கேட்டு அவன் சொன்னதை உடனே மறுத்தாலோ, இப்படிச் சொல் என்று கூறினாலோ அவன் சொன்னதில் மீதியைத் தானே சேர்த்துச் சொன்னாலோ, கொடுக்க வேண்டிய ஆதாரத்தைக் கேட்காவிட்டாலோ, தேவையற்ற ஆதாரத்தைக் கேட்டாலோ, ஆதாரமில்லாமலே நடத்தினாலோ, ஏதோ காரணம் காட்டி ஆதாரத்தைத் தள்ளினாலோ, சரியான போக்கில் வாதம் போகும்போது திசைதிருப்பினாலோ, சாட்சிகளுக்கு அவர்கள் சொல்வதற்கு எடுத்துக்கொடுத்தாலோ, முடிந்துபோய்த் தீர்ப்பும் கூறப்பட்டுவிட்ட வழக்கை மீண்டும் விசாரிக்க ஆரம்பித்தாலோ, அந்த நியாயாதி காரிக்கு 1000 வெள்ளிகள் அபராதம் விதிக்க வேண்டும். அதே குற்றத்தை மீண்டும் செய்தால் இருமடங்கு அபராதம் விதித்துப் பதவியிலிருந்து நீக்க வேண்டும்".

*– அர்த்த சாஸ்திரம் (4ஆம் பாகம், 9ஆம் அத்தியாயம், 5ஆம் சூத்திரம்)*

அவமதிப்புச் சட்டத்தின் ஒரு சிறப்பம்சமாகப் பார்க்கப்பட வேண்டியது பிரிவு 16. ஒரு நீதிபதியோ

www.padippakam.com



குற்றவியல் நடுவரோ அல்லது நீதி சார்ந்த பொறுப்பில் செயல்படும் நபரோ தனிநபரைப் போன்றே சம்பந்தப் பட்ட நீதிமன்றத்தை அவமதித்த குற்றத்துக்கு உள்ளாக்கப் படலாம் என்று இப்பிரிவு கூறுகிறது. இந்த அடிப்படை யில் மட்டும்தான் சாமானியனும் நீதிபதியும் ஒரே தட்டில் வைத்துப் பார்க்கப்படுகின்றனர். ஆனால், நடைமுறையில் இது கீழ் நீதிமன்ற நீதிபதிகள் மீது மட்டுமே அவ்வப்போது பிரயோகிக்கப்படுகிறதே தவிர இதனடிப்படையில் இதுவரை எந்த நீதிபதியோ, குற்ற வியல் நடுவரோ அல்லது வேறு நபரோ தண்டிக்கப் பட்டதில்லை.

இப்பிரிவு பதவியில் உள்ள உச்ச நீதிமன்ற அல்லது உயர் நீதிமன்ற நீதிபதிக்கும் பொருந்துமா என்ற கேள்விக்கு பாட்னா உயர் நீதிமன்றமும் (ஹரிஷ் சந்திர மிஸ்ரா எதிர் மேன்மைதங்கிய நீதிபதி எஸ். அலி அகமது [AIR1986 Pat 65]) சென்னை உயர் நீதிமன்றமும் (எம்.ரங்கா எதிர் மேன்மைதங்கிய நீதிபதி பி.எஸ். மிஸ்ரா [(1992) 2 Law weekly 110]) முடியாது என்று விடையளித் தன. அது மட்டுமல்லாமல் அப்பிரிவு கீழ் நீதிமன்றங் களுக்கும் மற்றவர்களுக்கும் மட்டுமே பொருந்தும் என்று தீர்ப்பளித்தது. ஆனால், உச்ச நீதிமன்றம் ஒரு வழக்கில் (1995) உச்ச நீதிமன்ற உத்தரவை அவமதிக்கும் உயர் நீதிமன்ற நீதிபதிகள் மீது நடவடிக்கை எடுக்க இந்திய அரசியலமைப்புச் சட்டப் பிரிவுகள் 141, 142 மற்றும் 144 ஆகிய வற்றின்படி உச்ச நீதி மன்றத்திற்கு அதிகாரம் உள்ளதாகக் கூறியுள் ளது. பதவியில் உள்ள உச்ச நீதிமன்ற நீதி பதிக்கு எதிராக இச் சட்டப்படி நடவ டிக்கை எடுக்க இய லுமா என்ற கேள்விக்கு பதில் சொல்லாமல் பரந்துபட்ட பொது நலனின் (larger public interest) அடிப் படையில் நீதிமன்ற அவமதிப்பு நடவ டிக்கை எடுக்க வேண் டாம் என முடிவு செய்யப்பட்டது [Sub-Committee on Judicial Accountability Vs. Justice V. Ramaswami, 1995(1)SCC 5].



ஈ.எம்.எஸ்.

இச்சம்பவத்தில் சம்பந்தப்பட்ட அப்போதைய உச்ச நீதிமன்ற நீதிபதி வி.ராமசுவாமி அவர் மீதான தகாச் செயல் தொடர்பான குற்றச்சாட்டினை விசாரிக்க நீதிபதிகள் (விசாரணைச்) சட்டம் 1968இன்படி நாடாளு மன்றம் அமைத்த குழுவின் உறுப்பினர்களுக்குக் கடிதம் எழுதி அதில் நீதிபதிகளைப் பற்றியும் நீதித் துறை பற்றியும் மனம்போனபடி குற்றம்சாட்டியிருந்தார், அதற்காக அவர்மீது நீதிமன்ற அவமதிப்பு வழக்கு கொண்டுவரப்பட்டபோது அந்தக் கடிதம் எந்தச் சூழ்நிலையில் எழுதப்பட்டது என்று விளக்கி இன்னொரு கடிதம் எழுதினார். அதனடிப்படையிலேயே நடவடிக்கை முடித்துக்கொள்ளப்பட்டது.

நீதிமன்ற அவமதிப்பு அதிகாரம் மக்களாட்சிப் பண்புகளுக்கு எதிரானது, அதைக் கருத்துரிமையைப் பறிக்கப் பயன்படுத்தக் கூடாது என்ற குரல் நீதிபதி ஒருவரிடமிருந்து இதுவரை வந்துள்ளதென்றால், அவர் முன்னாள் உச்ச நீதிமன்ற நீதிபதி வி.ஆர். கிருஷ்ணய்யர்தான். நீதிபதியாக இருந்தபோதும் அதற்குப் பின்னரும் இக்கருத்தை வாய்ப்பு கிடைக்கும்போதெல்லாம் அவர் வலியுறுத்திவருகிறார். அவர் மீதே நீதிமன்ற அவமதிப்பு வழக்குகள் தொடரப் பட்டன என்பது இவ்வதிகாரத்தின் கருத்துரிமைக் கெதிரான தீவிரத்தை உணர்த்தும்.

1981இல் கேரள உயர் நீதிமன்றம் தனது வெள்ளி விழாவைக் கொண்டாடியது. அதையொட்டி, 'நீதித் துறை சீர்திருத்தத் திட்டத்திற்கான அணுகுமுறை' என்ற தலைப்பில் உரையாற்ற கிருஷ்ணய்யர் அழைக்கப் பட்டிருந்தார். தன்னுடைய உரையில், நீதித் துறையின் செயல்பாடுகள் திருப்தியளிக்கும் வகையில் இல்லை யென்றும் இந்நிலை மாறாவிட்டால் நீதிமன்றமே தேவையில்லாத அமைப்பாக மாறிவிடும் அபாயம் உள்ளதென்றும் கிருஷ்ணய்யர் கூறினார்.

கருத்தரங்கில் கலந்துகொண்ட வின்சென்ட் என்ற வழக்குரைஞர், கிருஷ்ணய்யரின் உரை நீதிமன்ற அவமதிப்பு எனக் கூறி அரசுத் தலைமை வழக்கு ரைஞரின் அனுமதி பெற்றுக் கேரள உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தார். அதை விசாரித்த தலைமை நீதிபதி சுப்பிரமணியன் மற்றும் நீதிபதி பரிபூர்ணம் ஆகியோர் அடங்கிய பெஞ்ச், "இதுவரை எந்த நீதிமன்றமும் சந்தித்திராத சூழ்நிலை" என்று இதைக் குறிப்பிட்டது. கிருஷ்ணய்யரின் நோக்கம் நீதிமன்ற அவமதிப்பல்ல என்றும் நீதிமன்றம் தன் நடவடிக்கை களை எப்படி அமைத்துக் கொள்ள வேண்டும் என்ற நன்னம்பிக்கையின் அடிப்படையில் எச்சரிக்கை மணியடிப்பதே என்றும் பெஞ்ச் தன் தீர்ப்பில் கூறியது. மேலும் மக்களாட்சியில் நியாயமான விமர்சனத்திற் கப்பாற்பட்டு எந்த ஒரு நிறுவனமும் இருக்கக் கூடாது என்றும் அதற்கு நீதிமன்றங்களும் விதிவிலக்கல்ல என்றும் கூறி, அவமதிப்பு நடவடிக்கையைத் தொடரத் தேவையில்லை என்று நீதிபதிகள் தீர்ப்பளித்தனர்.

## மாறும் அணுகுமுறை

நீதிமன்றத்தைத் தனது தனிப்பட்ட பிரச்சினைகளுக் காக அணுகுபவர்கள் கொணரும் நீதிமன்ற அவமதிப்பு வழக்குகளை மிக இலகுவானதாக நீதிமன்றங்கள் கருதுகின்றன. ஆனால் நீதிபதிகளுக்கு எதிரான குற்றச் சாட்டுகள் குறித்த வழக்குகளை மிகவும் கடுமையாகக் கையாள்கின்றன. ஒரு நீதிபதி பற்றி ஆதாரபூர்வமான ஒரு குற்றச்சாட்டு எழும்போது நீதிமன்றம் அக்குற்றச் சாட்டை விசாரணைக்குள்ளாக்காமல் குற்றம்சாட்டுகிற நபரை (பத்திரிகையையும்தான்) குற்றவியல் அவமதிப்பு அதிகாரத்தைப் பயன்படுத்தி அடக்குவது சட்டபூர்வ மாக நடைமுறையாக்கப்பட்டிருக்கிறது. இது மக்களாட்சி மாண்புகளுக்கு விடப்பட்டிருக்கும் மிகப் பெரிய சவால்.



படிப்பகம்

www.padippakam.com



## நீதிபதியின் பொறுப்புணர்வு: ஓர் உதாரணம்



நீதிபதி லார்டு டென்னிங்

பத்திரிகைச் சுதந்திரத்தையும் நீதிமன்ற அவமதிப்பு அதிகாரத்தையும் பற்றிச் சொல்லும்போது இங்கிலாந்து நீதிபதி லார்டு டென்னிங் பற்றிக் குறிப்பிடாமல் இருக்க முடியாது. பிரிட்டிஷ் ஸ்டீல் கார்ப்பரேஷன் எதிர் கிரனடா தொலைக்காட்சி [(1980) 3 WLR 774] என்ற வழக்கு டென்னிங்கால் விசாரிக்கப்பட்டது. பிரிட்டிஷ் ஸ்டீல் கார்ப்பரேஷனின் ரகசிய ஆவணங்கள் அந்நிறுவனத்தின் பணியாள் ஒருவர் மூலம் பத்திரிகையாளர் ஒருவர் கைக்கு வந்து, அது கிரனடா தொலைக்காட்சியில் வெளியிடப்பட்டது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருந்தது. பிரிட்டிஷ் ஸ்டீல் நிறுவனம் தொடர்ந்த வழக்கில் கிரனடா தொலைக்காட்சி நிறுவனம் சம்பந்தப்பட்ட நபரின் பெயரை வெளியிடும்படி கோரப்பட்டது. ஆனால் அந்த நபரின் பெயரை வெளியிடுவதில்லை என்ற உறுதிமொழியுடன் தகவல்கள் பெறப்பட்டதால் தொலைக்காட்சி நிறுவனம் பெயரை வெளியிட மறுத்தது. எனினும், அந்த நபரின் பெயரை வெளியிட வேண்டுமென நீதிபதி உத்தரவிட்டார்.

இதையடுத்துப் பத்திரிகைகள் டென்னிங்மீது கடும் கண்டனங்களை வெளியிட்டன. ஒரு பத்திரிகையாளர், 'டென்னிங் ஒரு கழுதை' என்றார். *தி அப்சர்வர்*, 'டென்னிங் ஏன் ஒரு கழுதை' என்று தலைப்பிட்டு எழுதியது. *தி டைம்ஸ்* இதழ், டென்னிங் இம்முறை தவறிழைத்திருக்கிறார்; பத்திரிகைச் சுதந்திரத்திற்கு மேல்முறையீட்டு நீதிமன்றம் தீங்கிழைத்துள்ளது என்று எழுதியது.

பத்திரிகைச் சுதந்திரத்தின் மீது பெரும் மதிப்புக் கொண்டிருந்த டென்னிங் இந்த விமர்சனங்கள் குறித்து ஆத்திரமடையவில்லை. "பொதுநலன் தொடர்பான விஷயங்களில் நாடாளுமன்றத்திற்கு உள்ளும் புறமும் பத்திரிகைகளிலும் ஒளிபரப்பு ஊடகங்களிலும் நேர்மையான கருத்துகளைக் கூற ஒவ்வொருவருக்கும் உரிமை உள்ளது. எங்கள் பணியின் காரணமாக இது போன்ற பரபரப்புச் செய்திகளுக்குப் பதில் கூற முடியாத சூழல் உள்ளது. எனினும், எங்கள் செயல்பாடுகளின் மூலமாகவே எங்கள் குற்றமற்ற தன்மையை நிரூபிக்க வேண்டும்" என்று கூறினார். இக்கருத்துக்கு ஆதரவாக 1968இல் வழங்கப்பட்ட ஒரு தீர்ப்பை மேற்கோள் காட்டினார்.

இந்த அதிகாரத்தைத் தக்க வைத்துக்கொள்ள என்னதான் புனிதமான காரணங்கள் கூறப்பட்டாலும் அது ஏற்கப்படக் கூடாது என்பதே நீதியின் பாதை. இந்த நிலைக்குக் காரணம், நீதிமன்ற அவமதிப்பு வழக்கில் உண்மையைத்தான் சொன்னதாக/வெளியிட்டதாகக் கூறுவது குற்றம்சாட்டப்பட்டவருக்குச் சாதகமான ஒரு வாதமாக ஏற்றுக்கொள்ளப்படாது என்று உச்ச நீதிமன்றமும் சில உயர் நீதிமன்றங்களும் தீர்ப்புகள் வழங்கியுள்ளதுதான்.

இதைப் பற்றி நீதிபதிகள், சட்ட நிபுணர்கள், பத்திரிகையாளர்கள், கல்வியாளர்கள், பொதுமக்கள் எனப் பல்வேறு தரப்பினரும் கடுமையாக விமர்சனம் செய்தபின் 2004ஆம் ஆண்டில் தேசிய அரசியலமைப்புச் சட்ட மறு ஆய்வுக் குழுவின் பரிந்துரையின்பேரில் ஒரு சட்டத் திருத்தம் கொண்டுவரப்பட்டுள்ளது. இதன்படி, நீதிபதிகள்மீது அல்லது நீதிமன்றத்தின் மீது வைக்கப்படும் குற்றச்சாட்டு உண்மை என்ற அடிப்படையிலும் பொதுநலன் கருதி அந்தக் குற்றச்சாட்டை நன்னம்பிக்கையின் அடிப்படையில் வெளியிட்டதாகவும் வாதிட வாய்ப்பு வழங்கப்படுகிறது. ஆனால் இது இன்னும் சட்டமாக ஏற்கப்பட்டு அமலுக்கு வரவில்லை.

தடா, பொடா போன்ற சட்டங்களை அரசு தன் னிச்சையாகவும் அரசியல் காரணங்களுக்காகவும் தவறாகப் பயன்படுத்துவது அனைவரும் அறிந்ததே. அதைவிட அதிகமாக நீதிமன்றங்கள் பற்றிய குறிப்பான செயல்பாட்டுக் குறைகள், நீதிபதிகளின் மீதான உண்மையான குற்றச்சாட்டுகளைத் தடைசெய்ய 'அவமதிப்பு அதிகாரம்' பயன்படுத்தப்பட்டுள்ளது.

1969இல் இ.எம்.எஸ். நம்பூதிரிபாட் கேரள முதலமைச்சராக இருந்தபோது, நீதித் துறை முதலாளித்துவச் சமூகத்திற்குச் சாதகமாகவும் ஏழை மற்றும் பலவீனமான மக்களுக்கு எதிராகவும் உள்ளது என்றும் மார்க்ஸும் எங்கல்ஸும் நீதித் துறை ஒரு அடக்குமுறை ஆயுதமாகவே உள்ளதாகக் கூறியுள்ளதாகவும் கருத்து வெளியிட்டிருந்தார். நீதிபதிகள் தேர்தல் முறையில்தான் நியமிக்கப்பட வேண்டுமென்றும் அரசு அமைப்பில் அடிப்படை மாற்றங்களைக் கொண்டுவந்தால் மட்டுமே அது சாத்தியமாகும் என்ற பொருளிலும் அவர் பேசியிருந்தார். இதற்காகக் கேரள உயர் நீதிமன்றத்தில் அவர்மீது நீதிமன்ற அவமதிப்பு வழக்குத் தொடரப்பட்டுத் தண்டனை வழங்கப்பட்டது.

உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்ததில் தண்டனை உறுதிப்படுத்தப்பட்டது. நீதிபதி இதயத்துல்லா தனது தீர்ப்பில், "மேல்முறையீட்டாளர் ஒன்று மார்க்ஸ், லெனின், எங்கல்ஸ் ஆகியோரின் போதனைகளை அறியாதவராக இருக்கக்கூடும் அல்லது தெரிந்துகொண்டே வேண்டுமென்றே அவர்களின் எழுத்துக்களைத் தன் சொந்தப் பயன்பாட்டிற்காகத் திரித்திருக்க வேண்டும்" என்றும் குறிப்பிட்டிருந்தார். மார்க்சியத்தில் அது போன்ற கருத்துகள் ஏதுமில்லையென்று தீர்ப்பளித்தார். கற்றறிந்த தலைமை நீதிபதி மார்க்சியத்தை எந்த அளவுக்குத் தவறாகப் புரிந்து கொண்டிருந்தார் என்பது இத்தீர்ப்பிலிருந்து தெரிவதாகவும் ஈ.எம்.எஸ்.ஸின் கருத்துகள் மார்க்சியத்தின் அடிப்படையில் வெளியிடப்பட்டவையே என்றும் பின்னர் ஒருமுறை உச்ச நீதிமன்ற நீதிபதி ஓ. சின்னப்ப ரெட்டி குறிப்பிட்டார்.

ஈ.எம்.எஸ். முதல் அருந்ததி ராய் வரை பலர் விஷயத்தில் இந்த அதிகாரம் கருத்துரிமையைப் பறிப்பதாகவே அமைந்துள்ளது. இங்கிலாந்தின் புகழ்பெற்ற நீதிபதியான லார்டு டென்னிங் 1962இல் ஒரு வழக்கில் (R.V. Metropolitan Vs Police Commissioner) குறிப்பிட்டதுபோல், நீதிமன்றத்திற்கான மதிப்பு



படிப்பகம்

www.padippakam.com



நீதிமன்ற அவமதிப்பு அதிகாரத்திலிருந்து வருவதோ பெறப்பட்டதோ அல்ல. அதை அடைவதற்காக இந்த அதிகாரம் ஒருபோதும் பயன்படுத்தப்படக் கூடாது. அது இந்த அதிகாரத்தைவிட வலுவான அடித்தளங் களில் உள்ளது.

இதற்கு மாறாக, நமது நாட்டில் எடுக்கப்பட்ட பல நீதிமன்ற அவமதிப்பு நடவடிக்கைகள் நிதானத்தை யும் பொறுமையையும் இழந்து எடுக்கப்பட்டவை போல் தெரிகின்றன. உதாரணமாக, சில ஆண்டுகளுக்கு முன் வட இந்தியாவின் உயர் நீதிமன்ற நீதிபதி ஒருவர் தனக்கு ரயிலில் தக்க இடம் ஒதுக்கப்படாத காரணத்துக்காக, அந்த பிளாட்ஃபாரத்திலேயே இருக்கை கொண்டுவரச் செய்து அதில் அமர்ந்தபடி, பயணச் சீட்டுப் பரிசோதகர் மீது நீதிமன்ற அவமதிப்பு நடவடிக்கை எடுத்தார். பரிசோதகர் மன்னிப்புக் கேட்டபடி இடம் ஒதுக்கித் தந்தார்.

இது போன்ற சம்பவங்கள் மிக அரிதாகவே நடை பெற்றிருந்தாலும் இவை இந்த அதிகாரத்தின் முகத் திரையைச் சற்றே விலக்கிக் காட்டியிருக்கின்றன.

நீதிமன்றங்களின் செயல்பாடு மக்களாட்சியில் எல்லோரும் அறியும் வண்ணம் அமைய வேண்டுமெனில், நீதிமன்ற அவமதிப்புச் சட்டத்தையே எடுத்துவிட்டு நீதிமன்ற ஆணையை, உத்தரவை மீறுதல் என்பதை (உரிமையியல் அவமதிப்பு) இந்தியக் குற்றவியல் சட்டத் தில் குற்றமாகக் கருதத் தனி ஒரு பிரிவு சேர்க்கப்பட வேண்டும். இதன் மூலம் நீதிமன்ற ஆணைகளை, தீர்ப்புகளை அலட்சியப்படுத்தி அவமதிக்கும் போக்குக்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்க முடியும். இது தொடர்பாக ஏற்கனவே அத்தியாயம் 10இல் பிரிவுகள் 172 முதல் 190 வரையிலானவை 'பொது ஊழியர்களின் சட்டபூர்வ மான அதிகாரத்தை அவமதித்தல்' என்ற தலைப்பில் பட்டியலிடப்பட்டுள்ளன. அவற்றில் இது போன்ற ஒரு பிரிவைச் சேர்த்தால் நீதிமன்ற அவமதிப்புக் குற்றம் தீவிரத்தன்மையுடன் கருதப்படும்.

நீதிமன்ற அவமதிப்புச் சட்டம் தற்போதைய நிலை யிலேயே மக்களாட்சி நெறிமுறைகளுடன் சீர்படுத்தப் பட வேண்டுமென்றால், சில திருத்தங்கள் இச்சட்டத்தில் செய்யப்பட வேண்டியது அவசியம். பிரிவு 6இல் கூறப்பட்டுள்ள கருத்துகள் உச்ச நீதிமன்றம், உயர் நீதிமன்றம் ஆகியவற்றின் தீர்ப்புரைகளை நன்னம் பிக்கையின் அடிப்படையில் விமர்சிப்பது நீதிமன்ற அவமதிப்பாகக் கருதப்படக் கூடாது (தற்போது இந்நிலை தீர்ப்பின் அடிப்படையிலேயே உள்ளது; சட்டத்தில் குறிப்பாகத் திருத்தம் செய்தால்தான் உரிமையாகக் கோர முடியும்). அதே நீதிபதிகளின் சட்ட அறிவு பற்றியும் நன்னம்பிக்கையின் அடிப்படையில் விமர் சிக்கவும் உரிமை வழங்கும் சட்டத் திருத்தம் தேவை.

நீதிபதிகளின் நீதிமன்றச் செயல்பாடு மட்டுமல்லாது அச்செயல்பாட்டைப் பாதிக்கும் மற்ற செயல்பாடுகள் பற்றிக் குறிப்பிடுவது நீதிமன்ற அவமதிப்பாகக் கருதப்படுகிறது. இதையும் மாற்ற வேண்டும்.

கட்டுரையாளர் உயர் நீதிமன்ற வழக்கறிஞர். சிதம்பரம் தேர்தல், மேலவளவு படுகொலை முதலிய வழக்குகளில் பங்கேற்றுவருகிறார். People for Independance of Judiciary என்ற அமைப்பிலும் செயல்படுகிறார்.

# சீர்திருத்தத்திற்கு முட்டுக்கட்டை

ஜி.ஆர். ஸ்வாமிநாதன்

**நீதிமன்றங்கள் பொதுமக்களுக்கானவை. அதன் தீர்ப்புகள்** பொது ஆவணங்கள். ஆகவே அவை விமர்சனத்திற்கு உரியவை. ஆனால் அவ்வாறு விமர்சிக்கும்போது விமர்சனம் கண்ணியமான மொழியில் இருக்க வேண்டும். நீதிபதியின் நோக்கத்திற்குக் களங்கம் கற்பிக்கக் கூடாது. நீதிமன்ற அமைப்பை அவதூறுக்கு உள்ளாக்கக் கூடாது. பேச்சுரிமை, எழுத்துரிமை எல்லாம் அரசியல் சட்டத்தில் அடிப்படை உரிமைகளாகப் பொறிக்கப் பட்டிருந்தாலும் அவ்வுரிமைகள் நீதிமன்றத்தின் மீது அவமதிப்புச் செய்யாமல் பிரயோகிக்கப்பட வேண்டும். இதுதான் சட்டம். ஒருவர் நீதிமன்ற அவமதிப்புக் குற்றச்சாட்டிற்கு உள்ளாகும்பொழுது நான் சொன்னதெல்லாம் உண்மை என்றுகூட அவரால் எதிர்வாதம் புரிய முடியாது. (அவமதிப்பு வழக்கில் குற்றம்சாட்டப்பட்டவர் உண்மை என்பதை ஒரு தற்காப்பு வாதமாக முன்வைக்க முடியுமா (defence) என்பது சமீபகாலத்தில் உச்ச நீதிமன்றத்தின் பரிசீலனைக்கு உட்பட்டுவருகிறது.)

சரி, இதன் அடிப்படைதான் என்ன? சட்டத்தின் மாட்சிமையைக் காப்பாற்றுவது நீதிமன்றங்கள்தான் என்பது ஒரு ஐதீகமாக இருந்துவருகிறது. நீதிமன்றங் களின் அதிகாரத்தின் அடிப்படை, மக்கள் அதன் மீது வைத்திருக்கும் நம்பிக்கைதான். அந்த நம்பிக்கை குறைந்தால் ஜனநாயகமே நிலைகுலைந்துவிடும். ஆகவே நீதிமன்றத்தின் மீது களங்கம் ஏற்படும் வகையில் எந்த ஒரு செயல்பாடும் அமைந்தால் நீதிமன்றங்களால் அவை மிகக் கடுமையாக எதிர்கொள்ளப்படுகின்றன.


இத்தகைய அதிகாரங்களை நீக்க வேண்டும் என்று யாரும் கூறவில்லை. அதாவது, 1971இல் இயற்றப்பட்ட நீதிமன்ற அவமதிப்புச் சட்டங்கள் நீக்கப்பட வேண்டு மென யாரும் கோரவில்லை. நீதிமன்றங்களில் நடக்கும்



படிப்பகம்

www.padippakam.com





தவறுகளை வெளிச்சத்திற்குக் கொண்டுவரும்பொழுது, அவற்றின் தீர்ப்புகள் விமர்சனத்திற்குள்ளாகும்பொழுது இந்த அவமதிப்பு என்னும் ஆயுதத்தைச் சில நீதிபதிகள் கையில் எடுப்பதுதான் பிரச்சினை.

நான் சட்டக் கல்லூரியில் படித்துக்கொண்டிருந்த பொழுது நேர்மைக்குப் பெயர்போன காவல்துறை அதிகாரி சி.எல். ராமகிருஷ்ணன் ஊழல் ஒழிப்புத் துறையின் இயக்குநராக இருந்தார். 'ஊழல் என்ற சவாலைச் சந்திப்பது எப்படி?' என்ற தலைப்பில் அவரைப் பேச அழைத்திருந்தேன். உரை முடிந்த பின்னர் கேள்வி - பதில் நிகழ்ச்சி. நான் "நீதித் துறையில் ஊழல் சதவீதம் எவ்வளவு?" என்று கேட்டேன். அதற்கு அவர் படபடப்போடு சிரித்துக்கொண்டே, "நான் நீதிமன்ற அவமதிப்புக் குற்றச்சாட்டிற்கு உள்ளாகி விடுவேன்" என்று பதில் அளித்தார்.

இந்தக் கணக்கு சம்பந்தமான கேள்விக்குப் பின்னாளில் தலைமை நீதிபதி பருச்சா இருபது சதவீதம் என்று பதில் கூறினார். பருச்சா அவர்கள் நீதிபதி, அதுவும் தலைமை நீதியரசர். ஆகவே அவர் என்ன வேண்டுமானாலும் பேசலாம். அவருக்கு ஒன்றும் ஆகாது. ஆனால் தனிநபர்கள் அவ்வாறு கருத்துத் தெரிவித்தால் 'அவமதிப்பு' என்ற ஆயுதத்திற்குப் பலியாக வேண்டிவரும். இதுதான் பிரச்சினை.

நீதித் துறை யோக்கியமாக இல்லை என்பது அனைவருக்கும் தெரிந்த விஷயம். திறமையும் நேர்மையும் கொண்ட பலர் உள்ளனர் என்பதை மறுக்க முடியாது. ஊழல் பேர்வழிகள், தெரிந்தே தவறு செய்பவர்கள் போன்றோரும் நீதித் துறையில் மலிந்துள்ளனர் என்பதும் கண்கூடு. சமீபகாலத்தில் நடந்த தலைமை நீதிபதி சுபாஷ் ரெட்டியின் இடமாற்றம் மற்றும் நீதியரசர் கண்ணதாசனுக்குப் பதவி நிரந்தரம் செய்யப்படாதது ஆகியவை மேற்கூறிய வகையில் வரும். சில வருடங்களுக்கு முன்பு ஊழலுக்குப் பேர் போன உயர் நீதிமன்ற நீதிபதி தான் ஓய்வு பெறும் கடைசி சில நாட்களில் மிக ஜரூராக வழக்குகளை முடித்துக்கொண்டிருந்தார். கிளியரன்ஸ் சேல் (clearance sale) நடந்துகொண்டிருக்கிறது எனப் பலர் 'கமென்ட்' அடித்தனர். இருப்பினும் அவர் பதவியில் இருந்தபோது அவர் மீது தைரியமாக யாரும் குற்றம்சாட்ட முன்வர வில்லை. ஏனென்றால் எடுத்த எடுப்பிலேயே யாரிடமும் ஆதாரங்கள் இருக்காது. விசாரணைக்குப் பின்னர்தான் கிடைக்கும். ஆனால் குற்றச்சாட்டு சுமத்தினாலே சுமத்தியவருக்குத்தான் தண்டனை என்றால் எவர்தான் முன்வருவார்?

ஒரு வழக்கறிஞர் நீதிமன்ற அவமதிப்புக் குற்றத்திற்குத் தண்டிக்கப்பட்டால் அவர் தொழில் செய்யும் உரிமையையும் இழக்க நேரிடும். நீதிமன்றங்களில் நடக்கும் முறைகேடுகள் தொழில் புரியும் வழக்கறிஞருக்குத்தான் முதலில் தெரியும். ஆனால் 'அவமதிப்பு' ஆயுதத்தை எதிர்கொள்ளத் தயக்கம் இருப்பதால் பொதுவாக எந்த வழக்கறிஞராலும் நீதிபதிமீது குற்றம்சாட்ட முடிவதில்லை. நீதிபதிகள் சிலர் சில வக்கீல்களோடு கும்மாளம் போடுகிறார்கள் என்பதும் உல்லாசப் பயணம் செல்கிறார்கள் என்பதும் எல்லோருக்கும் தெரிந்த விஷயம். இருப்பினும் பொதுவாக வழக்கறிஞர்களின் மௌனத்திற்குக் காரணம் கோர்ட் அவமதிப்பு என்ற ஆயுதம் நல்ல, கெட்ட என்று எல்லா நீதிபதிகளின் கையிலும் இருப்பதே.

உயர் நீதிமன்ற மற்றும் உச்ச நீதிமன்ற நீதிபதியை அகற்ற அரசியல் சட்டத்தில் சொல்லப் பட்டுள்ள வழிமுறை நடைமுறையில் சாத்தியம் இல்லாதது. நீதிபதி ராமசாமிமீது கொண்டுவரப்பட்ட இம்பீச்மென்ட் தீர்மானம் நிறைவேறாமல் போனதற்குக் காரணம் இதுவே. இது தெரிந்துதான் நீதிபதிகள் சிலர் மேலும் மேலும் துணிந்தே தவறு செய்துகொண்டிருக்கிறார்கள். சமுதாயத்தில் தார்மீக நெறிகள் சரிந்துகொண்டிருக்கும் காலம் இது. நீதிமன்ற அமைப்பைப் பொறுத்தவரையில் சரியும் தூண்களைத் தூக்கி நிறுத்த நாம் முயல வேண்டுமானால் நீதிமன்றங்களை, நீதிபதிகளை, அவர்களின் தீர்ப்புகளை, அணுகுமுறைகளை நிர்த்தாட்சண்யமாக விமர்சிக்க வேண்டிவரும். ஆனால் அவ்வாறு நாம் முயலுவதற்குத் தடைக்கல்லாக நிற்பது 'நீதிமன்ற அவமதிப்பு' என்ற அதிகாரமே.

லார்டு அட்கின், "Justice is not a cloistered virtue; it must suffer public scrutiny" நீதி என்பது பொத்திவைக்கப்பட வேண்டிய மதிப்பீடு அல்ல. அது பொது மக்களின் கண்காணிப்பு என்னும் சோதனைக்கு உள்ளாக வேண்டும் என்று கூறியதையும் லார்டு டென்னிங், "நீதிமன்ற அவமதிப்பிற்காகத் தண்டிக்கும் அதிகாரம் எங்களுக்கு உண்டு என்றாலும் அதனை நாங்கள் எங்கள் சுய கௌரவத்தைக் காப்பாற்றுவதற்காக என்றுமே பயன்படுத்த மாட்டோம்" என்று கூறியதையும் நமது நீதிபதிகள் கருத்தில் கொள்வார்களா?

கட்டுரையாளர் மதுரை உயர் நீதிமன்ற வழக்கறிஞர். முன்னாள் சி.பி.எம். எம்.எல்.ஏ. கிருஷ்ணன் சார்பில் கோக் நிறுவனத்திற்கெதிரான வழக்கை நடத்திவருகிறார்.



படிப்பகம்

www.padippakam.com



## இப்போது கிடைக்கிறது...

### தெற்காசிய மொழிகளில் முதல் முறையாக

# தமிழில் உலகப் புகழ்பெற்ற அறிமுக நூல்கள்

அறிமுக நூல்கள், புதிய துறைகளை அறிந்திட ஆர்வத்தைத் தூண்டும் இலகுவான வழி; முக்கியமான விஷயங்களைக் கற்க விரும்பும் எல்லோருக்கும் தேவைப்படும் அடிப்படையான நூல்கள்; துறை வல்லுநர்களால் எழுதப்பட்டு, உலகம் முழுவதும் இருபத்தைந்துக்கும் மேற்பட்ட மொழிகளில் வெளியிடப்பட்டுள்ளன.

இப்போது தமிழில் கிடைக்கும் சுருக்கமான அறிமுகங்கள்:

**இலக்கியக் கோட்பாடு**
ஜானதன் கல்லர்
*தமிழில்: ஆர். சிவகுமார்*

**பௌத்தம்** தாமியென் கோவ்ன்
*தமிழில்: சி. மணி*

**இந்துமதம்** கிம் நாட்
*தமிழில்: டி.கே. ரகுநாதன்*

**உலகமயமாக்கல்**
மான்ஃப்ரட் பி.ஸ்டெகர்
*தமிழில்: க. பூரணச்சந்திரன்*

**புத்தர்** மைக்கேல் கேரிதர்ஸ்
*தமிழில்: சி. மணி*

**வரலாறு** ஜான் எச். அர்னால்டு
*தமிழில்: பிரேம்*

**தத்துவம்** எட்வர்டு கிரெய்க்
*தமிழில்: சே. கோச்சடை*

**ஃப்ராய்ட்** அந்தோனி ஸ்டோர்
*தமிழில்: சி. மணி*

**சமூக-பண்பாட்டு மானிடவியல்**
ஜான் மோனகன், பீட்டர் ஜஸ்ட்
*தமிழில்: பக்தவத்சல பாரதி*

**பாசிசம்** கெவின் பாஸ்மோர்
*தமிழில்: அ. மங்கை*

**அரசியல்** கென்னத் மினோக்
*தமிழில்: ஆனந்தராஜ்*

**கலைக் கோட்பாடு**
சிந்தியா ஃப்ரீலேண்ட்
*தமிழில்: செ. பாபு ராஜேந்திரன்*

**இறையியல்***
டேவிட் எஃப். ஃபர்ட்
*தமிழில்: சூசைமாணிக்கம்*

**உளவியல்***
கில்லியன் பட்லர்,
ஃபிரிதா மெக்மெனஸ்
*தமிழில்: டி.ஐ. ரவீந்திரன்*

**பின் நவீனத்துவம்***
கிறிஸ்தோஃபர் பட்லர்
*தமிழில்: பிரேம்*

**ஜனநாயகம்*** பேனட் க்ரிக்
*தமிழில்: த. ஜெயராமன்*

**பின் அமைப்பியல்***
கேதரின் பெல்ஸி
*தமிழில்: அழகரசன்*

**பின் காலனியம்*** யூங்
*தமிழில்: அ. மங்கை*

**தொல்லியல்*** பவுல் பாஹ்ன்
*தமிழில்: சு. ராஜவேலு*

**பயங்கரவாதம்***
சார்லஸ் டவுன்சென்ட்
*தமிழில்: ஞாநி*

* ஜூலை 2006 வெளியீடுகள்

**தொண்ணூறு ரூபாயில் உலகப் புகழ்பெற்ற அறிமுக நூல்கள்...**
**கையடக்கமாய்... சிறு பையடக்கமாய்... கருத்தை ஈர்க்கும் தமிழ் நடையில்...**

வெளியீடு

**அடையாளம்**

1205/1 கருப்பூர் சாலை, புத்தாநத்தம் 621310 ☎ 04332 273444 email:admin@adaiyalam.com

விற்பனை [illegible]: சென்னை: [illegible] 044 24952317, [illegible] 28520646, [illegible] 28158171, [illegible] கோவை: [illegible] 0422 2384614 சேலம்: [illegible] 0427 240291 திருச்சி: [illegible] தஞ்சை: [illegible] திருநெல்வேலி: [illegible] 0462 2578699, நாகர்கோவில்: [illegible] இலங்கை: [illegible]



படிப்பகம்

www.padippakam.com



# ஷேக்ஸ்பியர் வரலாறு எழுதினால்...

சு. கி. ஜெயகரன்

**ஆங்கிலக் கவிஞர் வில்லியம் ஷேக்ஸ்பியர் அழகான** கவிதை மொழியில், வடிவான நாடகங்களை அமைத்தவர். மனத்தளர்வுடன், வாழ்வதா வேண்டாமா என்று குழம்பும் டேனிஷ் இளவரசனின் தனிமொழியில் யாக்கை நிலையாமை பற்றிய சிந்தனைகள் படிப்பவரது மனத்தைக் கனக்க வைக்கும். ஒதெல்லோவின் புலம்பலில் ஆவேசத்தையும் ரோமியோ — ஜூலியட் உரையாடல்களில் காதல் ரசத்தையும் இழையவிட்ட ஷேக்ஸ்பியர், மக்களின் கவனத்தை ஈர்க்க எவ்வாறு பேச வேண்டும் என்பதற்கான எடுத்துக்காட்டை சீஸரின் கொலைக்குப் பின் ஆன்டனியின் பேச்சில் காட்டியுள்ளார்.

மேட்டுக்குடியினர் மற்றும் நடுத்தர வர்க்கத்தின் கேளிக்கை ஊடகமான நாடகத்தின் மொழி பற்றியும் பார்ப்பவர்களின் ரசனையின் நாடித் துடிப்பையும் அறிந்திருந்த அக்கவிஞரின் பலம் கவித்துவம், கதை சொன்ன விதம். அவரது நாடகங்கள் பல வரலாற்று நிகழ்வுகளைச் சித்தரிப்பவை. கதாபாத்திரங்கள் பலவோ சரித்திர நாயகர்களைத் தழுவியவை. வரலாற்று நூற்களைப் புரட்டிப் பார்க்காதவர்களுக்கு, அவர் கதை பின்னிய விதத்தால் நாடகங்களில் புனைந்தவையே வரலாறுபோலத் தோன்றும்; அவை உண்மையான நிகழ்வுகள் என்பது போன்ற பாதிப்பை அன்று ஏற்படுத்தின; இன்றும் ஏற்படுத்துகின்றன. வரலாறு தழுவிய நாடகங்களை ஷேக்ஸ்பியர் எழுதியிருந்தாலும் வரலாற்று ஞானம் அவரது பலமல்ல. நல்ல வேளை அவர் வரலாறு எழுதவில்லை. எழுதியிருந்தால் என்ன ஆகியிருக்கும்?

என்ன ஆகியிருக்கும் என்பதற்குச் சில எடுத்துக்காட்டுகள்: ஆறு ஆங்கிலேய அரசர்கள் பற்றி வளமான கற்பனையுடன் நேரில் பார்த்ததுபோல எழுதிய ஷேக்ஸ்பியர், அவர்களில் கடைசியான எட்டாம் ஹென்றி இறந்து பதினேழு ஆண்டுகட்குப் பின்னரே பிறந்தவர். அதனால் அவரது ஆட்சி பற்றி நேரடியாகத் தெரிந்துகொள்ள வாய்ப்பிருந்திருக்கவில்லை. அந்த அரச பரம்பரையினர் பற்றிய கதைகளுக்கான கருக்கள், ரஃபெயேல் ஹலின்ஷெட் (Raphael Holinshed) என்பவர் சற்றே மிகைப்படுத்தி எழுதிய *கிரானிக்கிள்ஸ் ஆஃப் இங்லண்ட், ஸ்காட்லண்ட், அயர்லண்ட்* (Chronicles of England, Scotland, Ireland -1577) என்ற நூலிலிருந்து எடுக்கப்பட்டவை. ஹாம்லெட் கதை 13ஆம் நூற்றாண்டில் லத்தீன் மொழியில் எழுதப்பட்ட கதையைத் தழுவியது. அதை எழுதிய ஸேக்ஸோ (Saxo) எனும் டேனிஷ்காரரின் எழுத்தில் வரலாற்றுக்கும் புனைவுகளுக்குமான இடைவெளி மங்கலானது. ஷேக்ஸ்பியருக்குப் பழிக்குப் பழி வாங்குவது பற்றிய கதைக்கான கரு கிடைத்த மாத்திரத்தில், அதற்குக் கண், காது, மூக்கு வைத்து *ஹாம்லெட்* எனும் அருமையான



ஷேக்ஸ்பியர்

காவியத்தைப் படைத்தார். ஆனால் உண்மையிலேயே ஹாம்லெட் என்ற டேனிஷ் அரச குமாரன் இருந்தானா என்பது கேள்விக்குறி. தம் நாடகங்களுக்கு ஆதரவு கொடுத்த அரசன் முதலாம் ஜேம்ஸை மகிழ்விக்க, அவர் எழுதிய *டிமனாலஜி* எனும் நூலிலிருந்து சில வரிகளையும் சூனியக்காரி கதாபாத்திரங்களையும் தாம் எழுதிய *மேக்பெத்'* நாடகத்தில் ஷேக்ஸ்பியர் சேர்த்தார். கி.மு. 44இல் நடக்கும் கதையான *ஜூலியஸ் சீஸரில்* மணிக்கூடு ஒலிப்பதாக ஒரு குறிப்பு. கடிகாரம் அக்கதை நடந்த காலத்துக்கு ஆயிரம் ஆண்டுகளுக்குப் பிற்பட்டது என்பது வேறு விஷயம்.

ஷேக்ஸ்பியர்போலவே, உண்மையிலேயே நடந்த நிகழ்வுகள் எனப் படிப்பவர் நம்பும் வகையில் எழுதியவர், கதை சொன்னவர் இளங்கோ அடிகள். சிலப்பதிகாரம் பற்றிய வரலாற்று உண்மைகள் என்ன?

"சிலப்பதிகாரத்தை யாத்த இளங்கோ சேர நாட்டு அரச குடும்பத்தைச் சேர்ந்தவர். அவர் தம் அண்ணன் சேரன் செங்குட்டுவன் அரியணையில் அமர வேண்டும் என்று விரும்பி ஜோதிடனின் சொல்லைப் பொய்யாக்குமாறு சமணத் துறவியானார். பின்னர் செங்குட்டுவன் மலைவளம் காணத் தன் மனைவி, தம்பி இளங்கோ, புலவர் சாத்தனார் மற்றும் பரிவாரங்களுடன் சென்றபோது மலைவாழ் மக்கள் ஒரு முலையிழந்த பெண்ணொருத்தி கணவனை இழந்து துயருற்று, உண்ணாமலிருந்து மேலுலகு சென்றது பற்றிக் கூறினர். அப்போது சாத்தனார் அந்த மங்கைக்கு

www.padippakam.com



நேர்ந்த கொடுமை பற்றித் தனக்குத் தெரியும் என்றும் அவளைப் பற்றி ஒரு காப்பியம் இயற்ற வேண்டும் எனவும் இளங்கோவைக் கேட்டுக்கொள்ள அவரும் சிலப்பதிகாரம் எழுதினார். கற்புக்கரசி கண்ணகிக்கு, அரசன் இமயத் திலிருந்து கல்லெடுத்து வந்து சிலை வடிக்க முன்வந்தான்" என்றெல்லாம் என் பள்ளிப் பருவத்தில் என் தமிழாசி ரியர் சொல்லிக் கொடுத்ததை வரலாறு என்றே ஒருகாலத்தில் நம்பினேன். என் ஆசிரியரும் அவற்றை முழுவதுமாக நம்பினார் என்பதையும் அறிவேன். (இவை பற்றிச் சிலப்பதிகாரம் 25 காட்சி காதை, 26 கால்கோள் காதை, 27 நீர்ப்படை காதை ஆகியவற்றாலும் சிலப் 30, 156 – 164 வரிகளிலும் அறியலாம்.)



கண்ணகி சிலை

மேற்கூறியவற்றில் வரலாறு எவ்வளவு, தொன்மங்கள் மற்றும் புனைவுகள் எவ்வளவு?

இளங்கோவடிகள், தொன்றுதொட்டு வழங்கிய கோவலன் – கண்ணகி கதையையே காப்பியமாகப் படைத்தார். அவர் கோவலன், கண்ணகியின் சமகாலத் தவர் அல்லர். சிலப்பதிகாரத்திற்கு வித்தானவை இரு பழங்கதைகள்.

முதலாவது கதை பற்றிப் புறநானூற்றுப் பாடல்கள் 143 – 147 ஆகியவற்றால் அறியலாம். அப்பாடல்களை கபிலர், பரணர், அரிசில் கிழார், பெருங்குன்றூர் கிழார் ஆகியோர் வையாவிக் கோப்பெரும் பேகனை நல்வழிப்படுத்துமாறு பாடினர். மயிலுக்குப் போர்வை கொடுத்த பேகன், தன் மனைவியை விட்டு வேறு ஒரு மாதிடம் மையல் கொள்ள, அவன் மனைவி துயருற்றுக் கிடப்பதை அரசனுக்கு எடுத்துரைத்தனர் அப்புலவோர். பேகனின் மனைவியின் பெயர் கண்ணகி. இக்கதையில் கொண்டவளை விட்டுவிட்டு வேறொரு மங்கையை நாடிய பேகன் ஒரு அரசன், ஒரு கோ. வல்லவனான அரசன் (கோ – வல்லான்) கோவலன் என அழைக்கப்பட்டிருக்கலாம். எனவே கோவலன் – கண்ணகி கதாபாத்திரங்கள் உருவாக ஒரு நல்ல உந்துதல் அது எனக் கருதுகிறார் வரலாற்றாசிரியர் சிவராசப் பிள்ளை.

அடுத்த கதை மதுரை மருதன் இளநாகனார் பாடிய நற்றிணைப் பாடல் (216) வரிகளில் வரும் திருமாவுண்ணி பற்றியது.

*"குருகு ஆர் துழனியின் இதணத்து ஆங்கண்/ ஏதிலாளன் கவலை கவற்ற ஒரு முலை அறுத்த திருமாவுண்ணிக் / கேட்டோர் அனையர் ஆயினும் / வேட்டோர் அல்லது பிறர் இன்னாரே'* என்ற பாடலின் உரையாவது (பாலசுப்பிரமணியம், கு. வ 2004) குருகுகள் ஆரவாரம் செய்யும் வயற்கரையில் அமைந்ததும், கடவுள் நிலை பெற்றதும், நெருப்புப் போன்ற பூவை உடையதுமான வேங்கைமரம். அதன்மீது கட்டிய பரணருகில் அயலான் ஒருவன் செய்த செயலால் தோன்றிய கவலை வருத்திட, மார்பகம் ஒன்றை அறுத்த திருமாவுண்ணி நின்றிருந்தனள். அவளைப் பற்றிக் கேட்டறிந்தவர்கள் கேட்ட அளவில் விட்டுவிடுவர். அவளிடம் உண்மையான அன்புடையோர் மட்டுமே அவள் நிலைக்கு வருந்துவர். அங்கனமே தலைவன் பிரிவால் தலைவி வருந்தினும் நான்படும் துயரம் கொண்டிலள்." சுருக்கமாகச் சொன்னால் திருமாவுண்ணி, தன்னிடம் அன்பு காட்டாத கணவனைப் பிரிந்து வருந்தி, ஒரு முலையைத் திருகி எறிந்துவிட்டு வேங்கை மரத்தின் கீழ் நின்றிருந்தாள். இக்கதைக்கும் முலையைத் திருகி எறிந்து மதுரையை எரித்தபின், நெடுவேள் குன்றத்து வேங்கை மர நிழலில் நின்ற கண்ணகி பற்றிக் கூறும் (சிலப்பதிகாரம் 24, 28, 30) கதைக்கும் உள்ள ஒற்றுமைகளைக் காணலாம். உண்ணி என்ற பெயர் சேர நாட்டுடன் தொடர்புடைய பெயர், ஒற்றை முலைச்சி தேவதை வழிபாடு, கேரளத்தில் மலையன்மாரிடையேயும் பிற குடியினரிடையேயும் காணப்படுவது. "ஒற்றை முலைச்சியே திருமாவுண்ணியாக இருக்கலாம். சங்க காலத்து ஒற்றை முலைச்சியான திருமாவுண்ணியின் கதையே கண்ணகி கதையென்று கருதலாம்" எனக் குறிப்பிடுகிறார் பி. எல். சாமி. மேலும் பெண் தெய்வச் சிலைகளுக்குப் பருத்த மார்புகளைச் செதுக்குவது அவை வளமைக் குறியீடுகள் (Fertility Symbol) என்பதால், "கண்ணகி ஒரு முலையை வட்டித்துப் போட்டதும், மதுரை எரிந்தது என்று கூறியதும் வளமைத் தெய்வக் கருத்தை வலியுறுத்தும். அந்த வளமையின் சக்தியால் மதுரையை எரியூட்டி அழித்தாள்" என்றும் அவர் குறிப்பிடுகிறார்.

பிற பண்பாடுகளிலும் காணப்படும் தன் முலையை அறுக்கும் தொன்மம், கண்ணகியைப் பொறுத்தமட்டில் அவளது பேராற்றலையும் கற்பின் மேம்பாட்டையும் காட்டும் நோக்கில் கையாளப்பட்டது என்றும் அது அவளைத் தெய்வ நிலைக்கு உயர்த்தும் செயலாகக் காட்டப்பட்டது என்பது ஆய்வாளர் பெ. மாதையனின் கருத்து. மேற்கூறிய கதைகள் – பேகன், கண்ணகி, திருமாவுண்ணி – தொன்று தொட்டு வழங்கியவை. பிற்காலத்தவரான இளங்கோ சிலப்பதிகாரம் கதையைக் காவியமாகக் கூறியபோது தம்மையும் அந்தக் காவியத்தில் ஈடுபடுத்தியுள்ளார்.

தமிழ் இலக்கியங்களின் காலக் கணிப்புகளைச் செய்து மரபுகளை மீறிய வையாபுரியின் புரட்சிகரமான ஆய்வுகளில் அவர் சிலப்பதிகாரம் – இளங்கோவடிகள் காலம் பற்றி எழுதியவை சர்ச்சைக்குள்ளானவை. என்றாலும் அவர் கருத்துப்படி,

1. சேரன் செங்குட்டுவனுக்கு இளங்கோ என்ற தம்பி இருந்ததாக வரலாறு இல்லை.
2. இளங்கோ பாடியதாக ஒரு பாடல்கூடத் தொகை நூல்களில் இல்லை. அதனால் அவர் சங்கப் புலவருள் ஒருவரல்லர்.
3. இளங்கோவின் சமகாலத்தவரான மணிமேகலையின் ஆசிரியர் கூலவாணிகன் சாத்தனார் வேறு, சங்கப் புலவர் சீத்தலைச் சாத்தனார் வேறு.

www.padippakam.com



4. இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனுக்கு உற்ற துணையாய் கோவலன் என்பவன் இருந்தான். அவனுக்கும் எட்டுத் தலைமுறைக்குப் பின் வந்தவன் சிலம்பு கோவலன் என்று மணிமேகலை (28 – 103) கூறுகிறது. எனவே இளங்கோ, செங்குட்டுவனுக்கு எட்டுத் தலைமுறை பிந்தியவர் என்று தெரிகிறது.

5. கோவலன் – கண்ணகி கதை கி.மு. 650இல் நடந்ததாகயிருக்கலாம்.

மருதன் இளநாகனார் கி.மு. 150இல் வாழ்ந்தவர். சேரன் செங்குட்டுவனுக்குப் பின் இரண்டு அல்லது மூன்று தலைமுறைகளுக்குப் பின் வந்தவர். திருமாவுண்ணி கதை கி.மு. நான்காம் நூற்றாண்டு முதல் தமிழகத்தில் வழங்கிய கதை. அவள் சேரன் செங்குட்டுவன் காலத்தில் பத்தினிக் கடவுளாக வழிபட்டிருக்கப்பட வேண்டும் என்று கருதுகிறார் ஆய்வாளர் புருஷோத்தம். அவரது ஆய்வுகளின்படி பேகனின் மனைவி கண்ணகி, சேரன் செங்குட்டுவனின் சமகாலத்தவள். செங்குட்டுவனின் காலம் கி.மு. 225 – 200; இளங்கோ சிலப்பதிகாரத்தை எழுதியது கி.பி. மூன்றாம் நூற்றாண்டில். எனவே இளங்கோ, செங்குட்டுவனின் தம்பியாக இருந்திருக்க முடியாது. செங்குட்டுவனுக்கு இளங்கோ என்ற தம்பி இருந்ததாகக் கூறப்படும் சிலப்பதிகார அடிகள் பிற்சேர்க்கை என்கிறார். திருமாவுண்ணி எனும் பத்தினிக் கடவுளின் பெயருக்குப் பதிலாகக் கண்ணகி என்ற பெயரை அளித்து, பேகன் – கண்ணகி வரலாற்றையும் இணைத்து இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்தை இயற்றினார் என்று சிவராச பிள்ளை கருதுகிறார்.

தமிழ் இலக்கிய வரலாறு எழுதியவர்கள் – மு. வரதராசனார் உட்பட – சிலப்பதிகாரம் பற்றிய தொன்மங்களையும் புனைவுகளையும் வரலாறு போலப் படைத்தனர். இது ஷேக்ஸ்பியர் வரலாறு எழுதியிருந்தால் எப்படியிருக்குமோ அதுபோல்தான். இதே கதைதான் தமிழ் இலக்கியவாதிகள் பழந்தமிழகத்தின் நிலவியல் பற்றியும் மனித குலத்தின் தோற்றம் பற்றியும் எழுதியவை.


உதவிய நூல்கள்:

*Chronology of Early Tamils* - சிவராச பிள்ளை.

*தமிழ் இலக்கிய வரலாறு* - மு. வரதராசன் (சாகித்ய அக்கெதெமி, 1972)

*தமிழ் இலக்கியங்களின் காலம் பற்றி வையாபுரியாரின் கணிப்பு* - அ.கா. பெருமாள்

*சங்க கால மன்னர் காலநிலை வரலாறு* - வி. பி. புருஷோத்தம்

*மற்றும் நற்றிணை, புறநானூறு, சிலப்பதிகாரம். (வரலாற்று நோக்கில் சங்க இலக்கிய பழ மரபுக் கதைகளும் தொன்மங்களும்* - பெ. மாதையன், தமிழ்ப் பல்கலைக்கழகம், பிப். 2001)

*The Truth about History, Readers Digest*


# தமிழ்ச் சேவைக்கு இயல் விருது



2005ஆம் ஆண்டிற்கான இயல் விருது இம்முறை பேராசிரியர் ஜார்ஜ் எல். ஹார்ட்டிற்கு வழங்கப்படுகிறது. கனடிய தமிழ் இலக்கியத் தோட்டமும் டொரான்டோ பல்கலைக் கழகத் தென்னாசிய மையமும் இணைந்து இவ் விருதை ஆண்டுதோறும் வழங்கி வருகின்றன.

ஹார்ட் கலிஃபோர்னியாப் பல்கலைக்கழகத்தில் (பர்க்லி) தமிழ்ப் பேராசிரியராகப் பணியாற்றுகிறார். தமிழ்த் துறை உள்ளிட்ட நான்கு தலைமைப் பீடங்களை அலங்கரிக்கும் இவர் ஆரம்பத்தில் விஸ்கான்சின் பல்கலைக்கழகத்தில் சமஸ்கிருதப் பேராசிரியராகக் கடமையாற்றியவர். இவருக்கு லத்தீன், கிரேக்கம், ரஷ்யன், ஜெர்மன், பிரெஞ்சு, ஆங்கிலம் போன்ற பல மொழிகளிலும் தேர்ச்சி உண்டு. பல இந்திய மொழி இலக்கியங்களிலும் இவருக்கு ஆழ்ந்த அறிமுகம் உள்ளது.

இவர் மொழிபெயர்த்த The Poems of The Tamil Anthologies (1979) நூல் The American Book Award என்னும் விருதிற்குப் பரிந்துரை செய்யப்பட்டது. The Four Hundred Songs of War and Wisdom (1999) எனும் புறநானூறு மொழிபெயர்ப்பு தென்னாசிய மையம் ஏ.கே. ராமானுஜன் பரிசைப் பெற்றது. இது தவிர The Forest Book of the Ramayana of Kampan (1988) – ஆரண்ய காண்டம் மொழிபெயர்ப்பு; The Poems of Ancient Tamil (1975) என்று இன்னும் பல நூல்களை எழுதியிருக்கிறார். தற்பொழுது பதிற்றுப்பத்தை ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கும் பணியில் ஈடுபட்டிருக்கிறார்.

ஹார்ட்டின் தமிழ்ச் சேவை உலகறிந்தது. தமிழைச் செம்மொழியாக்க வேண்டும் என்பதில் தீவிரமாகச் செயல்பட்டவர். 2004இல் தமிழ் செம்மொழியாக அங்கீகரிக்கப்பட்டதற்கு இவரது கடும் முயற்சியும் முக்கியக் காரணம். பெர்க்லி பல்கலைக்கழகத்தில் தமிழ்த் துறை ஆரம்பிக்கப்பட்டதற்கும் இவரே மூல காரணர்.

இதுவரை சுந்தர ராமசாமி, கே. கணேஷ், வெங்கட் சாமிநாதன், பத்மநாப ஐயர் ஆகியோருக்கு வழங்கப்பட்டுள்ள இயல் விருது இந்த ஆண்டு இவருக்கு வழங்கப்படுகிறது. இந்தக் கௌரவத்தில் 'இயல் விருது' கேடயமும் 1500 டாலர் பணமுடிப்பும் அடங்கும். விருது வழங்கும் விழா வழக்கம் போலவே டொரான்டோ பல்கலைக்கழக அரங்கில் வரும் ஆனி மாதம் நடைபெறும் என இயல் விருதின் அமைப்பாளர்கள் தெரிவிக்கிறார்கள்.

தமிழ் செம்மொழியாக அறிவிக்கப்பட்ட சமயத்தில் தமிழின் செம்மொழித் தகுதி குறித்து ஹார்ட் எழுதிய கட்டுரையையும் அவரது கடிதத்தையும் காலச் சுவடில் (இதழ் 55) வெளியிட்டிருந்தோம். சமீபத்தில் அவரது விரிவான நேர்காணலையும் வெளியிட்டிருந்தோம் (இதழ் 70, சந்திப்பு: அ. முத்துலிங்கம்).

விருது பெற்ற ஹார்ட் அவர்களை காலச்சுவடு வாழ்த்துகிறது.



படிப்பகம்

www.padippakam.com






## காப்பியம்

கொற்றவை - ஜெயமோகன் ரூ. 280

காரல் மார்க்சு காப்பியம் - ஆ. பழநி 60

பெரியார் காப்பியம் - மகுடேசுவரன் அில்

## நாவல்கள்

புயலிலே ஒரு தோணி 180

சித்தார்த்தன் 55

அத்தைக் கன்னி - ஜெ.பி.கிருபா 150

நிலாக்கள் தூர தூரமாக-பாரததேவி 160

அஞ்சலை - கண்மணி குணசேகரன் 160

அற்றைத் திங்கள் இந்நிலத்தில் - சுபாஷ் சந்திர போஸ் 190

காதலின் துயரம் - கதே - (எம். கோபாலகிருஷ்ணன்) 65

மரணத் தடம்-தாமஸ் மன்-(உபாலி) 65

ஆழி சூழ் உலகு - ஜோ டி குருஸ் 265

பகடையாட்டம் - யுவன் சந்திரசேகர் 130




மணல்கடிகை - கோபாலகிருஷ்ணன் 265

ஏழாம் உலகம் - ஜெயமோகன் 130

காலச்சுமை - ராஜ்கௌதமன் 160

ரத்த உறவு - யூமா வாசுகி 140

யாரும் யாருடனும் இல்லை - உமா மகேஸ்வரி 130

காதல்தேவதை -மாஸோ 55

## சிறுகதைகள்

ரஸிகன் கதைகள் (ஆய்வுப் பதிப்பு) 220

ச. தமிழ்ச்செல்வன் கதைகள்

வெண்ணிலை - சு. வேணுகோபால்

சனங்களின் சாமி கதைகள் - அ.கா. பெருமாள் 45

தற்கால வட அமெரிக்க கதைகள் - தொகுப்பாசிரியர் அ. முத்துலிங்கம்

நாஞ்சில்நாடன் கதைகள் 275

அ.முத்துலிங்கம் கதைகள் 350

இராசேந்திர சோழன் கதைகள் 250

ஆ. மாதவன் கதைகள் 240

தொலைகடல் - உமா மகேஸ்வரி 50

நெரிக்கட்டு - அழகியபெரியவன் 55

வெள்ளெருக்கு - கண்மணி குணசேகரன் 90

## கவிதைகள்

தேவதேவன் கவிதைகள் ரூ. 390

கொங்குதேர் வாழ்க்கை 1, 2 250, 290

நிழலன்றி ஏதுமற்றவன் - ஜெ.கிருபா 40

பிஷப்புகளின் ராணி - அசதா 40

அருப நஞ்சு - அழகிய பெரியவன் 30

வஜ்ஜாலக்கம் - வைரப்பேழை - ஜயவல்லபன் (மு.கு. ஜகந்நாதராஜா) 60

காமக் கடும்புனல் - மகுடேசுவரன் ரூ. 100

## பிற நூல்கள்

நதியின் பிழையன்று நறும்புனல் இன்மை - நாஞ்சில் நாடன் 150

கற்பமாய்ப் பெற்ற கன்னிகள் - அ. கா.பெருமாள் 75

கானலம் பெருந்துறை 170

அணுசக்தி - ஜெயபாரதன்

கொடுங்கோளூர் கண்ணகி - ஜெயமோகன் 50

அலைகளினூடே - தொகைநூல் 170

லண்டனில் சிலுவைராஜ் - ராஜ் கௌதமன் 90

புதுமைப்பித்தன் எனும் பிரம்மராக்ஷஸ் - ,, 60

புதுமைப்பித்தனும் கயிற்றரவும் - ராஜமார்த்தாண்டன் 70



புதுமைப்பித்தனும் ஜெயகாந்தனும் - எம். வேதசகாயகுமார் 70

அங்கே இப்ப என்ன நேரம்? - அ. முத்துலிங்கம் 180

திருமூலர்: காலத்தின் குரல் -கரு. ஆறுமுகத்தமிழன் 55

நாராயண குரு - சீனிவாசன் 100

சொல் பொருள் மௌனம் - க. மோகனரங்கன் 140


இலக்கிய முன்னோடிகள் - ஜெயமோகன் 280

கடவுளும் 40 ஹெர்ட்ஸும் - அரவிந்தன் நீலகண்டன் 80

பரிணாமத்தின்பாதை 140

கவிமணி கட்டுரைகள் 70

நரிக்குறவர் இனவரையியல் - கரசூர். பத்மபாரதி 160




# தமிழினி

67, பீட்டர்ஸ் சாலை, ராயப்பேட்டை, சென்னை - 14.
e mail: tamizhininool@yahoo.co.in. Ph: 98841 96552

www.padippakam.com



# தேன்மொழி தாஸ்



டி. சௌந்தர்

## சாம்பல் கூடாரம்

வெறுமை நூலாம்படையாய்க் கிடந்த
வீட்டின் தாழ்வாரத்தை
காற்றெனத் திறந்து வந்தாய்
பறவையின் சிறகடிப்பைச் சுற்றியுள்ள
வெளி காணும் அதிர்வை
அகம் ஏந்தியிருந்தது
உன் கண்களுக்கு மேலே
புருவம் மழையரும்பும் கிளையென
படர்ந்திருக்கையில்
ஆண்மையின் நிறம் சாம்பலென உணர்ந்தேன்
சாம்பல் கூடாரம் போல் நின்றிருந்த உன்னை
எனது கண்களின் மொழி தட்டித் திறக்க
குளிராய் இரு ஜோடி உதடுகள்
கூடி உறைந்தன
அக்கணத்தில்
இமைகள் உரசி மூடிய
இருட்டில் துவங்கிற்று நமக்கான காலம்
அதனுள்
முத்தத்தின் ஓடுடைத்துப் பறந்த
பறவைகளின் சிறகு ஒலி
அப்பாதையில் எல்லாம்
அடைகாக்கத் துவங்கியது ரோமங்களின்
தாழ்வரை
முத்தத்தின் கருக்களை
உனது சாம்பல் நிறமும்
எனது இளம் சிவப்பு நிறமும் குழைகையில்
கந்தர்வச் சிலையசைவு
சிறு சாமந்திப் பூக்களடர்ந்த மார்பிலிருந்து
தாகத்தின் தடம் தேடி வழிந்தன
வியர்வைத் துளிகள்
சாம்பல் கூடாரத்தின் எல்லாக் கதவுகளையும்
திறந்து இமைகளில் துடைக்கையில்
தேகங்களின் பாடல் துவங்கியது
விரல்கள் இதழ்களாய்த் தழும்புகையில்
வியர்வைத் துளிகள் விரல்களாய்த் தழுவின
முத்தப் பறவைகள் அந்நேரம் சிறகு ஒடுக்கி
வீட்டின் உள்ளே முளைத்த காடுகளில்
உறைந்தன

அதற்குப் பிறகும்
காட்டின் பாடலை
கரங்களில் ஏந்திபடி உறங்கினாய்.



படிப்பகம்

www.padippakam.com



• தேன்மொழி தாஸ்

## கல்லறையிலிருந்து புறப்படும் வரிகள்



ஜத்தின் தாஸ்

மனதின் பள்ளத்தாக்குகளில் இருந்து
கவிதைகள் ஊர்ந்து
விரல்களை எட்டும்முன் நடுங்கி மறித்து
விறைக்கின்றன

பின் அவை
பாறைகளாய் இறுகிய
துக்கங்களில் நசுங்கியோ

காற்றாய் அலைகிற
நினைவுகளில் தடுக்கியோ
தூக்கமற்ற முகாந்தரங்களின்
கொடிதனில் தொங்கியோ

கொலை செய்யப்பட்ட
கவிஞனின் நிராசைமிக்க
கவிதை வரிகளை
கொண்டுவருகின்றன

அவ்வரிகளில் எல்லாம்
மரணத்திலும்
பாழடைந்த தன்மை
படிந்திருப்பதாகவே உணர்கிறேன்.

●●●



இரவுதோறும்
அக்கட்டிடத்தின் தாழ்வாரத்தில்
கூர்மையாக்கப்பட்ட வாள்
உறைக்குள் உறங்குவதென புறாக்களின் அலகுகள்
இறகுகளுக்குள் பதுங்கியிருக்கும்
பார்த்துக்கொண்டேயிருப்பேன்
காலையில்
எனது தனிமை அவ்வலகுகளில் சோம்பல் முறிப்பதும்
வெளிச்சத்தில் நீந்தும் இறகுகள் மேலே தூங்கத்
துடிப்பதும்
பார்க்க அழகாகத்தான் இருக்கும்.



படிப்பகம்

www.padippakam.com



தேன்மொழி தாஸ்

## யாமி


ஆதிமூலம்

இவள் குழந்தைகளின் கண்களில் சூரியன்
நிலவு ஈர்த்தபின் எஞ்சும் ஒளியினைத் தேக்கி வைக்கிறது

நகங்களின் நுனியில் எனது இரவைக் கடத்தி
தூக்கத்தை அடர்ந்த இருள் நிலங்களில் பயிரிட்டு
கனவுகளைப் பிடுங்கி நடுகிறாள்

அருகம்புல் பூக்களென
நாசியோரங்களில் நீண்டிருக்கும் ரோமங்கள் துடிக்க
கொலை செய்யத் தயாராகுகையில்
எனக்குத் துரோகம் இழைத்தவர்களை நினைவூட்டுகிறாள்

இரகசியங்களை ஒரு வெட்டியானைப் போல் புதைத்து
அதன் வாசனைகளை மறக்கக் கூடாதென மணல்களிடம்
மது அருந்தும் பெண்ணைப் போல் பேசுகிறாள்

அவளை அருகிலணைக்கையில்
ஏதோவொரு தேசத்தின் வரைபடம் விரல்களுக்கிடையே
ஆறுதலாய்க் கடக்கிறது

புணர்வதற்கெனத் தன்னை அழைக்கும் ஆண்மைக்கு எதிரே
உடல் முழுதும் வெறுப்புப் பரவ
மலைப்பாம்பென நிமிர்ந்து சீறுவாள்

என் படுக்கையறையின் ஜன்னல் ஓரங்களிலிருந்து
ஆணிடமிருந்து வெளிப்படும் இயலாமையின் ஒப்பாரி
நெருப்பிலிட்ட இசைத் தட்டென உருகி
இரவின்மேல் வழியும்

முதுகுத் தண்டின் கீழ் சீரான மலைத்தொடர்களென
முலைகளைத் தாங்கிக் கிடக்கும் அவள் கருவறைக்குள்
பாடும் வல்லமை மிக்க புல்வெளிகள் வளருகின்றன

அவைகள் அசைவதறிகையில்
எனது கருவறை தலைகீழாய்ப் புரள்கிறது

அப்போதெல்லாம் இனிப்பின் வாசனையறிந்து ஊர்கிற எறும்பென
என் விரல்கள் அவள் அடிவயிற்றைத் தேடி வருடும்

யாமி
அதீத காலத்தை விடவும் இனிமை மிக்கவள்

பாதி உறக்கத்தில் இவள் இதயத்திலிருந்து வெளிப்படும் சத்தமென
பூமி என்றாவது சுழலக்கூடும்

என்னைத் தேடுவதற்கான அவளின் பாடலை
ஒரு மலை முகட்டின் மேல் விட்டுச் செல்லப் பிரியப்படுகிறேன்

அவள் பாதத்தினடியில் பகல் கொய்யாப் பூவைப் போல் பூக்கிறது.



படிப்பகம்

www.padippakam.com



## தேன்மொழி தாஸ்




### ஒளியறியாக் காட்டுக்குள்

என் மலை வாசஸ்தலம்
எனக்குள் கண்ணீர்த் துளிகளாய் இருக்கிறது
நீர்த்தேக்கத்தின் மேல் மிதக்கும்
தேயிலைத் தொழிற்சாலை
புகைவாசமிழந்த கப்பலாய் நிற்கிறது
தேயிலைத் தொழிலாளர்களின்
உரிமைப் போராட்ட வரிகளை
ஆண்டாண்டு காலமாய்ப் பெய்த மழை அழிக்காத போதும்
அவர்களின் உணர்வுகள்
ஒளியறியாக் காட்டுக்குள் பாதை தேடித் திரிகின்றன
அநேகமாய் ரத்தச் சிவப்பில் பூக்கும் பூக்களெல்லாம்
அட்டைகள் குடித்த பின் வழிந்த ரத்தம் ஈர்த்த வேர்களின்
கிளைகளிலிருந்துதான் பூத்திருக்கக்கூடும்
ரட்சகியின் பாடல் காற்றாய் அலைவதும்
அவ்வழியில்தான்
தேவாலயத்தைச் சுற்றிலும் புதர்களும்
பீடங்களில் அடைக்கலான் குருவிகளும்
வாழ்கையில்
மதில்களில் பதுங்கியிருக்கும் இசை விரும்பும் காதுகள்
மீன்களின் செதில்கள் போல் மடல்களை அசைக்கின்றன
முள்முடி தேடி லீலிப்பூச் செண்டு தேடி
அலைந்த இடங்களில்
புதுநன்மை பெற்றுக்கொண்ட
வெள்ளை தினத்தின் மகிழ்வுகள்
பூமரங்களாகி நிற்கின்றன
மெழுகுதிரி வெளிச்சத்தில்
நட்சத்திரங்கள் எண்ணியபடி நடந்த
பாஸ்கா பண்டிகை
அக்குளிர் காலத்தோடு உறைந்து போயிருக்கக்கூடும்
ரெபேக்கா அத்தையின் கனிந்த உடல்
உலவிய மலைப் பாதை
உடைந்த கிடார் கம்பியாய்க் கிடக்கிறது
ஏ மலைப் பாதையே
எஸ்மியின் நினைவுகளை மறக்காமல் வைத்திருக்கிற
கல்லறையே
வழிநெடுக மண்ணிலிருந்து உடைந்து வெளிப்படும்
கடந்த காலச் சத்தங்களே
தேயிலை விதைகளின் கண்களே
என் மலை வாசஸ்தலம்
எனக்குள் கண்ணீர்த் துளிகளாய் இருக்கிறது.




படிப்பகம்

www.padippakam.com



## தேன்மொழி தாஸ்



ஜத்தின் தாஸ்

### தூக்கமற்ற காற்று

பனித் துளிகள் பின்னியலையும்
மெல்லிய வலைகளுக்குள்ளே
காற்றைச் சந்தித்திருக்கிறேன்

குளிரெடுத்துக் கைகளை
இறுகக் கட்டிக்கொள்ளும்
இடைவெளிகளில் அதன்
வெயிலாகும் தன்மையை உணர்ந்திருக்கிறேன்

சோலைக்குள் சூரியன் நடந்து வரும்முன்
தேயிலைக் காடுகளுக்கும்
தொழிற்சாலைகளுக்குமாய்

மனிதர்கள் நடந்து போன சுவடுகளில்
வெறுமையின் பாடலோடு ஒரு
வாசற்கூட்டியைப் போல் அது வரும்

பிரபஞ்சத்தின் எல்லா ஒலிகளும்
அதன் அங்கங்களின்
சிறகுதான் எனச் சொல்லி
குரல்களால் ஆன உடலைக் காட்டும்

அதன் மூச்சில்
உலகின் உயிர் ஒட்டியிருக்கும் துயரத்தையும்
பயணத்தின் எல்லை குறித்த பயத்தையும்
பாடிக்கொண்டே திரியும்

மழையின் பின் வெயில் காயும்
மலைப் பாதையினூடே
யாருமற்ற சமயங்களில்
வந்து சேரும்

தூக்கமற்ற
ஏதோ குற்ற உணர்வைச் சுமந்து திரிகிற
தணியாத தனிமையில் அவதியுறுகிற
ஒரு பைத்தியக்காரனின் மொழியில்

பெருஞ் சோகத்தை
வெளியெங்கும் வீசியபடி
புலம்பிக்கொண்டு வரும்

இக்காற்றின் வரிகளைத்தான்
என் அறையெங்கும்
எழுதிவைத்திருக்கிறேன்.



படிப்பகம்

www.padippakam.com



## தேன்மொழி தாஸ்


டி. சௌந்தர்

### சத்தியமாய் எனக்கு வெளிப்படுத்தத் தெரியவில்லை

நாம் பயணித்த சாலை
காலம் உடுத்தியிருந்த தூய்மையான
கருங்கல் ஆடை
திடமான கைகளாய் வயல்களும்
தரிசு நிலங்களும் அதற்கு நீண்டு கிடந்தன
அவ்வழி கடந்த அநேக பேருந்துகளுக்கு
கழுகின் கண்ணெனச் சக்கரம் சுழல்கையில்
கருவேலங்காட்டுப் பூக்கள்
நட்சத்திரங்களாய்
நிழல்கள் மீது ஒளிர்ந்தன
அப்பூக்களின் மென்மை மண்ணின் மீதமரும்போது
காற்று பூவாய்ப் பிறக்க
அழுதிருக்கக்கூடும்
உனது படர்ந்த மார்பில் ஒரு பட்டாம் பூச்சி
காற்றோடு வந்தமர்ந்ததையோ
காதுமடலோரம் முத்தமிட்டபோது
உதிர்ந்த உணர்வையோ
இவ்வரிகளில் நான் எப்படிச் சொல்ல முடியும்
நாம் கடக்கும்போது நமைக் கடந்ததுபோல் நின்றிருந்த
மரங்களுக்கு
இவைதனைச் சொல்லத் தெரிந்திருக்கலாம்
சத்தியமாய் எனக்கு வெளிப்படுத்தத் தெரியவில்லை
ஏனெனில்
முந்தைய நாள்
உனது உள்ளங்கையிற்குள் சிக்குண்ட எனது பாதத்தில் பெய்த மழை தொடங்கி
இன்று வரை என்
இரவைத் தின்னத் துவங்கியிருக்கிறது தனிமை
நினைவு என் மேல் இலையுதிர் காலத்தை விரிக்கிறது
காற்று வீசுவதற்கு மட்டுமெனச் சொல்ல முடியவில்லை தெரியுமா
இலைகளுடனோ தனிமையுடனோ உதிர்கிறது
அத்திடமான கைகள் விரித்த சாலை வழி நீயும்
கண்டிருக்கலாம் காற்று உதிர்வதை
ஏனெனில்
உனது தனிமையும் அவ்வழிகளில் தானே
பிறந்த பிசுபிசுப்போடு நடுங்கி அலைகிறது.



படிப்பகம்

www.padippakam.com



# கருத்துச் சுதந்திரத்தின் எல்லைகள்

களந்தை

பீர்முகம்மது



டென்மார்க் நாட்டின் பிரபல நாளிதழான 'ஜிலாண்ட்ஸ் போஸ்ட்டன்' அண்மையில் நபிகள் நாயகம் பற்றிய கேலிச் சித்திரங்களை வெளியிட்டுள்ளது. இது முஸ்லிம்களின் மத்தியில் அமைதியின்மையை உருவாக்கியுள்ளது. கார்ட்டூன்கள் வெளியிடப்பட்டு அநேக நாட்கள் கடந்த பின்னரே உலகெங்குமுள்ள முஸ்லிம்கள் வீதிகளில் இறங்கி ஆர்ப்பாட்டம் செய்கிறார்கள். கார்ட்டூன்கள் செப்டம்பர் 30, 2005இல் பிரசுரமாயின. இந்த இடைப்பட்ட நாள்களில் கார்ட்டூன்களை வெளியிட்ட இதழுக்கும் டென்மார்க் நாட்டுக்கும் முஸ்லிம் நாடுகள் மற்றும் அமைப்புகள் சார்பில் மன்னிப்புக் கேட்கும்படி வேண்டுகோள்கள் விடுக்கப்பட்டன. ஆனால் அந்த வேண்டுகோள்கள் கவனத்தில் கொள்ளப்படவில்லை. எனவே, இன்றைய ஆவேசமிக்க போராட்டங்கள் படிப்படியாக மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் தோல்வியடைந்ததால் ஏற்பட்ட விளைவுகளாகவே கருதப்படுகின்றன. இந்தக் கார்ட்டூன்கள் வெளியிடப்பட்டது தன்னிச்சையான செயல்பாடு அல்ல என்பதை இதன் மூலம் உணர்ந்து கொள்ளலாம்.

இஸ்லாமிய வரலாற்றின் 1427 ஆண்டுகளில் நபிகள் நாயகத்தின் உருவப் படம் பாதுகாக்கப்படவில்லை; அவருடைய மறைவுக்குப் பின் அப்படி ஒரு தேவையும் எழவில்லை. இதுதான் இஸ்லாமியக் கோட்பாட்டின் மையம். இந்த மையத்திலிருந்து உருவான புரிதலே சிலை வணக்கத்தைப் புறக்கணிக்கிறது. தொழுகையாளிகளின் இறைபக்தியை மனவெளியில் உருவமற்ற நிலையோடுதான் இஸ்லாமிய ஆன்மீகம் உருவாக்குகிறது.

நபிகள் நாயகத்திற்கு உருவம் கொடுப்பதை இதன் வாயிலாகவே முஸ்லிம்கள் நிராகரிக்கிறார்கள். அதிலும்கூட இப்போது டென்மார்க் நாளிதழ் வெளியிட்ட கார்ட்டூன்கள் நிகழ்கால அரசியல் உலகத்துடன் சம்பந்தப்பட்டுள்ளன. நபிகள் நாயகத்தின் வரலாற்றில் அமைதியும் கருணையும் நிரம்பியுள்ள பகுதிகள் அலட்சியப்படுத்தப்பட்டுள்ளன. இன்றைய இஸ்லாமிய பயங்கரவாதம் என்பது மேலைநாடுகளின் திட்டமிட்ட பிரச்சாரம். இஸ்லாமிய உலகத்தை அந்தப் பாதைக்கு இழுத்துச் செல்லவே மேலைநாடுகளும் அதன் கலாச்சாரமும் விரும்புகின்றன. அவர்களின் விருப்பத்தை நிறைவாக்கும் கருத்தியல் ரீதியான முயற்சிகளின் ஒரு பகுதிதான் இந்தக் கார்ட்டூன்கள். அரசியல்–பொருளாதார ரீதியாக முஸ்லிம் நாடுகளை வீழ்ச்சியடையச் செய்யும் சதித் திட்டங்கள் நிகழ்ந்தபடியே உள்ளன. டென்மார்க் நாளிதழின் ஆசிரியர் நபிகள் நாயகத்தின் கார்ட்டூனை வரையும் நோக்கில் நாற்பது பேரைத் தொடர்புகொண்டுள்ளார். அவர்களில் பன்னிரண்டு பேர் மட்டுமே கார்ட்டூன்களை வரைந்துள்ளனர். முஸ்லிம்களின் அதிருப்திக்கும் கோபத்திற்கும் ஆளாக நேரிடும் என்றே இதர கேலிச் சித்திரக்காரர்கள் ஒதுங்கியிருக்கிறார்கள்.

நபிகள் நாயகத்தின் சித்திரம் ஒசாமா–பின்–லேடனை மனத்தில் கொண்டு தீட்டப்பட்டுள்ளது. அவர் அணிந்துள்ள தலைப்பாகையே எறிகுண்டு வடிவத்தில் இருக்க, அதில் அல்லாஹ்வைத் தவிர வணங்குவதற்குத் தகுதியானவன் வேறு யாருமில்லை என்கிற குர்ஆனிய வசனமும் எழுதப்பட்டுள்ளது. இது முதலில் டென்மார்க் முஸ்லிம்களின் கோபத்திற்கு இலக்கானது. பின் முஸ்லிம் நாடுகளின் தூதர்கள் குழு ஒன்று தங்களின் அதிருப்தியைக் கூறி டென்மார்க் அரசுக்குக் கண்டனக் கடிதங்களையும் எழுதியுள்ளனர். இவற்றையெல்லாம் ஓர் அரசு என்ற முறையில் டென்மார்க் நாடு கவனத்தில் கொண்டு உடனடியாகச் செயல்பட்டிருக்க வேண்டும். ராஜீய உறவுகளைப் பராமரிப்பதற்கான எளிமையான இலக்கணம் இதைத் தவிர வேறென்ன இருக்க முடியும்? டென்மார்க் நிர்வாகமும், *ஜிலாண்ட்ஸ் போஸ்ட்டன்* நாளிதழும் இந்தச் செயல்பாடுகளுக்குக் கருத்துச் சுதந்திரமே காரணம் என்று கூறித் தப்பிக்கப் பார்த்தன. எனவே அரசு இதில் தலையிட வழியில்லை என்று டென்மார்க் பிரதமர் ஆண்டர்ஸ் ஃபோக் ரஸ்முஸ்ஸென் கூறினார்.

இதன் பின்னர்தான் முஸ்லிம் நாடுகள் தங்கள் தூதர்களைத் திரும்பப் பெற்றுக்கொள்வது, டென்மார்க் தூதரகத்தை மூடுவது முதலான காரியங்களில் இறங்கின. இந்த நடவடிக்கைகளும்கூட டென்மார்க் அரசையும் நாளிதழையும் அசைக்கவில்லை. கடைசியாக மேற்கொண்ட முயற்சிதான் டென்மார்க்கை அதிர வைத்தது. உடனடியாக அந்த நாட்டின் பொருள்களைப் புறக்கணிக்கும்படி இஸ்லாமிய மார்க்க அறிஞர்கள் கேட்டுக்கொண்டனர். புறக்கணிப்பு வேலைகள்



படிப்பகம்

www.padippakam.com



துவங்கியதுமே டென்மார்க் பல மில்லியன் டாலர்களை இழக்கலாயிற்று. பல டென்மார்க் நிறுவனங்கள் பெரும் இழப்புகளைச் சந்திக்கலாயின. இதன் பின்னரே டென்மார்க் அரசும் நாளிதழும் தங்கள் மன்னிப்பை முன்வைத்தன. மனித இனத்திற்கேயுரிய அந்த நாகரிகமும் புரிந்துணர்வும் மென்மையான வழிமுறைகளின் மூலமே பரிணமிக்க வேண்டும். ஆனால் நெடிய, கடினமான முயற்சிகளின் மூலம் அல்லது நடவடிக்கைகளின் மூலமே ஒரு நாடு தன் கறையைத் துடைத்தெறிய வேண்டியுள்ளது வருத்தத்திற்குரியது.

கார்ட்டூன் விவகாரம் பல போராட்டங்களுக்கு இட்டுச்சென்றது. வன்முறைகளில் சிலர் உயிரிழந்துள்ளனர். முஸ்லிம்களை மீண்டும் மீண்டும் மத ரீதியான போராட்டங்களுக்குள்ளேயே சிக்கவைக்கின்ற தந்திரங்கள் செல்லுபடியாகிவருகின்றன. இஸ்லாமிய நாடுகளுக்குள் எழக்கூடிய அரசியல்–சமூக விழிப்புணர்வுகளை மட்டுப்படுத்தவும் இது போன்ற விவகாரங்கள் உதவுகின்றன. ஒரு வகையில் முஸ்லிம் மன்னர்களுக்கு இவை பெருத்த ஆதாயங்கள்தான்.

கார்ட்டூன்கள் வெளியிட்ட இதழின் 'கருத்துச் சுதந்திர'த்திற்காக வாதிட்ட டென்மார்க் நாட்டின் பிரதமருக்கு அந்த நாட்டின் அரசியல் சட்டத்திலுள்ள 140ஆவது விதியும், 266-B விதியும் எதிர்நிலையில் உள்ளன. அந்த விதிகள் எந்தவொரு இனத்திற்கும் மதத்திற்கும் நம்பிக்கைகளுக்கும் எதிரான நடவடிக்கைகளுக்கு அபராதமும் சிறைத் தண்டனையும் உண்டு என்று கூறுகின்றன.

டென்மார்க் நாட்டின் 'சுதந்திர'த்திற்கு வேறு பரிமாணமும் உள்ளது. இராக்கைத் துவம்சம் செய்யக் கூடிய அமெரிக்க – பிரிட்டிஷ் படைகளின் ஆக்கிரமிப்புகளுக்கு ஒத்துழைக்கும்படி தனது நாட்டுப் படைகளையும் அங்கு நிறுத்திவைத்திருப்பதிலிருந்து அதைப் புரிந்துகொள்ளலாம். ●

மாறுபட்ட தளத்தில் கவிதைக்கான இருமாத இதழ்

**புன்னகை**
கவிதை இதழ்

தொடர்புக்கு:
68, பொள்ளாச்சி சாலை, ஆனைமலை
தொலைபேசி: **04523-283017**

விளம்பரம்

பதிவுகள்:

## பிறந்த நாளில் ஒரு கௌரவம்

**பவுத்த அய்யனார்**




**தமிழ்நாடு காந்தி நினைவு நிதி மற்றும் சர்வோதய இலக்கியப் பண்ணை ஆகிய அமைப்புகள் இணைந்து** பேராசிரியரும் மொழிபெயர்ப்பாளருமான நா. தர்மராஜனின் 71ஆம் பிறந்த நாள் விழாவைக் கொண்டாடின. கூடவே தர்மராஜன் மொழிபெயர்த்த காந்தி பற்றிய கட்டுரைகளின் தொகுப்பான 'மகாத்மா சில பார்வைகள்' என்னும் நூலின் அறிமுகமும் நடந்தது.

நா. தர்மராஜன் இதுவரை 90 நூல்கள்வரை ஆங்கிலத்திலிருந்து தமிழுக்கு மொழிபெயர்த்துள்ளார். இதில் கட்டுரை, சிறுகதைகள், நாவல்கள், நாடகங்கள், சிறுவர் நூல்கள் எனப் பல துறைகள் சார்ந்த நூல்கள் அடக்கம். சமீபத்தில் வெளிவந்த நோபல் பரிசு பெற்ற எழுத்தாளர் கோட்ஸியின் 'மைக்கேல் கே சில குறிப்புகள்' நாவல் முதல் 'மார்க்ஸ் பிறந்தார்' என்ற வாழ்க்கை வரலாறு வரை தர்மராஜனின் மொழிபெயர்ப்பு நூல்கள் தமிழுக்கு வளம் சேர்ப்பவை.

03.12.2005 அன்று மாலையில் நடந்த விழாவிற்குத் தலைமை வகித்தவர் சர்வோதய இலக்கியப் பண்ணையின் தலைவர் மு. மாரியப்பன்.

"தர்மராஜன் பற்றிப் புதிய பார்வை இதழில் சுந்தர ராமசாமி எழுதியது பெருமைப்படத்தக்கது. சாகித்திய அகாதெமி பரிசு தர்மராஜனுக்குக் கிடைக்காவிட்டாலும் அதைவிடப் பெரிய பரிசு சுந்தர ராமசாமியின் பாராட்டுரை" என்று வரவேற்புரை யாற்றிய 'காந்தி நினைவு நிதி' தலைவர் க.மு. நடராஜன் கூறினார்.

"தோழர் ஜீவாவோடு நெருக்கம் கொண்டிருந்த தர்மராஜன் கல்லூரி ஆசிரியராகியிருக்காவிட்டால் தோழர் நல்லகண்ணு போல மிகச் சிறந்த அரசியல் தலைவராக வந்திருப்பார்" என்றார் சி. மகேந்திரன். "மார்க்ஸ், காந்தி, விவேகானந்தர் ஆகிய மூவருக்கும் எனக்கு வேறுபாடு தெரிவதில்லை" என்றும் அவர் குறிப்பிட்டார்.

'மகாத்மா சில பார்வைகள்' நூல் குறித்து அழ. சோமசுந்தரம், க.ரா. கந்தசாமி ஆகியோர் பேசினார்கள்.

ஏற்புரை ஆற்றிய தர்மராஜன், த.நா. குமாரசாமி, சேனாதிபதி, க.நா.சு., புதுமைப்பித்தன் போன்றவர்கள் மொழிபெயர்ப்பின் மூலம் தமிழுக்கு வழங்கியுள்ள சொத்துக்களைப் பற்றிப் பெருமையாகக் குறிப்பிட்டார்.

அயராத உழைப்பு, அசாத்தியமான ஈடுபாடு ஆகியவற்றின் மூலம் தமிழுக்குக் கணிசமான பங்காற்றியுள்ள தர்மராஜனின் பிறந்த நாள் விழாவை அவரது வாழ்நாள் சாதனைகளுக்கான பாராட்டு விழாவாகக் கொண்டாடிய விதம் அவரது பங்களிப்புக்குப் பொருத்தமான கௌரவமாக அமைந்தது. ●



படிப்பகம்

www.padippakam.com



# சாகித்திய அகாதெமி

CELEBRATING FIFTY YEARS (1954-2004)

**குணா காம்ப்ளக்ஸ், மெயின் பில்டிங், இரண்டாவது தளம், (பின்புறம்), 443 (ப.எண்.304), அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை 600 018.** *தொலைபேசி: 24354815 / 24311741*

**நில அதிர்வுமானிகளே நன்றி**
(மலையாள நாவல்)
மூலம்: சி. ராதகிருஷ்ணன்
தமிழாக்கம்: கே. நாச்சிமுத்து
விலை: ரூ. 250.00

**பாம்பும் கயிறும் (ஆங்கில நாவல்)**
மூலம்: ராஜா ராவ்
தமிழாக்கம்: டி. சி. இராமசாமி
விலை: ரூ. 250.00

**நீல நிலா (இந்தி நாவல்)**
மூலம்: சிவபிரசாத் சிங்
தமிழாக்கம்: எம். சேஷன்
விலை: ரூ. 230.00

**மணி மகேஷ் (வங்காளி பிரயாண நூல்)**
மூலம்: உமா பிரசாத் முகோபாத்தியாய
தமிழாக்கம்: எஸ். கிருஷ்ணமூர்த்தி
விலை: ரூ. 70.00

**இதய விழிகள்**
மூலம்: மாலதி செந்தூர்
தமிழாக்கம்: சாந்தா தத்
விலை: ரூ. 140.00

**தமஸ் (இருட்டு) (இந்தி நாவல்)**
மூலம்: பீஷ்ம சாஹனி
தமிழாக்கம்: வெங்கட் சுவாமிநாதன்
விலை: ரூ. 180.00

**உதிரும் இலைகளின் ஓசை (உருது நாவல்)**
மூலம்: குர்ரத்துலைன் ஹைதர்
தமிழாக்கம்: திலகவதி
விலை: ரூ. 180.00

**அமைப்பு மையவாதம்**
**பின் அமைப்பியல் மற்றும் கீழைக்காவிய இயல்**
மூலம்: கோபிசந்த் நாரங்க்
தமிழாக்கம்: எச். பாலசுப்பிரமணியம்
விலை: ரூ. 275.00

## சிறுகதைகள்

**ந. பிச்சமூர்த்தியின் தேர்ந்தெடுத்த கதைகள்**
தொகுப்பு: வெங்கட் சாமிநாதன்
பக். 317; விலை: ரூ. 110.00

**கு. அழகிரிசாமி கதைகள்**
தொகுப்பு: கி. இராஜநாராயணன்
பக். 740; விலை: ரூ. 275.00

**தேர்ந்தெடுத்த விந்தனின் சிறுகதைகள்**
பக். 386; விலை: ரூ. 160.00

**அயலகத் தமிழ் இலக்கியம்**
தொகுப்பு: சா. கந்தசாமி
விலை: ரூ. 150.00

## நாடகங்கள்

**கல்லீரல் (யக்ருத் மராத்திய நாடகம்)**
மூலம்: ஷ்யாம் மனோகர்
தமிழாக்கம்: இராசு. விவேகானந்த கோபால்
பக். 85; விலை: ரூ. 40.00

**சீதை ஜோசியம்**
மூலம்: நார்லா வேங்கடேசுவர ராவ்
தமிழாக்கம்: இரா. மனுவேல்
பக். 48; விலை: ரூ. 30.00

**தமிழில் சோதனை நாடகங்கள்**
தொகுப்பு: மு. இராமசுவாமி
நாடகாசிரியர்கள்: ந. முத்துசாமி, இந்திரா பார்த்தசாரதி, இராமானுஜம், பிரேதா பிரேதன், முத்துக்குமாரசாமி, முருகபூபதி வேலுசரவணன்
பக். xxxvi+198; விலை: ரூ. 100.00

**சங்கரதாஸ் சுவாமிகளின் இரு நாடகங்கள்**
தொகுப்பு: கே.ஏ. குணசேகரன்
அரிமளம் சு. பத்மநாபன்
விலை: ரூ. 110.00

**ஒரு திருடனைப் பிடிக்க...**
மராத்தி மூலம்: கங்காதர் காட்கில்
தமிழாக்கம்: ஆனைவாரி ஆனந்தன்
விலை: ரூ. 40.00

## நாவல்கள்

**இரண்டுபடி**
தகழி சிவசங்கரபிள்ளை
தமிழாக்கம்: டி. ராமலிங்கம்
விலை: ரூ. 50.00

**சேரி (தெலுங்கு நாவல்)**
மூலம்: உன்னவ லட்சுமி நாராயணா
தமிழாக்கம்: மு.கு. ஜகந்நாத ராஜா
விலை: ரூ. 200.00

**பருவம் (கன்னட நாவல்)**
மூலம்: எம்.எல். பைரப்பா
தமிழாக்கம்: பாவண்ணன்
விலை: ரூ. 350.00

## கவிதைகள்

**இராமலிங்க வள்ளலாரின் அருட்பா அமுதம்**
தொகுப்பு: சிற்பி பால சுப்பிரமணியம்
பக். 340; விலை: ரூ. 110.00

**ந. பிச்சமூர்த்தியின் தேர்ந்தெடுத்த கவிதைகள்**
தொகுப்பு: ஞானக்கூத்தன்
பக். 176; விலை: ரூ. 65.00

**வெட்டவெளி வார்த்தைகள்**
**(கன்னட விரசைவ கவிதைகள்)**
தொகுப்பு: எச்.எஸ். சிவபிரகாஷ்
தமிழில்: சுகுமாரன், தமிழ்ச்செல்வி
விலை: ரூ. 50.00

**கன்னடக் கவிதைகள்**
தொகுப்பு: டி.பி. சித்தலிங்கய்யா
பக். 102; விலை: ரூ. 50.00

**புரட்சிக்காரன்**
மூலம்: காஜி நஸ்ருஸ் இஸ்லாம்
தொகுப்பு: புவியரசு
விலை: ரூ. 60.00

விளம்பரம்

**புத்தக விலையை M.O. செய்தால் எங்கள் செலவில் புத்தகங்களை அனுப்புவோம்.**
**நேரில் வந்தால் 10% தள்ளுபடி. விற்பனையாளர்களுக்குச் சலுகைகள் உண்டு**



படிப்பகம்

www.padippakam.com



ரங் தே பசந்தி – இந்தித் திரைப்படம்

# இரு இழைகளில் ஒரு உணர்ச்சிக் கோலம்

நந்து சுந்தரம்



**தேசபக்தியை மையமாக வைத்துப் படம்** எடுக்கும் ஒரு நல்ல இயக்குநர் தாண்டக் கூடாத கோடு ஒன்று உள்ளது. யதார்த்தமான தேசபக்திக்கும் மலினமான தேசிய வெறிக் கும் இடையிலான கோடு அது. இந்தக் கோட்டைப் பற்றி ராகேஷ் ஓம்பிரகாஷ் மெஹ்ராவுக்கு நன்கு தெரியும். சில இடங்களில் அவர் அதைத் தாண்டினாலும் பார்வையாளர் களிடமிருந்து திறமையாக அதை மறைப்பது தான் இந்தப் படத்தின் வெற்றி. படத்தின் செய்தி வெளிப்படையானது: எழுமின், விழிமின், தேசத்தைக் காப்பற்ற உழைமின். இன்னொன் றும் அதே அளவுக்கு வெளிப்படையானது: நீங்கள் தேசத்தைக் காப்பாற்றுவதற்காகப் போராடிக்கொண்டிருக்கும்போது ராகேஷும் அவரது குழுவினரும் கத்தை கத்தையாகப் பணத்தை எண்ணிக்கொண்டிருப்பார்கள்.

படத்தின் செய்தி நுட்பமானதாக இருந்து அதன் சாரத்தை உள்வாங்கிக்கொள்ளும் பொறுப்பு, பார்வையாளர்களுக்கு விடப்பட்டி ருந்தால் *ரங் தே பசந்தி* இப்போது உள்ளதை விடவும் மேலான படமாக இருந்திருக்கும். அந்த நுட்பமான திரை மொழி மெஹ்ராவுக்குக் கைவரவில்லை. என்றாலும் செய்தி திரைக் கதையில் இரண்டறக் கலந்துவிட்டிருக்கிறது. அந்த அளவுக்கு அவர் திரைக்கதையில் கடுமையாக உழைத்திருக்கிறார். அதோடு, தனது படத்தைக் கரை சேர்க்க ஏ. ஆர். ரஹ்மான், ஆமீர் கான் என்னும் இரு பெரும் ஆளுமை களை அவர் பெரிதும் நம்புகிறார். படத்தொகுப்பு, தயாரிப்புத் தரம், ஒலி அமைப்பு, ஒளிப்பதிவு ஆகியவற்றுடன் இந்த இரு கலைஞர்கள் படத்தைத் தூக்கி நிறுத்துகிறார்கள்.

படத்தின் ஆகச் சிறப்பான காட்சிகளை யும் வசனங்களையும் பிறருக்கு விட்டுக் கொடுக்குமளவுக்கு ஆமீருக்குத் தன் நடிப்புத் திறமைமீது நம்பிக்கை இருக்கிறது. ஒரு மாபெரும் கேளிக்கையாளனுக்குரிய தேர்ச்சி யுடன் படத்தை அவர் நகர்த்திச் செல்கிறார். மற்றவர்களுக்கு – குறிப்பாக அதுல் குல்கர்னிக் கும் சித்தார்த்துக்கும் – சிறப்பான பாத்திரங் களும் காட்சிகளும் வசனங்களும் கிடைத்தி ருக்கின்றன. இவையெல்லாம் இல்லாமலே ஆமீர் அபாரமான தாக்கத்தை ஏற்படுத்துகிறார். வெற்றிடத்திலிருந்து ஓர் உலகத்தைக் கட்டி எழுப்பும் திறமை இது. அவர் பஞ்சாபி தொனி யில் பேசும் விதம், ரொட்டியை விழுங்க முடியாமல் சூவிடம் (ஆலிஸ் பேட்டன்) கதறி அழும் காட்சி, கொலை செய்யும்போது முகத்தில் தெறிக்கும் குரூரம் . . . ஆமீருக்குக் கிடைத்திருக்கும் முக்கியமான காட்சிகள் குறைவுதான்; ஆனால் தன் நடிப்பின் மூலம் படத்திற்கு அவர் கூட்டும் ஆழம் மிக அதிகம்.

உத்வேகத்துடன் இசையமைத்திருக்கும் ரஹ்மான் அற்புதமான இசை அனுபவத்தைத் தருகிறார். சூ இந்தியாவுக்கு வந்து இறங்கும் போது பின்னணியில் இழையோடும் மெட்டு பல இடங்களில் பல விதங் களில் திரும்பத் திரும்ப ஒலிக்கிறது; ஒரு இசைத் துணுக்காகத் தொடங்கி மெல்ல உருமாறி, கடைசியில் படத்தின் உணர்ச்சி மையமாகப் பரிண மிக்கிறது. பெரும் தொழிலதிபரான தனது தந்தையை (அனுபம் கெர்) கரண் (சித்தார்த்) சந்திக்கும் இடத்தில் ஒலிக்கும் இசைக்கோவை அந்தப் பாத்திரங்கள் அடையவிருக்கும் சோகமான முடிவை முன்னறி விப்பதுபோல உள்ளது.

பெரும்பாலான பாடல்கள் முதல் பாதியிலேயே வந்துவிடுகின்றன. ஒவ்வொரு பாட்டு முடியும்போதும் படம் ஒரு அடியாவது முன்னால் நகர்ந்திருக்கிறது. பாடல்களின் நடுவில் இடம்பெறும் உரையாடல்கள் அபத்தமாக ஒலிக்கின்றன. பாட்டைப் பாட்டாக மட்டும் காட்சிப்படுத்து வதில் இயக்குநருக்குள்ள தயக்கத்தை இது அம்பலப்படுத்துகிறது. ஒரு 'சீரியசான' படத்தில் பாட்டை வெறும் பாட்டாக எப்படிக் காட்ட முடியும்!

கதையின் இரு முக்கியமான இழைகளினூடே மாறி மாறிப் பயணம் செய்கிறார் மெஹ்ரா. பகத் சிங், சந்திரசேகர ஆஸாத் உள்ளிட்ட ஐந்து புரட்சி வீரர்கள் பற்றிப் படம் எடுக்கும் சூவின் முயற்சிகள், அவள் எடுக்கும் படம் ஆகியவையே அந்த இரு இழைகள். படத்திற்குள் படம் என்ற உத்தியை மெஹ்ரா சிரமப்பட்டுக் காட்சிப்படுத்துகிறார். இந்தியாவின் சுதந்திரப் போராட்டம் உணர்ச்சிக் கொந்தளிப்பு நிறைந்தது என்பதால் கதைக்குத் தேவையில்லாதபோதிலும் மெஹ்ரா அதை விரிவாகக் காட்டுகிறார். ஜாலியன்வாலா பாக் படுகொலை, 'சைமனே திரும்பிப் போ' போராட்டம் ஆகியவற்றை மேலோட்டமான முறையில் சித்தரித்தி ருப்பது மோசம் என்றால், சமகால அரசியல் நிகழ்வுகளை அவற்றோடு ஒப்பிட்டுக் காட்டுவது அதைவிட மோசம்.

நடிகர் பட்டாளம் மிகவும் பெரியது – ஓம் பூரி போன்ற நடிகர்கள் வீணடிக்கப்பட்டிருக்கிறார்கள் என்று தோன்றுமளவுக்கு. தனக்குப் பழக்க மாகிவிட்ட அம்மா வேடத்தில் மறுபடியும் கிரண் கெர். ஆண்களுக் கிடையே நிலவும் உறவுகளால் நிறைந்திருக்கும் திரைப் பரப்பில் சற்றே பெண் வாசனையைப் படர விடுகிறார்கள் சோஹா அலி கானும் ஆலிஸ் பேட்டனும். ஒலி அமைப்பு செறிவாக உள்ளது. படத்தொகுப்பில் அழகுணர்ச்சி சற்றுத் தூக்கலாகவே உள்ளது.

எதிர்பார்த்தபடியே கதையின் இரண்டு இழைகளும் ஒரு புள்ளியில் இணைந்துவிடுகின்றன. உணர்ச்சி கொப்புளிக்கும் கிளைமாக்ஸ் அழகாக உருவகப்படுத்தப்பட்டுள்ளது. தர்க்க அறிவுக்குக் கொஞ்சம் ஓய்வு கொடுத் தால்தான் இரண்டாம் பாதியில் நடைபெறும் சம்பவங்களை நம்ப முடியும்.

உச்சக்கட்ட நிகழ்வுகளுக்குப் பிறகு தோன்றும் காட்சிகளில் ஒன்றாக வஹீதா ரஹ்மான் கோமாவிலிருந்து எழுந்து வருகிறார். ஊழல், தரமற்ற அரசியல் ஆகியவற்றின் பிடியிலிருந்து பாரத மாதா எழுந்து வருவதன் உருவகமாகவே இது தோன்றுகிறது. ●



படிப்பகம்

www.padippakam.com



சிறுகதை

ஓவியங்கள்:
பெனிட்டா பெர்ஷியாள்



# விளிம்பு

## சல்மா

**நீண்ட திட்டமிடலுக்குப் பிறகு உறுதி** செய்யப்பட்ட பயணம் துவங்க வேண்டிய நேரம் நெருங்கிக்கொண்டிருக்கிறது. கல்வாசலில் நின்று அம்மாவிடம் பேசியபடி புர்காவை அணிந்துகொண்டிருக்கிறவளைப் பார்த்து,

"எந்தங்கம், ஒனக்கு எப்டித்தான் இம்புட்டு பொறுமையக் குடுத்தானோ அந்த அல்லா. நீ நூறு வயசுக்கு நல்லாயிருக்கணும்". வாழ்த்துகிற அம்மாவின் கண்கள் பனித்திருக்கின்றன.

"அட ஏம்மா நீ இதெல்லாம் பேசிக்கிட்டு" என்கிறவளிடம்,

"அதில்லம்மா, இந்த கிழடுகளக் கட்டியழுகுற வேல சாமான்யமானதா. நான் செய்ய வேண்டியது; நீ கெடந்து கஷ்டப்படுற. அல்லா ஒனக்குக் குடுத்த பொறுமைய எனக்குக் குடுத்திருக்கக் கூடாதா, எடுக்கு முன்ன கோபமுல்ல வருது" தன்னைத் தானே கடிந்தபடி கல்வாசலில் கிடக்கிற கல்லுரலின் மீதமர்கிறாள் அம்மா.

"கோபம்... ஒனக்குத்தானே? ஆனா காட்ட வேண்டிய எடம் மட்டும் மாறிப்போயிரும் இல்ல?".

இவளது குரலில் தெரிகிற குத்தல் அம்மாவைக் கலவரப்படுத்தியிருக்க வேண்டும். தொட்டால் சுருங்கிச் செடிபோல நொடியில் சுருங்கிப் போகிறது முகம்.

தன்னுடைய தரப்பு நியாயத்தை மகளிடம் புரிய வைக்க் வேண்டுமென்கிற தவிப்பு அம்மாவின் முகத்தில் தெரிகிறது. முந்தானையை எடுத்து முகத்தைத் துடைப்பது போல பாவனை செய்தவளாக,

"என்னைய என்னா செய்யச் சொல்லுற? அந்தக் கெழவி செய்ற செயல நீ பாத்துக்கிட்டுத்தான இருக்க?"

"ஏன் அத்தா மட்டும்... அவரு கிட்ட காட்டுறது உன் கோபத்தை... அவரு பின்னால பணிக்கத்தத் தூக்கிக்கிட்டுத் திரிவியே..." தன் வார்த்தைகளில் தெறிக்கும் வெறுப்பு அவளுக்கே புரிந்துவிட, சட்டென நிதானம் கொள்கிறாள்.

'என்ன இது முட்டாள்தனம்' என மனதிற்குள் கடிந்துகொண்டவளாக, "சரி விடுங்க, சும்மாதான் வம்புக்கிழுத்தேன். வரட்டுமா" முகத்தில் புன்சிரிப்பைத் தவழ விட்டபடி வீட்டை விட்டு வெளியே வருகிறாள். அம்மா தன்னைத் பின்தொடர்ந்து வருகிறாளா என்கிற பதற்றத்தில் பின்புறமாகத் தலையைத் திருப்பிப் பார்த்துக்கொள்கிறாள்.

வீட்டின் முன்பு விழுந்து கிடக்கிற அதிகாலை வெயிலில் நின்றுகொண்டிருக்கிற காரின் அருகாக தனது மாத்திரைப் பையைக் கக்கத்தில் இடுக்கியவாறு நின்று கொண்டிருகிறாள் நன்னி. அவளது காத்திருத்தல் தனக்கானது என்கிற விவரம் புரியாதவளாக,

"உம் ஏறுங்க சீக்கிரம்... வெயிலடிக்குதுல்ல" அக்கறையுடன் ஒலிக்கும் குரல் தன்னுடையது தானா என்கிற சந்தேகம் இவளுக்கே உண்டாகிறது. சற்றுமுன் அம்மாவிடம் கடுகடுத்த குரலுக்கு எப்படி வந்தது இத்தனை குழைவு! அம்மாவிடம் நடந்துகொண்ட விதம் குறித்த குற்றவுணர்வு தலைதூக்குகிறது.

அளவற்ற வருத்தத்துடன் காரின் முன்புறக் கதவை அழுத்தித் திறந்து உட்காரப் போனவளை, "நீ இங்க வந்து ஒக்காரு. அப்புறமா நான் ஏறுறேன்" தடுக்கும் நன்னியின் குரல் நிதானிக்கச் செய்கிறது.

அவளது குறுக்கிடலுக்குக் காரணம் புரியாது நன்னியின்



படிப்பகம்

www.padippakam.com



முகத்தை உற்றுக் கவனித்து ஏன் என்கிற கேள்வியைக் கண்களாலேயே அவளிடத்தில் எழுப்புகிறாள். பதற்றத்தை அணிந்துகொண்டிருக்கிற அவளது வயோதிக முகம் தனது விருப்பத்தை இவள் பூர்த்தி செய்ய வேண்டுமென்கிற கட்டளையை ஏந்தியிருக்கிறது.

அதை ஏற்றுக்கொள்கிற விருப்பமுமின்றி, "ஏன் இங்கெ முன்சீட்டு காலியாத்தான இருக்கு" என்று முணுமுணுக்கிறான்.

இவளது பதில் தந்த எரிச்சல் குரலில் தொனிக்க, "ப்சு... வாங்கறேன்ல" அதட்டுகிறாள் நன்னி.

அக்குரலில் வெளிப்படுகிற கடுமையின் வினோதத் தன்மையை யோசித்தபடி பதிலேதும் சொல்லாமல் முன்புறக் கதவை அறைந்து சாத்திவிட்டுப் பின்புறமாக வந்து உள்ளே ஏற்கனவே அமர்ந்திருக்கிற ராதியின் அருகே அமர்கிறாள். இவள் அமர்வதற்காகவே காத்திருந்தவளாகச் சட்டெனக் காரில் ஏறி இவளுக்கருகாக உட்காருகிறாள் நன்னி. அவளது முகம் வெற்றிப் புன்னகையைச் சிந்துகிறது. அப்புன்னகைக்குப் பின்னணியில்தான் மாட்டிக்கொண்டிருக்கும் சிக்கல் எத்தகையது என்பது புரிந்தாலும் எல்லாம் தெரிந்ததுதானே என்று அலட்சியப்படுத்துகிறாள்.

வீட்டு வராண்டாவின் ஓரமாக நின்றபடி இவர்கள் ஏறட்டுமெனக் காத்துக்கொண்டிருந்த சச்சா, "என்ன கௌம்பலாமா"வெனக் கேட்டபடியே பதிலை எதிர்பார்க்காமல் வந்து டிரைவர் சீட்டில் அமர்ந்து காரைக் கிளப்புகிறார். அம்மா வெளியில் வரவில்லை என்பது இவளுக்கு மனவருத்தத்தை உண்டு பண்ணுகிறது. தனது பேச்சு அம்மாவைக் காயப்படுத்தியிருக்க வேண்டும் என்பது துக்கத்தை ஏற்படுத்தக் கூடியதாக இருக்கிறது.

சாலையின் வழுவழுப்பில் கார் அலுங்காமல் நழுவிச் செல்கிறது. ராதி, நன்னி இருவருக்கிடையே அமர்ந்துகொண்டிருப்பதில் மிகவும் அசௌகர்யமாக உணர்ந்தவள், முன்புறம் காலியாகக் கிடக்கும் இருக்கையை ஏக்கத்துடன் பார்த்துக் கொண்டாள்.

ராதிக்கு நல்ல தாட்டியான உடல்வாகு. வீங்கியிருந்த கால்களை நன்றாக அகட்டிக்கொண்டு அமர்ந்து



# விளிம்பு

> "அவ பக்கத்துல என்னைய ஒக்கார விடக் கூடாது. அவ ஒடம்பே நாத்தம் புடிச்சுக் கெடக்கும் குளிக்காம. அப்புறம் ஏ.ஸி போடக் கூடாது. அந்தப் பொம்பள குசு விட்டுக்கிட்டே இருப்பா."

பாதி சீட்டை ஆக்கிரமித்திருக்கிறாள். இருவருக்கிடையே ஒடுங்கி அமர்ந்துகொண்டிருக்கும் இவள் இன்று முழுக்க இவர்களிருவரையும் எப்படிச் சமாளிப்பது என்பது குறித்துத் தீவிரமாக யோசிக்க ஆரம்பிக்கிறாள்.

இவர்களிருவரையும் ஒன்றாக ஒரு இடத்திற்கு அழைத்துச் செல்வதில் உள்ள சிக்கல்கள் தெரிந்ததுதான் என்றாலும் அது இந்த அளவுக்கு மோசமானதாக இருக்கும் என்பதைக் கணிக்கத் தவறியது தன்னுடைய தவறென யோசித்தவள் தன்னைத்தானே மனதிற்குள் கடிந்து கொள்கிறாள். பொறியில் சிக்கிய எலியாகத் தன்னைக் கற்பனை செய்துகொள்கிறவளுக்கு அது ரசிக்கவில்லை.

நேற்று இந்தப் பயணம் குறித்துத் திட்டமிடப்பட்ட உடனேயே நன்னி இவளிடம் தனியே வந்து எச்சரிக்கை செய்திருந்தாள்.

"இந்தப் பாரு, காருக்குள்ள அந்தப் பொம்பளய தொணதொணன்னு பேசவிடக் கூடாது. அப்புறம் அவ பக்கத்துல என்னைய ஒக்கார விடக் கூடாது. அவ ஒடம்பே நாத்தம் புடிச்சுக் கெடக்கும் குளிக்காம. அப்புறம் ஏ.ஸி போடக் கூடாது. அந்தப் பொம்பள குசு விட்டுக்கிட்டே இருப்பா. சன்னல மூடி வச்சுக் குடலைப் புரட்டும்."

எத்தனை பெரிய கவலைகள். இவற்றை எத்தனை நாட்களாக யோசித்துக்கொண்டிருக்கிறாளோ என யோசித்தவளுக்கு வேதனைதான் மிஞ்சியது. என்றாலும் நன்னியின் குணாதியசங்களைத் தெளிவாகவே அறிந்து வைத்திருந்ததனால் அவளது இந்த எச்சரிக்கைகள் அத்தனை விசித்திரமானதாகப் படவில்லை.

ராதி வாரத்தில் இரண்டு நாட்கள் குளித்தாலே அதிசயம்தான். அடிக்கடி குளித்தால் சளி பிடிக்கும் என்பது அவளது நம்பிக்கை. அந் நம்பிக்கையைப் போக்க வீட்டிலுள்ளவர்கள் எடுத்துக்கொண்ட முயற்சிகள் எல்லாமே வீணாகப் போயின. நன்னியோ நேரெதிர். ஒருநாள் முழுக்க நன்னியின் கூடயிருந்து பார்ப்பவர்களைக் அழுக்கானவர்களாக உணர வைக்க அவளால் முடியும்.

தனது ஒரு நாளைய பொழுதில் முக்கால்வாசியைக் குளியலறையில் கழிக்கும் அவளது அக்கிரமத்தைக் காண யாருக்குமே சகிக்காது. அதனைப் பொறுத்துக்கொள்ள இயலாத பொழுதில் எல்லாம் ராதி இவளிடம் அலுத்துக்கொள்வாள். "இந்த மாதிரி நான் தண்ணிய பொழங்கட்டும், ஒங்கம்மாக்காரி என்னைய சுட்டுப்புடுவா. எல்லாம் என் நஸீபு".

உண்மைதான். நன்னியின் நடவடிக்கைகள் பார்ப்பவர்களுக்குப் பெரும் துன்பத்தைத் தரக்கூடியவையாக மாறிவிட்டிருக்கின்றன. காலை, பல் துலக்கி முகம் கழுவ மட்டும் சரியாக அரைமணி நேரம் அவளுக்குத் தேவைப்படுகிறது. பிறகு 9 மணிக்குக் குளியல் ஆரம்பித்தால் இரண்டரை மணி நேரம். ஒவ்வொரு நேரத் தொழுகைக்கும் ஒலுச்செய்வதற்கு ஒவ்வொரு மணி நேரம்.

கடந்த சில வருடங்களாகவே இப்படித்தான் இவளது நேரம் முழுக்கத் தண்ணீரோடு கழிந்து கொண்டிருக்கிறது. ஒருமுறை டாக்டரிடம் ஆலோசிக்கலாம் என இவள் அழைத்த பொழுது நன்னி, "ஏன் என்னைய கிறுக்குன்னு சொல்றியா, அதெல்லாம் முடியாது. வேணுமுனா ஒங்க ராதியக் கொண்டு போயி லூஸ் டாக்டர் கிட்ட காட்டிக்க" என்று சொல்லிவிட்டாள்.

ஒவ்வொரு முறையும் நன்னி பாத்ரூமுக்குள் போய்விட்டு வெளியில் வரும் நேரம் இவளுக்குத் தீராத வியப்பூட்டும். பாத்ரூமுக்குள் நுழையும் பொழுது கடிகாரத்தைப் பாத்து விட்டுச் செல்கிறாள் என்றாலும், வெளியில் வரும் நேரத்தை எவ்விதம் கணக்கிடுகிறாள்? நேர அளவைக் கூடாமல் குறையாமல் கையாளுவது அவளுக்கு எவ்விதம் சாத்தியமாகிறது?



படிப்பகம்

www.padippakam.com



பாத்ரூமுக்குள்ளிருக்கும் பொழுது கதவை முழுவதுமாக மூடாமல் ஒருக்களித்து வைத்துக் கொள்வது தான் நன்னிக்கு வழக்கம். குளிக்கும் பொழுது வெளியில் நடமாடுபவர் களுக்கு அவளை நன்றாகவே பார்க்க முடியும். அதைப் பற்றிய கவலை அவளுக்குத் துளிக்கூடக் கிடையாது.


“கதவை மூடித் தாழ்ப்பா போட் டுக்கக் கூடாதா” என முணுமுணுக் கும் அம்மாவிடம், “அது என்னாத் துக்கு, மூச்சு முட்டுமல? இங்கெ பின்வாசப் பக்கம் யாரு வரப் போறாக?” அலட்சியமாகப் பதில் சொல்வாள் நன்னி.

நன்னி குளிப்பதை ஒரு நாளாவது வெளியிலிருந்து கவனிக்க வேண்டும் என்பது இவளது நீண்ட நாள் ஆசை.

ஆனால் அதற்கான பொறுமை இவளிடத்தில் இல்லை என்பதனால் ஒலுச் செய்வதையாவது பார்க்கலாம் என ஒரு நாள் அவள் வருவதற்கு முன் குறிப்பிட்ட நேரத்திற்கு முன் பாகவே மடியிலிட்ட உதிரிப் பூக்க ளோடு பாத்ரூமுக்கெதிராகக் கிடந்த ஆட்டுரலின் மீது உட்கார்ந்து கொண்டாள். பின் மாலை வெயில் கொல்லைப்புறச் சுவர்மீது சரிந்து கொண்டிருக்கிறது.

சரியாக நான்கு மணிக்கு பாத்ரூம் போவதற்காக வருகிறாள் நன்னி. வழக்கத்திற்கு மாறாக இவள் அமர்ந் திருப்பதைப் பார்த்து லேசான புன்முறுவல் ஒன்றைச் சிந்துகிறாள். “அஸருக்கு ஒலுச் செய்யப் போறேன்” சொல்லியபடி உள்ளே நுழைந்து கதவை ஒருக்களித்துச் சாத்துகிறாள். அவள் கதவைச் சாத்தும் கோணம் கூட எப்போதும் ஒரே மாதிரித்தான் இருக்கும். நன்னி அஸர் தொழுகுமுன் ஒரு முறை பல் துலக்குவாள். இனி சரியாக நாலு ஐம்பதுக்குதான் வெளியில் வருவாள். ஐந்து நிமிடம் கூட முன்பின் இருக்காது.

இவள் பூக்களைத் தொடுத்த படியே ரகசியமாக நோட்டமிடு கிறாள். வாளியில் திமுதிமுவென விழுந்து நிறைகிற தண்ணீர் வாளியைச் சடாரெனச் சாய்த்துத் தண்ணீரை ஓட விடுகிறாள் நன்னி. வாளியைச் சுத்தம் செய்கிறாள் என்பதை ஓரளவுக்கு யூகிக்க முடிகிறது இவ ளுக்கு. குழாயிலிருந்து கொட்டும் நீர் மறுபடியும் வாளியை நிரப்ப ஆரம்பிக்க, குத்த வைத்தமர்ந்து சிறுநீர் கழிக்கிறாள் நன்னி. ஒருக்க ளித்த கதவின் வழியே அவளது



புட்டங்கள் தெரிய, சங்கடத்துடன் தலையைக் குனிந்துகொள்கிறாள்.

தண்ணீரின் சடசட ஒலி, ஓயாத ஒலியாக மாறிக்கொண்டிருக்கிறது. நன்னி குவளையில் நீரை மொண்டு மொண்டு, தன் தொடைகளுக்கு நடுவே ஊற்றிக் கழுவ ஆரம்பிக்க, இவள் தன் எண்ணிக்கையைத் துவக்குகிறாள். ஒன்று இரண்டு மூன்று ... அசராத இயக்கம் நன்னியு டையது. *58, 59, 60. . .* ஒருவழியாக நன்னி எழுந்து நிற்கிறாள்.

மறுபடியும் இரும்பு வாளியில் பிளாஸ்டிக் குவளை மோதும் சத்தம். நன்னி ஒலுச் செய்யத் துவங்குகிறாள். முகத்திலும் கைகளிலும் தண்ணீரை வாரிவாரி இறைக்கும் சப்தம் கேட்ட படி இருக்கிறது. கைகளை அழுத்தி அழுத்தித் தேய்ப்பதை வளையல் கள் மோதும் ஒலி உறுதி செய்கிறது. அப்படி என்னதான் அழுக்கு இருக்கப்போகிறதோ இந்த உடம்பில் என்கிற வியப்பு இவளுக்குள் கிளை விட நன்னியின் மீது இச்செயல் களை ஒட்டிக் கோபம் வருவதற்குப் பதில் கருணை சுரக்கிறது. நாளின் மொத்த நேரத்திலும் பாத்ரூமுக்குள் கழிக்கும் அவள்மீது எல்லையற்ற அன்பு பெருகுகிறது. இடையறாது கேட்டுக்கொண்டிருக்கிறது தண்ணீ ரின் ஓசை.

இவளது விரல்களுக்கிடையே தொடுக்கப்படாது கசங்கிக்கொண்டி ருக்கின்றன மல்லிகைப் பூக்கள். வெளியே வருகின்ற நன்னியின் முகம் கனிந்த பழமெனத் தளர்ந்து கிடக்கிறது. இவளைப் பார்த்து மிருதுவாகச் சிரித்தபடியே தனது அறையை நோக்கிச் செல்கிறாள். தண்ணீரில் ஊறி வெளுத்த பாதங் களை மென்மையாகத் தரையில் பதித்து ஒரு பறவையின் நடையைப் போல அதிர்வுகாட்டாதபடிக்கு. நன்னியின் அறை எப்பொழுதும் அவளை மட்டுமே ஏற்றுக்கொள் ளும். வேறு ஒருவரையும் அது அனு மதித்து இவள் பார்த்ததேயில்லை. ஒரு முறை வேண்டுமென்றே நன்னி யின் அறைக்குள் இவள் நுழைந்த பொழுது இவளை மறுக்கவும் முடியாமல் வரவேற்கவும் முடியாமல் நன்னி பட்ட தவிப்பு நினைவுக்கு வருகிறது.

“வா, ஜஸி” அறைகுறை மனதோடு வரவேற்றவள், “இந்த சேர்ல ஒக்காரு”, அவசரமாக வயர் சேரொன்றை இவளெதிரே நகர்த்து கிறாள். இவள் மெத்தை மீது அமர்ந்து



படிப்பகம்

www.padippakam.com



விடுவாளோ என்கிற பதற்றம் குரலில் கூடியிருக்கிறது.

வீட்டிலேயே அவ்வறைதான் சின்னஞ்சிறியது. ஒரு கட்டில், ஒரு பீரோ, ஒரு சேர். இவை போக மிச்சமிருக்கும் துண்டு இடம் தொழுகைக்கு முசல்லா விரிப்பதற்கு மட்டும் போதுமானதாகயிருக்கும். மெத்தைக்கு மேலாக உள்ள இரும்பு வளையத்தில் கட்டப்பட்டு, இவளது தலைக்கு மேலாக உள்ள ஜன்னல் கம்பியோடு இணைக்கப்பட்டிருக்கிறது கொடிக்கயிறு. ஜன்னல் கம்பிகளின் ஊடேயுள்ள சந்துகளில் வாயில் சேலையொன்று துண்டு துண்டாகக் கிழிக்கப்பட்டு சுருட்டிச் சுருட்டிச் செருகப்பட்டிருக்கிறது. அவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு பயன்பாட்டுக்கு உரியவை என்பது இவளுக்குத் தெரியும். ஒரு துணி மூக்கைச் சுத்தம் செய்ய, மற்றொன்று காதுகளைத் துடைக்க, கைகளைத் துடைக்க ஒன்று, பாதங்களை மட்டும் துடைக்க ஒன்று. ஒவ்வொன்றும் ஒவ்வொரு சந்துக்குள்ளும் செருகப்பட்டிருக்கிறது.

இந்த வீடு கட்டி ஐந்து ஆண்டுகளுக்கும் மேலாகிறது என்றாலும் நேற்றுதான் கட்டி வந்ததுபோலச் சுவர்களும் தரையும் பளிச்சென்றிருக்கிறன. இவளது பார்வையைச் சங்கடத்துடன் எதிர்கொள்கிற நன்னிக்கு இருப்புக்கொள்ள முடியாத தவிப்பு கூடிக்கொண்டேயிருக்கிறது. இவளது தலைக்கு மேலாகக் கொடியில் தொங்கிக்கொண்டிருக்கிற குற்றாலம் துண்டின் விளிம்பு ஃபேன் காற்றில் அசைய, அது இவளது தலையில் உரசிவிடுமோ வென்கிற பதற்றம் கூடிய முகத்தோடு அவசரமாக முன்நகர்ந்து அதனைக் கொடியின் ஓரத்திற்கு நகர்த்தி வைத்துவிட்டு இவளைப் பார்த்துச் சிரிக்கிறாள்.

இவள் அவளது சங்கடத்தினை அறிந்துகொள்ளாதவளாகத் தன்னைக் காட்டிக்கொள்ளும் பொருட்டு அறையின் ஒழுங்குகளைச் சுற்று முற்றும் பார்த்துக் கொள்கிறாள்.

இவளது பார்வையின் அர்த்தம் விளங்காதவளாக, "என்னாது புதுசா பாக்குற மாதிரி பாக்குற, ஒங்க வீடுதான இது", வெற்றிலைக்கறை படிந்த பற்கள் தெரியச் சிரிக்கிறாள் என்றாலும் அவளது கண்கள், தரையின்மீது பதிந்திருக்கும் இவளது பாதங்களின் மீது பதிந்து கிடக்கின்




"நீ ஒக்காந்திருந்த அந்த சேர ஒரு மணி நேரமா தண்ணி ஊத்திக் கழுவினத பாத்தியா, நாங்கல்லாம் அந்த ரூமுக்குள்ள போறமா, நீ என்னத்துக்குப் போயி அவமானப்படுற ?"

றன. அவை அழுக்காக இருக்கின்றனவோ என்கிற பதற்றத்துடன் உற்றுக் கவனித்து ஒரு முடிவுக்கும் வர இயலாத துன்பத்தில் ஆழ்ந்து கொண்டிருக்கிறாள்.

இந்த அறையை விட்டுப் போகும் நிமிடத்திற்காகக் காத்திருக்கும் விதத்தையும் ஓரிரு நிமிடங்களில் அழுக்குப் பிடித்த பரதேசியாகத் தன்னைத்தானே உணர வைத்து விட்டதையும் நினைத்து, நன்னியின்மீது முளைவிடுவது கோபமா பரிதாபமாவென்பது புரியாமல் குழம்புகிறாள். பிறகு நீண்ட மௌனத்திலிருந்து விடுபட்டு,

"ஏன் பாத்தாக்க என்னவாம்". செல்லமாகச் சிணுங்கியபடியே அச்சூழலை எளிதாக்க முயல்கிறாள்.

"பாரு, நல்லாவே பாரு...ஒங்க வீட்ட நீ பாக்கறதுக்கு என்னா" என்று சொல்லியபடியே படுக்கையின் மீது அமர்கிறாள் நன்னி. அவள் அமரும் விதம் படுக்கைக்கு வலிக்கும்போல பாவனை இருக்கிறது. துளி சுருக்கமேதுமின்றி விரிக்கப்பட்டிருக்கிற படுக்கை விரிப்பின் வெண்மை மனதிற்கு உவப்பூட்டக் கூடியதாக இருக்கிறது. படுக்கையின் மையப்பகுதியில் விரிந்த நிலையில் குப்புறக் கிடக்கிறது நர்கிஸ் மாத இதழ். ராதிக்குத்தான் படிக்கப் பிடிக்காது. நன்னி நிறையப் படிப்பாள் இஸ்லாமியப் பத்திரிகைகளோடு ராணி, கல்கண்டு, சிறுவர் புத்தகங்கள் என ஒன்றையும் விடமாட்டாள்.

இவளது பார்வை தலையணைக்குப் பக்கவாட்டில் விரிக்கப்பட்டிருக்கிற துண்டு பேப்பரின் மீதும் பேப்பரின்மீது மடித்து வைக்கப்பட்டிருக்கிற துண்டுத் துணியின் மீதும் படிகிறது. இது எதற்காகவென்கிற யோசனையுடன் அதனையே உற்று நோக்குகிறவளிடம், "அந்தத் துணி வேர்வயத் தொடைக்கிறதுக்கு. துணிய பெட்ல வைக்கப் பிடிக்காம பேப்பர்மேல வச்சிருக்கேன். பெட்ஷீட் அழுக்காயிரும் இல்ல" என்று தன்னிச்சையாக விளக்கம் சொல்கிறாள்.

அதற்குமேல் அங்கே அமர்ந்திருக்கும் மன தைரியம் இல்லாதவளாக வெளியே வருகிறாள். அன்று மாலை தம்பி இவளிடம் கேட்டான், "ஏண்டி ஒனக்கு இந்த வேலை, நீ ரூமுலிருந்து வந்த பெறகு, நீ ஒக்காந்திருந்த அந்த சேர ஒரு மணி நேரமா தண்ணி ஊத்திக் கழுவினத பாத்தியா, நாங்கல்லாம் அந்த ரூமுக்குள்ள போறமா, நீ என்னத்துக்குப் போயி அவமானப்படுற?" அவனது கேலி கடும் வேதனைக்குள்ளாக்க, மறுநாள் அடுப்படியில் காய் நறுக்கியபடியிருந்த அம்மாவிடம்,

"ஏம்மா அவசியம் டாக்டர் கிட்டதான் காட்டணும். என்ன பண்ணலாம்?" கவலையுடன் கேட்கிறாள்.

"எனக்கொன்னும் தெரியாது. நீ பாத்துக்க இந்தச் சனியனையெல்லாம். இந்தப் பொம்பளயால மாசம் ஆயிரம் ரூபா மோட்டாருக்கு கரண்டு பில்லு வருது. இது இப்புடின்னா ஒங்க ராதாக்கெழுவி வாரத்துல ஒரு நா குளிக்கிறது கஷ்டம். இருக்கற எடமே நாறுது எல்லாம் எந்தலை நஸீபு. அதோட இந்தப் பொம்பள பாத்ரூமுக்குள்ள போன நிமிஷத்திலிருந்து ஒங்க ராதி செய்ற அட்டகாசம் இருக்கே, அஞ்சு நிமிஷத்துக்கொரு தடவ, அல்லாவே மூத்தரம் நெருக்குதே என்னா செய்வேன்னு சொல்லிக்கிட்டு ஹாலுக்கும் பாத்ரூமுக்குமா நடந்து என்னைய கொல்லும். பாதி நாள் வேணுமின்னே இது நடக்கும்". அம்மாவின் வேதனை மனதைப் பிசையக்கூடியதாக இருக்கிறது.

நினைவுகளிலிருந்து விடுபட்டவள் திறந்திருந்த கண்ணாடிக் கதவு வழியே ஓடிக்கொண்டிருக்கிற மரங்களையும் முகத்தில் விழுந்துகொண்டிருக்கும் காற்றையும் கவனமின்றி எதிர்கொள்கிறாள். இன்னும் எவ்வளவு நேரம் இப்படி முடியைக் கைகளால் ஒதுக்கியபடியே இருக்கப் போகிறோம் என யோசித்தவளுக்கு அலுப்பாக இருக்கிறது. ஊர் போய்ச்



படிப்பகம்

www.padippakam.com





# விளிம்பு

"கெழட்டு முண்ட, ஆம்பளய சாப்பிடவிடாம தொரத்திட்ட இல்ல, நிம்மதியா இரு, நீ மட்டும் நல்லாக் கொட்டிக்க."

சேரும்பொழுது முழுவதுமாகத் தலை கலைந்து தோற்றமே மாறி விடக் கூடும் என்கிற கவலையோடு ஒரு முடிவுக்கு வந்தவளாக,

"ஜன்னல் கதவ அடச்சிட்டு ஏ.ஸி. போடுங்க சச்சா" என்கிறாள்.

"என்ன சொன்னம்மா, ஏஸியா", என்றபடி பின்புறமாகத் தலை திருப்பிக் கேட்கிற சச்சாவின் முகம் இவள் அமர்ந்திருக்கும் நிலையைப் பார்த்து அதிருப்தியுற்றுச் சுருங்குகிறது.

"ஏன் இத்தன எடஞ்சல்ல ஒக்காந்துக்கிட்டு, முன்சீட்டு காலியாக் கெடக்கயில" என்கிறார்.

"இல்லயே நல்லாதான உக்காந்து ருக்கேன்" அவசரமாக மறுக்கிறவ ளுக்கு அப்படிச் சொல்வதற்குத் துளி நியாயமாவது இருந்தால் பரவாயில்லை என்றிருக்கிறது.

நன்னியின் முகத்தில் தனது கட்டளையை மீறி ஏ.ஸி. போடச் சொல்லிய இவள்மீதான அதிருப்தி தெளிவாகவே தெரிவதைக் கடைக் கண்ணால் பார்த்துத் தனக்குள் ளேயே சிரித்துக்கொள்கிறாள்.

ஏ.ஸி. ஓடத் துவங்கிய ஒரு சில நிமிடங்களிலேயே ராதியின் முகம் அதன் குளுமையை அனுபவிக்கத் துவங்கிவிட, நன்னியின் முகமோ ஆழமான யோசனையில் ஆழ்ந்தி ருப்பது போலிருக்கிறது. அது நிச்ச யம் சரியானதாக இருக்காது என்பது இவளுக்குத் தெரியும் என்பதனால் ஏ.ஸி. ஓடவேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தும் பொருட்டாக, "நல்ல வெயில் இல்ல, இந்தப் புரட்டாசி யிலகூட இந்த வாங்கு வாங்குது" என்கிறாள். இதனை யாரை நோக்கிச் சொல்வது என்பது பிடிபடாத காரணத்தினால் யாரிடம் என்றில் லாமல் ஒரு பொதுத்தன்மையோடு தான் சொல்லி முடித்தாள். இவளது குரல் ஓய்ந்த மறுநொடியே இத்தனை நேரமாகக் கண்மூடி மௌனித்திருந்த ராதி அவசரமாகக் கண் திறந்தவளாக,

"ஆமாமா. காலங்கெட்டுப் போச்சு. எந்த நாளயில வெயிலடிக்கணும், எந்த நாளயில மழ பெய்யணுங்கற கணக்கெல்லாம் மாறிப்போச்சு. எல்லாந் தலைகீழா ஆயிடுச்சு. கியாமத் நாளு நெருங்கிருச்சோ என்னமோ, வயசான மனுஷிய வாட்டியில்ல எடுக்குது பாழாப் போன வெயிலு."

அருவியின் தன்மையோடு காருக்குள் பெருகி ஓடிக்கொண்டி ருக்கின்றன ராதியின் வார்த்தைகள். இனி இதனைத் தடுப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டு மேயென்கிற கவலை இவளைத் தொற்றிக்கொள்கிறது.

நன்னியின் மூப்படைந்த நீள்சதுர முகம் என்ன மாதிரியான மாற்றத் தினை அடைந்து கொண்டிருக்கிறது என்பதனைப் பார்க்க வேண்டும் என விரும்பினாலும் அதனை எதிர் கொள்கிற மனதைரியம் இல்லாதத னால் அமைதியாகவே அத்தொண தொணப்பை ஜீரணிக்க முயல்கிறாள். மறுபடியும் அம்மாவின் நினைவு வருகிறது.

அதிகமாகவே கடிந்துகொண் டோமோ என யோசித்தவள், பாவம் அவளால் எப்படிக் கணவனிடம் கோபத்தைக் காட்ட முடியும். அல்லா பாவத்தை எழுத மாட்டானா, அத னால்தான் அதனை மற்றவர்களிடம் காட்டுகிறாள். அவளது பெரும் பாலான கோபங்கள் ராதியின் மீதுதான் திரும்பிவிடும்.

அதற்குச் சரியான காரணமும் இருக்கவே செய்யும். இவளுக்கு நினைவு தெரிந்த நாளிலிருந்தே தினமும் லுஹர் தொழுத கையோடு அத்தா சாப்பிட வந்துவிடுவார். அவர் வீட்டில் உள்ளே நுழையும் பொழுதே "சாப்பாடு, வச்சாச்சா" என்றபடி வந்துதான் பார்த்திருக் கிறாள் இவள்.

அம்மாவும் அந்த நேரத்தில் பறந்துகொண்டிருப்பாள் ஹாலுக் கும் அடுப்படிக்குமாக. குழந் தையைப்போல ஓடிஓடி சாப்பாடு எடுத்துவைப்பாள். ஒரு சில நாட் களில் ஸ்டவ் அடுப்பு அவளது அவசரத்திற்கு ஈடுகொடுக்காமல் போய்விடும். அந்த நேரங்களில் அவசரமாகச் சாப்பிட ஆரம்பிப்ப வரைப் பார்த்துப் பரிதாபமாக முகத்தை வைத்துக்கொண்டு கெஞ்சு வாள். "ஏங்க கொஞ்சம் பொறுத்துச் சாப்புடுங்க, இந்தா முட்டை வேகுது"

அவரும் அதனை ஏற்றுக் கொள்ளத் தயாராகும் வேளை, ராதி குறுக்கிட்டு முனகுவாள். "ஆம்பள எத்தன மணிக்கு வரு வான்னு தெரியாது பொட்டச்சிக்கி, ரெடியா வக்கிறதில்ல, அம்பூட்டு அக்கற"

அவ்வளவுதான். அத்தா சாப் பாட்டுத் தட்டை சோற்றோடு எடுத்து லாவகமாக ஹாலில் வீசிறியடிப் பார். "பயம் இருந்தாத்தான பொம் பளக்கி" பற்களை நெறுநெறுவெனக் கடித்தபடியே அவர் வீட்டை விட்டு வெளியேற அம்மா "என்னங்க, என் னங்க" என்றவாறே வெளித் திண்ணை வரைக்கும் துரத்திச் சென்று ஏமாற்றத்துடன் திரும்புவாள். அதன் பிறகு அவளது மொத்த கோபமும் ராதியின்மீது திரும்பும்.

"கெழட்டு முண்ட, ஆம்பளய சாப்பிடவிடாம தொரத்திட்ட இல்ல, நிம்மதியா இரு, நீ மட்டும் நல்லாக் கொட்டிக்க."

"நான் என்னா அவன சாப்புட வேணான்னா சொன்னேன்" என அரற்றத் துவங்குவாள் ராதி.

நினைவுகளின் பளு தாங்க முடி யாததாக மாற, கண்களைத் திறந்து கையை உயர்த்திக் கைக்கடி காரத்தைப் பார்த்தாள். இன்னும் இரண்டு மணி நேரமாவது பயணம் செய்ய வேண்டும். அலுப்பாக உணர்ந்தாள். டாக்டரிடம் ஏற்கனவே அப்பாயிண்ட்மெண்ட் வாங்கி யிருப்பதனால் உடனேயே திரும்பி விடலாம் என்கிற ஒரு நிம்மதி இருந்தாலும் ஒரு பிரச்சினையுமில் லாமல் ஊர் போய்ச் சேர வேண் டும் என்கிற கவலை கூடிக்கொண்டி ருக்கிறது. நிமிடங்கள் ஊர்ந்து போய்க் கொண்டிருக்கின்றன. இன்னும் கொஞ்சம் வேகத்தை அதிகப்படுத்தி னால் என்ன என்கிற யோசனை உண்டாகிறது. யோசனையைச் செயல்படுத்துவதற்கு ஏதேனும் தடை வரக்கூடுமோ என்னவோ.

திடீரென இவளது வலது பக்க இடுப்பில் குத்துகிறது நன்னியின் ஆட்காட்டி விரல். யோசனையிலி ருந்து விடுபட்டவளாக நன்னியின்



படிப்பகம்

www.padippakam.com



பக்கமாக முகம் திருப்பி என்ன என்கிறாள்.

"ஏ.ஸி.ய அமத்தச் சொல்ல மாட்ட" இவளது காதுக்கருகே ராதிக்குத் தெரியாமல் ரகசியமாகக் கடுகடுத்தவள் இவளது பதிலை எதிர்பார்க்காமலேயே மறுபடியும் இரண்டுமுறை இடுப்பில் குத்துகிறாள்.

இவள் அவசரமாக ராதியின் பக்கமாகத் தலை திருப்பிப் பார்த்தாள். அவள் கண் மூடிச் சாய்ந்திருப்பது போதுமானதாகயிருக்கிறது. மறுபடியும் நன்னியின் பக்கமாகத் தலை திருப்பிக் கண்களாலேயே அவளை அமைதிப்படுத்துபவள்,

"சச்சா ஏ.ஸி. போதும் நிறுத்திருங்க, கொஞ்ச நேரம் சன்னலைத் தொறந்து வச்சுக்கலாம்" என்றாள். நன்னியின் விருப்பப்படிதான் இது நடக்கிறது என்கிற விவரம் ராதிக்குத் தெரிந்துவிடக் கூடாது என்று மனதிற்குள் ஆண்டவனைப் பிரார்த்தித்துக் கொள்கிறாள். சச்சாவுக்கே இவள் சொல்வது குழப்பமாக இருந்திருக்க வேண்டும். சற்றுமுன் வெயிலின் கொடுமையைப் பற்றிச் சொன்னவளுக்கு இப்பொழுது என்ன வந்தது என்பதுபோல தலை திருப்பி இவளைப் பார்த்துவிட்டுப் பதிலேதும் சொல்லாமல் ஏ.ஸியை அணைத்துவிட்டுச் சன்னல் கதவுகளை இறக்கிவிடுகிறார்.

மறந்தும்கூட ராதியின் பக்கம் திரும்பிவிடக் கூடாது என்கிற முடிவுடன் கண்களை இறுக மூடி இருக்கையின் மீது சாய்ந்துகொள்கிறாள்.

'ரெண்டு பேரையும் ஒரே கார்ல கூட்டிப் போறது கஷ்டம்தான். இருந்தாலும் தனித்தனியா கூட்டிட்டுப் போனா ரெண்டு செலவு. வீண் அலைச்சல் வேற, எப்படியாவது சமாளிச்சுக்க' அம்மாவின் குரல் காதில் ஒலிக்கிறது.

"உஸ், வலி தாங்கலையே, டாக்டர் எத்தன மணிக்கு வரச் சொன்னாரு" வீங்கிய கால்களை அகட்டியபடி கேட்கிறாள் ராதி. "கொஞ்சம் வேகமாப் போத்தா எனக்குக் குடல வேற புரட்டிக்கிட்டுருக்குது, கால் வலி வேற உசுர் போறாப்புல இருக்கு" மகனிடம் புலம்புகிறாள் ராதி.

அவளது வேதனையைப் புரிந்துகொண்டவராகக் காரின் வேகத்தைக் கூட்டும் சச்சா, கவலையில் ஆழ்வதைக் கண்ணாடியில் பிரதிபலிக்கும் முகம் இவளுக்கு உணர்த்துகிறது.



# விளிம்பு

> வழக்கமாகத் தொவைக்கும் கல்லில் முன்னூறு அடிகளை வாங்குகிற புடவை, நாளை கூடுதலாக இருநூறு அடிகளைப் பெறக்கூடும்

சில நாட்களாகவே நீர் போகாமல் கஷ்டப்படுகிறாள் ராதி. இரவெல்லாம் வாந்தி வேறு எடுத்துக்கொண்டிருந்தாள். கால்கள் மட்டுமல்லாமல் உடம்பே ஒரு விதமான விறைப்புத் தன்மையோடிருந்தது. உப்பிப் பெருத்த வயிறு பார்ப்பதற்கே கஷ்டமாக இருந்தது.

வேகமெடுக்கும் கார் காற்றின் சீற்றத்தைக் காரின் உட்புறத்தில் உணரத் தருகிறது. நன்னி ராதியின் தலை முக்காட்டைக் கீழே தள்ளுகிறது. ராதி அதனைப் பொருட்படுத்தாதபடியிருக்க, நன்னியின் கைகள் ஓயாமல் முக்காட்டைச் சரி செய்தபடியிருக்கிறதைப் பார்த்து இவளுக்கு எரிச்சல் உண்டாகிறது. 'கொஞ்ச நேரம் முக்காடில்லாமல் இருந்தால் என்னவாகப் போகிறது, என்ற எண்ணத்துடன் சாலையைச் கவனிக்கத் தொடங்குகிறாள். முற்பகல் வெயிலில் பளபளக்கிறது சாலை. வேகம் கூடிய கார் அனல் காற்றைத் தனக்குள் நிரப்பிக்கொண்டிருக்கிறது. வெயிலில் நனைந்த மரங்கள் தலை கவிழ்த்து அணிவகுத்திருக்கின்றன. சாலையின் பக்கவாட்டில் தொலைவில் தெரிகிற கற்பாறைகளின் மீது கானல்நீர் வழிந்தோடிக்கொண்டிருக்கிறது. இந்த நிமிடத்தில் அன்றைய தினத்தின் வேலைகளைப் பட்டியலிட்டுக் கொள்ள விரும்பினாலும் அது வெட்டிவேலை என்கிற அலுப்பு மேலிட அவ்வெண்ணத்தைக் கைவிடுகிறாள்.

மறுபடி இடுப்பில் குத்துகிற நன்னியின் ஆட்காட்டி விரல் தாங்க முடியாத எரிச்சலைத் தருகிறது. என்ன என்பதுபோல நன்னியின் பக்கம் திரும்புகிறவளிடம் "வேகமாப் போக வேணாம்னு சொல்லு" காதருகில் கிசுகிசுக்கிறாள். இவளுக்குள் ஆத்திரம் நெருப்பாய்க் கனல்கிறது. கார் எப்படிப் போனால் என்ன. வீங்கிய காலைத் தொங்கவிட்டுக் கொண்டு பயணம் செய்ய இயலாமல்தானே ராதி பயணத்தைத் துரிதப்படுத்தினாள். இந்தக் கிழவிக்கென்ன. சுருக்கென்று ஒரு வார்த்தை சொன்னால் என்னவென யோசித்தவள் தன் கோபத்தின் தணல்களைத் தனக்குள்ளேயே புதைக்கிறாள். ஆத்திரத்தில் ஒரு வார்த்தை சொல்லிவிட்டுப் பிறகு விளைவுகளை என்ன செய்து சமாளிக்க முடியும் என்கிற எண்ணம் அமைதிக்குள்ளாக்குகிறது.

ஏதேனும் ஒரு சந்தர்ப்பத்தில் அம்மா ஒரு வார்த்தை சொல்லிவிட்டால் போதும் நன்னிக்கு.

"ஆமாம் நான் நாதியத்துப் போயி ஒங்க வீட்டுல கெடக்குறதுனால தான இப்புடி ஏச்சுப் பேச்செல்லாம் கேக்க வேண்டியிருக்குது". "அல்லா இந்த மண்டய ஒங்கிட்ட எடுத்துக்க மாட்டியா" என்றும் மேலும் பலவாறும் புலம்பித் தீர்த்துவிடுவாள். மருமகன் வீட்லெ இருந்துக்கிட்டு என்னா சவுடாலு என முனங்குவாள் அம்மா. ஏற்கனவே மருமகன் வீட்டில் இருப்பதை நினைத்து அவமானத்தில் குறுகிப்போயிருக்கும் நன்னியை அம்மாவின் வார்த்தைகள் ரணப்படுத்திவிடக் கூடாது என்று இவள் அம்மாவை அடக்குவாள்.

ராதி தன் கால் வலியின் தன்மையைச் சொல்லிப் புலம்ப ஆரம்பித்துவிட்டாள். இடையிடையே "ஏம்மா என்ன நாஞ் சொல்றது" என்று கேட்டுக்கொள்கிற விதம், தான் தனக்குள்ளாகப் புலம்பிக்கொண்டிருக்கவில்லை என்பதை உறுதி செய்யும் முயற்சியாக இருக்கிறது.

நன்னியின் விரல் மறுபடியும் இவளது இடுப்பைத் தொட, இவள் அதனை மிக சாவகாசமாக எதிர்கொண்டு என்னவெனக் கேட்கிறாள். அவளது தளர்ந்த முகம் ஆத்திரத்தினால் சிவந்து கிடக்கிறது. தனது தடிமனான உலர்ந்த உதடுகள் பிரியாமல் "பாட்டுப்போடச் சொல்லு" என்கிறாள். குரலின் கடுமை புதிதாக இருக்கிறது. அது ராதியின் புலம்பலை நிறுத்துவதற்கான முயற்சியாக இவளுக்குத் தெரிய வேண்டும் என்பதற்கான நடிப்பேதானே தவிர நன்னிக்குப் பாட்டுக் கேட்பதில்



படிப்பகம்

www.padippakam.com





எப்போதும் விருப்பம் அதிகம் என்பது இவளுக்குத் தெரியும்..

"சச்சா ஏதாவது பாட்டுப் போட்டுவிடுங்களேன், போரடிக் கிரது" சாலையோர மரங்களை வேடிக்கை பார்த்தபடி அலட்சிய மாகச் சொல்கிறாள். அவருக்கும் வேண்டியிருந்திருக்குமோ என்னவோ அதற்காகவே காத்திருந்ததுபோல இவள் சொன்ன மறுநிமிடமே பாடல் ஒலிக்க ஆரம்பிக்கிறது. இதுவரை காருக்குள் நிரம்பியிருந்த பேச்சொலி களை வழித்தெறிந்துவிட்டு இசை தன்னை நிரப்பிக்கொள்ளத் துவங்கு கிறது.

அது இவளுக்கு விருப்பமற்ற பாடல் என்றாலும் இன்னும்கூட தொடர்ந்துகொண்டிருக்கும் ராதியின் புலம்பலை நிறுத்துவதற் கான வழி அது மட்டும்தான். சாலையின் சீரற்ற தன்மை உண்டு பண்ணிய அசைவுகளால் இவள் நன்னியின் மீதும் ராதியின் மீதுமாக அவ்வப்போது சாய்ந்துகொண்டிருந் தாள். நன்னியின்மீது சாயும்பொழு தெல்லாம் நன்னி படும்பாடு இவ ளுக்குச் சிரிப்பை உண்டுபண்ணு கிறது. நன்னி உடுத்தியிருக்கும் புடவை நாளை என்ன பாடுபடப் போகிறதோ என மனதிற்குள் நினைத்து சிரித்துக்கொண்டாள். வழக்கமாகப் பின்கட்டில் கிடக்கிற தொவைக்கல்லில் முன்னூறு அடி களை வாங்குகிற புடவை, இவள் மீது உரசியதற்காகவும் ஆஸ்பத்திரி சேரின்மீது அமர்ந்த காரணத்திற் காகவும் நாளை கூடுதலாக இருநூறு அடிகளைப் பெறக்கூடும் என நினைத்துக்கொள்கிறாள்.

"அந்தப் புடவைல என்னாதேன் அழுக்கு இருக்கும். தான்உண்டு தன் ரூமு உண்டுன்னு இருக்கற மனுஷிக்கு ஏன் இப்படிப் புத்தி போகுது, மாசம் ஒரு பொடவ கிழியுது. அங்கபாரு பல்லக்கடிச்சுக் கிட்டுத் தொவைக்கிறத" வழக்க மான அம்மாவின் அரற்றல் நினை விலாடுகிறது.

நன்னியின் அம்பர் புடவையைத் துவைக்க பொன்னி மறுத்துவிடு வாள். "இருநூறு அடி அடிக்க எனக்கில்லம்மா வலுவு" என்று. நன்னி தன் சேலையைத் துவைப்பதற்கென்றே ஒரு ஆளை நியமித்து வைத்திருக்கிறாள். ஒரு புடவைக்கு இருபது ரூபாய். ஒவ்வொரு பக்கமும் இத்தனை அடி அடிக்க வேண்டும் என்பது கணக்கு. புடவையை வேலையாள் துவைக்க ஆரம்பித்த வுடனே பார்க்கும் தூரத்தில் எட்ட நின்றுகொண்டு நன்னி எண் ணிக்கையைத் துவக்குவாள். புடவையை மடித்துக்கொண்டு, ஒரு புறத்தில் நூறுமாக மற்றொரு புறத்தில் நூறுமாக, இருநூறு அடிகள் ஓங்கி ஓங்கி வீடே அதிரும் படி அடித்துக்கொடுத்த பிறகு வேர்த்துக்கொட்டும் உடலுடன் மூச்சிரைக்க அப்பெண் போனபிறகு, மீதி அடியை முடிந்த மட்டும் நன்னி தொடருவாள். அவளது மூச்சிரைப்பு வீட்டிலுள்ளவர்களின் நிம்மதியைப் பறித்துக்கொள்ளக் கூடியதாக இருக்கும். பெரிய வாளியில் 30 முறை தண்ணீரை நிரப்பி அலசி அலசித் தரையில் கொட்டி ஓட விட்டுக்கொண்டிருப் பாள். அவளது தேசலான உடல் வாகு இத்தனைக்கும் ஈடுகொடுப்பது வியப்பூட்டும்.

வாசலில் இது நடந்துகொண்டி ருக்கிற வேளையில் ராதி தனது தாட்டியான உடலை அசைத்து அசைத்து நடந்து வாசலுக்கு வந்து பார்வையிட்டுவிட்டுத் தன் அறைக் குள் நுழைந்துகொள்வாள்.

இது அன்றாடக் காட்சியாக நிலைபெற்றுவிட்டதொன்று என்றா லும் வீட்டில் உள்ள ஒவ்வொரு வரையும் ஏதோ ஒரு விதத்தில் இம்சித்தபடிதான் இருக்கும்.

"ஏம்மா போய்ச்சேர இன்னும் எம்புட்டு நேரம் ஆகும்" ராதியின் குரல் கேட்டுத் தன் நினைவுக்கு வருகிறவள் இடது கையை உயர்த்தி மணி பார்க்கிறாள். "இன்னும் நேரம் கெடக்கு". அலுப்புடன் பதில் சொல்லிவிட்டு, காதுக்குள் ஒலித்துக் கொண்டிருக்கும் பாடலின் இனிமைக் குள் தன்னை ஈடுபடுத்திக்கொள்ள முயல்கிறாள். மனம் லேசாகிக் கொண்டிருப்பதை அனுபவித்து உணர்கிறாள். வேறெதைக் காட்டிலும் இசைக்கு மட்டும் எப்படி இத்தனை சக்தி என வியக்கிறாள். மறுபடியும் இருக்கையின் மீது சாய்ந்து கண்களை மூடிக்கொள்பவளுக்கு ராதி தன் புலம்பலை நிறுத்திக்கொண்டுவிட்டது கூடுதலான சந்தோஷத்தைத் தருவ தாக இருக்கிறது.

மறுபடியும் இடுப்பில் குத்தும் விரல் துன்பத்தைத் தருவதாக யிருக்க, கசங்கிய முகபாவங்களுடன் அழுத்தமான குரலில் என்னவென நன்னியிடம் கேட்கிறாள்.

நன்னியின் முகம் வெகு சாந்த மாக இருக்கிறது. அவள் பேரில் தனக்கிருந்த அத்தனை புகார்களை யும் இந்த நிமிடத்திலேயே கை விட்டுவிட வேண்டும் போலிருக்கிறது. தன் கனிந்த முகத்தை இவளது காதுக்கு அருகே கொண்டு வருகிறாள் நன்னி. அவளுக்கு இப்பொழுது சொல்ல என்னயிருக்கிறது என யூகிக்க முயல்கிறாள்.

"இப்ப முடிஞ்சுச்சுல்ல. அந்தப் பாட்ட இன்னொருக்கா போடச் சொல்லு", ஆழமான விருப்பத்துடன் மிக மிகச் சன்னமாகச் கிசுகிசுக்கிறது.



படிப்பகம்

www.padippakam.com



குரல். முகம் வெட்கத்தினாலும் சங்கடத்தினாலும் சிவந்துகிடக்கிறது.

'எந்தப் பாடல் என்ன சொல் கிறாள்' சட்டெனப் புரிபடாமல் போகத் தன் நினைவுகளைச் சீராக்கி யோசிக்கிறவளுக்குப் பாடல் எது வென்பது நினைவுக்கு வருகிறது. நன்னியின் முகம் கூச்சமுற்றிருப்ப தன் காரணம் அது ஒரு காதல் பாடல்.

அவளது சங்கடத்தைத் தான் அறிந்துகொண்டுவிட்டதாகக் காட்டிக்கொள்ளாமலிருப் பதற்காக, "அந்தப் பாட்டா... என்றவள், "எனக்கும் அது ரொம்பப் புடிக்கும்" என்கிறாள். நன்னியின் குரலைக் காட்டிலும் உள்ளடங்கியதாக இருக்கிறது இவளது குரல்.

"நான் கேட்டேன்னு சொல்லிப் புடாத" பதற்றத்துடன் முணுமுணுக் கிறது நன்னியின் குரல்.

இல்லை என்பதுபோல தலை யசைத்தவளின் முகத்தில் தெரியும் நம்பகத்தன்மை நன்னியின் பதற் றத்தை ஒன்றுமில்லாமல் செய்கிறது.

ராதியின் கவனம் எங்கிருக்கிறது என்பதை அறிந்துகொள்ளும் வித மாக ஓரக்கண்ணால் நோட்டமிடுகி றாள். தனது ஓயாத முணுமுணுப்பை நிறுத்திவிட்டுக் கண்களை மூடிச் சாய்ந்திருக்கிறாள் ராதி. அவளது நிறமொழுகும் கொழுத்த கன்னங் களின் மீது உரசிச் செல்கிறது அனல் காற்று. "சச்சா இதுக்கு முன்னாடி படிச்சுச்சல்ல, அந்தப் பாட்டையே மறுபடி போடுங்க. நல்ல பாட்டு" வெட்கத்தினால் வார்த்தைகள் உடைகின்றன.

காதல் பாடல் ஒன்றைத் தந்தை யிடமே விரும்பிக் கேட்பதன் சங்க டங்கள் ரொம்பவே புதிதாக இருக் கின்றன. 'எந்தப் பாட்டு' இவளைப் பார்க்கத் திரும்பியவர் பதிலேதும் எதிர்பார்க்காமலேயே கேசட்டை ரீவைண்ட் செய்து முதலில் பாடிய பாடலுக்கே கொண்டு வருகிறார். பாடல் மறுபடியும் துவங்க ராதியின் உடலில் இவள் உணரத் துவங்கும் அசைவுகள், கண்கள் மூடியே இருந்தாலும் தான் கவனத்துடன் இருப்பதான எச்சரிக்கையைத் தருவதாக இருக்கிறது.

நன்னிக்கு இசையின் மீதிருக்கும் விருப்பம் ராதிக்கும் தெரியும். இனி அவள் குறுக்கீடு செய்யக்கூடும் என்பது நிச்சயமாக, அதனை அனு



# விளிம்பு

தன் விருப்பப்படிதான் எல்லாமும் நடக்கிறது என்கிற கர்வம் கனிய வைத்திருக்கிற அவளைப் பார்க்கும் ராதியின் முகம் சட்டெனக் கடுமையுறுவதை இவளால் காண முடிகிறது.

மதிக்கக் கூடாது என்கிற எண்ணத் துடன் தற்காப்பு நடவடிக்கையாக இவள் அப்பாடலை வெளிப்படை யாக ரசிக்க ஆரம்பிக்கிறாள். கூடுதல் ஆதாரமாகத் தனது இடது கைவிரல் களை இடப் பக்கத் தொடையின் மீது தட்டித் தனது இசை ரசனையைக் கூட்டிக் காட்டுகிறாள். அவளுக்கே அது அதிகப்படியாகத் தெரிந்தாலும் வேறு வழியில்லாததால் அந்நாட கத்தைத் தொடர்ந்தபடியே பாடல் முடியும் கணத்திற்காகக் காத்தி ருக்கத் துவங்கினாள்.

பாட்டு முடிவுக்கு வருகையில் நிம்மதியான பெருமூச்சொன்றை விடத் தயாராகிறவளது இடுப்பில் எதிர்பாராத தருணத்தில் குத்தும் நன்னியின் விரல் கடும் மன அயர்ச்சிக்கு இட்டுச் செல்கிறது.

இன்னும் என்ன வேண்டும் உனக்கு என்பதுபோல தனது கோப முற்ற விழிகளால் நன்னியை உற்றுப் பார்க்கிறாள். இவளது கண்களில் தெரியும் தணலைக் கொஞ்சமும் பொருட்படுத்தாதவளாக, மறுபடியும் அதே பாடலை வேண்டுகிற அவளது கண்கள், இவளைக் கடுமையான கோபத்திற்குட்படுத்துகின்றன.

தொடரும் நிமிண்டலைக் கண்டு கொள்ளாமலிருக்க முயல்பவ ளுக்கு, நன்னி தனது முகத்தில் பொதிந்து வைத்திருக்கிற இறைஞ்சுதல் துன்பு றுத்தக்கூடியதாக இருக்கிறது.

"அல்லாவே சீக்கிரம் போய்ச் சேர்ந்துவிட மாட்டோமா" எனத் தனக்குள்ளாக முனகிக் கொள்கிறாள். இது கடைசி முறை என்பதுபோல நன்னியுடன் முகத்தைப் பார்த்து உறுதி கேட்டுக்கொண்டவள் அதே வேகத்தில் மறுபடி "அந்தப் பாட்டையே போடுங்க கேக்கலாம்" என்கிறாள். அவசரமாகச் சொல்வது யோசிப்பதற்கும் சொல்வதற்குமான இடைவெளியை அழிக்கிறது என்றா லும் கூச்சத்தில் ஒடுங்கிக் கிடக்கிறது தொண்டை. தன் காலடியில் இருந்த தண்ணீர் பாட்டிலை அவசரமாக எடுத்துத் தண்ணீரை வாய்க்குள் சரிக்கிறாள்.

சச்சாவிடம் டிரைவிங்கில் ஏதோ ஒரு சுணக்கத்தை உணர்கிறாள். அவரது முகத்தில் அரும்புகிற புன் முறுவல் முற்றிலும் வித்தியாசமான தாக இருக்கிறது. உண்மையில் இந்தப் பாடலை விரும்புவது தான் தானென அவரை நம்பவைக்க வேண்டுமென்கிற தவிப்பு உண்டா கிறது. ஆனாலும் அதை எப்படிச் செய்வது என்பது புரியாமல் மௌனமாக இருந்தவள் ஓரக்கண் ணால் ராதி என்ன செய்கிறாள் என்பதை நோட்டமிடத் துவங்கு கிறாள். மூன்றாவது முறையாகவும் அப்பாடல் ஒலிக்க அறைகுறை தூக் கத்தைக் கைவிட்டு தனது பெருத்த முகத்தை நன்னியின் பக்கமாகத் திருப்பி உற்றுக் கவனிக்கிறாள் ராதி.

இசையின் இனிமையும் வெற்றிப் பெருமிதமும் சேர்ந்து ஒய்யாரமாகச் சாய்ந்திருக்கிறாள் நன்னி. தன் விருப்பப்படிதான் எல்லாமும் நடக்கிறது என்கிற கர்வம் கனிய வைத்திருக்கிற அவளைப் பார்க்கும் ராதியின் முகம் சட்டெனக் கடுமை யுறுவதை இவளால் காண முடிகிறது. நன்னியின் முகத்திலிருக்கும் பெரு மிதத்தைப் பிடுங்கி எறிய வேண்டு மென்கிற ஆத்திரத்துடனும் அவள் செய்துகொண்டிருக்கும் காரியத் தினை இழிவு படுத்த வேண்டுமென் கிற உந்துதலுடனும் பேசத் தொடங் குகிறாள்.

"ஏப்பா அந்தக் கண்றாவியா நிறுத்த மாட்ட. பயணம் செய்றப்ப இதையெல்லாமா கேப்பாங்க. கர்மம், கர்மம். பயணத்த லேசாக்கி வைடா அல்லான்னு பைத்து கேஸட்ட போட்டுவிடுவியா மானே தேனேங்கிற பாட்ட போட்டுக் கிட்டு"... முகத்தை அருவருப் போடு அஷ்டகோணலாக்கிக் கொண்டு சிடுசிடுப்பவளது குரலில் நன்னியை ஏளனம் செய்யும் தொனி யோடு தன் மகனுடைய கார் இது என்கிற அதிகாரமும் மேலோங்கி யிருக்கிறது.

அவமானத்தினால் சூம்பிக் கொள்கிற நன்னியின் முகம்



படிப்பகம்

www.padippakam.com



இவளை வேதனைக்குள்ளாக்குகிறது. என்ன செய்வதென்கிற தடுமாற்றத்தில் ஆழ்கிறாள். அமத்தி விடுத்தா கருமத்த, மறுபடி ராதியின் குரல் கட்டளையிடுகிறது. அக்கட்டளை நன்னியை மட்டுமின்றி இவளையும் அச்சுறுத்தக்கூடியதாக இருக்கிறது.

காருக்குள் நிரம்பிவிட்ட இறுக்கத்தினை உணர்ந்துகொண்டவராகப் பதிலேதும் சொல்லாமல் காரின் வேகத்தை நிதானித்தபடி பைத் கேஸட்டைத் தேடி எடுத்து ஒலிக்கச் செய்கிறார் சச்சா. தோல்வியுற்றுக் கறுத்துக் கிடக்கிற நன்னியின் முகம் சீர்செய்ய இயலாததொரு நிலையில் தொய்ந்து கிடக்கிறது. தான் விரும்பியது நடக்காத சோகமும் தன் இயலாமையை நிச்சயித்துக் கொண்ட வருத்தமும் இணைந்து அவளது முகவாட்டத்தைக் கூட்டிக் காட்டுவதாகயிருக்கிறது.

காருக்குள் கணீரென ஒலிக்கத் துவங்குகிற பைத்தைத் தனது வெற்றியாகப் பாவித்தபடி ரசிக்கிறாள் ராதி. அதன் மீதான தனது ஈடுபாட்டை மகனிடம் காட்டிக்கொள்கிற மும்முரத்தோடு, "ஏத்தா என்னா மாதிரியான குரலு பாத்தியா" சொல்லிவிட்டுத் தனக்குத்தானே புளகாங்கிதம் கொள்கிறாள். அவ்வப்போது கேட்டபடியிருக்கிற அவளது மிகையான பாராட்டுணர்வு இவளை இம்சித்தபடியிருக்க தார்ச்சாலையின் கருமையை விழுங்கியபடி வழுக்கிக் கொண்டிருக்கிறது கார். காருக்குள் நிகழ்ந்துகொண்டிருக்கிற பிரச்சினைகள உண்டாக்கிய மனச் சோர்வு உச்சக்கட்டத்தினை அடைந்து கொண்டிருக்க, அளவற்ற எரிச்சல் ஊற்றெடுத்துத் தன்னை மூழ்கடிப்பதை உணர்கிறாள். பைத்தின் ஒலி வேறு எரிச்சலின் தன்மையைக் கூட்டியபடியிருக்க, அதை எவ்விதம் பொருட்படுத்தாமலிருப்பது என்கிற குழப்பத்துடன் பற்களை இறுகக் கடித்து, கோபத்தை விழுங்குகிறாள். செல்லும் பாதை தொலைத்துத் தேடிக்கொண்டிருப்பதான ஒரு எண்ணத்தை நீள்கிற பாதை உண்டுபண்ணுவதாக இருக்கிறது.

மூடிய கண்களோடு தலையைப் பக்கவாட்டில் அசைத்துத் தன் ரசிப்புத் தன்மையைத் தன் மகனிடம் நிரூபித்துக்கொண்டிருக்கிறாள் ராதி. தன் வயதுக்கேற்ற காரியமொன்றைச் செய்துகொண்டிருக்கிறோம் என்கிற



# விரிப்பு

அவளது கர்வத்தை எதிர்கொண்டு மனதிற்குள் புன்முறுவல் செய்கிற இவளுக்கு இந்த அழுக்கு பிளாஸ்டிக் இருக்கையில் நன்னி எவ்விதம் அமரப் போகிறாள் என்கிற கவலை முளைவிடுகிறது

விஷயத்தைப் பெரும் கவுரவமாக மனதிற்குள் இருத்தியவளாக.

அவளது அச்செயல் நன்னிக்கு இசைமீதுள்ள விருப்பத்தை நிராகரிப்பதாகவும் ஏளனம் செய்வதாகவும் இருக்கிறது.

நோயாளிகளால் நிரம்பிய மருத்துவமனையின் நீண்ட வராந்தா மனச் சோர்வை அதிகரிக்கச் செய்கிறது. மூக்கைத் துளைக்கிற மருந்தின் நெடியோடு அமர்வதற்கான இருக்கை தேடிச் செல்பவளைப் பின் தொடர்ந்து நன்னியும் ராதியும் வந்துகொண்டிருக்கிறார்கள். டாக்டரின் அறைக்குப் பக்கவாட்டில் காலியாகக் கிடக்கிற இருக்கைகள் கண்களில் பட அதனை நோக்கிச் செல்கிறாள். "என்னையக் கொஞ்சம் கையப் புடிச்சுக்கோ" வீக்கமுற்ற கால்களைச் சிரமத்துடன் நகர்த்தியபடி அழைக்கிறாள் ராதி.

இவள் மறுபடியும் அவளது அருகில் நடந்துசென்று அவளை அணைத்தபடி நடத்தி, இருக்கையில் அமர வைக்கிறாள். கக்கத்தில் இடுக்கிய பையுடன் நிதானமாக, தளராத நடையுடன் வருகிற நன்னியின் முகம் தனக்குப் பிறருடைய உதவி தேவையில்லை என்பதைக் கர்வத்துடன் ராதியிடம் பறைசாற்றுவதாக இருக்கிறது.

அவளது கர்வத்தை மௌனமாக எதிர்கொண்டு மனதிற்குள்ளாகவே புன்முறுவல் செய்கிற இவளுக்கு இந்த அழுக்கடைந்த பிளாஸ்டிக் இருக்கையில் நன்னி எவ்விதம் மனம் ஒப்பி அமரப் போகிறாள் என்கிற கவலை முளைவிடுகிறது. அது கவலை மட்டும்தானா என்று யோசித்தவள், இல்லை ஆர்வம் தானென அடையாளப்படுத்திக் கொள்கிறாள்.

இவள் தற்செயலாகக் காண நேர்கிற ராதியின் முகம் திடீரெனப் பிரகாசம் கொண்டிருப்பதாகத் தோன்றுகிறது. இத்தனை நேரம் வேதனையினால் சுருங்கிக் கிடந்த முகம் இத்தனை பிரகாசம் கொள்ள இங்கே என்ன விஷயம் இருக்க முடியும் என்கிற குழப்பத்துடன் தங்களைச் சுற்றிலும் பார்வையைச் சுழற்றி ஏமாந்தவளின் பார்வை ராதியின் முகத்தின் மீதே ஆழப் பதிகிறது.

தனக்கருகில் கிடக்கிற இருக்கையையும் தயக்கத்துடன் நின்று கொண்டிருக்கிற நன்னியையும் மாறிமாறிப் பார்த்துக்கொண்டிருக்கிற ராதியின் எதிர்பார்ப்பு புரிய, மௌனம் பூணுகிறாள் இவள்.

இடுப்பில் கைவைத்தபடி சுற்று முற்றும் கம்பீரமாக நோட்டமிடுகிறாள் நன்னி. அவளைப் பற்றி இவர்கள் கொண்டிருக்கும் ஆர்வம் புரிந்துவிடக் கூடாது என்கிற எண்ணம் கொண்டவளாகப் பதற்றத்துடன் மருத்துவரின் அறைக் கதவின் மீது பார்வையைத் திருப்பி நோட்டமிடுகிறாள் இவள்.

தன் கக்கத்திலிருக்கக் கூடிய மஞ்சள் நிறத் துணிப்பையை எடுக்கிறாள் நன்னி. பையின் உள்ளே நுழைந்து வெளிவருகிற அவளது கையில், மடிக்கப்பட்ட ஒரு நியூஸ் பேப்பர் இருக்கிறது. நடுக்கமுறுகிற கைகளினால் அதனை உதறி ராதிக்குச் சற்றுத் தள்ளிக் கிடக்கிற இருக்கையின் மீது விரித்து அதன் மீது ஜம்மென்று அமர்கிறாள். அவளது செயலின் விசித்திரத் தன்மையை இவர்கள் மட்டுமின்றி ரிஷப்ஷனில் இருந்த அத்தனை பேருமே கவனிக்கிறார்கள் என்றாலும் அவள் அதனைப் பொருட்படுத்துவதாகவே தெரியவில்லை. நிதானமாகப் பையிலிருந்து வெற்றிலைப் பெட்டியை எடுத்து, வெற்றிலையை மடித்துப் போட ஆரம்பிக்கிறாள்.

மருத்துவமனையும் அதன் சூழலும் உண்டாக்கக் கூடிய மனச் சோர்வு இன்று வழக்கத்தைக் காட்டிலும் பன்மடங்காகிவிட்டிருப்பதை இவள் உணர்கிறாள். சீக்கிரமே வேலை முடிந்துவிட்டால் ஊர் போய்ச் சேர்ந்துவிடலாம் என்கிற எண்ணம் வலுப்பெற்றபடியிருக்கிறது.



படிப்பகம்

www.padippakam.com





# விளிம்பு

பதற்றத்துடன் மெல்லிய குரலில் சச்சாவை அழைக்கிறாள். அவளுடைய பதற்றம் அவரைத் தொற்றிக்கொள்ளாததிலிருந்து அவர் எதையோ அறிந்திருந்தார் எனபது புரிகிறது.

"என்ன இன்னுமா உங்களக் கூப்புடல. நேத்தே அப்பாயிண்ட் மெண்ட் போட்டாச்சே" என்றபடி வருகிற சச்சா ரிஷப்ஷனிஸ்டை நோக்கிச் செல்கிறார். அவர் திரும்பு வதற்காகக் காத்திருக்கிறாள். ரிஷப் ஷனிலிருந்த பெண்ணிடம் ஏதோ பேசிவிட்டு "உம் வாங்க போகலாம்" என அழைக்கிறவரின் குரல் மாபெரும் நிம்மதியைத் தரக்கூடிய தாக இருக்கிறது.

முதலில் யாரை அழைத்துச் செல்வது என்கிற குழப்பம் மேலிட அவரது முகத்தைப் பார்க்கிறாள். நன்னியை நோக்கி நீளும் அவரது கரங்கள் குழப்பத்தைப் போக்குகின்றன.

இதற்காகவே காத்திருந்தவளாக நன்னி அவசரமாக எழுந்துகொள்ள சச்சாவும் இவளுமாக அவளை மருத்துவரின் அறைக்குள் அழைத்துச் செல்கிறார்கள். நன்னியின் நடையில் தெரியும் மிடுக்கு ராதியை எரிச்ச லுக்குட்படுத்த வேண்டும் என்கிற தோரணையில் இருக்கிறது.

"பிரஷர் மட்டும்தான். தொடர்ந்து மாத்திரை சாப்பிட்டாப் போதும்" என்கிற டாக்டருக்கு நன்றி சொல்லி விட்டு உள்ளே சென்ற ஒரு சில நிமிடங்களில் வெளியில் வருகிறவர் களைத் தன் பொறாமை பொங்கும் விழிகளால் உற்றுப் பார்க்கிறாள் ராதி. தன் ஆரோக்கியத்தைப் பறை சாற்றும் விதமாக நன்னியின் நடையில் மிடுக்கு இன்னும் சற்றுக் கூடியிருக்க, மறுபடியும் தான் அமர்ந்திருந்த இருக்கையின்மீது அமர்கிறாள்.

இவளும் நன்னியும் வெளியில் வந்த பின்னும் சச்சா மருத்துவரோடு அறைக்குள்தான் இருக்கிறார். நன்னியின் பிரச்சினைகள் குறித்து அவளுக்குத் தெரியாமலேயே மருத் துவரிடம் ஆலோசனை கேட்பது என்பது முன்பே திட்டமிட்ட ஒன்று. இவளுக்கு நம்பிக்கை உண் டாக மறுத்தது. என்ன ஆலோசித்து என்ன நோயாளியின் ஒத்துழைப்பு இல்லாமல் மருத்துவம் சாத்திய மாகப் போவதில்லை என்பது தீர் மானமாகப் புரிய, ராதியை உள்ளே அழைக்கும் தருணத்தை எதிர் நோக்கியவளாக அமர்ந்திருக்கிறாள்.

ராதியின் வீங்கிய கால்களைப் பரிசோதிக்கிற மருத்துவரின் முகம் அடையும் மாறுதல் கவலைக்குள் ளாக்குகிறது.

"மொதல்ல ரத்தமும் நீரும் எடுத்துக் குடுங்க் டெஸ்டுக்கு. ஈவினிங் ரிஸல்ட் வந்தப்புறம் ட்ரீட்டிமெண்ட் எடுத்துக்கலாம்" என்கிற அவரது வார்த்தைகள் தான் நினைத்து வந்ததுபோல உடனடி யாக வேலை முடிந்துவிடப் போவ தில்லை என்பதைத் தெளிவாக்குகிறது.

"நீ போம்மா நான் இதோ வர்றேன்" இவளையும் ராதியையும் நோக்கிச் சொல்கிற சச்சாவின் முகத்தில் ஏதோ சமிக்ஞை இருப்ப தாக உணர்கிறாள்.

ராதியின் கைளைப் பற்றியபடி அறையிலிருந்து வெளியே வருகிற வர்களை, "என்ன பாதையில குறுக்க நின்னுக்கிட்டு", வெடுக்கெனச் சொல் கிற நர்ஸின் குரலை அலட்சியப் படுத்தியபடி பரிசோதனை அறையை நோக்கி நகர்கிறவளிடம் "என்ன டெஸ்டா" என்று மறுபடியும் இவளைப் பார்த்துக் கேட்டு, இவளி டமிருந்து பதிலேதும் வராத ஆத்திரத்தில் அங்கிருந்து விலகிச் செல்கிறாள்.

அவளது குரலில் தெரியும் கடுகடுப்பும் இயந்திரத் தன்மையும் அவள் பேரில் கடுமையான குரோ தத்தை உண்டு பண்ணுகிறது. மருத் துவமனை செவிலிப் பெண்களின் அலட்சியம் வழக்கமானது என்றா லும் இன்றைக்கு மட்டும் ஏனோ தாங்கிக்கொள்ளவியலாத எரிச்சலை உண்டுபண்ணுவதாக உணர்கிறாள்.

அந்த அறை ரொம்பவும் சிறியதாக இருக்கிறது. மேசைக்கு அருகில் மர இருக்கையில் அந்தப் பெண் அமர்ந்திருக்கிறாள். கிள்ளிப் பிடிக்கச் சதையில்லை என்று சொல வதற்குத் தோதாக இருக்கிறது அவளது உடல்வாகு. இவர்களைப் பார்த்ததும் அவசரமாகவும் இல்லா மல் நிதானமாகவும் இல்லாமல் தேவையான வேகத்தோடு எழுந்தவள் "டெஸ்ட்டா? எங்கே, சீட்டக் குடுங்க" என்கிறாள்.

அவளது முகம் காகிதப் பூவைப் போல உலர்ந்துபோய் பழுப்பேறிய வெள்ளை உடை விரைவிலேயே மஞ்சள் நிறத்தை அடைந்துவிடும் நிலையில் இருக்கிறது. அப்பெண் தனக்கெதிரில் கிடக்கும் இருக் கையைக் காட்டி அதில் ராதியை அமரச் செய்துவிட்டு தனது வேலையைத் துவங்க ஆயத்தம் செய்கிறாள்.

இருக்கையில் அமர்ந்தபடி சேலையை முழங்காலுக்கு மேலாகத் திரட்டி வீங்கிக் கிடந்த கால்களை விரல்களினால் குத்திப்பார்த்து வீக்கத்தின் தன்மையைக் கணிக்க முயல்கிறாள் ராதி. அவள் முகம் காத்துக் கிடக்க வேண்டும் என்கிற நினைவுகளிலிருந்து மீண்டு நன்னி யையும் காக்க வைக்கப்போகிறோம் என்கிற நிம்மதியைப் பிரதிபலிக்கிற தாக எண்ண வைக்கிறது.

ரத்தமும் நீரும் எடுத்துக் கொடுத்து விட்டு அமர வேண்டிய இடத்திற்கு வருகிறவர்களை ஆத்திரத்துடன் எதிர்கொள்கிறாள் நன்னி.

"என்ன கௌம்பலை?" உச்சஸ் தாயில் ஒலிக்கும் அவளது குரல் மருத்துவமனையின் சூழலில் பெரும் அதிர்வை உண்டுபண்ணுகிறது. அங்கிருந்த ஒவ்வொருவரது கவன மும் இவர்களை நோக்கிக் குவிய, அவமானமாக உணர்ந்தவள், "போக லாம். மொத ஒங்க மருந்துச் சீட்டைக் குடுங்க" என்கிறாள். "மாத்திரை யெல்லாம் வாங்கியாச்சு. எப்பொப் போறதுன்னு சொல்லு, மொதல்ல, இப்பிடி சுணங்குமுன்னு இருந்தா நான் வந்துருக்க மாட்டேனில்ல..." குழந்தையின் பிடிவாதம் நன்னியின் முகத்தில்.

ராதி அவளது பதற்றத்தை ரசித்தபடி நிதானமாக "ஏம்மா எத்தினி மணிக்கி ரிசல்ட்டு வருமாம். சாயங்காலத்துக்குத்தானா?" பொய்யான கவலையோடு கேட்ட படி தஸ்பீஹ் மணியைக் கையி லெடுத்து உருட்டத் தொடங்குகிறாள்.


இவள் கண்களால் சச்சாவைத் தேடியபடி அவ்விடத்திலிருந்து விலகிச் செல்கிறாள். அதே இடத்தில் நின்றுகொண்டிருக்கும் பட்சத்தில்



படிப்பகம்

www.padippakam.com





நன்னியிடம் கோபத்தில் எதையேனும் பேசிவிடுவோம் என்கிற பயம் அவளை அவ்விடத்திலிருந்து துரத்தியடிக்கிறது. நன்னியிடம் இவள் கோபத்தில் சொல்லப் போகும் ஒரு வார்த்தைக்காகத்தான் ராதி நீண்ட நேரமாகக் காத்திருக்கிறாள் என்பது ஏனோ நினைவில் இருந்துகொண்டிருக்கிறது.

“அட அல்லாவே, இன்னும் எம்புட்டு நேரத்துக்கு இப்புடி காத்துக்கெடப்ப. இந்த கிருமியிலயும் பினாயில் வாடையிலயும் தெரியாம இல்ல வந்து மாட்டிக்கிட்டேன்” இரண்டு கைகளையும் உதறி எதையோ பறிகொடுத்தவள்போலப் புலம்ப ஆரம்பிக்கும் நன்னியின் குரலைப் புறக்கணித்தபடி வரவேற்பறையை நோக்கிச் செல்கிறாள். வாசலில் நின்றுகொண்டு யாரிடமோ பேசிக்கொண்டிருந்த சச்சா இவளைக் கண்டதும் அருகில் வந்து, “என்ன, சாப்பிடப் போகலாமா. மணி பனிரெண்டரையாயிடுச்சு” என்கிறார். அவரது முகம் அதிகமாகவே களைப்புற்றிருக்கிறது.

நடமாட்டம் குறைந்திருந்த மருத்துவமனை வளாகத்தில் நீளமாக விழுந்து கிடக்கிறது வெயில். டாக்டர் இன்னும் சற்று நேரத்தில் சென்றுவிடக் கூடும். அவர் மீண்டும் வரும் வரைக்கும் காத்துக் கிடக்க வேண்டும் என்கிற யோசனையோடு நன்னியின் ஆர்ப்பாட்டங்களைச் சமாளிப்பது குறித்த கவலைகளும் சேர்ந்துகொண்டிருக்கின்றன. “சரி நாம சாப்பிட்டு வரலாம்” என்றபடி காரை நோக்கிச் செல்கிற சச்சாவின் குரல் தளர்ந்து கிடக்கிறது.

அவள் மறுபடியும் அவர்கள் காத்திருக்கும் இடம் நோக்கி வருகிறாள். நன்னியின் புலம்பல்கள் ஏதும் காதில் விழாதது வியப்பூட்டுகிறது. இத்தனை விரைவாகவே சமாதானம் ஆகிவிட்டது எப்படி என்று அதிசயித்துக்கொள்கிறாள். நன்னியின் பதற்றங்கள் தந்த தெம்போடு இறுமாப்புடன் அமர்ந்திருக்கிறாள் ராதி. எஞ்சியிருந்த நோயாளிகளின் முகங்களில் தெரிகிற ஆர்வம் சங்கடமூட்டுகிறது. உடனடியாக வெளியேற வேண்டுமென்கிற தவிப்புடன், “வாங்க போய்ச் சாப்பிட்டுட்டு வரலாம்” என்றாள்.

“சாப்புடுறது இருக்கட்டும், எப்ப ஊருக்குன்னு சொல்லு” கடுகடுக்கிறாள் நன்னி. இவள் பொறுமையை இழக்கும் கணத்திற்காக ராதி காத்திருப்பது நினைவிலிருக்க, அதிகபட்ச அமைதியுடன் “சாயங்காலம்” என்கிறாள்.

“இந்த ஆஸ்பத்திரி நாத்தத்துல என்னால இருக்க முடியல. மயக்கமா வருது. எச்சில்கூட முழுங்கப் புடிக்காம, தொண்ட வறண்டுப் போச்சு, கர்மம் கர்மம்”... தோற்றுப் போய்க்கொண்டிருக்கிறோம் என்கிற வருத்தத்துடன் மன்றாடுகிறாள் நன்னி.

“சரி வாங்க. மொத சாப்புடலாம். பிறகு மத்ததப் பாக்கலாம்”. இவளது பேச்சில் நம்பிக்கை கொண்டவளாக நன்னி இருக்கையிலிருந்து எழுந்து வெளியே செல்ல, இவள் ராதியின் கைகளைப் பற்றி எழுப்பி காருக்கு அழைத்து வருகிறாள்.

சாப்பிடும் நேரத்தில் என்ன பிரச்சினை வருமோ என்ற கவலையோடு “பாத்ரூமுக்கு வறிங்களா” என்கிறாள்.

“பாத்ருமா, இங்கையா” அலட்சியமாகக் கேட்கிற நன்னியை உற்றுப் பார்த்து அவளை அமைதிப்படுத்தியவள் ராதியின் திசையில் பார்த்து “நீங்க” என்கிறாள்.

நன்னி சொன்ன விதம் இந்தப் பாத்ரூமை உபயோகப்படுத்துபவர்களை மட்டம் தட்டுவதாகயிருந்ததால் தன் கவுரவத்தைக் காப்பாற்றும் பொருட்டு, “நானும் வரலை” என்கிற ராதியை வேதனையுடன் பார்த்தபடி தான் மட்டும் கிளம்புகிறாள்.

“நான் கை கழுவணும். கூட்டிப் போ”. இவளைத் தொடர்கிற நன்னியை வேண்டாவெறுப்புடன் அழைத்துச் செல்கிறாள். இவர்கள் திரும்பும்பொழுது இவர்களுக்காக வரவழைக்கப்பட்ட உணவு வகைகள் மேசையை நிரப்பியிருக்கின்றன.

இத்தனை வகையான உணவுகள் தேவைதானா என்கிற குழப்பத்துடன் அமர்ந்தவள், இவர்கள் வரும் முன்பே ராதி சாப்பிட ஆரம்பித்துவிட்டதைக் கவனிக்கிறாள்.

ஒரு குழந்தையைப் போலிருக்கிறது அவள் சாப்பிடுவது. அத்தனை வகையான உணவையும் தன் பிளேட்டில் நிரப்பி வைத்திருக்கிற விதம் உணவு வகைகள் தீர்ந்து போய்விடுமோவென அவள் கவலை கொண்டிருப்பதாக எண்ணத் தோன்றுகிறது. தலைநிமிராமல் அவள் கோழியையும் மீனையும் சாப்பிடுவதைப் புன்சிரிப்புடன் வைத்த கண்ணை எடுக்காமல் பார்க்கிறாள்.

நன்னியின் முகமோ அருவருப்பான பிராணியொன்றைப் பார்ப்பதுபோல பாவனை செய்கிறது. தன் கக்கத்திலிருந்த பையிலிருந்து பேப்பரை எடுத்துத் தனது இருக்கையின் மீது விரித்து அவ்விருக்கையைத் தனக்கேற்றதாக மாற்றிவிட்டு அமர்ந்தவள், தன்னுடைய பிளேட்டில் ஒரு கரண்டி சோறை மட்டுப் போட்டுக்கொண்டு, “எனக்குத் தயிர் இருந்தா வாங்கிக் குடு, கரைச்சுக் குடிக்கிறதுக்கு” என்கிறாள்.

“ஏன் இதையெல்லாம் சாப்பிடாம என்கிறவளிடம் இதெல்லாம் திங்கிற வயசா நமக்கு. தின்டாத்தே செரிக்



படிப்பகம்

www.padippakam.com



குமா, ஒடம்பு என்னாத்துக்கு ஆவும்". அவள் குரலில் தெரியும் அலட்சியம் ராதியை அவமதிக்கும் தன்மையோடிருக்கிறது.

நன்னியின் வறட்டு கௌரவம் இவளுக்கு வருத்தத்தை உண்டு பண்ணுகிறது.

ராதி யாரையும் பொருட்படுத் தாமல் சாப்பாட்டை ஒரு கை பார்த்துக் கொண்டிருக்கிறாள். தான் நேற்று முழுக்க வாந்தி எடுத்துக் கொண்டிருந்தோம் என்பதே அவ ளுக்கு மறந்துபோயிருக்கிறது. தன்னுடைய வியாதிகளின் பட்டி யலையாவது அவள் சற்று நினைவு படுத்திக் கொண்டால் தேவலை என யோசித்தவளுக்கு, டாக்டரிடம் தனித்துப் பேசிய பிறகு சச்சாவின் முகத்தில் தான் உணர்ந்துகொண்டி ருக்கிற சஞ்சலம் மன அழுத் தத்தைத் தந்துகொண்டிருக்கிறது.

சாப்பிடுகிற நேரத்தை எப்படி யேனும் நீடிக்க வேண்டும் என்கிற முடிவோடு நிதானமாகச் சாப்பிட்டுக் கொண்டிருக்கிறாள். சாப்பிட்டு முடித்த கையோடு மறுபடியும் நன்னி தனது புலம்பலைத் தொடங்கி விடும் அபாயம் நிகழக்கூடும். அதை எவ்விதம் எதிர்கொள்வது என்கிற கவலையில் தொண்டையில் இறங்க மறுக்கிறது உணவு.

நன்னி வெகு நாசுக்காகத் தனது தயிர் சாதத்தைச் சாப்பிட்டு முடித்துவிட்டிருக்க, ராதி இன்னும் கூட ஆர்வம் குறையாமல் சாப்பிட்டுக் கொண்டிருப்பதைக் காண வினோ தமாக இருக்கிறது. உணவு விடுதியில் இருப்பதைக் கூடப் பொருட்படுத் தாதபடிக்கு எலும்புத்துண்டுகளை உறிஞ்சிக் கொண்டிருக்கிறாள்.

அவர்கள் கிளம்பும்பொழுது நேரம் இரண்டைத் தாண்டிவிட்டது. நன்னி சோர்வுற்றிருக்கிறாள். இனி அவசரப்படுத்துவது சரிப்படாது என யோசித்தவளைப் போல. மீதி நேரத்தைக் கழிக்க அதிகம் சிரமப் பட வேண்டியிருக்காது என்கிற நம்பிக்கை இவளுக்கு உண்டாகிறது. மருத்துவமனையின் வரவேற்பறை யாருமின்றி வெறிச்சோடிக் கிடக் கிறது. இவர்களைக் கண்டதும் ரிஷப்ஷனிஸ்ட், "உங்கள ரிசல்ட்ட வாங்கிக்கிட்டு ஒடனே சின்ன டாக்டரைப் பாக்கச் சொன்னார் பெரிய டாக்டர், அவசரமாம்" என் கிறாள். அவளது குரல் கதவிடுக்கில் மாட்டிய எலியின் குரலைப்போல கிறீச்சிடுவதைக் கேட்க வேடிக்கை யாக இருக்கிறது. இவளுக்கு நிச்சய மாக ஏதாவது பட்டப்பெயர் இருக் கும் என நினைத்தவள், இது என்ன சம்பந்தமில்லாதபடிக்கு இப்படித் தோன்றுகிறது, நேரம் காலம் புரியா மல் என யோசித்தபடி ராதியை இருக்கையொன்றில் அமரச் செய் தாள். நன்னியைக் காணவில்லை. வெளியில் நின்றுகொண்டு என்ன செய்கிறாள் என யோசித்தவள், எதையோ செய்யட்டும் என்கிற முடிவோடு பரிசோதனை அறையை நோக்கிச் செல்கிறாள்.

"நீங்க மட்டும் போய் டாக்டரைப் பாருங்க. பேஷண்ட கூட்டிக்கிட்டுப் போக வேணாம்" என எச்சரிக்கிறது பரிசோதனைச் சாலையில் உள்ள அப்பெண்ணின் குரல். அவளது முகம் காலையில் பார்த்ததைவிட வாடிப்போயிருந்தது.

நீங்க மட்டும் என்கிற வார்த்தை யில் நின்று நிதானித்தவள் ரிஷப் ஷனை நோக்கிச் செல்கிறாள். சச்சா வும் நன்னியும் அப்பெண்ணிடம் மாத்திரைகளைக் காட்டி ஏதோ விளக்கம் கேட்டுக்கொண்டிருக் கிறார்கள்.

"சச்சா, ஒரு நிமிஷம் வறீங்களா" பதற்றத்துடன் மெல்லிய குரலில் அவரை அழைத்தவள் மருத்துவரின் அறையை நோக்கி நடக்கிறாள். அவளுடைய பதற்றம் அவரைத் தொற்றிக்கொள்ளாததிலிருந்து அவர் எதையோ அறிந்திருந்தார் என்பது புரிகிறது.

அவர்கள் மருத்துவரின் அறை யிலிருந்து வெளியில் வரும்பொழுது, வெளியில் இருந்த ராதியைக் காண வில்லை. 'எங்கே போயிருப்பாள்' என்கிற யோசனையுடன் சுற்றும் முற்றும் பார்க்கிறவளுக்கு "பாத் ரூமுக்குப் போயாச்சு" என்கிற நன்னி யின் பதில் வியப்புண்டாக்குகிறது.

உயிரற்றுக் கிடக்கிற இவளது முகத்தையும் சச்சாவின் முகத்தை யும் உற்றுக் கவனிக்கிறாள் நன்னி. அவள் எதனையும் கணித்துவிட அனுமதிக்கக் கூடாது என்கிற எண்ணத்துடன் முகத்தைத் திருப் பியபடி சச்சாவை நெருங்குகிறாள். அடிவயிற்றிலிருந்து பீறிட்டெழும் துக்கத்தை விழுங்கியபடி, "நாம இப்ப ஒடனே புறப்படலாம், மேற்கொண்டு வீட்டுல போயி பேசி முடிவுபண்ணிட்டு, நாளைக்கே மறுபடி வந்து அட்மிட் பண்ணிட லாம்" என்கிறாள்.

நன்னி எதையோ அறிந்து கொள்ள விரும்புகிறவளாக மாறி மாறி இவர்களது முகங்களைக் கவனித்தபடி இருக்கிறாள். தவிப்புற்ற அவளது முகம் எதையோ கண்ட டைந்துவிட்ட திருப்தியையும் பிரதி பலிக்கிறது. இவள் அடிவயிற்றில் திரள்கிற சங்கடத்துடன் ராதியைத் தேடிச் செல்கிறாள்.

பயணத்தின் நெருக்கடிகளை மறுபடி எதிர்கொள்ள வேண்டு மென்கிற நினைவே அலுப்பை உண்டுபண்ணக்கூடியதாக இருக்கிறது. சாலையில் தங்களது இருப்பிடங்களை நோக்கிச் சென்று கொண்டிருப்பவர்களது முகங்கள் களைப்புற்றிருக்கின்றன. வீடுபோய்ச் சேர்வதற்குள் இருட்டிவிடும். ராதி எதையோ முணுமுணுத்தபடியிருக் கிறாள். இவள் கவனமின்றி அதனை ஆமோதித்தபடி இருக்கிறாள். அவளது தடிமனான உடலை இறுக்கி அணைத்துக்கொள்ள வேண்டும் போலிருக்கிறது.

ஏ.ஸி. போடணுமா... தயக்கத் துடன் வேண்டுகிற மகனிடம், "ஆமாம், அதோட பைத்துக் கேசட்டையும் போடு" என உத்தரவிடுகிறாள்.

தனது இடுப்பை நிமிண்டப் போகிற விரல்களுக்காக இவள் காத்திருக்கிறாள். ராதியின் சளசள வென்ற பேச்சொலியும் குசு சப்தமும் காருக்குள் நிறையத் துவங்குகின்றன. நன்னியின் விரல்கள் இன்னும் இடுப்பை நிமிண்டாதது வியப்பூட்டு கிறது. பார்வையை அவளது பக்க மாகத் திருப்புகிறாள். அவள் ஏதோ தீவிர யோசனையில் ஆழ்ந்திருக் கிறாள் என்பதை நெற்றியின் சுருக்கங்கள் உறுதி செய்கின்றன. அவள் என்ன யோசிக்கிறாள் என்பது புரிந்தாலும் அவளை யோசிக்காம லிருக்கச் செய்வது சாத்தியமல்ல என்பதனால் அமைதியாகக் கண் களை மூடிக்கொள்கிறாள். திறந்தி ருக்கும் பட்சத்தில் நன்னியின் முகத்தில் குடியேறியுள்ள அனுதா பத்தினைப் பார்க்க வேண்டியிருக் கும். அவளுக்கு அது வேண்டி யிருக்கவில்லை. ●

**பிழை திருத்தம்**

சென்ற இதழ் அட்டையில் இத்தாலியச் சிறுகதை என்பதற்குப் பதில் ஸ்பானியச் சிறுகதை என்று உள்ளது. பக்கம் 8இல் இரண்டாம் பத்தியில் (எதிர்வினை) 'வேதத்தையும் வேள்வியையும்' என்ப தற்குப் பதில் 'கேள்வியையும்' என்று உள்ளது.

தவறுகளுக்கு வருந்துகிறோம்.

- ஆ.கு

www.padippakam.com



பவுத்த அய்யனார்

# என் வாழ்வின் பெருந்துக்கம்



**சுந்தர ராமசாமி அவர்களின் மறைவு, என் வாழ்வின்** கடைசி நிமிடம்வரை பெரும் துக்கத்தை அளிக்கக் கூடியது. வாசகனாக அவரிடம் அறிமுகமாகி, 18 ஆண்டுகளாக அவரது அன்பையும் உதவியையும் பெற்றுள்ளேன். மற்றவர் செய்யும் சிறு உதவியையும் மறக்காது தம் நூல்களில் நன்றி தெரிவிப்பது அவர் வழக்கம். ஆனால், தாம் செய்த பெரிய உதவிகளையும் யாரிடமும் சொல்ல மாட்டார். அவரது மனோபாவம் அப்படி.

சுந்தர ராமசாமி அவர்களின் எழுத்துகளைப் பற்றிப் பேச எவ்வளவோ பேர் உள்ளார்கள். அவர் எனக்குச் செய்த பல உதவிகள் என் வாழ்க்கையின் திசையையே மாற்றி அமைத்துள்ளன. எனக்கு மட்டுமல்ல, எவ்வளவோ பேருக்கு அவர் உதவியிருக்கிறார் என்பதை அவரது இறப்புக்குப் பின், நான் நேரில் சந்தித்துப் பேசிய சில நண்பர்களின் மூலம் தெரிந்துகொண்டேன்.

அன்பையும் மனிதாபிமானத்தையும் எழுத்தில் மட்டுமே காட்டாது, நிஜ வாழ்விலும் காட்டியவர் சுந்தர ராமசாமி. இதை நேரடியாகக் கண்டுணரும் வாய்ப்புப் பெற்றவன் என்ற முறையில், இப்போதாவது சொல்லியே ஆக வேண்டும் எனத் தோன்றுகிறது.

1987. அப்போது எனக்கு இருபத்து நான்கு வயது. பெங்களூரில் தவணை முறையில் பொருள்கள் கொடுத்துப் பணம் வாங்கும் கடை ஒன்றில் பணிபுரிந்து வந்தேன். நாங்கள் இருந்த தாசரஹள்ளிப் பகுதியில் கன்னட மக்கள் அதிகம். அப்போது நடந்த தமிழர் × கன்னடர் கலாட்டாவில் எனக்கு உதை விழுந்தது. தமிழன் என்பதைத் தவிர்த்து வேறு எந்தத் தவறும் நான் செய்யவில்லை. என் பயத்தைக் கடைக்காரரிடம் கூற, 'கோழை' என்ற பட்டம் மிஞ்சியது. வேறு பகுதியில் இருந்த கடைக்கு என்னை மட்டும் கூட்டிச் செல்லாமல் எல்லோரும் போய்விட்டார்கள். மிகுதியான நம்பிக்கை என் மீது. பண விஷயங்களிலும்.

உறவினர்களோ நண்பர்களோ இப்படி அந்தத் தனிமை பல விதமான உண்ணங்களைத் தோற்றுவித்தது. தடுமாற்றம் நிரம்பிய பள்ளி வாழ்க்கை, என் சிறு வயதிலேயே அம்மா இறந்துபோனது. அதனால் பாட்டி, தாத்தா செல்லமாய் வளர்த்ததால் தான்தோன்றியாய் மாறிப்போனது எனப் பல நினைவுகள் அழுத்திக் கொண்டிருந்தன. காரணம் ஏதுமில்லாமலே சாக வேண்டும் எனத் தோன்றியது. சாவதற்கு முன்பு பிடித்தமான மனிதர்களைச் சந்திக்க விரும்பினேன். அப்போது பிடித்தமான மனிதர்களாக நான் நினைத்தது எழுத்தாளர்களை மட்டும்தான். கடையின் வசூல் பணத்தை எடுத்துக்கொண்டு, பெங்களூரை விட்டுத் திருடனாக வெளியேறினேன்.

பிடித்தமான மனிதர்களைப் பார்த்துவிட்டு இறந்து விடுவது எனப் புறப்பட்டு முதலாவதாகப் பார்த்தது சுந்தர ராமசாமி அவர்களை. நாகர்கோவில் 151 ஆர்.வி.புரம் என்ற முகவரி மட்டுமே என்னிடம் சுந்தர ராமசாமியின் 'ஒரு புளியமரத்தின் கதை நாவல்தான் நான் முதலாவதாகப் படித்தது. 'நடுநிசி நாய்கள்' தமிழில் இப்படியெல்லாம் நவீனக் கவிதைகள் உள்ளன என்பதை அறிந்துகொள்ளச் செய்தது. அவரது 'ஜே.ஜே: சில குறிப்புகள்' அவரைப் பார்க்க வேண்டும் என்ற ஆசையைத் தூண்டியது. ஜே.ஜே. பெரும் மயக்கத்தை ஏற்படுத்தினான். அதன் தமிழ் நடையை வேறு புத்தகங்களில் அதுவரை படித்ததில்லை. மனத்தில் இருப்பதை எல்லாம் நாகர்கோவிலில் கொட்டிவிட முடிவுசெய்திருந்தேன்.



படிப்பகம்

அதிகாலையில் நாகர்கோவிலை அடைந்தேன். தேவாலயங்கள் உயர்ந்து நிற்கும் ஓட்டு வீடுகள் நிறைந்த வீதி. மரச் சிலுவை கொண்ட கல்லறைகளைத் தாண்டி கலெக்டர் ஆபீஸ் அருகில் பெட்டிக்கடை வைத்திருந் தவரிடம் முகவரியைக் காட்ட, இரண்டு வீடு தள்ளி உள்ளதாகச் சொல்லி வழிகாட்டினார். மேலும் "வெளி நாடெல்லாம் போய் வந்தார். கதையெல்லாம் எழுதுவாரா" என ஆச்சரியத்துடன் அனுப்பிவைத்தார். இரண்டு வீடு தள்ளியிருந்த வீட்டை அடைந்தேன்.

"சுந்தர ராமசாமியைப் பார்க்க வேண்டும். மதுரை யிலிருந்து வந்திருக்கிறேன்." கொஞ்சம் வேகமாகப் பேசி சொல்லி அனுப்பினேன். அதிகதூரம் மரியா தையை ஏற்படுத்தும் என்ற நினைப்பில். முதலில் உயரமான டம்ளரில் காபி வந்தது. பிறகு சுந்தர ராமசாமி வந்தார். "உங்களுடன் பேச வேண்டும்" என்று சொன்னேன். "இப்போது கன்னியாகுமரி செல்லுங்கள்; மாலை ஜவுளிக் கடையில் சந்திக்கலாம்" எனச் சொல்லி ஜவுளிக் கடைக்கு வர வேண்டிய வழியைக் கூறினார்.

கன்னியாகுமரி சென்றேன். முதன்முறையாகக் கடலைப் பார்த்தேன். கி.ரா.வும் லா.ச.ரா.வும் ஞாபகத் துக்கு வந்தார்கள். விவேகானந்தர் பாறைக்குச் சென்று சுற்றுச்சூழலை மறந்து கடலைப் பார்த்துக்கொண்டி ருந்தேன். சுந்தர ராமசாமியிடம் வாங்கி வந்த 'கோபல்ல கிராமம்' நாவலை மணல் வெளியில் படுத்துக்கொண்டே படிக்க, மாலை வந்தது. கன்னியாகுமரி சிலையின் மூக்குத்தியைப் பார்க்காத ஏமாற்றத்துடன் நாகர்கோவில் வந்தேன். ஜவுளிக் கடைக்குச் சென்றேன். கடை அடைக் கும் வரை பேசிக்கொண்டிருந்தோம். பிறகு அவரது காரில் வீட்டிற்குச் சென்றோம். காரை அவரே ஓட்டி வந்தார். அவரது வீட்டில் சீனிவாசன், ஸ்ரீகுமார் ஆகியோரை அறிமுகப்படுத்தினார். காலாற ரோட்டில் நடந்துகொண்டே கம்யூனிசம், புதுக்கவிதை, கிருஷ்ணன் நம்பி, ஐசக் அருமைராஜன் பற்றிப் பல விதமான கேள்விகளைக் கேட்டுக்கொண்டே வந்தேன். அவர் மிகுந்த அக்கறையுடன் பதில் சொல்லிக்கொண்டே வந்தார். ஜே.ஜேயைப் பற்றிச் சொன்னேன். எதையெல் லாம் அவரிடம் கொட்ட வேண்டும் என்று நினைத் தேனோ அதை மறந்துபோனேன்.

திருவனந்தபுரத்தில் நகுலன், ஆ. மாதவன், நீல. பத்மநாபன் ஆகியோரைப் பார்க்கும் விருப்பம் இருந்தது. சொன்னேன். எழுத்தாளர்கள் தவிர்த்து, திருவனந்த புரத்தில் பார்க்க வேண்டியவைகளாகப் பத்மநாப சுவாமி கோவில் (சிற்பச் சிறப்புக்காக), மிருகக்காட்சிச் சாலை, கோவளம் மற்றும் ஸ்ரீகுமார் தியேட்டரில் 'சிதம்பரம்' படத்தையும் சேர்த்துக் கொள்ளச் சொன்னார். இரவு அங்கேயே தங்கினேன். காலையில் ஆ. மாதவனின் செல்வி ஸ்டோர், பத்மநாப சுவாமி கோவில், ஸ்ரீகுமார் தியேட்டர் ஆகிய இடங் களுக்குச் செல்வதற்கான வழிகளை விளக்கி வரைபடம் வரைந்து விளக்கிக் கூறினார். பத்மநாப சுவாமி கோவிலுக்குள் பேண்ட்டுடன் செல்ல இயலாது என்று சலவை வேஷ்டி ஒன்றையும் கொடுத்தார். தமிழின் உன்னதமான எழுத்தாளர் ஒருவரைச் சந்தித்த சந்தோஷத்துடன் திருவனந்தபுரம் போனேன். இதுவே சுந்தர ராமசாமியுடனான என் முதல் சந்திப்பு. திருடி வந்த பணத்திற்காக ஓராண்டுக் காலம் நான் வேலை பார்க்க வேண்டியிருந்தது.

திருவனந்தபுரம் எல்லாம் போய்விட்டு ஊருக்கு வந்தவுடன் அவருக்குக் கடிதம் போட்டேன். சில தினங்களிலேயே அவரது பதில் கடிதம் வந்தது. அப்போது ஏற்பட்ட மகிழ்ச்சியைச் சொல்லவே முடியாது. தொடர்ச்சியான கடிதத் தொடர்பில் என் வாழ்க்கைப் பின்னணியைத் தெரிந்துகொண்டார். அந்தச் சமயத்தில் மேலூர் கணேஷ் திரையரங்கில் திரைப்படக் கருவியை இயக்குபவரின் உதவியாளராக இருந்தேன். எங்கள் கிராமத்திலிருந்து நான்கு கிலோ மீட்டர் தொலை விலிருந்த மேலூருக்குப் போய் வந்துகொண்டிருந்தேன். அப்போது அவர் எழுதிய கடிதமொன்றில், "வேலைக்கு எப்படிப் போய் வருகிறீர்கள்" என்று கேட்டு எழுதி யிருந்தார். காலையில் பேருந்திலும் நள்ளிரவில் லாரி யிலும் வந்து போவதாக எழுதினேன். அடுத்து வந்த கடிதத்திலேயே மதுரைக்கு உறவினர் ஒருவருடைய திருமணத்திற்கு வருவதாகவும் தன்னைச் சந்திக்கும்படி யும் தேதி குறிப்பிட்டு எழுதியிருந்தார். நானும் அவர் எழுதியிருந்த தேதியில் மதுரைக்குப் போய்ப் பார்த்தேன்.

கல்யாண விருந்துக்கு அழைத்துச் சென்று என்னை யும் தன்னுடன் சாப்பிடவைத்தார். "ஊரிலிருந்து மேலூருக்கு வேலைக்குச் செல்ல ஒரு சைக்கிள் இருப்பது நல்லதுதானே" என்றார். புதிய ஹெர்குலிஸ் சைக்கிள் ஒன்றை வாங்கிக் கொடுத்தார். சைக்கிளின் விலையாக ஆயிரத்து ஐந்நூறு ரூபாய். மூன்று புதிய ஐந்நூறு ரூபாய் தாளாகக் கொடுத்தார். அந்தச் சைக்கிளில் "Presented by Thiru Sundara Ramasamy" என்று ஊருக்கு வந்த பின்பு எழுதினேன்.

நான் எழுதிய கடிதங்களை வைத்து என் இலக்கிய ஆர்வத்தைத் தெரிந்துகொண்டார். "உங்கள் மனோ பாவத்திற்குக் கன்னியாகுமரி விவேகானந்த கேந்திரத் தில் பணிபுரிவது நல்லது என்று சொல்லி என்னை அங்கு சேர்த்துவிட்டார். வ.உ.சி. மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில் பணி. அரவிந்த் கண் மருத்துவமனை யுடன் இணைந்து கண் சிகிச்சை முகாம்களை ஏற்பாடு செய்ய வேண்டும். முகமறியாத மனிதர்களுக்கு எந்தவித எதிர்பார்ப்பும் இன்றிப் பணிபுரிந்து சேவைப் பணியின்

கடிதங்கள் மூலமாக எழுதவும் படிக்கவும் எனக்குப் பெரிய அளவில் தூண்டுதலாக இருந்துள்ளார். தான் படித்தவற்றில் சிறந்த நூல்களாகக் கருதுபவைகளைப் படிக்கச் சொல்வார். நூல் கிடைக்க வாய்ப்பில்லையென்றால் அனுப்பிவைப்பார். ஆரம்பத்தில் தினமும்கூட அவருக்குக் கடிதம் எழுதியுள்ளேன். என் வாழ்வின் நெருக்கடியான சமயங்களில் அவரது வார்த்தைகள் என்னைச் சமனப்படுத்தியுள்ளன.

www.padippakam.com



ருசியை அறிய முடிந்தது. போகாத ஊர்களே இல்லை என்று சொல்லு மளவிற்கு உள்ளடங்கிய கிராமங்களுக் கெல்லாம் போயிருக்கிறேன். 1989லிருந்து 1991 ஆண்டின் பாதிவரை என் வாழ்வின் மறக்க முடியாத ஆண்டுகள். விவேகானந்த கேந்திரத்தில் நான் பணிபுரிந்தது என் வாழ்க்கையின் திசையையே மாற்றி அமைத்தது.

விவேகானந்த கேந்திரத்தில் சேவை ஊதியமாக எனக்கு அறுநூறு ரூபாய் கொடுத்தார்கள். உணவு, தங்குமிடம் எல்லாமே அறுநூறு ரூபாய்க்குள்தான் சமாளிக்க வேண்டும். சில சமயங்களில் அந்தப் பணம் போதுமானதாக இருக்காது. உடனே சுந்தர ராமசாமிக்குப் பணம் கேட்டுக் கடிதம் எழுதுவேன். எந்தவிதக் கேள்வியுமின்றி இரண்டு நாட்களில் மணியார்டரில் பணம் வரும். பல முறை இப்படி நடந்திருக்கிறது. அவரிடம் எப்படி இவ்வளவு உரிமை எடுத்துக்கொண் டேன் என்று பின்னாளில் ஆச்சரியம் ஏற்பட்டிருக்கிறது.

1994இல் என் திருமணம் நடந்தது. அதற்கு ஓராண் டுக்கு முன்பே நானும் முத்துப்பிள்ளையும் தீவிரமாகக் காதலித்தோம். முத்துப்பிள்ளைக்கும் அப்போதே அவரிடமிருந்து கடிதங்கள் வரும். புத்தகங்கள் வாசிக் கும்படி முத்துப்பிள்ளைக்கு எழுதுவார்.

எங்கள் திருமணம் உங்கள் தலைமையில்தான் நடக்க வேண்டும் என்று அவரிடம் கோரிக்கை வைத்தோம். எந்தவித மறுப்புமின்றி உடனடியாகச் சம்மதம் தந்தார். மேலூர் தெற்குத் தெருவில் நடந்த எங்கள் திருமணத்திற்கும் அருகில் இருந்த எங்கள் குட்டிக் கிராமத்திற்கும் வருகை தந்திருந்தார். முதல் விருந்திற்கு நாகர்கோவிலுக்கு வரும்படி அழைத்தார். ஒரு வாரத்தில் நாகர்கோவில் சென்றோம். எங்களுக் கான உடைகள், விருந்து என மிகுந்த முக்கியத்துவம் கொடுத்து உபசரித்தனர் அவரும் அவரது வீட்டினரும்.

1996இல் நானும் முத்துப்பிள்ளையும் ஒருசமயம் நாகர்கோவிலுக்கு சுந்தர ராமசாமியைப் பார்க்கப் போனோம். அப்போது அங்கு மனுஷ்ய புத்திரன் இருந்தார். சுந்தர ராமசாமியின் '107 கவிதைகள்' தொகுப்பின் நூலாக்கப்பட இருந்த பிரதியை மனுஷ்ய புத்திரன் என்னிடம் கொடுத்துப் பார்க்கச் சொன்னார். ஒவ்வொரு பக்கமாகப் பிரித்துப் பார்த்து வந்தேன். மூன்றாம் பக்கத்தில் "அய்யனாருக்கும் முத்துப்பிள்ளைக் கும்" என்று இருந்தது. அந்த நூலை எனக்கும் என் மனைவிக்கும் சமர்ப்பணம் செய்திருந்தார் சுந்தர ராமசாமி. அப்போது தோன்றிய மனநிலையைச் சொல்லவே முடியாது. காலச்சுவடு பதிப்பகத்தின் முதல் நூலாகவும் சுந்தர ராமசாமியின் மொத்தக் கவிதைகளின் தொகுப்பாகவும் இருந்த அந்த நூலை நாங்கள் ஊருக்கு வந்த பின்பு கையெழுத்திட்டு அனுப்பியிருந்தார் சுந்தர ராமசாமி.

சுந்தர ராமசாமியின் கடிதங்கள் மூலமாக எனக்கான ஒரு மொழியைக் கண்டடைய முடிந்தது. கடிதங்கள் மூலமாக எழுதவும் படிக்கவும் எனக்குப் பெரிய அளவில் தூண்டுதலாக இருந்துள்ளார். தான் படித்த வற்றில் சிறந்த நூல்களாகக் கருதுபவற்றைப் படிக்கச் சொல்வார். நூல் கிடைக்க வாய்ப்பில்லையென்றால் அனுப்பிவைப்பார். ஆரம்பத்தில் தினமும்கூட அவருக் குக் கடிதம் எழுதியுள்ளேன். என் வாழ்வின் நெருக்கடி யான சமயங்களில் அவரது வார்த்தைகள் என்னைச் சமனப்படுத்தியுள்ளன. நான் வேலை நிமித்தமாக எங்குச் சென்றாலும் அவருடனான கடிதத் தொடர்பை மட்டும் விட்டதில்லை. முதலில் டைப்ரைட்டரில் டைப் செய்யப்பட்ட கடிதங்கள். பின்பு கம்ப்யூட்டரில் அடிக்கப்பட்ட கடிதங்கள். அவர் அமெரிக்கா செல்லும் சமயங்களில் இ-மெயில் மூலம். ஒரு சில கடிதங்கள் மட்டுமே அவரது கையெழுத்தில் வந்தன. அவரை மருத்துவமனையில் சேர்த்திருப்பது தெரியாமல் இரண்டு கடிதங்கள் எழுதினேன். அதை அவர் படிக்காமலே, எப்போதும் சந்திக்க முடியாத இடத்தை நோக்கிப் போய்விட்டார். சுந்தர ராமசாமியின் மறைவு என் வாழ்வின் பெருந்துக்கம்.

நெய்தல் அமைப்பின் சார்பில் 4.12.2005 அன்று நாகர்கோவிலில் நடைபெற்ற **சுந்தர ராமசாமி நினைவுகள் மதிப்பீடுகள்** கூட்டத்தில் வாசிக்கப்பட்ட கட்டுரை.

●

**செய்திக் குறிப்பு**

## ஆதித்தமிழர் பேரவை

ஆதித்தமிழர் பேரவையின் பொதுக்குழுக் கூட்டம் 26.01.2006 அன்று ஈரோட்டில் நடைபெற்றது. ஜூன் 5, 1993 ஆண்டு மத்திய அரசு கொண்டுவந்த "உயர் கழிப்பகக் கட்டுமானச் சட்டத்தை மத்திய/மாநில அரசுகள் நடைமுறைப்படுத்தாததைக் கண்டித்தும் அதை நடைமுறைப்படுத்தக் கோரியும் நவம்பர் 28, 2005 அன்று தமிழகம் தழுவிய ரயில் மறியல் போராட்டம் நடத்தியது குறித்தும் அதன் தொடர்ச்சியாக எதிர்வரும் ஜூன் மாதம் தமிழகத்தில் உள்ள ஆறு மாநகராட்சிகளில் முற்றுகைப் போராட்டம் நடத்துவது குறித்தும் ஆலோசிக்கப்பட்டது. கூட்டத்தில் இருபத்தி நான்கு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. இவற்றில் முக்கியமான சில தீர்மானப் பொருள்கள்:

- ஒண்டி வீரன் பகடைக்கு வெண்கலச் சிலை அமைக்க அரசைக் கோருதல்
- தமிழ்நாட்டில் தொடக்கக் கல்வி முதல் தொழிற்கல்வி வரை பயிற்றுமொழியாகத் தமிழ்மொழி இருக்க ஆணை பிறப்பிக்கக் கோருதல்
- தாழ்த்தப்பட்டவர்களுக்கான இடஒதுக்கீட்டை 18 சதவிகிதத்திலிருந்து 25 சதவிகிதமாக உயர்த்தக் கோருதல்
- தெருக்கள், நிறுவனங்கள், கடைகள் போன்றவற்றில் உள்ள சாதிப் பெயர்களை நீக்கக் கோருதல்
- தாழ்த்தப்பட்டவர்களில் உள்ள உட்சாதிப் பிரிவு களை நீக்கக் கோருதல்
- சாதி ஒழிப்புச் சீர்திருத்தத் திருமணத்தை நடை முறைப்படுத்துதல்.

தகவல்: **இரா. அதியமான்**




படிப்பகம்

www.padippakam.com



மு. பொன்னம்பலம்

# அடையா நெடுங்கதவும் அஞ்சேல் என்ற சொல்லும்



சு.ரா. இறந்துவிட்டார். இச்செய்தி எனக்கெட்டியபோது அது என் மேல் மனத்தில் சிறிது நேரம் தரித்து நின்று, திடீரெனக் கீழ் இறங்கி என் ஆழ் இருப்பதைத் தொட்டபோது துயர் பூசிய இனந்தெரியாத உணர்வுகள் மேலாடி வந்தன.

'இக்காலத்தில் எழுத்தாளனே அன்றைய ஞானிக் கடுத்த நிலையில் இருக்கிறான்' என்று மு. தளையசிங்கம் எழுதினார்.

அவர் எப்பொழுதும் தன் நிலையை மற்றவர்களில் ஏற்றிப் பார்ப்பது வழமை.

ஆயினும் அவர் அவாவிய நிலை ஒரு சில தமிழ் எழுத்தாளர்களுக்கும் சித்தித்திருந்தது.

'சித்தித்திருந்த'தென்றால் அவர்கள் சித்தர்களோ யோகிகளோ என்பதல்ல.

அதை மு.த. கருதவுமில்லை. மு.த. அவாவிய தெல்லாம் தன் மனசாட்சிக்கு விரோதமில்லாத, தம் காலத்து முற்போக்குப் பாய்ச்சலுக்குத் தன்னை அர்ப்பணித்து வாழும் கலைஞனை.

அத்தகைய கீற்றுக்களின் சிலிர்ப்பு சு.ரா.வின் புன்னகையில் உள்ளோடி வெளிச்சமூட்டுவதைக் காணலாம்.

சு.ரா. தன் இளமைக் காலத்தில் மார்க்சியச் சித்தாந்தியாகச் செயல்பட்டிருக்கிறார். ஆனால் கால முதிர்ச்சியில் அவரது சித்தாந்தம், வரையறைகளைக் கடந்த, உண்மையை நோக்கிய பிரவாகமாகப் பெருக்கெடுகிறது.

எங்கெங்கு தத்தளிப்பு ஏற்படுகிறதோ அங்கெல்லாம் அதைச் சுமுகப்படுத்தும் முதலுதவிப் படை இவரது போக்கு.

இன, மத, சாதி வெள்ளத்தால் அடிபட்டு, இடம் பெயர்ந்து குந்தியிருக்கும் அகதியான அடிமட்டங் களுக்கு மீட்புப் பொதிகளோடு இறங்கும் எழுத் தாளுமை இவரது.

நேற்று முகத்தில் அறைந்தவனோடு இன்று முறுவலிக் கிறார். காறி உமிழ்ந்தவனோடு கை குலுக்குகிறார். தான் நிகழ்த்திய வேசைத்தனத்தை மறைக்க இவர் பேரை விற்ற கவிஞர்களையும் மன்னிக்கிறார். ஏன்?

சந்தர்ப்பவாதமா? தன்னலத் தேவையா?

இல்லை, தளையசிங்கம் கூறிய ஞானிகளுக்கடுத்த இன்றைய எழுத்தாளனுக்கு அத்தியாவசியமாகிவிட்ட உண்மைக்கான அர்ப்பணம் இவரிடம்.

அதனால்தான் மு.த. என்றவோர் ஈழத்துக் கலைஞனின் ஆற்றல் இவரை ஈர்க்கிறது.

உள்ளூரில் மு.த. புரியப்படாது பொறாமைக் காய்ச்சலுக்குள்ளாக்கப்பட்டிருந்தபோது அவரைப் புரிந்துகொண்ட மேன்மை சு.ராவுடையது. புரிந்து கொண்டு தமிழ்நாட்டுக்கு அறிமுகப்படுத்திய ஆளுமை அவருடையது.



படிப்பகம்

www.padippakam.com



இந்த ஆளுமையின் படிமம் எப்படியெல்லாம் விரிந்து படுகைபோட்டுப் பெருக்கெடுத்தது.

ஈழத்திலிருந்து தமிழகம் சென்ற எத்தனை எழுத்தாளர்கள் அவர் வீட்டில் நாட்கணக்கில் தங்கிச் சென்றிருக்கிறார்கள். என்னென்னவோ உதவியெல்லாம் அவரிடமிருந்து பெற்றுத் தேறியிருக்கிறார்கள். அப்பொழுதெல்லாம் அந்த முகத்தில் உள்ளாழ்ந்த உளமார்ந்த புன்னகையின் சிலிர்ப்பு.

ஆனால் என்னுடைய அனுபவம் இது. மு.த.வின் அனுபவமும்கூட.

என்றைக்கும் ஒருவனின் பேராளுமையை எல்லாரும் ஜீரணித்துவிடுவதில்லை. அதனால் அவர்களின் ஆரோக்கியக் குறைவின் வெளிக்காட்டல்களான வாந்தியும் ஏப்பமும் இந்த ஆளுமைமேல் வந்து விழுகின்றன. இவர்களின் ஆரோக்கியக் குறைவின் உந்துதல் இவர்களைச் சுவரில் கரி பூசும் 'கலைஞர்'களாக்குகிறது. தமது வக்கிரங்களையே மற்றவரில் ஏற்றிப் பார்க்கும் சுபாவம் இவர்களுக்குச் சுகம் தருவதாகிறது.

'அடையா நெடுங்கதவும் அஞ்சேல் என்ற சொல்லும் உடையான்' ஆக வாழ்ந்த சு.ரா.வைச் சுற்றி வக்கிர வளையங்கள் சுழலத் தொடங்கின, கலை இலக்கியம் என்ற பேரில்.

சடையப்ப வள்ளலால் பேணப்பட்ட கம்பனும் ஏனைய கவிஞர்களும் இப்படி மனநோயாளர்களாக மாறியதில்லை. ஆயிரத்தில் ஒருவராகத்தான் அவரைத் தம் கவிதா ஆற்றலால் ஞாபகப்படுத்திச் சென்றனர்.

நம் கவிஞர் பெருமான்களுக்கோ கிருஷ்ணமூர்த்தியும் கீதா உபதேசங்களும், இவர்கள் யாத்தளிக்கும் கவிதைகளும் இவர்களிடமிருந்தெழும் megalomania, schizophrenia பிசாசுகளின் பிறாண்டல்களால் விகாரமாக்கப்பட்ட இவர் முகங்களை மறைக்கும் கரித் துணிகளே.

'நான்தான் தமிழிலே பாலுணர்வு பற்றி எழுதித் தமிழ்ச் சமூகத்தை ஆரோக்கியப்படுத்தும் மாமேதை' என்று கூறிக்கொள்ளும் இன்னொரு வகை. உண்மையில் இவர்கள் உண்மையான மேதைகளான புதுமைப் பித்தனையும் சு.ரா.வையும் தாக்குவதன் மூலமே தம் பெயரை வாழவைத்துக்கொண்டிருக்கும் நவீன குருவிச்சைகள் (parasites).

இப்படி வக்கிர வளையங்கள் சு.ரா.வின் கடைசிக் காலத்தில் அவரைச் சுற்றி வலம் வந்தன. வக்கிரங்களைச் சுற்றித்தான் சனி வளையங்கள் வலம்வருவது வழமை. ஆனால் சந்திரனுக்கேன் சனி வளையங்கள்?

காலம் தன் அச்சை விட்டுப் பிறழ்கிறதா?

பாரத நாட்டில் கங்கையும் காவேரியும் அள்ளிவரும் வண்டல்கள் இப்போது களைகளையே மேலோங்கிச் செழிக்க வைக்கின்றன, கற்பக தாருக்களையல்ல.

இது எந்த முனிவன் இட்ட சாபமோ?

கவிஞர் மு.பொ. காலம் சென்ற மு. தளையசிங்கத்தின் தம்பி. ஈழத்தின் முக்கிய விமர்சகர்களில் ஒருவர்.


## புதுப்புனல்
### புதிய வெளியீடுகள்




**சகோதரிகள்**
(ருஷ்ய கதைகள்)
**அலெக்சாண்டிரா கொலோண்டை**
அரசியல் வாழ்வும்
இலக்கியப் படைப்புகளும்
**தமிழில்: சொ. பிரபாகரன்**
**விலை ரூ. 50/-**



**தேவதைகளின் சொந்தக் குழந்தை**
பின்நவீனச் சிறுகதைகள்
**எச். முஜீப் ரஹ்மான்**
**விலை ரூ. 75/-**




**வாழ்வின் அமைப்பு**
(சர்வதேச சிறப்புக்கதைகள்)
**தமிழில்:**
**கோ. பிரேம்குமார்**
**விலை ரூ. 70/-**




**பாலத்தின் குறுக்கே**
(சர்வதேச சிறப்புக்கதைகள்)
**தொகுப்பாசிரியர்:**
**ஆர். ரவிச்சந்திரன்**
**விலை ரூ. 120/-**

**PUDHU PUNAL**
5/1, I Floor, Palani Andavar Koil Street,
Ayanavaram, Chennai - 600 023
Cell: **9884427997**




படிப்பகம்

www.padippakam.com



விவாதம்

# கவிதை வரிகளும் சமூகப் பின்புலமும்

ரமேஷ் பிரேதன்

காலச்சுவடு 74 இதழில் விவாதம் பகுதியில் 'பெண் எழுத்தின் அரசியல்' என்னும் பெருந்தேவியின் கட்டுரைக் கான எனது சிறு எதிர்வினையாக இதைக் கொள்க.

'எரிக்கா யுங்'இன் கட்டளைகள் என்ற கவிதையின் ஒரு பகுதியைக் குறிப்பிட்டு, அதற்கு எதிர்நிலையில் கவியின் பெயர் குறிப்பிடப்படாமல் சுகிர்தராணியின் வரிகளைத் தமிழி லிருந்து எடுத்தாண்டு ஒப்பிட்டு, பின்னதை நிராகரிக்கிறார். இப்படி யான ஒப்பீட்டு வாசிப்போ அறிதல் முறையோ பின்நவீனத்துவ நோக்குக்கு எதிரானது என்பதைப் பெருந்தேவி அறியாதவர் அல்லர். பின்நவீனத்துவ நோக்கை இதே கட்டுரையில் வலி யுறுத்தும் இவர், ஒன்றின் அறிதல் முறையை இன்னொன்றோடு ஒப்பிட்டு அந்த இன்னொன்றைத் தாழ்ந்தது எனச் சொல்லும் நவீனத்துவ பாசிச நோக்கைக் கையாள்கிறார். ஒரு சமூகத் தின் அறிதலை மற்றும் பிரதியை அதற்குச் சம்பந்தமற்ற இன்னொன் றோடு ஒப்பிடுவது பின்நவீனத்துவ நோக்குக்கு மாறானது.

*"மயிர்கள் சிரைக்கப்படாத என்*
*நிர்வாணம்*
*அழிக்கப்படாத காடுகளைப் போல*
*கம்பீரம் வீசுகிறது."*

மேற்குறிப்பிட்ட இந்த வரியை யுங் கோடு ஒப்பிட்டுப் பேசும் பெருந்தேவிக்கு இவ்வரிகளின் சமூகப் பின்புலத்தைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.


இந்தியத் தமிழ்ச் சமூகத்தில் ஒரு பெண் தன் உடம்பின் மறைவிடங் களில் உள்ள முடிகளை நீக்கிச் சுத்த மாக வைத்திருப்பது என்பது அவள் பேணும் இல்லற ஒழுக்க நியதிகளுள் ஒன்று. இதை வாத்ஸ்யாயனமும் வரையறுக்கிறது. குறிப்பாக அவள் தன் பிறப்புறுப்பை முடிநீக்கிச் சுத்தம்செய்து அரைத்த மஞ்சளும் சந்தனமுமிட்டு மெழுகிக் கோலமிட்டு வாசலைத் திறந்துவைத்திருக்க வேண்டும். தவறி னால் அவள் தனது ஆணால் கொடூரத் தாக்குதலுக்கு ஆளாவாள்.

பிறப்புறுப்பில் மயிர் சிரைப்பதற்குக் 'கால் சவரம்' என இடக்கரடக்கலோடு சொல்வார்கள். ஆண்களுக்குப் பண்டு வனும் பெண்களுக்குப் பண்டுவச்சியும் இரண்டொரு நாளுக்கு ஒரு முறை வீடு தேடிச் சென்று சுத்தம்செய்ய வேண்டும். கிராமத்து மேட்டுக்குடிப் பெண்களுக்கு இது தவறாமல் நடக்க வேண்டும். பணக்கார நகரப் பெண் களுக்கு இம்முடிகளை நீக்கப் பலவித லோஷன்கள் உண்டு. சாதாரணப் பெண்கள், கணவன் தன் 'மொகரை'யை மழித்துவிட்டுப் போட்ட மொண்ணை பிளேடைப் பயன்படுத்திப் பயன்படுத்தி மென்தோல் தடித்துக் கொஞ்ச நாளில் தோலரிப்புக்கு ஆளாகிறார்கள்.

இது இப்படியிருக்க, இந்தக் 'கால் சவரம்' என்ற, பண்டுவச் சாதி மீது செலுத்தப்படும் தொழில்முறைக் குரூரம் இன்றும் இந்திய/தமிழகக் கிராமங்களில் தொடர்கிறது. இது மனித மலத்தை அள்ளித் தலையில் சுமந்து செல்லும் இழிதொழிலுக்கு இணையானது. இது குறித்து (கால் சவரம்) கண்மணி குண சேகரன், ஒரு கதை எழுதியிருப்பதாக ஞாபகம்.

இந்த இந்தியச் சமூக விவரங்க ளெல்லாம் யுங்குக்குத் தெரியாமலிருக் கலாம். ஆனால் யுங்கைத் தெரிந்த பெருந்தேவிக்குத் தெரியாமலிருப்பது தவறு.

குறியில் மயிர் சிரைப்பது பெண் ணொடுக்குமுறை மற்றும் சாதி ஒடுக்குமுறை (தொழில் ரீதியில்) சார்ந்தது. யுங்குக்கு 'மழித்தலோ நீட்டலோ' அவரது பிறப்புரிமை. ஆனால்




சுகிர்தராணியின் கவிதையில் வெளிப் படும் ஒரு பெண்ணுக்கு அது அப்படி அல்ல; அவள் விரும்பிக்கூட அந்த இடத்தில் முடி வளர்க்க முடியாது. அவளது ஆண் உதைப்பான்.

ஆக,

*"மயிர்கள் சிரைக்கப்படாத என்*
*நிர்வாணம்*
*அழிக்கப்படாத காடுகளைப் போல*
*கம்பீரம் வீசுகிறது."*

இப்போது சொல்லுங்கள், இந்த வரிகளுக்கு இணையான, தான் சார்ந்த சமூகப் பொருள் பொதிந்த வரிகள் எரிக்காவிடம் இருக்குமா? தேடிப் பாருங்கள் பெருந்தேவி.

மேலும், மயிர்களை அழிக்கப்படாத காட்டு மரங்களாக்கிக் கம்பீரமாக நின்று காற்றை வீசுவது எத்தகைய கவித்துவ வீச்சு கொண்ட வரி என்பதையும் உணர்க. ●


நிழல்களின் சாலை
சுதா நீரா
ரூ. 30, பக். 72



சுதா நீராவினால் எழுதப் பட்டிருக்கும் கவிதைகள் -தனிமை, அந்நியமாதல், உறவிழப்பு, உறவுத்திரிபு, நகரவாழ்வின் நெரிசல்கள், காதல், பெண்ணென்பதால் எதிர்கொள்ள வேண்டி யிருக்கும் நெருக்கடிகள் முதலியவற்றைப் பேசுவன: இன்ன பிற பலவற்றையும் உள்ளடக்கியிருப்பன. அவருக்குள்ளிருக்கும் எழுதப்படாத மனவெழுச்சிகளை, எண்ணவோட்டங்களை வாசிப்பவரால் ஓரளவு இனங்காண முடியும்

லதா இராமகிருஷ்ணன்

விற்பனை உரிமை
பரிசல்
1. இந்தியன் வங்கி காலனி,
வள்ளலார் தெரு, பத்மநாபா நகர்,
சூளைமேடு, சென்னை - 94
கை பேசி 9382853646

விளம்பரம்




படிப்பகம்

www.padippakam.com



விவாதம்

# கற்பனாவாத சோஷலிசம் x விஞ்ஞான சோஷலிசம்

செ.ச. செந்தில்நாதன்

உ.வ. கழகத்தின் ஹாங்காங் மாநாடு குறித்து எழுதிய ஒரு செய்திப் பதிவின் மீது ஆற்றப்பட்ட இரண்டு எதிர்வினைகளையும் படித்தேன். நான் சொல்லாத கருத்துகளை நான் சொன்னதுபோலச் சொல்லி அந்தக் கட்டுரையை விமர்சித்திருக்கிறார்கள். நான் எழுதிய விஷயங்களைத் தெரிந்தோ தெரியாமலோ திரித்திருக்கிறார்கள். நான் அடிப்படையாகக் கவனம் ஈர்க்க விரும்பிய கருத்தை மட்டும் கவனத்தில் எடுக்காமல் விட்டு விட்டார்கள்.

உலக வர்த்தகத்தில் காணப்படும் சமனற்ற தன்மைகளைச் சரிசெய்வதற்காகவே உ.வ.க. உருவானது என்று கூறுவது கோயபல்ஸ் பிரச்சாரம் என்கிறார் சசிதரன். நான் அப்படிச் சொல்லவில்லை. அவரது கருத்தோடு ஒட்டிய கருத்துகளைத்தான் சொல்லியிருந்தேன். எனது கட்டுரையில் உள்ள இந்த வாசகங்களைப் படியுங்கள்:

"பிறந்தபோது முற்றிலும் வளர்ந்த நாடு களின் நலன்களை மட்டுமே பிரதி நிதித்துவம் செய்கிற, வளர்முக நாடுகளை 'விருந்துக்கழைத்து விஷ மளிக்கிற நயத்தக்க நாகரிகம் கொண்ட' அமைப்பாக இருந்த உ.வ.கத்தில் இப்போது முதல் முறையாக வளர்முக நாடுகளின் கூட்டுக்குரலுக்குச் சிறிது மதிப்புக் கிடைத்திருக்கிறது."

போதுமான அளவு புரிதல் இல்லாமல் எழுதியதாகவும் குறைந்தபட்சம் சரியான தகவல்களைத் திரட்டி நடுநிலைமையோடு எழுத வேண்டும் என்றும் சசிதரன் கூறுகிறார். ஹாங்காங் மாநாடு நடந்து முடிந்த கையோடு இரண்டாம் நாளில் வெளிவந்த, மேலை நாட்டு மற்றும் மூன்றாம் உலக நாட்டு நாளிதழ்கள் மற்றும் பொருளாதார நோக்கர்களின் கருத்தை இணையத்தில் படித்து, பல்வேறு நிலைப்பாடுகளைக் கொண்ட வலைத் தளங்களில் செய்தி சேகரித்தே அதை எழுதினேன்.

ஹாங்காங் மாநாட்டில் வளரும் நாடுகள் பெரிய வெற்றியைப் பெற்று விட்டதாக நான் கூறவில்லை. யார் எவ்வளவு பெற்றார்கள், அல்லது இழந்தார்கள் என்ற விவரங்கள் அதிகபட்சம் ஒரு தகவல் பதிவு மட்டுமே. அதை மறுத்து சசிதரன் கூறுவதும் இப்படி ஆகிவிடலாம் என்கிற அனுமானம் மட்டுமே. அந்தப் பதிவில் நான் வலியுறுத்திய மைய விஷயம் இந்தப் புள்ளி விவரங்கள் அல்ல. ஹாங்காங் சந்திப்பில் வளர்முக நாடுகள் (அவர்களுக்கிடையில் ஒற்றுமைகளும் வேற்றுமைகளும் இருந்தன) தங்கள் பேரம் பேசும் திறனை அதிகரித்துக்கொண்டிருக்கின்றன என்பதையும் உ.வ.க. போன்ற தளங்களில் மேலை நாடுகள் கூறுவதை பார்வையாளர்கள்போலக் கேட்டுக்கொண்டிருந்து, தலையாட்டி ஏற்றுக்கொண்ட காலம் மாறத் தொடங்கியிருக்கிறது என்பதையுமே அப்பதிவின் மையக் கருத்தாகக் கூறியிருக்கிறேன். நான் படித்த அளவில் இது வரவேற்க வேண்டிய ஒரு மாற்றம் என்றே பல வளரும் நாட்டு அரசுகளும் நோக்கர்களும் சுட்டிக்காட்டியிருந்தார்கள்.

இந்த மாற்றம் ஒரு திருப்புமுனை அல்ல, அது வளரும் நாடுகளின் தோல்வி, தோல்விக்குப் புது வியாக்கியானம் என்று சசிதரனும் ஹரியும் கூறுவார்களேயானால் நான் என்ன செய்ய முடியும்? ஹாங்காங்கில் நடந்ததைப் பம்மாத்து என்று கூறுகிற சசிதரனே போராட்டங்களால் 'ஏதோ ஓரளவு மேலை நாடுகள்' இறங்கிவந்திருப்பதாகக் கூறுகிறார். நான் மட்டும் என்ன அவர்கள் ஏகத்துக்கும் இறங்கி வந்துவிட்டார்கள் என்றா எழுதியிருந்தேன்? கொஞ்சூண்டு சந்தோஷத்தைத் தருகிற விஷயமாகத் தோன்றியதால்தான் அதைக் 'கொஞ்சம் உவகை' என்று குறிப்பிட்டேன். அந்தச் சிறு திருப்பம் தீர்மானகரமானது. ஆனால் வளர்ந்த நாடுகளின் உள்நோக்கத்தைக் குறிப்பிட்டு இருவரும் கூறிய எதிர்மறை ஆருடங்களை நான் மறுக்கப்போவதில்லை. வளரும் நாடுகள் இந்தப் பேரத்தைத் தொடர்ந்து நடத்தவில்லை என்றால் உலகமய எதிர்ப்பாளர்களின் ஆருடம் பலித்த மாதிரிதான்.

உலகமயமாதல் என்னும் நிகழ்வு உலக முதலாளியத்தின் நடப்பு இயக்கம். இதில் பிரதான சக்தியாக இருப்பது நியோலிபரலிச மற்றும் நவீன காலனியாதிக்கப் போக்கின் பிரதிநிதிகளான அமெரிக்காவும் அதன் பின் செல்லும் ஐரோப்பிய யூனியனும். அவர்களின் நிஜ நோக்கம் உலகமயமாதல் கூட இல்லை. வெறும் சந்தைக் காலனியம். ஆனால் வளர்முக நாடுகள் நிஜமான உலகமயமாதலை நோக்கி எதிர்வினையாற்றி, அமெரிக்காவின் புதிய காலனிய ஆதிக்கத்தை உடனேயே முற்றிலும் ஒழிக்க முடியாவிட்டாலும் (அதற்கு ஒரு நெடுங்கால வரலாற்று இயக்கம் நடந்தேறியாக வேண்டும்), உலகப் பொருளாதாரத்தின் முக்கிய மாற்றங்களை நிச்சயமாகக் கட்டுக்குள் வைக்க முடியும். எனவேதான் உலக அமைப்புகளில் மாற்றுக் குரல்கள் தீவிரம் காட்டுகின்றன. உலகளாவிய அமைப்புகளைத் தூக்கி எறிவதால் அது நடக்காது, அதற்குள் இருந்து இயங்கினால் மட்டுமே அது நடக்கும்.

உலகமயமாதலைக் கண்மூடித்தனமாக எதிர்க்காதவர்கள் எல்லாம் புஷ்ஷின் கையாட்களில்லை. மாற்று அரசியல்–பொருளாதாரமான சோஷலிசப் பொருளாதாரம் இப்போதைக்குக் கனவு. கடந்த நூறு ஆண்டுகளாக முதலாளித்துவப் பொருளாதாரத்துக்குள் இருந்து போராடுவது சாத்தியமாகவும் வரலாற்று ரீதியில் பெரும்பாலும் ச... யாகவும் இருந்துவருகிறது. இந்தச் சாத்தியத்திற்குட்பட்ட நிலையில் உலகமயமாதலை ஜனநாயகப்படுத்தல், அதை வெறும் அமெரிக்கமயமாதலாகச் சுருக்க அமெரிக்கா எடுத்து வரும் முயற்சிகளைத் தடுத்தல், தெற்கு–தெற்கு பொருளாதாரத்தை மேம்படுத்துதல், பன்னாட்டு மூலதனத்தோடு இடையறாமல் பொருளாதார இடையீட்டைச் செலுத்துதல், தொழிலாளர் உரிமைகளை நிலைநிறுத்துதல், நிலைபெறு வளர்ச்சியைப் பேணுதல் போன்ற பொருளாதார ஜனநாயமயமாக்க நடவடிக்கையில் ஈடுபடுவதே இன்றைய முதல் கடமையாகும். ஆனால் இவை அனைத்தையும் 8... களுக்கு முன்பிருந்த அதே கோரிக்கை அல்லது போராட்ட வடிவங்களில் இன்று தொடர முடியாது. இவை அனைத்தும் மாறுதலுக்குட்பட்டுப் புதிய பரிமாணங்களை எடுத்துவருகின்றன. இடதுசாரிக் கட்சிகளும் தொழிற்சங்கங்களும் அறிவுஜீவிகளும் இதைப் புரிந்துகொள்ள வேண்டும்.



படிப்பகம்

www.padippakam.com



வெறுமனே ஏகாதிபத்திய எதிர்ப்பு அல்லது அமெரிக்க எதிர்ப்பு போன்ற முழக்கங்களினூடே போராடும் இந்திய மார்க்சிஸ்ட்கள் இறுதியில் எல்லா வித முதலாளித்துவ நடைமுறையையும் (அதாவது 80களுக்குப் பிந்தையவை) எதிர்க்கும் கற்பனாவாத நிலைக்குச் செல்கிறார்கள். தாராளமயமாதல்–தனியார்மயமாதல்–உலகமயமாதல் எதிர்ப்பு என்ற பெயரில் எல்லாவிதமான பொருளாதாரச் செயல்பாடுகளையும் எதிர்க்கிறார்கள். எடுத்துக்காட்டாக, கடந்த 10 ஆண்டுகளில் தொலைத் தொடர்புத் துறையில் இந்தியாவில் நடந்த ஒவ்வொரு மாற்றத்தின்போதும் இந்தியக் கம்யூனிஸ்ட்கள் எடுத்த நிலைப்பாடுகளைத் திரட்டிப் படியுங்கள். அவர்களது 'நெடுநோக்கும் தொழில்நுட்பம் குறித்த மார்க்சியப் புலமையும்' புலப்படும்.

கம்ப்யூட்டர் நுழைவை இந்தியக் கம்யூனிஸ்ட்கள் எதிர்த்தபோது, அது பலருடைய வேலையைப் பறிக்கும் என்பதற்காகத்தான் எதிர்த்தார்கள் என்னும் சாதாரண உண்மை கூடத் தெரியாமல் நான் எழுதவில்லை. அந்த உதாரணத்தைக் காட்டியது வேறு காரணத்துக்காக. சில புதிய போக்குகளை அதன் தொடக்க காலத் தோற்றங்களை வைத்தே முடிவு செய்ய முடியாது என்பதைச் சுட்டிக்காட்டவே அதைக் கூறியிருந்தேன். இன்று தகவல் தொழில்நுட்பத் துறை மிகப் பெரிய தொழில் துறையாக வளர்ந்திருக்கிறது. அது மட்டுமல்லாமல் அது நேரடியாகவும் மறைமுகமாகவும் லட்சக்கணக்கானவர்களுக்கு வேலை தந்திருக்கிறது. பொருளாதாரப் பார்வையில் பார்த்தால், தகவல் நுட்பமும் தொலைத் தொடர்பும் பெற்ற மேம்பாடு உலக முதலாளித்துவத்தைப் பெரிதும் மாற்றி உலகளாவிய வேலைப் பிரிவினையையே மறுவரையறை செய்திருக்கிறது. அதன் பலனை இந்தியாவும் அனுபவிக்கிறது. எல்லாத் துறைகளிலும் தகவல் நுட்பமும் தொலைத் தொடர்பு நுட்பங்களும் பிரதான உற்பத்திக் கருவிகளாக மாறியிருக்கின்றன.

80களில் கம்ப்யூட்டர் இந்தியாவில் நுழைந்தபோது இது போன்ற விஷயங்களை மார்க்சிஸ்ட்களோ வேறு யாருமோ முன்னறிந்தார்களா? அதே காலகட்டத்தில் கம்ப்யூட்டர் புரட்சி குறித்தும் அதன் பொருளாதாரத் தாக்கம் குறித்தும் துறை நிபுணர்கள் ('முதலாளித்துவ அறிஞர்கள்') எழுதியதை இவர்கள் படித்திருப்பார்களா? கம்ப்யூட்டரால் வேலை வாய்ப்பு பாதிக்கும் என்று முன்னறிந்த இவர்களுக்கு அதனால் புது வகை வேலைவாய்ப்பு பெரிய அளவில் உருவாகும் என்று முன்னறிய முடிந்ததா? முடியவில்லை, சாத்தியமும் இல்லை.

அதுபோலவே, இன்றைய வடிவிலான உலகமயமாதல் எனும் நிகழ்வு நடைபெறத் தொடங்கிய இந்த இரண்டு பதிற்றாண்டுகளில், உலகமயமாதலின் எதிர்கால விளைவுகளை, அதைப் பற்றிய முழுமையான புரிதலை, இன்றே நாம் பெற்றுவிடுவது சாத்தியமில்லை. ஆனால் அதை அதன் போக்கிலேயே விட்டுவிடுவதையோ முற்றாக அதை நிராகரிப்பதையோ 'வரலாற்றுப் பொருள் முதல்வாதிகள்' செய்ய மாட்டார்கள். இந்தப் போக்கைப் புரிந்துகொண்டு வெகுஜன நலன், தேவையின் அடிப்படையில் அதன் குவிமையங்களை மாற்றும் ஆக்கபூர்வமான எதிர்வினைகளையே அவர்கள் ஆற்றுவார்கள். எதிர்ப்பு, ஆதரவு, திருத்தம், மாற்றம், புதுமை எனப் பல கோணங்களில் அவை இருக்கும். சட்டம், போராட்டம், மாநாடுகள், ஒப்பந்தங்கள் எனப் பல வடிவங்களில் அவை இருக்கும்.

உலக ரீதியிலான அமைப்புகளையோ அந்நிய முதலீட்டையோ மார்க்சியர்கள் எதிர்க்கவில்லை, மாறாக அவற்றை இன்னின்ன கட்டுப்பாடுகளுடன்தான் ஏற்போம் என்று இடதுசாரியினர் கூறுகிறார்கள் என்கிறார் ஹரி. அது உண்மை என்றால் வரவேற்க வேண்டியதுதான். இடதுசாரிகள் மட்டுமல்ல, முதலாளித்துவப் பொருளாதார நிபுணர்கள்கூட என்ரான் போன்ற தில்லுமுல்லு நிறுவனங்களை ஏற்பதில்லை.

உலகமயமாதலின் மீது ஜனநாயக பூர்வ எதிர்வினையோடு தாக்கத்தை நிகழ்த்த முடியும் என்ற நம்பிக்கையோடு நமது இடதுசாரிகள் போராட்டங்களை நடத்தவில்லை. அதை எதிர்த்து ஒழித்துவிடலாம் அல்லது சற்றே தள்ளிப்போடலாம் என்ற கற்பனையிலிருந்தே அதை நடத்துகிறார்கள். அவர்களது பொருளாதாரக் கொள்கைகளே அதற்குச் சாட்சி. உலகப் பொருளாதாரம் தொடர்பான எதிர்வினையை வெறும் அமெரிக்க எதிர்ப்பு என்ற பெயரில் சிதைக்கும் அந்தக் கொள்கைகளில் பல வெளிப்படையாக முற்போக்காகத் தோன்றினாலும் அவை மார்க்சிய உள்ளடக்கம் இல்லாதவையே. பொறுப்பற்ற போராட்டங்கள் விமர்சனத்துக்கு உட்பட்டவையே. மார்க்சியர்கள் இன்றைய நியோ லிபரலிச ஆதிக்கத்துக்கு எதிராகச் செய்யக்கூடிய சாத்தியமான நடவடிக்கைகள் நிறைய இருக்கின்றன. சீன கம்யூனிஸ்ட் கட்சியும் லத்தீன் அமெரிக்காவின் இடது சார்பு அரசுகளும் அதைப் பல சமயங்களில் சிறப்பாகச் செய்துவருகிறார்கள். இந்திய, ருஷ்ய அரசுகளும்கூட சில சமயம் அதை சரியாகச் செய்கின்றன. ஆனால் இந்தியக் கம்யூனிஸ்ட்களும் ஐரோப்பிய இடதுசாரிகளும்தான் இப்போது தவறான பாதையில் சென்றுகொண்டிருக்கிறார்கள். அது யாருடைய நலனுக்காக என்பது மில்லியன் டாலர் கேள்வி.

கொடி பிடிப்பது தவறு என்று நான் கூறியதாக சசிதரன் சொல்லியிருக்கிறார். இல்லை. அவற்றின் வெற்றிக்கு என்ன முன்நிபந்தனை என்பதைத் தான் கூறியிருந்தேன். நான் கூறியது இதுதான்: 'இது போன்ற அமைப்பு கள் ஏதும் இல்லாமல், அமெரிக்க கான்சலேட்களுக்கு எதிரில் செங்கொடி பிடித்த உங்கள் போராட்டங்கள் எதையும் சாதிக்கவில்லை என்று ஒத்துக் கொள்ளுங்கள்.'

இவர்கள் ஜனநாயகபூர்வமான உலகமயமாதலுக்கான சாத்தியத்தை முற்றிலும் மறுக்கிறார்கள், அல்லது எதைச் செய்வது என்று தெரியாமல் சில பல போராட்டங்களை நடத்தித் தங்கள் புரட்சிக் கடனைக் கழித்துக் கொள்கிறார்கள். சாதாரணத் தொழிலாளர்களின், மாணவர்களின் இயற்கையான போர்க் குணத்தைத் துஷ்பிரயோகம் செய்வது அன்றி இது வேறென்ன?

பாவம் மார்க்சும் லெனினும்! இதற்காகவா அவர்கள் உலகளாவிய முதலாளித்துவ வளர்ச்சி பற்றித் தங்கள் ஆயுள் முழுக்க ஆராய்ச்சி நடத்திக் கொண்டிருந்தார்கள்? இதற்காகவா கற்பனாவாத சோஷலிசத்துக்கும் விஞ்ஞான சோஷலிசத்துக்கும் இடையில் என்ன வித்தியாசம் என்று விளக்க எங்கெல்ஸ் மெனக்கெட்டார்? ●

**பரதவர்**
**இனவியல் நூல்வரைவியல்**



ஆசிரியர்:
**முனைவர் அரு.பரமசிவம்**

**பக்கம் 178 ❖ விலை ரூ.90**

வெளியீடு:
**காவ்யா**
**16, இரண்டாம் குறுக்குத்தெரு**
**டிரஸ்ட்புரம், கோடம்பாக்கம்**
**சென்னை 600 005**



படிப்பகம்

www.padippakam.com



## தலாக்-குலாக்ஃ: தளையா, உரிமையா?

'காலச்சுவடு' ஜனவரி 2006 இதழில் வெளியான 'ஹசீனா' திரைப்படம் பற்றிய எனது கட்டுரையில் தலாக் குறித்து நான் தவறான தகவல் தந்திருப்பதாக வாசகர் காயல்பட்டினம் கே. எஸ். முகம்மத் ஷுஐப் தெரிவித்துள்ளார். குரானிலும் ஹதீஸ்களிலும் சொல்லப்பட்டிருப்பது குறித்து மார்க்க அறிஞர்கள் அளிக்கும் விளக்கம் எதுவாக இருப்பினும், நடைமுறையில் கணவன்மார்கள் ஒரே வீச்சில் 'தலாக், தலாக், தலாக்' என்று சொல்லி மனைவியைக் கைவிடும் வழக்கம் இருப்பதைப் பார்க்கிறோம். முகமதியச் சட்டதிட்டங்கள் அமலில் இருக்கும் சவூதி அரேபியாவிலிருந்து இங்குவரும் வயோதிக அராபியர் கேரளம், ஆந்திரம், கர்நாடகம் ஆகிய இடங்களுக்குச் சென்று இளம் பெண்களைக் காஜிகள் முன்னிலையில் முறைப்படி திருமணம் செய்துகொண்டு சில நாட்கள் இன்பம் துய்த்துவிட்டு, ஒரே மூச்சில் மூன்று முறை தலாக்குடன் வயிற்றில் பிள்ளையைக் கொடுத்துவிட்டுச் செலவுக்கும் கொஞ்சம் பணம் தந்துவிட்டுப் போய்க்கொண்டிருப்பது தெரிந்த சங்கதிதானே! இது பற்றியும் கன்னடத்தில் 'முன்னுடி' என்று ஓர் அருமையான திரைப்படம் சில ஆண்டுகளுக்கு முன் வந்து பாராட்டுப் பெற்றது. அதிலும் தாராதான் பிரதானப் பாத்திரம் ஏற்றுப்



ஹசீனா திரைப்படத்தில் தாரா

பார்வையாளர்களின் அபிமானத்தைப் பெற்றார்.

'ஹசீனா' திரைப்படத்தின் மூலக் கதையை எழுதியவர் பானு முஷ்டாக் என்ற பெண் வழக்கறிஞர். ஒரே தடவையில் மூன்று முறை தலாக் சொல்லி மணமுறிவு செய்யும் நடைமுறை முகமதியச் சமுதாயத்தில் இருப்பதால்தான் அவர் இவ்வாறு கதை எழுதுவதும் இஸ்லாமியக் குடிமைச் சட்ட வாரியம் பெண்களுக்கு இதிலிருந்து பாதுகாப்புத் தர வேண்டும் என்ற கருத்தில் ஒவ்வொரு முறையும் சொல்லப்படும் தலாக்கிற்கும் நடுவே இடைவெளி இருக்க வேண்டும் என விதிப்பதுமான நிலை உருவாகியிருக்கிறது அல்லவா?

மேலும், அன்பர் முகம்மது ஷுஐப் குறிப்பிட்டுள்ள வசனங்களை ஒரு முறைக்கு இருமுறை ஆழ்ந்து படித்தேன். அவையும்கூட ஆண்களுக்குச் சாதகமான கண்ணோட்டத்தில்தான் புலப்படுகின்றனவேயன்றி பெண்களுக்குச் சாதகமாக இருப்பதுபோலத் தோன்றவில்லையே. தலாக் கூறப்பட்ட பெண்கள் மூன்று மாதவிலக்குகள் வரை பொறுத்திருக்க வேண்டும் என விதிப்பது; தம் கருப்பையில் தலாக் சொன்ன கணவனின் கருவைச் சுமப்பவர்களாக அவர்கள் இருப்பின் அதனை மறைக்கக் கூடாது என்பது; இந்த இடைக்காலத்தில் ஒரு வேளை கணவன் மனம் மாறித் தன்னால் தலாக் சொல்லப்பட்ட மனைவியுடன் வாழ விரும்பினால் அதற்கு அவனுக்கு உரிமை உண்டு என்பது; அவனது கருவைத் தான் சுமப்பதாலேயே தலாக் சொல்லப்பட்ட மனைவிக்கும் அதே போல அவனது மனைவியாகத் தொடர உரிமை உண்டு எனக் கூறுவது; இவை ஆண்களுக்குள்ள அதிகாரத்தை வெளிப்படுத்துவது போலத்தானே தெரிகின்றன?

பெண்களுக்கும் மணவிலக்குப் பெறும் உரிமை குலாக்ஃ என்ற பெயரில் இருப்பினும், அதற்கு எவ்வளவுதான் நியாயமான காரணங்கள் இருந்தாலும் குலாக்ஃ சொன்ன மனைவிக்குக் கணவன் எவ்வித இழப்பீடும் தரத் தேவையில்லை என்பதோடு, பலவாறான உபாதைகளுடன் பத்து மாதம் சுமந்து, அதன் பிறகும் சிரமங்கள் பலபட்டுப் பெற்று வளர்த்த குழந்தைகளையும் மனைவியானவள் கணவனிடம் ஒப்படைத்துவிட்டுப் போய்விட வேண்டுமென்று சொல்லப்படுகிறதே? பெற்ற பிள்ளைகளைப் பறிகொடுக்க நேரிடும் என்பதற்காகவே எல்லாக் கொடுமைகளையும் சகித்துக்கொண்டு துராத்மாக்களான கணவன்மாருடன் தொடர்ந்து வாழ வேண்டியிருப்பதாகவும் பல முகமதியப் பெண்கள் கூறுகிறார்களே?

தலாக் சொன்னால் பல பொறுப்புகளைச் சுமக்க வேண்டும் என்பதால்தான் ஹசீனாவின் கணவன் சாமர்த்தியமாக அதனைத் தவிர்க்கிறான் என்று தமது கதையில் குறிப்பிடுகிறார் வழக்கறிஞர் பானு முஷ்டாக். பெண்களுக்கு மணமுறிவு கோரும் உரிமை இருப்பினும் அதனால் பெண்களுக்குப் பயன் இல்லை என்றும் கணவனை எப்படியாவது தலாக் செய்யவைத்தால்தான் ஹசீனாவுக்குப் பலன் கிடைக்கும் எனவும் எழுதுகிறார் அவர். ஆக, நியாயமான காரணங்களுக்காக ஒரு மனைவி தன் கணவனிடமிருந்து வெறுங்கையுடன் தப்பிவருவதற்கு உரிமை இருப்பதாகத்தான் இதனைப் புரிந்துகொள்ள முடிகிறது. ஆண்கள் மிக எளிதாகத் தலாக் சொல்லிவிட்டுப் போவதுபோல் பெண்களும் குலாக்ஃ சொல்லிவிட்டுப் போய்விடுவது சாத்தியமா என்று தெரியவில்லை. பிற சமூகங்களில் பெண்களுக்கு இதற்குக் கூட வழியில்லாத காலம் ஒன்று இருந்தது; இன்று அந்த நிலைமை இல்லை என்று வேண்டுமானால் கூறலாம்.

கர்நாடக மாநிலத்தில் அண்மைக் காலம் வரை பெண்கள் நலன், பெண்கள் உரிமை ஆகியவற்றுக்காகச் சட்டரீதியாகவும் தெருவில் இறங்கியும் இடையறாது போராடிவரும் 'விமோசனா' போன்ற அமைப்புகளுடன் நான் இணைந்து செயலாற்றிவந்தேன். இன்றுங்கூட அந்தத் தொடர்பு அறுந்துவிடவில்லை. அடிக்கடி கர்நாடகத்திற்குச் சென்று இது தொடர்பான பணிகளை மேற்கொண்டுவருகிறேன். கணவனை ஒரு சகிக்க முடியாத பிரச்சினையாக எதிர்கொள்ள நேரிடும் முகமதியப் பெண்கள், தீர்வுக்காக ஒளிந்து மறைந்துதான் எங்களை நாட வேண்டியுள்ளது. அப்படியும் அவர்களுக்கு எங்களால் சரியான பரிகாரம் தேடித் தர முடிவதில்லை. 'ஜமாத்' என்கிற வெளியார் கண்களுக்குப் புலப்படாத சங்கிலியால் தாம் பிணைக்கப்பட்டிருப்பதாக அவர்கள் மனம் பொருமுவதைப் பார்த்துச் செய்வதறியாது திகைக்கும் கையறு நிலையில்தான் நாங்கள் உள்ளோம் என்பதை வேதனையுடன் தெரிவித்துக்கொள்ள வேண்டியிருக்கிறது.

மலர் மன்னன்
சென்னை



www.padippakam.com





# காணமல்போன குருவிகள்

இளஞ்சேரல்



நிகழ்ச்சி தொடங்கும் முன்பே நிரம்பியிருந்த அரங்கம் குறும்படம் திரையிடும் சூழலை ஆர்வத்துடன் எதிர்நோக்கியிருந்தது. கர்நாடக மாநிலத்தின் குதிரேமூக் என்ற வனப்பிரதேசம் சூறையாடப்பட்டு அழிந்த பின்னணியையும் கானுயிர்கள் அழிந்து, நதி சிவந்து சாக்கடையாக மாறியது குறித்த படம் திரையிடப்பட்டது. அணைகட்டுதல் எனும் பெயரில் அழிக்கப்படுகிற வளமும் கானுயிர்களும் ஏராளம்.

ஞானியின் அறிமுக உரைக்குப் பின் சு. தியடோர் பாஸ்கரன் தமது அனுபவங்களைப் பகிர்ந்துகொண்டார். சூழலியல், சினிமா என்று இரண்டு மையமான துறைகளின் பின்னணியில் படைப்புச் சூழலைப் பேசினார்.

பிறந்தது கோவை மாவட்டம் தாராபுரம். தந்தை உலகப் போரில் பங்கெடுத்ததால் தனக்கும் உடன்பிறந்தவர்க்கும் விரும்பும்வரை கல்வி கற்க ஆங்கிலேய அரசு உதவியிருந்தது என்று கூறியவர் தனது தமிழ் கிறிஸ்தவப் பின்னணி, வாசிப்புப் பழக்கம் ஆகியவற்றைப் பற்றியும் விவரித்தார்.

400 ஏக்கர் பரப்பளவிலான சென்னைக் கிறிஸ்துக் கல்லூரியில் மேற்படிப்பு. தனது அறையிலிருந்து வனம் போன்ற பிரதேசத்தைப் பார்த்துக்கொண்டிருந்தது, விதவிதமான பறவைகளின் ஒலிகளைக் கேட்டது, இயற்கையைப் பார்த்துக்களித்தது ஆகியவையே தனக்குச் சூழலியல் ஆர்வம் ஏற்படுத்தின என்றார். திருமணப் பரிசாக மனைவி தந்த காமிராவின் மூலமாக இயற்கைக் காட்சிகளைப் பதிவு செய்ய ஆரம்பித்தாராம்.

1971இல் *கசடதபற* மூலம் க்ரியா ராமகிருஷ்ணன், சா. கந்தசாமி, ஞானக்கூத்தன், பிரமிள், பாலகுமாரன், மகாகணபதி, எஸ்.வி. ராஜதுரை அறிமுகமாயினர். அசோகமித்திரன், சுந்தர ராமசாமி ஆகியோரின் நட்பும் கிடைத்தது. முதல் சினிமாக் கட்டுரை *கசடதபற*வில் வெளியானது. ஆனந்த குமாரசாமி, சித்தரஞ்சன் தாஸ் குப்தா, அபர்ணா சென் போன்றோரின் கட்டுரைகள் பாதிப்பு ஏற்படுத்தின என்றும் குறிப்பிட்டார்.

சிவில் சர்வீஸ் எழுதியதில் 7 வருடம் தில்லியில் பணி. இங்கு அம்பை, இ.க. விசுவநாதன் நட்புக் கிடைத்தது. நல்கை மூலமாக இரண்டு ஆண்டு விடுப்பு எடுத்து சினிமா வரலாற்றினை 75–76இல் ஆய்வு செய்தார்.

பாட்டன்ஸ் டைன், பூஜின் கெய்லே, ராபர்ட் ஹார்ரேங்கு இணையாக ஆய்வு செய்ய முயன்றேன் என்றார். முதல் நூல் The Eye of the Serpentக்கு தேசிய விருது கிடைத்தது. இயற்கையியலாளர் மா. கிருஷ்ணன் நட்பு ஏற்பட, *மழைக் காலமும் குயிலோசையும்* நூல் தொகுக்கப்பட்டது என்றார்.

குருவிகளை இப்போதெல்லாம் காண முடியவில்லையே என்று ஒருவர் கேள்வி எழுப்பினார். ஓட்டு வீடுகள் மறைந்தது ஒரு காரணம். பறவைகள், பூச்சிக் கூட்டங்களின் அழிவிற்கு நகரமயமாதலும் காரணம். பறவைகளின் பிறப்பும் வாழ்வும் மனித வாழ்விற்கும் ஒரு குறியீடு. தூத்துக்குடி, திருநெல்வேலி பகுதிகளில் கறிவேப்பிலை மரத்திற்கு விதவிதமான பறவைகள் வரும் என்றார். மரம் நடுவது குறித்த கேள்விக்கு என்ன மாதிரியான மரத்தை எந்தப் பகுதியில் நடுவது என்கிற விழிப்புணர்வு தேவை என்றார்.

பல்வேறு துறைகள் சார்ந்த வளமான வாழ்வனுபவங்களைப் பகிர்ந்துகொண்ட பாஸ்கரனின் பேச்சில் ஆங்காங்கே சுவையான சிந்தனைகளும் வெளிப்பட்டன. இயற்கை, சுற்றுச்சூழல் முதலான பல விஷயங்களைத் தொட்டுச் சென்ற அக்கருத்துக்களிலிருந்து சில வரிகள்:

- வாழ்வின் ஒவ்வொரு பருவத்திலும் மகிழ்ச்சிக்குரிய வாய்ப்புகள் ஏராளமாய் உண்டு. நாம்தான் அதை அடையாளம் கண்டுகொள்வதில்லை. வெயில் நன்றாகக் கொளுத்தும்போதுதான் தமிழ்நாட்டில் எல்லாப் பூக்களும் மலர்ந்து மணம் நிறைகிறது. மாம்பழங்களும் பலாப் பழங்களும் வண்டி வண்டியாய் வந்திறங்குகின்றன. ஆனால் நாமோ, வெயிலால் ஏற்படும் சிரமத்தைப் பற்றி மட்டுமே பேசித் தீர்க்கிறோம்.

- The best years of one's life என்ற கருத்தாக்கத்தில் எனக்கு இளமை முதலே உடன்பாடு கிடையாது. உறவுகளின் உன்னதத்தை அறிய முதுமையை ஏற்று உள்வாங்கிக்கொள்ள வேண்டும்.

- அரசுப் பள்ளியில் தமிழில் படித்ததன் அனுகூலத்தை இன்று ஒவ்வொரு நாளும் உணர்கிறேன். நமக்கென்று ஒரு பாரம்பரிய அடையாளம் இருக்கிறது. அது மொழி சார்ந்த கலாச்சாரத்தின் மூலம் நம்மை வந்தடைகிறது. வாழ்வைச் செறிவூட்டுகிறது.

- இந்தப் பாதையை நாம் இன்று தடை செய்துவிட்டோம். இயற்கையை மதிக்காமல் வாழக் கற்றுக்கொண்டோம். நகரமயம், உலகமயம் என்ற புல்டோசர்களால் நம் கலாச்சாரப் பன்முகத் தன்மை மிதிபட்டு அழிகிறது.

அரங்கம் முழுவதிலும் படைப்பாளிகள், வாசகர்கள், சூழலியல் ஆய்வாளர்கள், பேராசிரியர்கள், ஆய்வு மாணவர்கள் என்று பல தரப்பினர் நிறைந்திருந்தார்கள்.

**அவை நாயகன் உதவியுடன்**



படிப்பகம்

www.padippakam.com



# அந்தரங்க அனுபவமாக மாறிய சந்திப்பு

சல்மா


**சில மாதங்களுக்கு முன்** அம்பையிடமிருந்து வந்த தொலைபேசி அழைப்பில் ஸ்பாரோ (SPARROW Sound & Picture Archives for Research on Women) நடத்தவிருந்த ஒருவார கால 'ரைட்டர்ஸ் கேம்ப்'பில் கலந்துகொள்ள என்னை அழைத்தபொழுது மிகுந்த சந்தோஷத்துடன் ஒப்புக்கொண்டேன்.

"நான் என்ன தயாரிப்புகளுடன் வர வேண்டும்" என்று கேட்டேன். "நீ ஒரு தயாரிப்பும் செய்துகொள்ள வேண்டாம், சும்மா வந்தாலே போதும்" என்றார் அம்பை. மிகப் புதிதான ஒரு அனுபவத்திற்குள் செல்வதற்கான மனத் தயாரிப்பு எனக்கு அந்த நிமிடமே உருவாயிற்று.

மும்பையிலிருந்து ஆறு மணிநேரப் பயண தூரத்தில் இருக்கிறது காஸித் பீச் ரிஸார்ட். இந்தியாவின் சகல பகுதிகளிலிருந்தும் வரவழைக்கப்பட்ட ஐம்பத்தி நான்கு பெண் படைப்பாளிகளுள் நானும் குட்டி ரேவதியும் அடக்கம். மொத்தமாக 6 நாள்கள். கவிதை வாசிப்பது, விவாதிப்பது, வாக் போவது, கிராமப் பகுதிக்குச் செல்வது, படம் பார்ப்பது, யோகா, பந்து விளையாட்டு, நாடகம், நாட்டியம் மற்றும் டிஸ்கோ இவைதான் 6 நாட்களின் அட்டவணை.

இது போன்ற எழுத்தாளர்களின் சந்திப்புகளில் வழமையாகக் கையாளப்படும் 'பேப்பர் பிரசன்டேஷன்' என்ற நிகழ்வுக்கே இடமின்றி மிகுந்த ரசனையுடன் திட்டமிடப்பட்டு ஒருங்கிணைக்கப்பட்டிருந்தது இந்நிகழ்வு. பல்வேறு இடங்களிலிருந்தும் வந்திருந்த பெண் படைப்பாளிகள் ஆறு நாட்களுக்குத் தங்களது அன்றாட வாழ்க்கைமுறையிலிருந்து முற்றிலும் விலகி வெவ்வேறு மொழிகளுடனும் புத்தம்புது முகங்களுடனும் அற்புதமான படைப்புகளோடும் உறவாட முடிந்ததில் வந்திருந்த ஒவ்வொரு படைப்பாளிக்குமே மிகப் பெரிய சந்தோஷம் என்பதை எல்லாத் தருணத்திலும் உணர முடிந்தது என்றுதான் சொல்ல வேண்டும்.

முழுக்க முழுக்கப் பெண்களால் ஆக்கிரமிக்கப்பட்டிருந்த, பெண்களின் உலகமாகவே மாறியிருந்த ரிஸார்ட் முழுவதும் ஒலித்துக்கொண்டிருந்த கவிதைகளும் விவாதங்களும் படைப்புகள் குறித்த பல்வேறு பரிமாணங்களைத் தொட்டுச் செல்லக்கூடியதாக இருக்க, இந்த முகாமை எந்த ஒரு தலைப்பினை ஒட்டியும் ஒருங்கிணைக்காத அம்பையின் நோக்கம் பெற்ற வெற்றி முழுமையானது.



காலை நேர வாசிப்பு அமர்வு, காஸித் பீச் ரிஸார்ட், அலிபாக



இடமிருந்து வலம் முன் வரிசை: கனகா ஹா மா, சல்மா, அனிதா தம்பி
இடமிருந்து வலம் பின் வரிசை: துளசி வேணுகோபால், மித்ர வெங்கட்ராஜ

ஆக்கபூர்வமானதும்கூட. முன்னிரவுகளில் துவங்கி நள்ளிரவு வரை நீண்டுகொண்டிருந்த விவாதங்கள் அதிகாலை நடைப் பயிற்சிகளில் தொடர்ந்தன

நாட்டின் சகல பகுதிகளிலிருந்தும் வரவழைக்கப்பட்ட ஐம்பதிற்கும் மேற்பட்ட, தனித்தனி ஆளுமை கொண்ட படைப்பாளிகளை ஒரே இடத்தில் சகல வசதிகளோடு, எந்த ஒரு சங்கடங்களும் தோன்ற வழியற்றுச் சந்திக்க வைத்ததன் பின்னணியில் எத்தகைய உழைப்பினைச் செலுத்த வேண்டியிருந்திருக்கும் என்பதில் யாருக்கும் சந்தேகமில்லை. இதனை மனத்திற்குள்ளேயே உருவாக்கிச் செயல்படுத்துவதற்கான எல்லா விதப் போராட்டங்களையும் எதிர்கொண்டு சாதிக்க முடிந்ததன் பின் இருப்பது முழுக்க முழுக்க அம்பையின் ஈடுபாடு மட்டுமே. அதோடு தூரத்தைக் காரணம் காட்டி இந்திய அளவில் ஒருங்கிணைக்கப்படுகிற எந்த ஒரு நிகழ்வுக்குமே தவிர்க்கப்படும் வடகிழக்குப் பகுதிகளிலிருந்தும் படைப்பாளிகள் அழைக்கப்பட்டிருந்தது மிகமிக



படிப்பகம்

www.padippakam.com



முக்கியமானதொன்று. இதற்காக விசேஷமாக அம்பையைப் பாராட்ட வேண்டும்.

இது போன்ற அனுபவம் இதுவரை யாருக்கும் வாய்த்திருக்கும் வாய்ப்பே இல்லை என்பதால் இந்த அரிய நிகழ்வினை ஒவ்வொருவருமே தங்களது பிரத்யேகமான உணர்வுகளாக மாற்றி மனத்திற்குள் இருத்திக் கொண்டாடிக் கொண்டிருந்தனர். ஒரு சந்திப்பு முகாம் அந்தரங்கமானதொரு அனுபவமாக உருக்கொண்ட விந்தையை எப்படி அர்த்தப்படுத்திக்கொள்வதெனத் தெரியவில்லை.

வண்ண விளக்குகளால் அலங்கரிக்கப்பட்ட 'ரிஸார்ட்ஸ்' வளாகமெங்கும் ஒவ்வொரு படைப்பாளிக்கும் அவர்களது புகைப்படத்துடன் கவிதை வரிகளை இணைத்து வடிவமைக்கப்பட்ட ஆளுயரச் சுவரொட்டிகள் நிறுவப்பட்டு கௌரவிக்கப்பட்டிருந்தது புதுமையான அனுபவம். புதிது புதிதாக உருவாகிக் கனத்துக்கொண்டிருந்த நட்புகளும் ஒருபோதும் மறக்க முடியாத நிகழ்வாக எங்கள் ஒவ்வொருவரிடமும் தங்கிவிட்டது அபூர்வமான அனுபவம்.

•••

கேரளாவில் உள்ள திரூரில் வருடந்தோறும் ஐந்து நாட்கள் நடக்கக்கூடிய 'துஞ்சன் சவுத் இண்டியன் பொயட்ஸ் மீட்'டில் இந்த வருடம் கலந்துகொள்ள அழைக்கப்பட்டுச் சென்றிருந்தேன்.

எழுத்தச்சன் என்று போற்றப்படும் துஞ்சன் கேரளாவில் நம் கம்பனைப் போல மிகப் புகழ்பெற்ற கவி. அவரது நினைவாக இந்த விழா வருடம்தோறும் கொண்டாடப்பட்டு வருகிறது.

தஞ்சாவூரிலுள்ள Southzone Cultural Centreஇன் நிதியுதவியுடன் துஞ்சன் டிரஸ்ட் வளாகத்தினுள் ஒரு திருவிழாவைப் போல இந்த விழா கோலாகலமாகக் கொண்டாடப்படுகிற அதிசயத்தைக் கன்னடப் பெண் படைப்பாளி கவிதா ரய்யும் நானும் தீராத வியப்புடன் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தோம்.

அங்கிருந்த இரண்டு நாட்களில் ஒரு படைப்பாளியாகப் பெற முடிந்த அதிகபட்ச மரியாதையையும் அங்கீகாரத்தையும் சொல்வதற்கு வார்த்தைகளைத் தேடுமுன் நம்முடைய சூழல் நினைவுக்கு வந்து போகிறது.

ஐந்து நாட்கள் தொடர்ந்து நடந்தபடியிருந்த இசை, நடன, இலக்கிய நிகழ்வுகளுக்குக் கூட்டம் கூட்டமாக வந்துகொண்டிருந்த மக்களில் கணிசமான அளவுக்கு இளையவர்களையும் மாணவ மாணவிகளையும் இருந்ததைக் காண முடிந்தது. இலக்கிய ஆர்வமூட்டப்பட்ட மாணவ மாணவிகளை ஆசிரியர்களே அழைத்து வந்து கவிதை நிகழ்வுகளைக் கேட்க வைத்தார்கள். அதோடு கிடைத்த சந்தர்ப்பங்களில் அவர்களைப் படைப்பாளிகளோடு உரையாட வைத்துக்கொண்டிருக்க, எதிர்பாராத கேள்விகளால் அவர்கள் எங்களைத் திகைக்க வைத்துக்கொண்டிருந்தனர்.

இறுதி நாளில் நடைபெற்ற பொது விவாதத்தில் பல்வேறு படைப்பாளிகளோடு வாசகர்களும் கலந்துகொண்டார்கள். அவர்களில் எண்ணிக்கையிலடங்காத அளவுக்கு இளையவர்களின் கூட்டம்.

படைப்புகளோடும் படைப்பாளிகளோடும் உறவாட அவர்களுக்கு இருந்த ஆர்வத்தையும் படைப்பாளிகளுக்கு அவர்களால் தர முடிகிற கௌரவத்தையும் ஒரு இலக்கிய விழாவுக்கு ஊடகங்கள் தந்த கவனத்தையும் கவனித்த பொழுது, மலையாள இலக்கியச் சூழல் குறித்த நமது அபிப்ராயங்கள் மேலும் மேன்மையுறுவதை ஏனோ தவிர்க்க முடியவில்லை.

*புகைப்படங்கள்:* Priya D'Souza
(SPARROW Collections)

•


காவ்யா வெளியீடு




ஆய்வுகள் / விமர்சனங்கள்

| | | |
|---|---|---|
| ந. முத்துசாமி கட்டுரைகள் | – அண்ணாமலை (தொ.) | ரூ. 250 |
| என் இளமைக் காலம் தஸ்லிமா நஸ்ரீன் | – தமிழில்: புவனாநடராசன் | 250 |
| இருபதாம் நூற்றாண்டுத் தமிழ்த் திறனாய்வாளர்கள் | – மருதநாயகம் | 300 |
| பாண்டித்துரைத் தேவரும் தமிழ்த் தேசிய அரசியலும் | – சிலம்பு நா. செல்வராசு | 200 |
| சங்க இலக்கியம் மறுவாசிப்பு | | 120 |
| தமிழ் இலக்கியங்கள் கட்டவிழ்ப்பும் கட்டுடைப்பும் | – இராமமூர்த்தி | 100 |
| ஓடிபஸ்: நாட்டுப்புறவியல் பார்வை | – பிராப் – தமிழில்: சண்முகசுந்தரம் | 40 |
| பெருங்கதைப் பாத்திரங்கள் | – சண்முகசுந்தரம் | 75 |
| சிலப்பதிகார விருந்து | – பேராசிரியர் ந. சஞ்சீவி | 80 |
| இலக்கிய விசாரங்கள் க.நா.சு. கட்டுரைகள் I | – சண்முகசுந்தரம் (தொ) | 500 |
| இலக்கிய விமர்சனங்கள் க.நா.சு. கட்டுரைகள் II | – சண்முகசுந்தரம் (தொ) | 500 |
| திருக்குறள்: வள்ளுவர் கண்ட தத்துவம் | – தெ.பொ.மீ | 300 |
| சிலப்பதிகாரம்: குடிமக்கள் காப்பியம் | – தெ.பொ.மீ | 300 |
| தமிழ் மொழி வரலாறு | – தெ.பொ.மீ | 200 |
| தமிழ் இலக்கிய வரலாறு | – தெ.பொ.மீ | 300 |
| தமிழ் வாழ்வியல் தடமும் திசையும் | – ஞானி | 100 |

காவ்யா, 16, சீனிவாசா அபார்ட்மெண்ட்
இரண்டாம் குறுக்குத் தெரு, டிரஸ்ட்புரம்,
கோடம்பாக்கம், சென்னை – 600 024.
தொலைபேசி: 23726882

விளம்பரம்




படிப்பகம்

www.padippakam.com



**பதிவுகள்:**
**மொழிபெயர்ப்புப் பயிலரங்கம்**

# உற்சாகம் மிகுந்த நாட்கள்

ரவி



நன்றி: www.nakkheeran.com

**கவிதைக்கான** மொழிபெயர்ப்புப் பயிலரங்கமொன்று சுந்தர ராமசாமி நினைவாக ஜனவரி 21, 22 தேதிகளில் சேலம் சௌத் கேட் ஹோட்டலில் நடத்தப்பட்டது. பயில்பவர்களாக அருள் முருகன், அழகரசன், அன்பரசி, ஆனந்த ராஜ், கங்காதரன், குவளைக் கண்ணன், கோகுல், பிரவின் பாபு, சிவகுமார், சுகுமார், சுஜாதா, தமிழரசி, புவனேஸ்வரி, புனிதப் ப்ரியா, பூபதி, மதுமதி, முகம்மது அஸ்லம், ராம் பிரசாத், ரமாதேவி, வெங்கடேசன், ஷீலாபானு ஆகியோர் கலந்துகொண்டனர். பங்கேற்பவர்களுக்கு இரண்டு கவிதைகள் ஆங்கிலத்தில் அனுப்பப்பட்டு அவை இரண்டும் அவர்களால் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு எடுத்து வரப்பட்டிருந்தன. இந்தக் கவிதைகள் பயிலரங்கத்தில் செப்பனிடப்பட்டு ஒரு கவிதை ஞாயிற்றுக் கிழமை மாலை பொதுமக்கள் முன்னர் மொழிபெயர்த்தவரால் வாசிக்கப்பட்டது.

பங்கேற்றவர்கள் சிறு குழுக்களாகப் பிரிக்கப்பட்டு பேராசிரியர்கள் ஆர். ராஜகோபாலன், வி. சிவக்குமார், அழகரசன், நஞ்சுண்டன், பெருமாள் முருகன், கவிஞர் ஆனந்த் ஆகியோர் இக்குழுக்களுடன் கலந்துரையாடி வழிநடத்தினர். கவிதைகள் செப்பனிப்பட்டன. மொழிபெயர்க்கும்போது மூல ஆசிரியரின் நாடு, கலாச்சாரம் இவற்றைத் தெரிந்துகொள்ள வேண்டியதன் முக்கியத்துவம் விளக்கப்பட்டு, மொழிபெயர்ப்பின் நுட்பங்கள் பயிற்றுவிக்கப்பட்டன. இரண்டு நாட்களிலும் அவ்வப்போது ராஜகோபாலன், நஞ்சுண்டன், அழகரசன், ஆனந்த், பொ.வேல்சாமி, பெருமாள் முருகன் ஆகியோர் உரையாற்றினார்கள்.

ஆசிரியர்களும், மாணவர்களும் ஒன்றுபோல் பேராளர்களாகப் பங்கேற்றனர், பயில்பவர்களுக்கு மொழிபெயர்ப்பதற்காகத் தரப்பட்டிருந்த கவிதைகள் அனைத்துமே சிறந்த தரத்திலானவை. அவற்றில் சுலபமான வெளிப்பாடுகளைக் கொண்டவையும் சிக்கலானவையும் கலந்தே இருந்தன. இந்தப் பயிலரங்கத்தில் கலந்துகொண்டவர்களிடம் இப்போது ஒரு ஆங்கிலக் கவிதை தரப்பட்டால் சிறு மாற்றங்கள் மாத்திரமே தேவைப்படுகிற ஒரு நல்ல மொழிபெயர்ப்பை அவர்களால் செய்துவிட முடியும். பயில்பவர்களுக்கு உதவியவர்கள் அனைவரும் தமிழிலும் ஆங்கிலத்திலும் அல்லது தமிழிலோ, ஆங்கிலத்திலோ தேர்ச்சி பெற்றவர்கள் கவிதை நாட்டமுடையவர்கள்.

கடந்த இருபது வருடங்களாக இலக்கியம் சார்ந்த கூட்டங்கள், கவிதைப் பட்டறைகளில் கலந்துகொண்டு வருகிற நான், இந்த இரண்டு நாட்களிலும் புதிதாக எதையோ உணர்ந்துகொண்டிருந்தேன். பயில்பவர்களின் ஆர்வம் பயிற்றுவித்தவர்களிடம் தொற்றி, இடையே இருந்த கோடு அழிந்து போயிருந்தது. இரண்டு நாட்களும் அங்கே உற்சாகம் மிகுந்திருந்தது. பங்கேற்ற பல்கலைக்கழக மாணவர்களிடம் இருந்து இது பரவிற்றா, பயிற்றுவித்தவர்களிடம் இருந்து இது பரவிற்றா? இரண்டு நாள் இலக்கியப் பயிலரங்கம் மிகுந்த உற்சாகத் தோடு, இவ்வளவு நிறைவளிப்பதாக இருந்ததற்குப் பங்கேற்ற அனைவரையும் காரணமாகப் பார்க்கிறேன்.

ஞாயிறு மாலைக் கவியரங்கத்துக்குத் தலைமையேற்ற வெ. ஸ்ரீராம் தனது அருமையான உரையினூடேழாக் ப்ரெவரின் கவிதையொன்றை ஃபிரெஞ்சு மூலத்திலும், தமிழிலும் வாசித்துக் காட்டினார். சேலத்தில் ஒலிபெருக்கியில் ஃபிரெஞ்சு மொழி ஒலித்தது. பங்கேற்ற அனைவரும் தாம் மொழிபெயர்த்த கவிதையொன்றை பொதுமக்கள் முன்னர் வாசித்தார்கள். மக்களும் ரசித்ததுபோல் தெரிந்தது.

இப்படி ஒரு பயிலரங்கத்தை சாத்தியமாக்கிய நஞ்சுண்டனின் ஆர்வத்துக்கும் அவரது உழைப்பிற்கும், அவருக்குப் பின்பலமாக இருந்து உதவிய நண்பர்களுக்கும் நன்றி சொல்ல வேண்டும். இந்தப் பயிலரங்கம் யாருடைய பெயரில் நடத்தப்பட்டதோ அவர் இருந்திருந்தால் நிச்சயம் மகிழ்ந்திருப்பார், நெகிழ்ந்திருப்பார். ●


லியோ டால்ஸ்டாய் எழுதிய
உலகப் புகழ் பெற்ற
அழியாக் காதல் காவியம்
'அன்னா கரீனினா'

குடும்பம் என்பது எப்போது
சந்தோஷமாக அமைகிறது.
எப்போது தண்டனை தரும்
சிறைவாசமாகிறது
என்பதைப் பரிசீலிப்பதே
இந்த நாவலின்
(டால்ஸ்டாயின்)நோக்கம்.

டால்ஸ்டாய் குறிப்பிடுகின்றார்.
ஒரு படைப்பு சிறந்தது என்று
பாராட்டப் படவேண்டும்
என்றால் அதன்
அடிப்படைச் சிந்தனைகள்
சிறந்ததாக இருக்க வேண்டும்.
போரும் அமைதியும்
நாவலில் அது தேசத்தைப்
பற்றிய சிந்தனைகளாக
இருந்தது.
'அன்னா கரீனினா' வில்
அது சிறந்த குடும்பங்களைப்
பற்றி சிந்தனைகளாக உள்ளது.

மொழிபெயர்ப்பில்
சாதனைகள் புரிந்த
பேராசிரியர்
நா.தர்மராஜனின்
மொழிபெயர்ப்பில்
தயாராகிறது.

+ டெம்மி அளவு சுமார் 1000 பக்கங்கள்
+ கெட்டி அட்டை பைண்டிங்
+ விலை ரூ.450/- முன் வெளியீட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.300 மட்டுமே
+ முன்பதிவு செய்து கொள்பவர்களுக்கு மட்டுமே முன்னுரிமை முன்பதிவு செய்ய இறுதி நாள் 30-04-2006
+ முன்பதிவு செய்தவர்களுக்கு 1.6.2006 முதல் புத்தகங்கள் வரிசையின் அடிப்படையில் வழங்கப்படும்.

முன்வெளியீட்டு விலையை
பாரதி புக் ஹவுஸ் என்ற
பெயருக்கு மதுரையில்
மாற்றத்தக்கபடி M.O.
அல்லது டிராப்ட் அனுப்பவும்
கூரியரில் புத்தகம் அனுப்ப
ரூ.50 சேர்த்து அனுப்பவும்
அனுப்ப வேண்டிய முகவரி

பாரதி புக் ஹவுஸ்
D-28, மாநகராட்சி
வணிக வளாகம்,
பெரியார் பேருந்து நிலையம்,
மதுரை - 625 001.




படிப்பகம்

www.padippakam.com



சென்னையில் தொடங்கப்பட்டிருக்கும் புதிய கலை காட்சியரங்கான ஹ்யூஸ் ஆர்ட் காலரியின் முதல் கண்காட்சியில் பெங்களூரைச் சேர்ந்த 14 கலைஞர்களின் படைப்புகள் வைக்கப்பட்டிருந்தன. கண்காட்சியின் தலைப்பு '560014' (பெங்களூரைச் சேர்ந்த 14 பேர் என்று புரிந்துகொள்ளலாம்).

ரகு ராமா, கிருஷ்ணா ராஜேந்திரகுமார், ஸ்ரீநிவாஸாசார்யா எம்.வி., முனிமோகன், ஜான் சி.எஃப்., ஸ்ரீநிதி சேஷாத்ரி, அப்பாஜெயா கே.எஸ்., ரமேஷ் சந்திரா, முகம்மது ரிஸ்வான், ஸ்ரீதர் மூர்த்தி ஆகியோரின் ஓவியங்களும் நாராயண் சூத்ரதார், நரசிம்மப்ரகாஷ், பாபு ஜட்டகர், நாகப்பா ஆகியோரின் சிற்பங்களும் கண்காட்சியில் அடங்கும்.



நரசிம்மப்ரகாஷ் — கற்சிற்பம்




ஜான் சி.எஃப்ப. — அக்ரிலிக்

# கதை சொல்லும் படங்கள்

## பெங்களூர் ஓவியர்களின் படைப்புகள்

திவாகர் ரங்கநாதன்



ரகு ராமா — அக்ரிலிக்



அப்பாஜெயா கே.எஸ். — அக்ரிலிக்

www.padippakam.com

இவர்களில் ரகு ராமாவும் கிருஷ்ணாவும் ஒரு வகை என்று சொல்லலாம். ரகு ராமாவின் ஓவியங்களில் ருஷ்ய—பிரெஞ்சு ஓவியர் மார்க் ஷகாலின் பாணியை அல்லது பாதிப்பைப் பார்க்க முடிகிறது (ஷகாலின் 'நானும் என் கிராமமும்' என்ற ஓவியத்தில் வரும் ஆடு உள்பட). ஷகால் தனது கிராமமான விதெப்ஸ்க்கில் இருந்த வாழ்க்கையையும் அங்கு புழங்கிய யூதக் கதைகளையும் உருவகங்களாகச் சித்தரித்தார். ஒரு ஓவியத்தில் முழு கிராமத்தையும் பார்க்க முடியும். ரகு ராமா, கிருஷ்ணாவின் ஓவியங்களில் உருவகங்களும்




கிருஷ்ணா ராஜேந்திரகுமார் அக்ரிலிக்

சிறு சம்பவங்களும் நகர வாழ்க்கையின் அல்லல்களைச் சொல்கின்றன. பாதிப்பை மீறி காட்சி என்ற அளவில் இவர்களது படைப்புகள் சுவாரஸ்யம் தருகின்றன.



ஸ்ரீநிதி சேஷாத்ரி அக்ரிலிக்

கண்காட்சியில் சற்று மாறுபட்ட ஓவியம் ஸ்ரீநிதி சேஷாத்ரியுடையது. தட்டையான வண்ணம், சீரான அளவுள்ள கோடுகள், பட்டைகள் என்று ஜியாமெட்ரி கருவிகளைக் கொண்டு வரையப்பட்டது போன்ற இந்த அக்ரிலிக் ஓவியத்தில் இதன் மேற்கத்தியத் தன்மைக்குத் தொடர்பின்றி இந்து மதம் தொடர்பான படிமங்கள் இடம்பெறுகின்றன. இந்த மூன்று ஓவியர்களின் இன்னும் சில படைப்புகள் வைக்கப்பட்டிருக்கலாம். ஃப்யூஸ் ஆர்ட் காலரிக்கு இது நல்ல தொடக்கம்.



ஸ்ரீநிவாஸாசார்யா எம்.வி. அக்ரிலிக்



முனிமோகன் போர்டில் வரைந்த ஆயில் ஓவியம்

Edited and published by S. R. Sundaram (Kannan) for Kalachuvadu Pathippagam, 669, K. P. Road, Nagercoil 629 001 and printed by S. Vaidyanathan at Print Specialities, 186, V.M. Street, Royapettah, Chennai 600 014

படிப்பகம்

www.padippakam.com

With Best Compliments from

தினமலர்

தேசியத் தமிழ் நாளிதழ்

DINAMALAR

National Tamil Newspaper

Printed simultaneously at

Chennai | Vellore | Pondicherry
Erode | Salem | Coimbatore | Tiruchi
Madurai | Tirunelveli | Nagercoil



படிப்பகம்

www.padippakam.com

Registered Newspaper
No: TN/KK Dn/12/2004-2006
Date of Publication Every month on 26th & 29th
ISSN 0972 - 8260 Kalachuvadu

Regd with the Registrar of Newspaper
for India under No. 42764/88 Kalachuvadu


உலகின் முதல் 50,000 கலர் பட்டுப் புடவை




பட்டில் இதுவரை நீங்கள் பார்த்திராத வண்ணமயமான சாதனை.

ஒரேயொரு பட்டுப் புடவையில் 50,000 கலர்கள் – இன்னும் பெயரிடப்படாதவை சில; இதுவரை பட்டில் பார்க்காதவை பல! RmKVயால் டிசைன் செய்து நெய்யப்பட்ட இந்த அற்புதமான படைப்பின் ஒவ்வொரு பட்டிழையும் பாரம்பரிய சாய முறைகளாலும், எங்களது விஞ்ஞானமயமான சாய ஆலையின் அதிநவீன தொழில்நுட்பத்தாலும் வண்ணமயமான உயிராக்கம் பெற்றுள்ளது.

50,000 கலர்களையும் ஒன்றாக நெய்வதில் நாங்கள் வல்லமை பெற்றிருப்பதால், அரிதான கலர்களில் கூட வியக்க வைக்கும் பட்டுப் புடவைகளை இனி நீங்கள் பெற முடியும்.

RmKV
Unique wedding silks

பனகல் பார்க், சென்னை Ph 044-281 44445 • வடக்கு ரத வீதி, திருநெல்வேலி Ph 0462-2333105 www.rmkv.com

mudra 73